
டிசெம்பர் 2023




# எழுநா

இதழ் 17

# எழுநா இதழ் 17

முந்தைய இதழ்




## பதிப்பாசிரியர்
கணேசானந்தன் சசீவன்

## பொறுப்பாசிரியர்கள்
மாயழகு பவித்ரா
பரமசிவம் பவதாரணி
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்

## குரல் வடிவம்
பாலரூபன் கிருஷிகா
பவித்ரா இரமணீகரசர்மா

## வளவாளர்கள்
இ. பத்மநாப ஐயர் – உசாத்துணை சேவை
கனகலிங்கம் சுகுமார் – உசாத்துணை சேவை
கதிர் சயந்தன் – நூல் தயாரிப்பு
தங்கராஜா பிரபாகரன் – கட்டுரை திருத்தம்
பாலசுப்ரமணியம் சிவகுமார் – காணொலி எண்ணக்கரு
தில்லைநாதன் கோபிநாத் – நூல் வரிசை
மகேந்திரன் திருவரங்கன் – மொழிபெயர்ப்பு

## துறை சார் ஆலோசகர் குழு
கந்தையா ரமணிதரன் – நீரியலும் சூழற்பொறியியலும்
குமாரவடிவேல் குருபரன் – சட்டமும் சட்டமுறைமையும்
பரமு புஷ்பரட்ணம் – வரலாறும் தொல்லியலும்
இ. மயூரநாதன் – கட்டடக்கலையும் வடிவமைப்பும்
தர்சன் அம்பலவாணர் – மதமும் இறையியலும்
சபா ஜெயராசா – கல்வியியலும் கற்கையும்
சேரன் உருத்திரமூர்த்தி – சமூகவியலும் மானிடவியலும்
ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன் – மொழியும் இலக்கியமும்
நடராஜா சிறீஸ்கந்தராஜா – சூழலும் உயிர்ப்பல்வகைமையும்
மரியோ அருள்தாஸ் – மெய்யியலும் அரசியலும்

## பங்களிப்பாளர்கள்
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே

## விநியோகத் தொடர்புகளுக்கு
நடராஜா முரளிதரன் – கனடா

## FOLLOW
எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/


தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

# உள்ளே...


அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள் : இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம் — பகுதி 1
- ஜிஃப்ரி ஹாசன் 04

சோல்பரி அரசியல் யாப்பு உருவாக்கத்தின் பின்னணி — பகுதி 1,2
- தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் 08

ஈழமும் தமிழகமும் : பௌத்த சமயத் தொடர்புகள் — பகுதி 1,2
- பேராசிரியர் சி. பத்மநாதன் 18

சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை மறுசீரமைப்பு அறிக்கையும் அதன் பரிந்துரைகளும் : சில அவதானிப்புகள் — பகுதி 1,2
- இராமசாமி ரமேஷ் 29

யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள் — 6
- நடராஜா செல்வராஜா 42

என்ன செய்ய வேண்டும்?
- மரியநாயகம் நியூட்டன் 49

பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை
- நாகமுத்து பிரதீபராஜா 54

இலங்கை தமிழ் பௌத்தர்கள் —பகுதி 1,2,3
- இரா. சடகோபன் 57

காடும் காடுசார் பல்வகைமையும் — பகுதி 1,2
- சி. ஜேம்சன் அரசகேசரி 75

சைவ சித்தாந்தம்
- நடேசன் இரவீந்திரன் 83

18 ஆம் நூற்றாண்டின் நிலப்படங்களில் யாழ்ப்பாணக் குடாநாடும் அதை அண்டிய பகுதிகளும்
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 91

வரலாற்றுக்கு முற்பட்ட இலங்கை
- விவேகானந்தராஜா துலாஞ்சனன் 97

பால் மா உற்பத்தியும் மனித நுகர்வும்
- சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 102

சிங்கள அரசின் காணிக் கொள்கை
- இரா. சடகோபன் 108

தேசியமயமாக்கமும் அரசியல், சமூக, பொருளாதார விளைவுகளும்
- இரா. சடகோபன் 111

ஓயாத வன்முறை அலைகள்
- இரா. சடகோபன் 113

பறங்கிப்பூசணியும் நீற்றுப்பூசணியும்
- பால. சிவகடாட்சம் 116

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் ராஜபக்சாக்களும்
- வீரகத்தி தனபாலசிங்கம் 120

சிவபூமி அருங்காட்சியகம் : ஈழத் தமிழர் வரலாற்றின் புதிய முகவரி
- பரமு புஷ்பரட்ணம் 124

இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் 'டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு' எனும் தலைப்பில் வெவ்வேறு உபதலைப்புகளுடன் வெளிவரும்.




ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.




வாஸ்கொடகாமாவின் இந்திய வருகை குறித்த ஓவியம்
Image source - www.worldhistory.org

# அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

*18 வீதமான தமிழர்களுடன் ஒப்பிடும் போது, இலங்கை சனத்தொகையில் கிட்டத்தட்ட 8 வீதமானவர்கள் முஸ்லிம்கள். ஆனால் இந்த எளிய சிறுபான்மை அடையாளங்கள் தீவின் இனச் சிக்கலை வெளிப்படுத்துவதை விடவும் உண்மையில் மறைக்கவே செய்கின்றன. கடந்த 100 ஆண்டுகளாக முஸ்லீம் சமூகத்தின் நகர்ப்புற தலைவர்களும் அரசியல் பேச்சாளர்களும், முஸ்லிம்கள் வீட்டில் தமிழ் பேசினாலும் பல தமிழ் உறவுகளையும் உள்நாட்டு நடைமுறைகளையும் பகிர்ந்து கொண்டாலும், அவர்களை தமிழ் முஸ்லிம்கள் அல்லது முஸ்லிம் தமிழர்கள் என்று பார்க்க*

முடியும் என்ற எந்த கருத்தையும் கடுமையாக மறுத்து வந்துள்ளனர். தவிர, முஸ்லிம்கள் பற்றிய மதிப்புரைகள் மற்றும் மதம் சார்ந்த நூல்களை தமிழில் இயற்றியுள்ளனர், அவற்றில் சில அரபு தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன (Uwise 1986, 1990). காலனித்துவ ஐரோப்பிய, தமிழ் மற்றும் சிங்களச் சூழல்களில் பல நூற்றாண்டுகளாக அவர்கள் எதிர்கொண்ட அடையாளப் பிரச்சினைகளின் சமிக்ஞையாக இலங்கை முஸ்லிம்களுக்கான திகைப்பூட்டும் சொற்களின் பட்டியல் உள்ளது.

16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது காலனித்துவ காலத்தின் தொடக்கத்தில் இருந்து, இலங்கையில் பெரும்பான்மையான தமிழ் பேசும் முஸ்லிம்கள் Moor (மூர்) (Mouro, Moroccan) என்ற வார்த்தையால் குறிப்பிடப்பட்டனர். போர்த்துக்கேயர் தங்களது ஆபிரிக்க மற்றும் ஆசியப் பேரரசுகளில் காணப்பட்ட முஸ்லிம்களைச் சுட்ட இந்தப் பதத்தைப் பயன்படுத்தினர். அத்துடன் 'முகமதியன்' அல்லது 'முசல்மான்' போன்ற பழக்கமான ஐரோப்பிய சொற்களாலும் அழைக்கப்பட்டனர்.

1970 களின் தொடக்கத்தில், கிழக்கிலங்கையின் சோனகர்கள் (Moors) மத்தியில் எனது களப்பணியைத் தொடங்கியபோது, அவர்கள் தங்கள் சொந்தத் தமிழில் பேசும்போது 'முஸ்லிம்' என்பது மிகவும் பொதுவான வார்த்தையாக இருப்பதைக் கண்டேன். உறுதியாகச் சொல்வதானால், 'முஸ்லிம்' என்ற மதச் சொல் சோனகரிலிருந்து இனரீதியாக தெளிவான வேறுபாட்டைக்கொண்ட மலாய்க்காரர்கள் மற்றும் சிறிய குஜராத்தி வர்த்தக சமூகத்தினர் போன்றவர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். Conakar/ கோணாகர் (சோனகர், ஜோனகர்) என்ற சொல் பழமையான தமிழ் மற்றும் மலையாளச் சொல்லாகும். இச்சொல் தொடக்கத்தில் மேற்கு ஆசியர்களை, குறிப்பாக அரேபியர்கள் அல்லது கிரேக்கர்களைக் குறிக்க பயன்படுத்தப்பட்டது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இலங்கைச் சோனகர்களுக்கான இனப்பெயராக 'லங்கா யோனகா' (Lanka Yonaka) எனும் சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டாலும், அது வழக்கொழிந்து வருவதாகவே தெரிகிறது. பொதுவாக ஆங்கிலத்தில், 'மூர்' (சோனகர்) மற்றும் 'முஸ்லிம்' ஆகிய இரண்டு பதங்களும் ஒன்றுக்கொன்று மாற்றாக இன்று தமிழ் பேசும் முஸ்லிம் இலங்கையர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. தீவில் உள்ள மொத்த இஸ்லாமியர்களில் பெரும்பான்மையானோர் அதாவது 93 சதவீதம் பேர், வைதீக மரபைச் (Orthodox) சேர்ந்தவர்கள். அதாவது சுன்னத் (Sunni) ஜமாஅத்தினர்/ உறுப்பினர்கள். முஸ்லிம் மத்ஹப் (சட்டவியல் சிந்தனைப் பள்ளி) சார்ந்து ஷாஃபி சிந்தனைப் பள்ளியைச் சார்ந்தவர்கள்.

இலங்கை முஸ்லிம்கள் தங்கள் இனத்தோற்றம் தொடர்பில் திராவிடத்தை விட ஐரோப்பிய அல்லது இஸ்லாமிய இன முத்திரையை விரும்புகிறார்கள் என்பது இலங்கையின் தமிழ் பேசும் சிறுபான்மையினரிடையே உள்ள முக்கிய பிளவுகளில் ஒன்றை சுட்டிக்காட்டுகிறது. அண்மையில், ஒரு சில வரலாற்றாசிரியர்களும், முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளும் கூட, 'முஸ்லிம்களுக்கு எந்த குறிப்பிட்ட மொழியிலும் அர்ப்பணிப்பு இல்லை' என்று வலியுறுத்தினர். சிங்களப் பெரும்பான்மை மாவட்டங்களில் வசிக்கும் சோனகர்கள் தங்கள் குழந்தைகளை சிங்கள மொழிவழிப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு விருப்பம் காட்டுகின்றனர் (எம்.ஏ.எம். சுக்ரி 1986b: 70; மற்றும் கே.எம். டி சில்வா 1988: 202). சிங்கள மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் இளைய தலைமுறையினர் தமிழுக்கு பதிலாக சிங்கள மொழியில் படிப்பதனால் முஸ்லிம்கள் 'மொழி ரீதியாக பிளவுபட்ட சமூகமாக' மாறி வருகிறார்கள் என்று ஓர் எழுத்தாளர் வாதிடுகிறார். (அமீர் அலி 1986-87: 167). இச்செயல்முறை விரைவில் தமிழின் இழப்பையும், சோனகரின் வீட்டு மொழியின் மாற்றாக சிங்கள மொழி பரந்துபட்ட வகையில் அமையும் என்பதிலும் எனக்கு சந்தேகம் தோன்றுகிறது. காரணம், சிங்கள மொழியில் போதிய தகைமை பெற்ற முஸ்லிம் ஆசிரியர்களின் நீண்டகால பற்றாக்குறையாகும். (மோகன் 1987: 107; உவைஸ் 1986).

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் இன அடையாளமும் அரசியல் நிலைப்பாடும், இன்று உலகில் பாதுகாப்பான இடத்திற்காகப் போட்டியிடும் பல கலாச்சார ரீதியாக வரையறுக்கப்பட்ட குழுக்களைப் போலவே, காலனித்துவ மற்றும் பின்காலனிய அழுத்தங்களினதும், முஸ்லிம் சமூகத்தின் உள்ளார்ந்த இயக்கவியலினதும் பிரதிபலிப்பாக கடந்த நூற்றாண்டில் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன. சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கை அரசியலில் சோனகர்கள் முக்கிய பங்கைக் கொண்டிருந்தனர், 1983 இற்குப் பிறகு தமிழீழத்திற்கான ஆயுத மோதல்கள் திடீரென ஆரம்பமானதுடன் இது மேலும் உறுதியாகியது.

இந்த சூழல் அவர்களில் பலரை இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மிகவும் இறுக்கமான ஓர் இடத்தில் சிக்க வைத்தது.

இலங்கை முஸ்லிம்கள் தற்போது எதிர்கொள்ளும் இக்கட்டான சூழ்நிலையின் வேர்களை வெளிப்படுத்தும் வகையில், சோனக இனத்தவர் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கிற இரு தென்னிந்திய முஸ்லிம் குழுக்களான கேரளா மாப்பிள்ளாக்களுடனும், தமிழ்நாட்டு மரைக்காயர்களுடனும் ஒப்பிட்டு இலங்கைச் சோனகரின் இன அடையாளத்தின் வரலாற்று வளர்ச்சியை நான் முதலில் கண்டறிவேன். பின்னர், இந்த வரலாற்றுப் பின்னணியை மனதில் கொண்டு, இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பதட்டமான உறவுகளை இனவியல் ரீதியாக ஆராய்வேன். அங்கு இப்போது சமநிலையிலுள்ளது இனரீதியான இணக்கப்பாடா? அல்லது இனப் பிளவா? எதிர்கால விளைவு பற்றியும் முன்வைப்பேன்.


## இலங்கைச் சோனகரின் தொடக்க கால வரலாறு

இலங்கையில் இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பகால சான்றுகள் துண்டு துண்டான பயணிகளின் பதிவுகள், ஆரம்பகால இஸ்லாமிய நாணயங்கள், இங்குள்ள சில கல்லறைகள், அவற்றிலுள்ள சில கல்வெட்டுகள் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், இலங்கையின் முஸ்லிம் சமூகத்தின் தோற்றம் இஸ்லாத்துக்கு முந்தைய - தெற்கிற்கும், தென்கிழக்காசியாவிற்கும், மத்திய கிழக்கிற்கும் இடையிலான - கடல்வழி வர்த்தகத்துடன் தெளிவாகத் தொடர்கிறது. அரேபியர்கள் மட்டுமல்ல, பாரசீகர்களும் (பெர்சியர்கள்) கூட, இந்த தீவுக்கு அடிக்கடி வருகை தந்தனர் (அலி 1981a: 7176; Effendi 1965; Kiribamune 1986). 7 ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் அரேபிய தீபகற்பத்தில் இஸ்லாத்தின் வருகையுடனும், பெர்சியாவின் அடுத்தடுத்த வெற்றியுடனும், இந்தியப் பெருங்கடல் முழுவதுமான வர்த்தகம் 8 ஆம் நூற்றாண்டிலிருந்து மிகப் பெரியளவில் அரபு முஸ்லிம் வணிகர்களின் செல்வாக்குக்குள்ளானது. பிரதான மாநில அரசுகளையும், பேரரசுகளையும் நிறுவிய வட இந்தியாவின் பாரசீக, துருக்கிய படையெடுப்புகளைப் போலல்லாமல், 8 ஆம் நூற்றாண்டு முதல் தென்னிந்தியாவினதும், இலங்கையினதும் கரையோரங்களில் முக்கியமாக அரபு கலாச்சாரத்தினது தாக்கமும், அரபு வணிக உந்துதலுமே மேலோங்கியதாக இருந்தது. (விங்க் 1990: அத்தியாயம் 3).

கேரளாவினதும், இலங்கையினதும் இடைக்கால இந்து மற்றும் பௌத்த சாம்ராஜ்யங்கள், கடல்கடந்த வர்த்தகத்தில் இருந்து வருவாயைப் பெற ஆர்வத்துடன், அரபு வணிகர்களை அனுமதித்தன. அவர்களில் பலர் உள்ளூர் மனைவிகளைப் பெற்றனர். அவர்களால் இந்தோமுஸ்லிம் வம்சாவளியைப் இங்கு உருவாக்க முடிந்தது. கோழிக்கோடு, கொழும்பு போன்ற துறைமுக குடியிருப்புகளில் அவர்கள் பொருளாதார நிலையில் மேம்பட்ட இடத்தில் இருந்தனர். (அரசரட்ணம் 1964; டேல் 1980; கிரிபாமுனே 1986).
அப்போது மொழிவாரியாக கேரளாவுடன் இணைந்திருந்த தென்கிழக்கு இந்தியாவின் சோழ மண்டல கரையோரப் பகுதி அரேபிய முஸ்லிம் வணிகர்களையும் ஈர்த்தது. அவர்கள் காயல்பட்டிணத்தில் தாம்பிரபாணி ஆற்றின் முகப்பில் ஒரு உறைவிடத்தை நிறுவினர் - அதே போல் கீழக்கரை, அதிராம்பட்டினம், நாகப்பட்டினம் மற்றும் பிற கடலோரக் குடியேற்றங்களையும் நிறுவினர். வடக்கே இருந்து அவர்கள் ஏனைய பொருட்களோடு தமிழ் இந்து மன்னர்களின் படைகளுக்குத் தேவையான அரேபியக் குதிரைகளை இறக்குமதி செய்தனர். அத்துடன் இங்கிருந்து அவர்கள் இந்திய ஆடைகளை ஏற்றுமதி செய்தனர் (பேலி 1989).
1498 ஆம் ஆண்டு வாஸ்கொடகாமா தனது போர்த்துகீசிய கடற்படை சிலுவைப்போரை, கோழிக்கோட்டில் நன்கு நிலைபெற்ற 'மூர்'களுக்கு எதிராகத் தொடங்கியபோது, எஞ்சியிருந்த பெரும்பாலான அரேபியர், உள்நாட்டில் கலப்புத் திருமணம் செய்துகொண்ட மாப்பிளா முஸ்லிம்களை ஏதோ ஒரு வடிவில் சண்டையைத் தொடர விட்டுவிட்டு மலபார் கடற்கரையிலிருந்து வெளியேறத் தொடங்கினர். (Bouchon 1973; Dale 1980:47). அதே நேரத்தில், போர்த்துகீசியர்கள், தென்னிந்தியாவின் மலபார் மற்றும் சோழமண்டல

*கரையோர முஸ்லிம்களுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டிருந்த தமிழ் பேசும் 'மூர்'களை (சோனகர்களை) இலங்கையில் எதிர்கொண்டனர். அவர்கள் (மூர்கள்) கோட்டேயின் உள்ளூர் சிங்கள மன்னர்களின் மேலாதிக்கத்தின் கீழ் வரும் முக்கிய தென்மேற்கு துறைமுக குடியிருப்புகளில் சுங்க வரி வசூலிக்கவும், கப்பல் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் அரச அனுமதி பெற்றவர்களாக இருந்தனர். (அலி 1980; இந்திரபால 1986; அபேயசிங்க 1986).*

*போர்த்துகீசிய, ஒல்லாந்து காலனித்துவ ஆட்சிக் காலம் என்பது ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் கடுமையானதாகவே இருந்தது. அதிலும் குறிப்பாக மூர்கள் (சோனகர்கள்), தங்களின் இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தின் ஐரோப்பிய ஏகபோகத்திற்கு அவர்கள் விடுத்த அச்சுறுத்தல் காரணமாக கடுமையான அபராதங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். இறுதியில், போர்த்துகீசியக் கொள்கைகளின் விளைவாக, (1626 ஆம் ஆண்டின் உத்தியோகபூர்வ ஆணையின்படி) பல கரையோர சோனகர்கள் உள்நாட்டில் கண்டிய இராச்சியத்திற்கு இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. அங்கு அவர்கள் தாவலம் எனும் மாட்டு வண்டிப் போக்குவரத்திலும், ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டார்கள். (அலி 1980: 337ff; சி.ஆர். டி சில்வா 1968; தேவராஜா 1986). 1626 ஆம் ஆண்டு கண்டி அரசன் செனரத், போர்த்துகீசிய கோட்டையான புளியந்தீவிலிருந்து தனது கிழக்குப் பகுதியைப் பாதுகாப்பதற்காக 4,000 சோனகர்களை கிழக்குக் கடற்கரையின் மட்டக்களப்புப் பகுதியில் மீள்குடியேற்றியதாகக் கூறப்படுகிறது. இது உண்மையெனில், அது மட்டுமே இந்தப் பகுதிக்கு சோனகர்கள் இடம்பெயர்ந்தமைக்கான ஒரே வரலாற்றுக் குறிப்பாக இருக்கிறது. (சி.ஆர். டி சில்வா 1972: 88; எம்.ஐ.எம். மொஹிதீன்)*



**மாப்பிள்ளா முஸ்லிம்**

**Image source - wikipedia.org**

*செனரத்தின் மீள்குடியேற்றம் பற்றி எந்தவொரு உள்ளூர் ஆவணங்களிலும் வலுவான ஆதாரங்கள் இல்லை. ஆனால் 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், உறுதியாக 17 ஆம் நூற்றாண்டிலும், ஏராளமான சோனக விவசாயிகள் கிழக்குக் கடற்கரையில் நன்கு நிலைநிறுத்தப்பட்டனர். இன்று நாட்டின் முஸ்லிம் சனத்தொகையில், அதிக முஸ்லிம் விகிதத்தைக் கொண்ட பகுதி, எனது சொந்த களப்பணியை நான் செய்த இந்தப் பகுதியே ஆகும்.*

*(தொடரும்.)*

# சோல்பரி அரசியல் யாப்பு உருவாக்கத்தின் பின்னணி

## பகுதி 1



கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

**ஆங்கிலமொழி மூலம்: வி.நவரத்தினம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)**

**1947** இல் சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இந்த யாப்புடன் தமிழர்களின் துயர நாடகம் ஆரம்பித்தது. சோல்பரி அரசியல் யாப்பின் தோற்றம், அதன் வீழ்ச்சி, இறுதியில் அது ஒழிக்கப்பட்டமை ஆகிய வரலாறு தமிழர்களின் இத்துன்பியல் நாடகத்தில் உள்ளடங்குவதாகும். தமிழ் - சிங்கள உறவுகளில் இவ்வரசியல் யாப்பு கறுப்புப் பக்கங்களாக உள்ளது.

காலனிய ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் சமூகங்கள் அரசியல் விடுதலையும் சுதந்திரமும் என்ற பாதையில் வெற்றிகரமாக பயணிப்பதாயின் அம் மக்கள் சமூகங்கள் சில திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இந்த வெற்றிப் பயணத்திற்கு நாகரிகமான அரசியல் நடத்தையென கருதப்படுவதும் உலகு தழுவிய பொதுவிதிகள் சிலவற்றால், எழுதப்படாத நாகரிக நடத்தை விதிகளால் வழிநடத்தப்படக்கூடிய அரசியல் பண்பாட்டை அச்சமூகங்கள் ஏற்று நடக்கும் திறமைகள் என்பன அவசியமான முன்தேவைகளாகும்.

சுதந்திரம் என்பது இந்த விதிகளை மீறுவதற்கான அனுமதிப்பத்திரம் அன்று. புதிதாகக் கிடைத்த சுதந்திரத்தை சிங்களத் தலைவர்கள் ஆரோக்கியமானதும், வளம்மிக்கதுமான ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உபயோகிப்பதற்குத் தவறினர். பிரித்தானியா விட்ட இடத்திலிருந்து முன்னோக்கிய பாதையில் செல்வதைவிடுத்து, இத் தலைவர்கள் மத்தியகால இலங்கையின் மகாவம்சப் பகைகளுக்கு புத்துயிர் அளித்தனர். இதுவோர் அவல நிலையாகும்.



இலங்கை சுதந்திரம் பெறுவதற்கான ஆவணத்தில் கையெழுத்திடும் டி.எஸ். சேனநாயக்க

Image source - www.sundaytimes.lk

சுதந்திரத்தை சும்மா பெற்றவர்களுக்கு, அதற்காகப் போராடாமல், தியாகங்களைச் செய்யாமல் அதனைப் பெற்றவர்களுக்கு அச் சுதந்திரத்தின் அருமை தெரிவதில்லை என்று கூறுவர். அது இலங்கைத் தலைவர்கள் விடயத்தில்

வெளிப்படையான உண்மையாகிவிட்டது. வன்முறையிலான அமெரிக்கச் சுதந்திரப் போராயிருந்தாலென்ன, சாத்வீக வழியிலான இந்திய சுதந்திரப் போராட்டமாகவிருந்தாலென்ன மக்களின் தியாகங்கள் இல்லாமல் சுதந்திரம் கிடைப்பதில்லை. அளப்பரிய தியாகங்கள் மூலம் பெற்ற சுதந்திரத்தின் பெறுமதியை மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அரசியல் சுதந்திரத்தின் பெறுமதியை உணர்ந்திருந்த அமெரிக்கர்களும் இந்தியர்களும் தாம் போராடிப் பெற்ற சுதந்திரத்தின் பயன்களை நன்முறையில் துய்க்க முடிந்தது. இலங்கை வன்முறை போராட்டத்தின் மூலம் சுதந்திரத்தைப் பெறவில்லை. சாத்வீக வழிகளில் கூட அது போராட்டத்தை நடத்தவில்லை. இந்தியா சுதந்திரத்துக்காகப் போராடி அதனைப் பெற்றது. இந்நிலையில் பிரித்தானியர் இலங்கைக்கும் சேர்த்துச் சுதந்திரத்தை வெள்ளித்தட்டத்தில் வைத்து சும்மா கொடுத்துவிட்டனர். சிங்களத் தலைவர்களுக்கு அதன் அருமை தெரியவில்லை.

இரண்டாம் உலகயுத்தம் முடிவுக்கு வந்தவேளையில் பிரித்தானிய சாம்ராஜ்ஜியம் தனது காலனியக் கொள்கையில் பெருமாற்றம் ஒன்றை செய்தேயாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த உண்மை அரசியல் நோக்கர்களிற்குப் புலப்படலாயிற்று. இங்கிலாந்து தனது தூரதேசத்துக் காலனிகளை இனிமேலும் முன்னரைப் போல கட்டியாள முடியாது என்பது தெளிவாயிற்று. இந்தியாவின் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைத்தது. காந்தி, நேரு ஆகிய தலைவர்களோடு ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். பிரித்தானிய வைஸ்ராய் ஆகவிருந்த வேவல் பிரபுவால் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் தனது ஆணையை செலுத்த முடியவில்லை.

மௌன்ட் பேட்டன் பிரபுவின் தலைமைக் கட்டளைப் பணியகம் இலங்கையில் கண்டியில் அமைக்கப்பட்டிருந்தது. அவர் தென்கிழக்கு ஆசியாவிற்குப் பொறுப்பான உயர் படைத் தளபதியாக இருந்தார். அட்மிரல் லெய்டன் (Layto) என்பவர் இலங்கைத் தீவின் பொறுப்பதிகாரியாக இருந்தார். இலங்கையின் சிவில் விவகாரங்கள் (Civil Affairs) மந்திரிகள் சபையிடம் (Board of ministers) இருந்தது. மந்திரி சபையின் தலைவராக டி.எஸ். சேனநாயக்க இருந்தார். அக்கால டொனமூர் அரசியல் அமைப்பின்படி பிரித்தானியர்களான மூன்று செயலாளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே சேனநாயக்கவும் மந்திரிசபையினரும் குடியியல் விவகாரங்களை நிர்வகித்துக் கொண்டிருந்தனர். இவ்வேளை இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குதல் பற்றிய செய்திகள் பரவலாயின.

டி.எஸ்.சேனநாயக்க பிரித்தானியாவின் அதிகார வகுப்புடன் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதல் பற்றிப் பேசுவதற்கு இதுவே நல்ல தருணம் என்ற முடிவுக்கு வந்தார். பிரித்தானியாவின் வெள்ளை மாளிகை (White Hall) அலுவலகத்துடன் டி.எஸ் தொடர்புகொண்டார். அவ் அலுவலகம் யுத்தம் முடியும் வரை இதைப் பற்றிப் பேசமுடியாது என அறிவித்தது. யுத்தம் முடிவுற்றதும் அரச ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கான அரசியல் யாப்பு வரைவை சமர்ப்பிக்குமாறு மந்திரிகள் சபையை (Board of Ministers) வெள்ளை மாளிகை அலுவலகம் கேட்டுக்கொண்டது. சிங்கள அமைச்சர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இம் மந்திரிசபை ஓர் அரசியல் திட்டவரைவை முன்வைத்தது. இத்திட்டம் பிரித்தானியாவின் 'மந்திரி சபை அரசாங்கம்' (Cabinet Government) என்ற மாதிரியைப் பின்பற்றி வரையப்பட்டது. மந்திரிசபை அந்த வரைவை ஏற்றுக்கொள்ளும்படியும் அது பற்றி அரச ஆணைக்குழு விசாரணை செய்ய வேண்டிய தேவை இல்லையென்றும் கேட்டுக்கொண்டது. அக்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் அதிபராகவிருந்த சேர். ஐவர் ஜெனிங்ஸ் இந்த வரைவைத் தனித்து எழுதி வழங்கினார் என்பது பலரும் அறிந்த உண்மை.

யுத்தம் முடிவடைந்ததும் பிரித்தானியா அரச ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. மந்திரிசபை வரைவை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான அரசியல் யாப்பை சிபார்சு செய்யும் படி இவ்வாணைக்குழு வேண்டப்பட்டது. ஆணைக்குழுவின் தலைவராக சோல்பரிப் பிரபு நியமிக்கப்பட்டிருந்தார். ஆணைக்குழு இலங்கையரிடம் சான்றுகளை கேட்டறியும்படியும் கோரப்பட்டது. டி.எஸ். சேனநாயக்கவும் மந்திரிசபையும் ஆணைக்குழுவை பகிஷ்கரிப்பது என முடிவு செய்தனர். இந்தப் பகிஷ்கரிப்பு வெறுமனே உத்தியோகபூர்வமான அறிவிப்புத்தான். அவர்கள் இரகசியமாக ஆணைக்குழுவுடன் கொழும்பில் வைத்துப் பேரம்பேசலிலும், நீண்ட உரையாடலிலும் ஈடுபட்டனர்.

மந்திரிசபையின் வரைவை அப்படியே ஏற்கவேண்டுமென்றால், ஏன் ஆணைக்குழுவொன்றை அமைத்திருக்க வேண்டும்? ஆணைக்குழுவை நியமித்த வெள்ளை மாளிகை அலுவலகம், இலங்கையில் சிங்களவர் - தமிழர் முரண்பாடுகள் இருப்பதை நன்கு அறிந்திருந்தது.

மந்திரிசபை வரைவு சிங்களவர் சமர்ப்பித்த வரைவு என்பனவற்றை நன்கு தெரிந்திருந்தது. தமிழர்களையும் ஏனைய சிறுபான்மையினரையும் தம்பக்க கருத்துக்களைக் கூறவும், கேட்டறியவும் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்ற குறை வரக்கூடாது என்பதற்காகவே வெள்ளை மாளிகை அலுவலகம் ஆணைக்குழுவை விசாரணைக்காக நியமித்தது. இலங்கையில் உள்ளது போன்ற பிரச்சினையை பிரித்தானியர் இந்தியா விடயத்தில் எதிர்கொண்டனர். அங்கு இந்து முஸ்லிம் பிரச்சினை இருந்தது. பிரித்தானியர் இந்தியா விடயத்தில் முஸ்லிம் சார்பாக தீர்மானம் எடுக்கவிருந்தனர். இலங்கையில் சிங்களவர்களுக்குச் சார்பாக முடிவுசெய்யத் தயாராகிக் கொண்டிருந்தனர். ஆனால் தம்மீது குற்றம்சாட்ட முடியாத வகையில் ஆணைக்குழுவை நியமித்தனர். இந்தியாவில் ஒரு விதமாகவும், இலங்கையில் இன்னொரு விதமாகவும் நடந்து கொள்வது தம்மீது குற்றம் சுமத்துவதற்கு ஏதுவாகலாம் எனப் பிரித்தானியா கருதியது.

சோல்பரி ஆணைக்குழுவை என்ன காரணத்திற்காக நியமித்தார்கள் என்பது ஒருபுறமிருக்க, 1944-45 காலத்தில் ஆணைக்குழு இலங்கையின் பிரதான நகரங்கள் யாவற்றிலும் அமர்வுகளை நடத்தியது. எல்லாச் சிறுபான்மை சமூகங்களும் தமது அமைப்புகள் ஊடாக தமது கருத்துக்களை முன்வைத்தன.

இலங்கைத் தமிழர்கள் ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்டுபட்டவர்களாய் அன்று இருக்கவில்லை. அவர்களிடையே பல குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு பாதையில் பயணித்தவண்ணம் இருந்தன. தமிழ்த் தேசியவாதத்தினை ஜி.ஜி.பொன்னம்பலம் பிரதிநிதித்துவம் செய்தார். அவருக்கு கீழ்மட்டத்தில் இருந்து எழும் மக்கள் ஆதரவு இருந்தது. அவரிடம் கவர்ச்சி ஆளுமையும் இருந்தது. எதிர்காலத்தில் அமையப்போகும் சட்டசபையில் இலங்கையின் சிறுபான்மை இனங்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்திற்கான (Balanced representation) ஒரு திட்டம் அவரிடமிருந்தது. பொன்னம்பலத்தின் 50 இற்கு 50 கோரிக்கை என அது பெயர்பெற்றது. தமிழர்களில் மிதவாதக் போக்குடையோர் அருணாசலம் மகாதேவாவின் தலைமையை ஏற்றிருந்தனர். (அருணாச்சலம் மகாதேவா பின்னர் சேர் பட்டம் பெற்றார்) இவர் டி.எஸ்.சேனாநாயக்காவின் மந்திரிசபையில் டொனமூர் யாப்பின் படியான அரசில் அமைச்சராகவும் பதவிவகித்தார். தமிழ் மிதவாதிகள் சிங்களவர்களிடம் எவ்வித நிபந்தனையையும் விதிக்காமல் அவர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கினர்.

தமிழ்த் தேசியவாதிகளிடமும், தமிழ் மிதவாதிகளிடமும் ஒரு விடயத்தில் கருத்தொற்றுமை இருந்தது. இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் குடியேறி வாழ்வதற்கான உரிமை தமிழர்களுக்கு உள்ளது என்பதில் அவர்கள் இருசாராரும் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் யதார்த்தத்தில் வடக்கு - கிழக்கு தமிழர் பெரும்பான்மையினராக வாழும் பகுதியாகவும், ஏனைய பகுதிகள் சிங்களவர் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளாகவும் இருந்தன. இந்த விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் பெருந்தவறை இழைத்தார்கள். இத் தவறே பெரும் கேடு சூழ்வதற்குக் காரணமாயிற்று. இந்தத் தவறான அரசியல் கொள்கை பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்களையும் அவர்களின் சொத்துக்களையும் இழப்பதற்கு காரணமாயிற்று.

சிறுபான்மை இனத்தவர்களிடையே பல்வேறுபட்ட அபிப்பிராயங்களையும் கொண்டவர்களான பலர் இருந்தனர். இவர்கள் யாவரையும் ஒன்றிணைக்கும் அமைப்பு ஒன்றை உருவாக்கி ஒருமித்த குரலில் சோல்பரி ஆணைக்குழுவிற்குக் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் எனக் கருதப்பட்டது. இந்த நோக்கத்தோடு 1944 ஆம் ஆண்டு கொழும்பு சாகிராக் கல்லூரியின் மண்டபத்தில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தை ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஆதரவாளர்களே முன்மொழிந்து கூட்ட அறிவித்தலை யாவருக்கும் அனுப்பினர். கொழும்பு நீதிமன்றத்தின் சட்டவாளர்களான எனது இரு நண்பர்கள் அந்த கூட்ட அறிவித்தலை என்னிடம் கொடுத்து கூட்டத்தின் அமைப்பாளர் என்றவகையில் கையெழுத்திடுமாறு கேட்டனர். நான் கைழுத்திட மறுத்துவிட்டேன். இதற்கு மூன்று காரணங்கள் இருந்தன. தனிப்பட்ட காரணங்களுக்காக நான் அவ்வேளை அரசியலில் இறங்கத் தயாராக இருக்கவில்லை. இரண்டாவதாக சமநிலைப் பிரதிநிதித்துவம் என்ற கருத்தில் எனக்கு உடன்பாடு இருக்கவில்லை. அது நியாயமான ஒரு வழிமுறையென்றோ தமிழர்களின் பிரச்சினைகளின் தீர்வுக்கு அதனைத் திறன்மிகு வழிமுறையாகவோ நான் கருதவில்லை. மூன்றாவதாக நான் அக்காலத்தில் சமஷ்டி முறை பற்றிய அரசியல் சிந்தனையால் கவரப்பட்டிருந்தேன். இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பகைமை உணர்வை அம்முறையே நீக்கவல்லது என்றும் கருதினேன். எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து திரும்பிய சிலநாட்களின்



பின்னர் இலங்கைக்கு சமஷ்டி முறை வேண்டும் என்று வாதிடும் முறையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அக்கட்டுரையால் நான் கவரப்பட்டிருந்தேன்.

என்னிடம் கூட்ட அறிவித்தலைக் கொண்டுவந்து காண்பித்த சட்டவாளர்களான நண்பர்கள் சட்ட நூலகத்தில் இருந்த நண்பர்கள் பலருக்கும் அக் கூட்ட அறிவித்தலைக் காட்டி ஆதரவு கேட்டனர் என்பதை அறிந்துகொண்டேன். இந்த விடயம் பற்றி பல ஆண்டுகள் கடந்தபின் எஸ். ஜே. வி செல்வநாயகம் அவர்கள் ஒரு தகவலை எனக்கு கூறினார். அந்த அறிவித்தலைக் கொண்டுவந்த நண்பர்கள் ஏதோ காரணத்தால் அதனைக் தமக்கு காண்பிக்கவில்லை எனவும், தாமாகவே முன்வந்து அந்த அறிவித்தலில் தாம் கையெழுத்திட்டதாகவும் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கோரிக்கைகளுக்குப் பலமான ஆதரவைக் கொடுக்க வேண்டுமென தாம் அப்போது கருதியதாகவும் தெரிவித்தார். பின்னர் தற்காலிக குழுவொன்று அமைக்கப்பட்டது. அக் குழுவில் எஸ். ஜே. வி செல்வநாயகம் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அ. மகாதேவ, சு. நடேசப்பிள்ளை ஆகிய இருவரும், பொன்னம்பலத்தின் கருத்தில் இருந்து மாறுபட்ட கருத்துக்களையுடையவர்களாயினும், தமிழ் மிதவாதக் கருத்துக்களை உடையவர்களாயிருந்த இவ் இருவரும் தற்காலிக குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஜி. ஜி. பொன்னம்பலம் இறுதியில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்காலிகக் குழு பின்னர் இலங்கைத் தமிழர் காங்கிரஸ் கட்சியென உருவாக்கம் பெற்றது.

தற்காலிகக் குழு, தமிழர் சார்பில் ஆணைக்குழுவிற்கு தமிழர் தரப்பின் கோரிக்கைகளையும் நியாயங்களையும் எடுத்துக்கூறியது. ஜி. ஜி. பொன்னம்பலம் தற்காலிக குழுவின் முதன்மைப் பேச்சாளராக விளங்கினார். அவர் 50 இற்கு 50 திட்டம் பற்றிப் பாராளுமன்றத்தில் நீண்டநேர உரையாற்றினார். அவரது உரையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இருக்கவில்லை. அவர் பெறுமதிமிக்க திட்டத்தை அவ் உரையில் முன்வைத்திருப்பாரேயானால் அவரது உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவொன்றாக அமைந்திருக்கும். ஆயினும் அவரது 50 இற்கு 50 யோசனை அக் காலத்தில் சிறுபான்மை இனத்தவர்களின் பொது இணக்கத்தின்படியான கருத்தாக இருந்தது என்பதைக் குறிப்பிடலாம்.

50 இற்கு 50 யோசனை சிங்களவர் நாட்டின் பெரும்பான்மை என்ற காரணத்தினால் புதிய யாப்பின்படியான சட்டசபையில் அவர்களுக்கு 50 வீத ஆசனங்களை கொடுக்க வேண்டும் எனவும், மீதமுள்ள 50 வீத ஆசனங்களையும் சிறுபான்மை இனங்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் கூறுவதாக இருந்தது.

சட்டசபையில் எந்தவொரு குறிப்பிட்ட சமூகமும் மேலாதிக்கம் செலுத்தக்கூடாது என்பதே இந்த யோசனையின் பொருளாகும். இதற்கு முந்திய டொனமூர் சட்டசபையும் இவ்வாறான கருத்தின் அடிப்படையில் தான் உருவாக்கப்பட்டிருந்தது. தமிழர் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து தமிழர் பிரதிநிதித்துவம் தெரிவுசெய்யப்படலாம். ஏனைய மாகாணங்களில் அங்குமிங்குமாக சிதறிவாழும் தமிழர்களும் தமது குரலை அழுத்தமாக வெளிப்படுத்த முடியுமெனினும் அவர்கள் ஒருபோதும் அப்பிரதேசங்களிற்கு தமிழ்ப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தல் இயலாது. பல தலைமுறைகளாகக் கட்டி எழுப்பப்பட்ட தமிழர் நலன்களைப் பாதுகாக்கும் வழி இதுவே. 50 இற்கு 50 திட்டத்தின்படி சிறுபான்மை இனத்தவர்கள் யாவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

பொன்னம்பலத்தின் 50 இற்கு 50 திட்டம் முன்வைத்த தீர்வு போலியானது. அதனால் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் நடைமுறையில் 50 வீதத்தினதாக இருப்பதை

உறுதிசெய்திருக்க முடியாது. சிங்கள தலைவர்கள் அதனை ஏற்றிருப்பார்களா? ஆணைக்குழு அதனை ஏற்றிருக்குமா? என்பது ஒருபுறம் இருக்க சுதந்திரத்தின் பிந்திய நிகழ்வுப் போக்குகளில் 50க்கு 50திட்டம் நடைமுறையில் எவ்வித வேறுபாட்டையும் ஏற்படுத்தியிருக்க முடியாது. பொன்னம்பலத்தின் சிறப்பான உரை, எடுத்துரைப்பு என்பவற்றிற்கு ஆணைக்குழு பாராட்டுரையை வழங்கியது. ஆனால் அவரின் கோரிக்கையை ஆணைக்குழு முற்றாக நிராகரித்தது. மந்திரிசபை வரைந்தளித்த யாப்பை ஆணைக்குழு முழுமையாக ஏற்றது.

அன்றைய காலத்தின் தலைவர்கள் அரசியல் ஞானமும் தீர்க்கதரிசனமும் அற்றவர்களாக நடந்துகொண்டனர். இதற்காக பிற்காலத் தலைமுறையினர் அவர்கள் மீது குற்றம் சுமத்துவார்களானால் அதில் தவறு இல்லை. அன்றைய தலைவர்கள் குறுகிய குழு நலன்கள் பற்றிச் சிந்தித்து தமிழ் இனத்தின் நலன்களும் எதிர்காலமும் பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டனர். இதனால் ஏற்பட்ட துன்பத்தை இன்றும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் இன்றைய தமிழர்கள் தான். சிங்களவர்களின் கொடுங்கோலாட்சியாலும் அவர்கள் இழைக்கும் அநீதியான செயல்களாலும் அவதிக்குள்ளானவர்கள் பிற்காலச் சந்ததியினரே.

பிரித்தானியர் இலங்கையை விட்டு நீங்கிச் சென்று 30ஆண்டுகள் கடந்துவிட்ட இக் கால எல்லையுள் தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பது ஒன்றே ஒரே பணி என்ற பாங்கில் இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது. தமிழர்களுக்கு அவர்கள் பிறந்த தாயக மண்ணில் குடியுரிமை என்பது நிச்சயமற்ற ஒன்றாகவே அமைந்துள்ளது. அவர்களுள் ஒரு பிரிவினரின் குடியுரிமை பறிக்கப்பட்டுவிட்டது. தமிழர்களின் நிலங்கள் அரசாங்க நிதியுடன் செயற்படுத்தப்படும் குடியேற்றத் திட்டங்களால் பறிக்கப்படுகிறது. அவர்களது மொழிக்கு அங்கீகாரம் இல்லை. அரசாங்கத்திலும் தனியார் துறைகளிலும் உத்தியோகம் பெறுவதானால் அவர்கள் சிங்களத்தைக் கற்கவேண்டும் என்ற நிலை உள்ளது. அரசாங்கப் பதவிகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு கொடுக்கபட்டது. புதிதாக நடைபெறும் ஆட்சேர்ப்புகளில் அவர்களுக்கு இடம் இல்லை. பல்கலைக் கழகங்களிற்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது அல்லது தவிர்க்கமுடியாத ஆகக்குறைந்த அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சர்வாதிகார ஆட்சியின் உச்சமாக அமையும் விடயம் தமிழர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலைதான்.

ஏறக்குறைய நானூறு ஆண்டுகால அந்நிய ஆட்சியின் பின்னர் தமிழர்களுக்கு தாம் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கு வரலாறு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. அதனை உரியமுறையில் பயன்படுத்த அக்காலத் தலைவர்கள் தவறிவிட்டார்கள். அருகே உள்ள இந்தியாவில் ஒரு சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஒரு தனி அரசை அமைத்துக் கொண்டனர். சுதந்திரத்திற்கு பிந்தைய புதிய தலைமுறையினரான இலங்கைத் தமிழர்கள் ஏன் இவ்விதம் சிந்தித்து செயற்படத் தவறினர்? தமிழர் பிரச்சினையை தீர்க்கத் தவறினர் எனத் தெரியவில்லை.

அக்காலத் தலைவர்களுக்கு இந்தச் சிந்தனை தோன்றவில்லை எனக் கூறமுடியாது. சோல்பரி ஆணைக்குழுவின் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுத் தெரிய வந்தநிலையில் ஜி. ஜி. பொன்னம்பலம் உடனடியாகவே குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கு தந்திச் செய்தி அறிவித்தார். சோல்பரி ஆணைக்குழுவின் முன்மொழிவு திருத்தம் செய்யப்படாவிட்டால் தமிழர் சமஷ்டித் தீர்வை கோருவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என அவர் அச் செய்தியில் கூறியிருந்தார். அச் செய்தியை அனுப்பியதும் அல்லாமல் அவர் லண்டனுக்கு விரைந்து பயணமானார். அவரது பயணம் எவ்வித பயனையும் தரவில்லை.

அக்காலத் தலைவர்கள் யாவரும் கொழும்பு நகரின் செல்வந்த வகுப்புத் தமிழர்களாக இருந்தனர். அவர்கள் தமது குறுகிய சுயநலன்களைப் பற்றியே சிந்தித்தனர். இருந்தபடியே மாற்றமின்றி யாவும் தொடரவேண்டும் என்ற மனப்பான்மையுடன் அவர்கள் சிந்தித்தனர். இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் ஏற்படக் கூடிய புரட்சிகர மாற்றம் தங்களின் வாழ்க்கையைக் குலைத்து தலைகீழாகப் புரட்டிவிடும் என அச்சம் கொண்டிருந்தனர். நாட்டில் எவ்வகைப்பட்ட பிரிவினைக்கும் அவர்கள் தயாராக இருக்கவில்லை. கொழும்பிலும், பிற சிங்களப் பகுதிகளிலும் அவர்களுக்கு இருந்துவந்த வேறூன்றிய நலன்கள் அவர்களின் அரசியல் சிந்தனையின் மீது செல்வாக்கைச் செலுத்தியது. அவர்கள் தம் நலன்களைப் பற்றியே கவலை கொண்டிருந்தனர். மிக அண்மைக் காலம்வரை, அவர்களின் சொத்து சுகங்கள் யாவும் எரிந்து சாம்பலாகிப் போனதும், இரத்த ஆறு பெருகியோடியதுமான நிகழ்வுகள் நடைபெறும் வரை, அத் தலைவர்கள் தாம் உருவாக்கிய மாயக் கற்பனையோடுதான் வாழ்ந்தார்கள் என்பது ஒரு சாபக்கேடு.

தமிழ்த் தலைவர்களின் இக் குறுகிய சுயநலநோக்கு அவர்களைத் தொடர்ச்சியாகத் தொல்லைப்படுத்தியது: திசைமாறிச் செல்ல வைத்தது. அவர்களின் இப் பலவீனத்தைப் புரிந்துகொண்ட சிங்களத் தலைவர்கள் அவர்களைத் தம் தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொண்டனர். புதிய அரசியல் யாப்புப் பற்றிய வெள்ளை அறிக்கை விவாதத்தில் அவர்களது கபடத்தனம் வெளிப்பட்டது. தமிழ்த் தலைவர்களும் அவர்களது சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக் கொண்டனர்.

இந்தியாவில் அரசியல் சுதந்திரம் பற்றிய தீர்மானம், இந்தியாவின் இருபெரும் தேசியக் கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய முஸ்லிம் லீக் என்ற இரண்டினாலும் தீர்மானிக்கப்பட்டன. அவை முறையே இந்துக்கள், முஸ்லிம் என்ற இருபெரும் சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்தன. இக் கட்சிகள் தமது மக்களின் தலைவிதியைத் தாமே தீர்மானித்தன. இலங்கையில் வெள்ளை அறிக்கையை ஏற்பதா இல்லையா என்பது குறித்து மக்களின் விருப்பு அறியப்படவில்லை. மக்களின் விருப்பத்தை ஒரு தேர்தலை நடத்தி அறிந்திருக்கலாம். இதற்குப் பதிலாகப் பத்து ஆண்டுகளுக்கு முன் 1936 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட சட்டசபையிடம் (State Council) அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இது காலம் கடந்த வலுவற்ற சபையாகும். இந்தப் பத்தாண்டு காலத்தில் இலங்கையில் அரசியல் அபிப்பிராயத்தில் பெருமாற்றம் ஏற்பட்டிருந்தது. காலம் கடந்து போன இச்சபையின் உறுப்பினர்கள் மக்களின் அபிப்பிராயத்தையும் விருப்புக்களையும் பிரதிநிதித்துவம் செய்தார்கள் எனக் கொள்ள முடியாது. மந்திரிசபையும் (Board of ministers) வெள்ளை மாளிகையும் பழைய சட்டசபையின் தீர்மானத்தின்படி செயற்படுவதென முடிவு செய்தன.

1946ஆம் ஆண்டு சட்டசபையில் வெள்ளை அறிக்கை பற்றிய விவாதம் நடைபெற்ற போது தமிழ் மிதவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களான அருணாசலம் மகாதேவா, சு. நடேசப்பிள்ளை, ஜெகநாதன் தியாகராஜா என்போரும் வேறு சிலரும் சோல்பரி ஆணைக்குழுவிற்கு தெரிவித்த கருத்துக்களுக்கு மாறாக பேசினர். தமது முன்னைய நிலைப்பாடான சிங்களவருடன் ஒத்துப்போதல் என்ற கொள்கையை மீண்டும் ஏற்றுக்கொண்டனர். காலனிய அரசின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு இங்கிலாந்து சென்றிருந்த ஜி. ஜி. பொன்னம்பலம் அப்போது சபையில் நடந்த இவ் விவாதத்தில் கலந்துகொண்டிருக்கவில்லை.

அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பான தமது முன்மொழிவுகளை தமிழ்த் தலைவர்களையும் சிறுபான்மை இனத் தலைவர்களையும் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு தமது சக்திக்குட்பட்ட அனைத்தையும் உபயோகித்து ஆதரவைப் பெற்றுக்கொண்டனர். டி. எஸ். சேனநாயக்க, எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்க, ஏ. எவ் மொலமுரே (இவர் பின்னர் சனப் பிரதிநிதிகள் சபையின் முதலாவது சபாநாயகர் ஆகப் பதவிவகித்தார்.) ஜோர்ஜ். ஈ. டி. சில்வா என்று பலரும் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர். ஒவ்வொருவராக எழுந்து, சிங்களத் தலைவர்களோடு ஒத்துழைக்கும்படியும் அரசியல் யாப்பு யோசனைகளை ஆதரிக்கும் படியும் கேட்டுக் கொண்டனர். கிளிப்பிள்ளை பேசுவது போல அவர்கள் ஒவ்வொருவரும் பின்வரும் கூற்றுக்களைத் தமது உரையில் ஒப்புவித்தனர்.

- *தயவுசெய்து எங்களை நம்புங்கள். உங்கள் நம்பிக்கை காப்பாற்றுவோமா இல்லையா என்பதை நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை எமக்கு வழங்குங்கள்.'*
- *'தயவுசெய்து எங்களை நம்புங்கள். நாம் பெருமைமிகு சிங்கள இனத்தின் வாரிசுகள் இல்லையா, உங்கள் நம்பிக்கையை காப்பாற்றுவோமா இல்லையா என்பதை இருந்து பாருங்கள்'*
- *'தயவுசெய்து நாம் இந்த அரசியல் யாப்பு நன்கு செயற்படுகிறதா இல்லையா, எம்மால் இதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன்செல்ல முடிகிறதா இல்லையா என்பதை அறிய அனுமதியுங்கள்.'*
- *இந்த அரசியல் யாப்பைச் செயற்படுத்தி பரிசோதிப்பதற்கு தயைகூர்ந்து வாய்ப்பைத் தாருங்கள். நாங்கள் உங்களின் அச்சம் ஆதாரமற்றது என்பதை நிரூபிப்போம்.'*

டி. எஸ். சேனநாயக்க கடந்தகால வரலாற்றை உதாரணம் காட்டிப் பேசினார்: 'சிங்களவரைத் தமிழ் அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். தமிழர்களை சிங்கள அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். ஆனால் மக்கள் எப்போதுமே ஐக்கியமாகவே வாழ்ந்தனர்.'

சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதிகள் ஆற்றிய உரைகள் அவர்களது சந்தர்ப்பவாத மனப்பாங்கை பறைசாற்றுவன. அவர்கள் யாவரும் சிங்களவர்களை நம்ப வேண்டும். புதிய அரசியல் யாப்பைச் செயற்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கூறினர். சு. நடேசப்பிள்ளை பேசும்போது "நாம் எமது பக்கக் கருத்தை நீதிபதி ஒருவர் முன்னிலையில் எடுத்துரைத்தோம். அவர் அதனை



சுதந்திரமடைந்தபின் முதல் பாராளுமன்றத்தில் டி.எஸ். சேனநாயக்க மற்றும் லோர்ட் சோல்பரி

Image source - www.tamilnet.com

நிராகரித்துவிட்டார். இனி நாம் செய்வதற்கு எதுவும் இல்லை" (பிரித்தானிய காலனிய அரசை அவர் நீதிபதி என்றார்) என்றதுடன் தமிழ்ப் பண்டிதரான அவர் 'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற ஔவையாரின் பொன்மொழியையும் எடுத்துக் காட்டினார். ஜெகநாதன் தியாகராஜா, ஆயுதக் கிளர்ச்சி ஏற்படும் என்று அச்சுறுத்தும் பாணியில் பேசினார். வேறு எந்த மக்கள் குழுவாக இருந்தாலும் ஆயுதம் தாங்கி கிளர்ந்து எழுந்திருப்பார்கள். ஆனால் நாம் அப்படிச் செயற்படக் கூடாது. ஆதலால் நாம் சிங்களவரோடு ஒத்துழைத்து புதிய அரசியல் யாப்பைச் செயற்பட வைப்போம் என்பதே நான் எனது மக்களுக்கு கூறக்கூடிய ஆலோசனை என்று தியாகராஜா சமாதான வழி பற்றி பேசினார்.

# பகுதி 2

வெள்ளை அறிக்கை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது நடந்தது யாது என்பதைப் பற்றி சுவாரசியமான கிசுகிசுப் பேச்சு அக்காலத்தில் அரசியல் வட்டாரங்களில் அடிபட்டது. எஸ். ஜே.வி. செல்வநாயகம், டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், ஹன்டி பேரின்பநாயகம் ஆகியோரும் இன்னும் சில தமிழ்ப் பிரமுகர்களும் சட்டசபையின் தமிழ் உறுப்பினர்களை வெள்ளை அறிக்கைக்கு எதிராக வாக்களிக்கும்படி கோரி அவர்களைத் தம் கருத்துக்கு இசைய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு வெள்ளையறிக்கையை எதிர்த்து தாம் வாக்களிப்பதாக நடேசபிள்ளை கூறியிருந்தார். இப்படியிருக்க வாக்கெடுப்புக்கு முன்னர் டி.எஸ். சேனநாயக்க தனது உத்தியோகபூர்வ வதிவிடத்தில் வரவேற்பு உபசார நிகழ்வு ஒன்றை நடத்தினார். அப்போது தமது வீட்டு வளவினுள் உள் நுழைந்த கார் ஒன்று வந்துகொண்டிருப்பதை அவதானித்தார். அதில் தலைப்பாகை தரித்திருந்த ஒருவர் இருப்பதை டி.எஸ். கண்டுகொண்டார். ஆயினும் அக்காரில் வரும் நடேசப்பிள்ளை ஏற்கனவே வெள்ளை அறிக்கையை எதிர்த்து வாக்களிப்பதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார் என்பதை டி.எஸ். தெரிந்துவைத்திருந்தார். உள்ளே வந்த காரிலிருந்து இறங்கிய அக்கனவான் தம்மை நோக்கி வந்தவேளை டி.எஸ் "ஆ! இதோ வருகிறார் எமது எதிர்கால அமைச்சர்" என்று மெல்லிய குரலில், ஆனால் வருபவருக்கு கேட்கும் அளவான ஒலியில் கூறினாராம். இதனைக் கேட்டு கிறங்கிய நடேசப்பிள்ளை மறுநாள் வெள்ளை அறிக்கைக்கு சார்பாக வாக்களித்தார். டி.எஸ் திட்டம் நிறைவேறியது. ஜெகநாதன் தியாகராஜா குறிப்பிட்டது போல் வேறு எந்தவொரு சமூகமாக இருந்தாலும் வன்முறை எதிர்ப்பு போராட்டத்தில் இறங்கியிருக்கும். ஆனால் தமிழ் மக்கள் தமது கோபத்தை அடக்கிக் கொண்டு பொறுமை காத்தார்கள். அவர்கள் ஜனநாயக வழியில் செயற்படும் பாரம்பரியத்தை உடையவர்களாக இருந்தபடியால் வன்முறையில் இறங்கவில்லை. புதிய அரசியல் யாப்பின்படி முதலாவது பொதுத்தேர்தல் 1947 இல் நடைபெற்றபோது சட்டசபையின் உறுப்பினர்களாக இருந்து வெள்ளையறிக்கைக்கு சார்பாக வாக்களித்த அத்தனைபேரும் தோற்கடிக்கப்பட்டனர்.

நடேசப்பிள்ளையை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தோற்கடித்தார். அ. மகாதேவ, ஜி.ஜி. பொன்னம்பலத்தால் தோற்கடிக்கப்பட்டார். ஜெகநாதன் தியாகராஜா அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு ஒதுங்கிக்கொண்டார்.

இலங்கை சிறுபான்மை இனத்தவர்கள் பெரும்பான்மையினரான சிங்கள இனத்தவரை நம்பி ஏமாறுவது அவர்களுடைய பிறவிக் குணமான பலவீனம் தானா என்றே எண்ணத் தோன்றுகிறது. அதனை உயர்ந்த பண்பு எனக் கருதினார்களா ? அல்லது தவிர்க்க முடியாத கட்டாயமாக ஏற்றார்களா ? என்று தெரியவில்லை. சிறுபான்மையினர் தொடர்ச்சியாக இவ்வாறு நம்பி மோசம் போனவர்களாகவே இருந்துள்ளனர். பாராளுமன்ற ஜனநாயகம் திருப்திகரமாக செயற்படும் எல்லா நாடுகளிலும் பெரும்பான்மை சமூகங்கள் சிறுபான்மையினரிற்கு கொடுத்த வாக்குறுதிகளையும் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கைகளையும் காப்பாற்றி வந்துள்ளன. நம்பி நடந்தவர்களை ஏமாற்றுவது இல்லை. ஒரு சமூகம் நாகரிக சமூகமாக பொருளாதாரத்திலும் அரசியலிலும் முன்னேறுவதற்கும் உலக அரங்கில் நாகரிக சமூகங்களின் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்பதற்கும் இது அவசியமானது. ஜேர்மனியின் நாஜிகளின் அரசுதான் ஆணவத்துடன் சகிப்புத் தன்மையின்றியும் நடந்துகொண்டது. இதன் விளைவாக ஜேர்மனி இரண்டாம் மகாயுத்த முடிவில் பெரும்அவலத்தைச் சந்தித்தது; அந்நாடு துண்டாடப்பட்டது.

சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மிக விரைவாகச் செயற்படுத்தப்பட்டன. பக்கிங்காம் மாளிகை 'Orders In Council' என்ற வகையான இரண்டு சட்டங்களை வெளியிட்டது.

அ.) இலங்கை அரசியல் யாப்புச் சட்டம் (Ceylon Constitution Order In Council)

ஆ.) இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் (The Ceylon Parliamentary Elections Order In Council)

இச் சட்டங்களுக்கு அமைய இலங்கை டொமினியன் அந்தஸ்துடைய நாடாக ஆகியது. பிரித்தானிய முடியின்கீழ் அமையும் நாடு என்பது 'டொமினியன்' என்பதன் பொருள். 1947 இல் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் இலங்கையில் நடத்தப்பட்டது.

புதிய அரசியல் யாப்புத் திட்டம் பிரித்தானிய மாதிரியான கட்சிமுறையின் வளர்ச்சியை எதிர்பார்த்தது. டி.எஸ் தலைமையிலான குழுவினர் அவ்வாறான ஒரு கட்சியை உருவாக்குவதற்கு முயற்சித்தனர். அக் கட்சி சிங்களத் தேசியவாதக் கட்சியாக அமைந்தது. ஆனால் அது இலங்கைத் தேசியவாதம் (Ceylon Nationalism) என்ற போர்வையை போர்த்திக் கொண்டது. டி.எஸ். சேனநாயக்க அவரது மகன் டட்லி சேனநாயக்க, டி.எஸ்ஸின் மருமகன் யோன் கொத்தலாவல, A.F. மொலமுரே, ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆகியோர் இணைந்திருந்த இலங்கைத் தேசிய காங்கிரசும், எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவைத் தலைவராகக் கொண்டிருந்த சிங்கள மகாசபையும் ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P) என்ற புதிய கட்சியில் சேர்ந்து கொண்டனர். தமிழர் தரப்பில் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்ற கட்சி உருவானது. சோல்பரி ஆணைக்குழுவிற்கு தமிழ் மக்கள் சார்பில் அரசியல்யாப்பு ஆலோசனைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட தற்காலிக குழுவே இவ்வாறாக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்ற பெயருடன் அரசியல் கட்சியாக உருமாற்றம் பெற்றது. ஜி.ஜி. பொன்னம்பலம் அதன் தலைவரானார். மலையகத் தமிழர்கள் ஏலவே இலங்கை இந்திய காங்கிரஸ் (Ceylon Indian Congress) என்ற பெயரில் கட்சியாக ஒழுங்கமைப்பு ஒன்றை உருவாக்கியிருந்தனர்.

1947 ஆம் ஆண்டுத் தேர்தலின்போது இக் கட்சிகள் யாவும் தத்தம் கட்சிச் சின்னங்களின் பேரில் வேட்பாளர்களை நிறுத்தின. ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களை வென்றது. அதன் தலைவர் டி.எஸ். சேனநாயக்க இலங்கை டொமினியனின் முதலாவது பிரதமராக நியமிக்கப்பட்டார். அவ்வேளை இலங்கை முழுமையான சுதந்திரத்தை அடையாத டொமினியனாகவே இருந்தது என்பது கவனிக்கத்தக்கது. பிரித்தானிய அரசாங்கத்துடன் டி.எஸ். சேனநாயக்க அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய பேரம்பேசலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் அவர் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் தரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இவ் விடயத்தில் அவர் அழுத்தம் கொடுத்தபோதும் பொதுத்தேர்தல் இலங்கையில் நடத்தப்பட்ட பின்பே இதைப் பற்றிச் சிந்திக்க முடியும் என பிரித்தானியா அவருக்குக் கூறியது. இலங்கையின் சுதந்திரம் பற்றிய சட்டத்தை வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றம் இயற்றும் என்றும் அவருக்குக் கூறப்பட்டது. இலங்கையில் தேர்தல் முடிவுற்ற பின்னர் இலங்கையின் முக்கியமான சமூகங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து ஒருமித்த கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என

அவருக்கு கூறப்பட்டது. இலங்கையின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினரை உள்ளடக்கிய அனைத்து முக்கியமான சமூகங்களினதும் ஒன்றுபட்ட கோரிக்கை கிடைத்தால் மட்டுமே இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை வழங்குதல் பற்றி ஆலோசிக்க முடியும் எனவும் கூறப்பட்டது.

தமிழ்த் தலைவர்களுக்கு வரலாறு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை 1947 இல் வழங்கியது. தமிழ் இனத்தின் மீதும், தமிழ் மக்கள் மீதும் பற்றுடையவர்களாக இத் தலைவர்கள் இருந்திருப்பார்களேயானால் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை அவர்கள் தவறாது பயன்படுத்தியிருப்பார்கள். ஆனால் தமிழர்களுக்கு பணியாற்றவென முன்வந்த இந்தத் தலைவர்கள் அந்தத் தருணத்தில் கூட தவறிழைத்தனர். இதற்கு அவர்கள் சிங்களத் தலைமைகள் மீது வைத்திருந்த நம்பிக்கையே காரணமாகும். இது ஒரு மனநோயின் தன்மையுடைய நம்பிக்கை (Psychotic Addiction To Trust) என்றே கூறலாம்.

சேர். ஒலிவர் குணதிலக டி.எஸ். சேனநாயக்கவின் விசுவாசத்திற்குரிய ஆலோசகராக அக்காலத்தில் விளங்கினார். சேர். ஒலிவர் குணதிலக ஒரு கூர்மதி மிக்கவரும் தந்திரசாலியுமான இராஜதந்திரியுமாவர். அவரின் ஆலோசனையின்படி டி.எஸ். சேனநாயக்க மந்திரிசபையை அமைக்கும் வேலையைத் தொடங்கினார் எனக் கருதலாம். பிரித்தானியா சுதந்திரத்தை வழங்குவதற்கு என்ன நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டதோ அவற்றை நிறைவேற்றிக்காட்ட வேண்டும் என்ற முயற்சியில் டி.எஸ் ஈடுபட்டார். தாம் அமைக்கவுள்ள மந்திரிசபையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், மலேயர், ஐரோப்பியர், பறங்கியர் ஆகிய அனைத்து முக்கியமான சமூகங்களினதும் தலைவர்களை அமைச்சர்களாக நியமிக்க டி.எஸ் திட்டமிட்டார். வவுனியா தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் செ. சுந்தரலிங்கம் அவர்களைத் தமிழர் பிரதிநிதியாக அவர் தெரிந்துகொண்டார்.

சுந்தரலிங்கம் அரசில் சேர்ந்து கொள்வதற்கு வலுவான எதிர்ப்பு இருந்தது. டி.எஸ். சேனநாயக்க வழங்க முன்வந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தான் ஏற்பதற்கு முடிவு செய்தேன் என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக கொழும்பு நகர மண்டபத்தில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தார். அக் கூட்டமும் கூச்சலும் குழப்பமும் மிகுந்த ஒரு கூட்டமாக முடிந்தது. எதிர்க்கட்சிகளின் தலைவர்களான ஜி.ஜி பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்) எஸ்.ஜே.வி செல்வநாயகம் (காங்கேசன்துறை) கு. வன்னியசிங்கம் (கோப்பாய்) டாக்டர் இ.எம்.வி. நாகநாதன் (செனேட்டர்) வ. குமாரசுவாமி (சாவகச்சேரி) ஆகிய புதிய பாராளுமன்ற உறுப்பினர்களானவர்களாக தமிழ் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கும் சுந்தரலிங்கத்தின் ஆதரவாளர்களுக்கும் இடையே அப்போது மோதல் ஏற்பட்டது. சுந்தரலிங்கத்தை மந்திரி பதவியில் இருந்து விலகும்படி எதிர்ப்பாளர்கள் கோரினர். சுந்தரலிங்கம் உறுதியாக மறுத்துவிட்டார். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

டி.எஸ். சேனநாயக்க பிரதமரானதும் செய்த முதல்வேலை இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை வழங்கும்படி பிரித்தானியாவிடம் கோரிக்கை விடுத்ததுதான். சேனநாயக்கவின் இந்த முன்மொழிவை மந்திரிசபை ஏகமனதாக அங்கீகரித்தது. சுந்தரலிங்கம் தனது சம்மதத்தை வழங்கித் தமிழர்கள் இதற்கு உடன்படுகிறார்கள் என்பதை உறுதிசெய்தார். 1947 டிசம்பர் மாதம் ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றம் இலங்கைச் சுதந்திரச் சட்டம் (Ceylon Independence Act) என்ற சட்டத்தை இயற்றியது. இச் சட்டத்தின்படி இலங்கைப் பாராளுமன்றத்தை இறைமையுடையதாக்கியதோடு, இலங்கைக்கான சட்டங்களை ஆக்கும் உரிமையை நிரந்தரமாகக் கைவிடுவதையும் உறுதிசெய்தது. இலங்கை ஒரு சுதந்திர தேசம் (Independent Nation) என்பதைச் சட்டம் பிரகடனம் செய்தது. 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ரொறிங்டன் சதுக்கத்தில் (சுதந்திர சதுக்கம் என்பது இதன் இன்றைய பெயர்) நடைபெற்ற கோலாகலமான விழாவில் கிளங்கெஸ்டர் பிரபு (Duke Of Gloucester) ஐக்கிய இராச்சியத்தின் யூனியன் கொடியை கொடிக் கம்பத்தில் இருந்து கீழிறக்கினார். சிங்களவர்களின் சிங்கக் கொடியை கம்பத்தில் ஏற்றினார். ஆட்சி அதிகாரம் கைமாற்றப்பட்டதன் அடையாள நிகழ்வாக இக் கொடியேற்றம் அமைந்தது.

சுந்தரலிங்கம் வழங்கிய சம்மதம் தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் சோக நிகழ்வாக அமைந்தது. தமிழ் மக்களிடம் மீதமிருந்த ஒரே ஒரு துருப்புச் சீட்டையும் உரிய தருணத்தில் பயன்படுத்தாது தன் சுயலாபத்திற்காகப் பேரம்செய்து சோரம் போனார். அந்தச் செயல்தான் தமிழர்களின் ஆட்சியாளர்களாக

பிரித்தானியா இருந்த நிலையை மாற்றி தமிழர்களின் ஆட்சியாளர்களாக சிங்களவரை மாற்றியது. தனது கூட்டாளிகளின் புத்தி சாதுரியத்தையிட்டு சேர். பொன்னம்பலம் இராமநாதனின் ஆன்மா கண்ணீர் விட்டிருக்கும்.

அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட சுந்தரலிங்கத்தால் அந்தப் பதவியில் நீண்ட காலம் இருக்க முடியவில்லை. அவர் பிரதம மந்திரியுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக மந்திரிசபையிலிருந்து வெளியேறினார். மலைநாட்டுப் பெருந்தோட்ட துறையில் தமிழர் தொடர்பான ஒரு பிரச்சினையே கருத்துவேறுபாட்டிற்கு காரணமாகவிருந்தது. அரசாங்க தரப்பு வேறு ஏதோ சில காரணங்களுக்காக பதவி விலகுமாறு கேட்டதாகவும் கூறப்படுகிறது. என்ன காரணங்களுக்காக விலகினாரோ தெரியவில்லை; ஆனால் அவர் அரசாங்கத்திற்குள் இருந்து வெளியேறும் காலத்திற்குள் தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடிய பெருந்தீங்கு முடிக்கப்பட்டுவிட்டது.

சில ஆண்டுகள் கடந்தபின் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது சுந்தரலிங்கம் கழிவிரக்கத்தால் வருந்தினார். தான் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்துவிட்டதாகக் கூறி கவலைப்பட்டார். தனது சம்மதத்தைக் கொடுக்க மறுத்திருந்தால் பிரித்தானியா ஒருபோதும் சுதந்திரத்தை வழங்கியிருக்காது. தமிழர்கள் இந்த அவலநிலைக்கு தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள் என்று தமிழர்களுக்கு நேர்ந்த விதி பற்றி அவர் குறிப்பிட்டார். இவ் விடயங்களைப் பகிரங்கப்படுத்தி எழுதும் அறிக்கையைத் தான் கண்ணீர் வடித்தபடி எழுதுவதாகவும் குறிப்பிட்டார். தனது நம்பிக்கைக்குரிய நண்பனான டி.எஸ். சேனநாயக்கவிற்குத் தாம் பல உரைகளை எழுதிக் கொடுத்ததாகவும், அரச அறிக்கைகள் பலவற்றை வரைந்து கொடுத்தாகவும் அவர் இத்தகைய நம்பிக்கைத் துரோகத்தைச் செய்வாரென எதிர்பார்க்கவில்லை எனவும் குறிப்பிட்டார். டி.எஸ் சேனநாயக்க உயிரோடு இருந்தால் அரசியல் யாப்பை இவ்விதம் துஷ்பிரயோகம் செய்வது நடந்திருக்காது என நம்பியதாகவும் குறிப்பிட்டார்.

நுண்மாண் நுழைபுலமும், கல்வியும் அனுபவமும் படைத்தவர்களுமான பல தலைவர்கள் தமது மக்கள் பற்றியும் தமது தாய்மண் பற்றியும் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய கடப்பாடு தம்மீது சுமத்தப்பட்ட வேளைகளில்



அதிகாரத்தில் உள்ளவர்களான தம் நண்பர்கள் மீது கொண்ட அதீத நம்பிக்கையால் உரிய முடிவுகளை எடுக்கத் தவறி தம் நண்பர்களிற்கும் துரோகமிழைத்த சம்பவங்கள் நம்பமுடியாத விந்தையிலும் விந்தை எனலாம்.

அவர்கள் தம் நண்பர்களின் தனிப்பட்ட குணவியல்புகள் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்ததால், எதிர்காலத்தில் ஏதாவது தவறோ, பிழைகளோ நடந்துவிடாமல் அவர்கள் தடுத்துவிடுவார்கள் என்றும் வேறு எந்தப் பாதுகாப்பும் நண்பர்களைத் தவிர்ந்த பதிலீடு ஆகாது என்றும் எண்ணினார்கள். அல்லது இந்த நண்பர்கள் இறவாது என்றும் உயிரோடு வாழ்ந்து காத்தருள்வார்கள் என்று நம்பினார்கள் போலும்! பொதுவாழ்வில் ஈடுபடும் தலைவர்களை இயக்கிய தூண்டுவிசை இதுவாக இருக்க வேண்டும். சுந்தரலிங்கம் நடந்தவற்றை நினைத்து வருந்தியமை அவரது உள்ளக்கிடக்கையின் நேர்மறையான வெளிப்பாடு என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் தமிழ் மக்களின் இருப்பே கேள்விக்குறியாகியிருக்கும் சூழ்நிலையில் இப் புலம்பல்களால் அவை வாய்மையுடையனவாயினும் அவற்றால் என்ன பயன்?

குறிப்பு : மேற்குறித்த கூற்றுக்களை ஹன்சார்ட் அறிக்கைகளிலிருந்து மேற்கோள்காட்டி 1969 இல் தமிழர் சுயாட்சிக்கழகத் தொடக்கவிழாவில் எனது (வி. நவரத்தினம்) தலைமையுரையாக நிகழ்த்தினேன்.

# ஈழமும் தமிழகமும்: பௌத்த சமயத் தொடர்புகள்

1




சிவசுப்பிரமணியம்
பத்மநாதன்

யாழ். பல்கலைக்கழக வேந்தரும் தகைசார் பேராசிரியருமான சி. பத்மநாதன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். இலங்கை வரலாறு, தென்னிந்திய வரலாறு, இலங்கையில் இந்து சமயம், இந்தியப் பண்பாடு தொடர்பில் 35 இற்கும் மேற்பட்ட நூல்களையும் 120 ஆங்கிலக் கட்டுரைகள் அடங்கலாக 200 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர், தனது வரலாற்று ஆய்வுகளுக்காக இலங்கையிலும் சர்வதேசத்திலும் பல்வேறு விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார். 2005 ஆம் ஆண்டு இலண்டன் Cambridge Bibli ographical Association பேரா. பத்மநாதன் அவர்களுக்கு ”International Bibliography Intellectual” விருதை வழங்கிக் கௌரவித்தது. தமிழியல் பற்றிய ஆய்வுக்காக பேராசிரியர் செல்வநாயகம் விருதைப் பெற்றுக் கொண்ட முதலாவது தமிழரும் இவரே; 2008 ஆம் ஆண்டு இவ்விருதைப் பெற்றுக்கொண்டார். இதற்கு முன்னர் இவ்விருதைப்பெற்ற இருவரும் ஆங்கிலேயர்கள். 2013 ஆம் ஆண்டில் ஆசிய மரபுரிமைக்கான சர்வதேச சங்கத்தினால் நீலகண்ட சாஸ்திரி விருதைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர், தற்போதும் இலங்கைத் தமிழர்களின் வரலாறு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


பௌத்தசமயத்தின் செல்வாக்கினைப் பொறுத்தவரையில் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலே சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உண்டு. இலங்கையில் கிமு. மூன்றாம் நூற்றாண்டில் மோரிய அரசனாகிய அசோகனின் காலத்திலே பௌத்தம் பரவத் தொடங்கியது. அதனைப் பற்றியவொரு வரலாறு இலங்கையில் உற்பத்தியான தீபவம்சம், மகாவம்சம் முதலான நூல்களிற் சொல்லப்படுகின்றது.

மோரியரின் தலைநகரான பாடலிபுரத்திலே மொக்கலிபுத்த தீஸரின் தலைமையிற் கூடிய மூன்றாம் பௌத்த மாநாட்டிலே பௌத்த சமயத்தைப் பரதகண்டத்திலும் அதற்கப்பாலுள்ள தேசங்களிலும் பரப்புவதற்கெனக் குழுக்களை அனுப்புவதற்குத் தீர்மானித்தார்கள். அதன்படி மகிந்த தேரரின் தலைமையிலான குழு இலங்கைக்குச் சென்றது. அங்குள்ள அரசனாகிய தேவநம்பிய திஸனின் ஆதரவோடு அரண்மனையின் அருகிலுள்ள வனத்தில் மகாவிகாரை அமைக்கப்பட்டது. அது மகாசங்கத்தின் தலைமைத் தானமாகப் பல நூற்றாண்டுகளாகவே நிலைபெற்றது. பாடலிபுரத்திலிருந்து சென்ற தேரி சங்கமித்தை, நாகநாடு வழியாகச் சென்று அநுராதபுரத்திற் பிக்குணி சங்கத்தை உருவாக்கினார். அவர் தன்னோடு போதிமரக் கிளையினையும் கொண்டு சென்றார். அநுராதபுரத்தில் நிலைநாட்டிய அந்தக்கிளை விருத்திபெற்று பெரு விருட்சமாகிவிட்டது. அதுவே மகாபோதி என்னும் புனிதத் தலத்தில் நிலைபெறுவது என்பது பௌத்தர்களின் பற்றுறுதியான நம்பிக்கையாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இவ்வாறான கதைகள் இல்லை. பாடலிபுரத்திலிருந்து, மொக்கலிபுத்தர் தலைமையிலான தேரர்கள் தமிழகத்திலே தர்மோபதேசஞ் செய்வதற்கென எவரையும் அனுப்பியதாகப் பாளி நூல்களிற் குறிப்பில்லை. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் வகைகளில் அடங்கிய மிகவும் புராதனமான தமிழ் நூல்களிற் பௌத்தம் பற்றிய குறிப்பெதனையும் காணமுடியவில்லை. கிபி. நான்காம் நூற்றாண்டு முதலாகவே பௌத்த சின்னங்களின் அடையாளங்கள் தெரிகின்றன. எனவே, அதற்கு முற்பட்ட காலத்துத் தமிழகம் தொடர்பாகப் பௌத்தம் பற்றி எதனையும் பேசவியலாது.

இலங்கையில் கிமு. 250 - கிபி. 400 ஆகிய காலத்திலே பௌத்தம் அதிகமாக எல்லாப் பகுதிகளிலும் பரவிவிட்டது. அதற்கு ஏறக்குறைய 1500 வரையான கல்வெட்டுகள் காணப்படுகின்றமை சான்றாகும். ஆனால் கிபி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலே பௌத்த சமயம் தொடர்பான விபரங்கள் எழுதிய சாசனம் எதுவும் தமிழகத்திற் கிடைக்கவில்லை. சமண சமயம் கிமு. மூன்றாம் நூற்றாண்டு முதலாகத் தமிழகத்திலே பரவத் தொடங்கியது. அங்கு கிடைத்துள்ள தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதிய கல்வெட்டுகள் பெரும்பாலும் சமணம் தொடர்பானவை. தமிழர் சமுதாயத்தில் ஒரு சிறுபான்மையினரின் ஆதரவினை மட்டுமே சமணம் பெற்றுக்கொண்டது.

கிபி. நான்காம் நூற்றாண்டு முதலாகப் பௌத்த சமயம் சில நகர்ப்புறங்களிலுள்ள மக்களிடையே பரவத் தொடங்கியது. காவிரிப்பூம் பட்டினம், காஞ்சி, வஞ்சி முதலான பெரு நகரங்களிற் பௌத்தப் பள்ளிகள் அமைக்கப்பட்டிந்தன. அதனைப் புத்தகோஷர், புத்ததத்தர் என்போர் எழுதிய குறிப்புகளினாலும் மணிமேகலை, மகாவம்சம், மத்தவிலாச பிரஹஸனம் என்னும் நூல்கள் வாயிலாகவும் அறியமுடிகின்றது. ஏழாம் நூற்றாண்டிலே காஞ்சிபுரத்திலுள்ள பௌத்த சமய நிலையங்களைப் பற்றிய விபரங்களை சீன யாத்திரிகரான சுவன் சாங் (Tsuan Tsang) எழுதிய குறிப்புகளினாலும் உணரமுடிகின்றது.

அசோகனுடைய காலத்தின் பின்பு இலங்கையிலுள்ள பௌத்த நிறுவனங்கள் வடஇந்தியாவில் அமைந்துள்ளவற்றோடு எதுவிதமான தொடர்புகளையும் கொண்டிருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கவில்லை. அவை தென்னிந்தியாவிலுள்ள பௌத்த நிலையங்களோடு தொடர்புகளைப் பேணிக் கொண்டன. அவை பரஸ்பரமான உறவுகளாகிவிட்டன. தமிழகத்திலே இலங்கை, ஆந்திர தேசம் என்பவற்றின் மூலமாகவே பௌத்தம் பரவியது. தொடர்புகளும் பிராகிருதம், பாளி மொழி என்பவற்றின் மூலமாக ஏற்பட்டன. காவிரிப்பூம் பட்டினம் முதலான இடங்களிலுள்ள விகாரங்களிலே பாளி மொழியிலுள்ள பௌத்த இலக்கியங்களைப் படித்தார்கள். அவை பெரும்பாலும் அநுராதபுரத்திலுள்ள மகாவிகாரையிலிருந்து கிடைத்தன. 'மகாவிகாரை அட்டகதா, அந்த அட்டகதா' என்னும் இருவகையான திரிபிடகத்தின் பகுதிகளுக்குரிய உரைநூல்களைத் தமிழகத்துப் பௌத்தப் பள்ளிகளிற் பயன்படுத்தினார்கள்.

பரஸ்பரத் தொடர்புகளினால் இரு நாடுகளுக்கும் இடையிலே சங்கத்தாரிடையிற் போக்குவரத்துகள் ஏற்பட்டன. இலங்கையில் நாகநாட்டிலுள்ள மணிபல்லவம் என்னும் தீவிலுள்ள அதிசயமான குணங்கள் பொருந்திய பௌத்த பீடமும் இரத்தின தீவகத்தின் நடுவிலுள்ள சமனொளி பாதமும் பிரசித்தமான வழிபாட்டுத் தலங்களாகிவிட்டன. அங்கு வழிபாடு செய்வதற்குச் சென்றவர்களைப் பற்றிய கதை மணிமேகலையிற் சொல்லப்படுகின்றது.

மகாவம்சமும் புத்தபீடிகை பற்றிய கதையினைச் சொல்கின்றது. நாகநாட்டின் தீவொன்றிலே வழிபாட்டிற்குரிய, அற்புதமான மணியாசனமொன்று அமைந்திருந்தது. அது தமக்குரியதென்று உரிமை கோரிய மாமனும் மருமகனுமாகிய மகோதரன், சூளோதரன் என்னும் நாகமன்னர் இருவர் அதனை கையகப்படுத்திக் கொள்வதற்குப் போராயத்தங்களை மேற்கொண்டனர். அத்தகைய போரினால் நாகர் அழிந்துவிடுவர் என்ற எண்ணத்தால் அவர்களைக் காப்பாற்றுவதற்கு, புத்தர் பிரான் வான்வழியாக வந்து, அந்த மணியாசனம் தனக்குரியதென்று சொல்லிய வண்ணமாக தம்மோபதேசம் செய்தார் என்பது மகாவம்சக் கதை. அவரின் உபதேசத்தைக் கேட்டதும் நாகர் ஆயுதங்களைக் கைவிட்டுத் திரிசரணத்திலே சரணடைந்தனரென்றும் சொல்லப்படுகின்றது. இந்தக்கதை வழிபாட்டிற்குரிய சிறப்பினை மணியாசனம் பெற்றுவிட்டமையினை விளக்கும் வண்ணமாக உருவாக்கிய கதை. மகாவம்சத்தின் கதை மணிமேகலையில் மேல்வருமாறு விரிவாக்கம் பெற்றுள்ளது :

”விரிந்திலங்கு அவிரொளி சிறந்த, கதிர் பரப்பி,
உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்
திசைதொறும் ஒன்பான் முழநிலம் அகன்று
விதிமாண் ஆடியின் வட்டம் குயின்று,
மதுசாகர சதுர மீமிசை விளங்கி,
'அறவோற்கு அமைந்த ஆசனம் என்றே,
நறுமலர் அல்லது பிற மரம் சொரியாது;
பறவையும் முதிர்சிறை பாங்குசென்று அதிராது;
தேவர்கோன் இட்ட மாமணிப் பீடிகை
பிறப்பு விளங்கு அவிரொளி அறத்தகை யாசனம்,
கீழ்நில மருங்கின் நாகநாடாளும்
இருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி
எமதீதென்றே எடுக்கல் ஆற்றோர்,
தம்பெரும் பற்று நீங்கலும் நீங்கார்,
செங்கண் சிவந்து நெஞ்சு புகை உயிர்த்துத்
தம்பெரும் சேனையோடு வெஞ்சமர் புரிநாள்,
'இருஞ்செரு ஒழிமின்; எமதீது என்றே'
பெருந்தவ முனிவன் இருந்தறம் உரைக்கும்
பெருமறு சிறப்பிற் புனரயோர் ஏத்தம்
தருமபீடிகை தோன்றியது ஆங்கென்.

வழிபடுவோருக்குப் பழம்பிறவிகளை உணர்த்தும் தர்மாசனம். தேவர்கோன் இந்திரனால் அமைக்கப்பட்டது என்ற விபரங்களை மணிமேகலை குறிப்பிடுகின்றது. அதனைக் காவல் புரிவதற்கு தீவதிலகை என்னும் தேவதையினை இந்திரன் நியமித்தான். அதன் மூலமே மணிமேகலை தர்மாசனத்தின் அதிசயங்களையும் தனது முற்காலப் பிறப்பினையும் அறிந்து கொண்டாள் என்பது கதை.

தர்மாசனத்தின் இயல்பினைத் தீவதிலகை மணிமேகலைக்கு மேல்வருமாறு விளக்கினாள் :

> ”வேகவெந்திறல நாக நாட்டரசர்
> சினமாசு ஒழிய, மனமாசு ஒழித்தாங்கு;
> அறச்செவி திறந்து, மறச்செவி அமைத்துப்
> பிறவிப்பிணி மருத்துவன் இருந்தறம் உரைக்கும்
> திருந்தொளி யாசனம் சென்று கைதொழுது;
> அன்றைப் பகலே உன்பிறப்பு உணர்ந்தீங்கு
> இன்றுயான் உரைத்த உரைதெளிவாய்...

புத்தர்பிரானின் தாமரை போன்ற பாதச்சுவடுகளின் வடிவமாகிய தர்மாசனத்தை வணங்கிய பின் மணிமேகலா தெய்வத்திடமிருந்து வேற்றுருவு எய்தவும் அந்தரம் திரியவும் மணிமேகலை வரம் பெற்றாள்.

பௌத்தர்களின் வழிபாட்டிற்குரிய தலமான சமனொளி பாதம் பற்றிய இரண்டு குறிப்புகள் மணிமேகலையில் உள்ளன. அவற்றுள் முதலாவது தீவதிலகையின் கதையோடு சொல்லப்படுவது:

> ”ஆயிழை தன்பிறப்பு அறிந்தமை அறிந்த
> தீவதிலகை செவ்வனம் உரைக்கும்;
> ஈங்கிதன் அயலகத்து இரத்தினத் தீவத்து,
> ஓங்குயர் சமந்தத்து உச்சி மீமிசை
> அறவியங் கிழவோன் அடியிணையாகிய,
> பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
> அறவி நாவாய் ஆங்குளது ஆதலின்,
> தொழுது வலங்கொண்டு வந்தேன் ஈங்கும்
> பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
> தேவர்கோன் ஏவலிற் காவல் பூண்டேன்
> தீவதிலகை என் பெயர்  இது கேள் .

மணிமேகலையில் வேறோரிடத்திலே சமந்த கூடத்தில் வழிபாடு செய்த சாரணர் பற்றிச் சொல்லப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் இமயமலையில் வில் இலச்சினையைப் பொறித்த சேர வேந்தன் குடக்கோச் சேரலாதன் தன் அரண்மனைப் பெண்களோடு ஒரு சோலையில் தங்கியிருந்தான். வான்வழியே மேகங்கள் ஊடாகச் செல்லும் ஆற்றலுடைய சாரணர் இலங்கா தீவத்துச் சமனொளிபாத மலையினை வலஞ்சென்று வழிபாடு செய்தபின் அரசன் இருந்தவிடத்திற்கு சென்றனர். ஒரு வழிபாட்டுத் தலம் என்ற வகையிற் சமனொளிபாதம் பற்றிய மிகப்புராதனமான குறிப்பு மணிமேகலையில் உள்ளமை குறிப்பிடற்குரிய ஒன்றாகும்.

## பௌத்த சமயத்திற் பத்தினி வழிபாடு


காவல் தெய்வங்கள் நால்வரை வழிபடும் மரபு இலங்கையில் 14 ஆம் நூற்றாண்டு முதல் வழமையாகிவிட்டது. உபுல்வன், சமன், விபீஷணன் கந்தகுமாரன் ஆகிய நால்வரையும் அவ்வாறான தேவர்களாகக் கொண்டனர் என்பதை லங்காதிலகத்து கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகின்றது. அங்குள்ள கட்டுமானத்தில், மூலவராகப் புத்தர் பெருமானையும் அதன் வெளிப்புறச் சுவர்களை முன்றில்களான கோட்டங்களாக அமைத்து அவற்றிலே காவல் புரியும் தேவர்களில் மூவரின் பிரதிமைகளைத் தாபனம் பண்ணியுள்ளனர். குமாரக் கடவுளின் கோட்டத்தை ஆலயத்தின் முன்புறச் சுவரின் ஓரமாக அமைத்துள்ளனர்.

கண்டி இராசதானியாகிய காலத்தில் காவற்றெய்வங்களில் மூவரை மாற்றிவிட்டனர். குமாரக் கடவுள், பத்தினி, விஷ்ணு, அவலோஹித நாதர் ஆகியோரே அக்காலத்துக்குரிய தேவர்கள். கண்டியில் பெரஹரா என்னும் பெருவிழாவில் தேவர் நால்வரின் படிமங்களையும் வீதிவலமாகக் கொண்டு செல்வது வழமையாகிவிட்டது.

இலங்கையிற் பத்தினி வழிபாடு நெடுங்கால வரலாறு கொண்டது என்பதை சிலப்பதிகாரத்து உரைபெறு கட்டுரை மூலம் அறியமுடிகின்றது. அதில் மேல்வருமாறு சொல்லப்படுகின்றது:

> ”அது கேட்டு, கடல்சூழ் இலங்கைக்
> கயவாகு என்பான் நங்கைக்கு நாள்பலி
> பீடிகைக் கோட்டம் முந்துறுத்து
> ஆங்கு ஓர் பாடி விழாக்கோன் பன்முறை
> எடுப்ப மழை வீற்றிருந்து,
> வளம்பல பெருகி, பிழையா
> விளையுள் நாடாயிற்று.

உரைபெறு கட்டுரை ஒரு பிற்காலச் சேர்க்கை போலத் தெரிகின்றது. ஆயினும் பத்தினி வழிபாடு இலங்கையில் வழமையாகி நெடுங்காலம்



**சங்கமித்தை போதி மரக்கிளை கொண்டுவருதலை விளக்கும் ஓவியம்**

Image source - www.dailymirror.lk

நிலைபெற்றமைக்கு அது அடையாளமாகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை பௌத்த சமயப் பிரசார நூலாக அமைந்திருப்பதைப் போன்று ஒரு வகையில் பத்தினி வழிபாட்டுக்குரிய காவியமாக அமைந்துள்ளது.

> "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
> ஊழ்வினை உருத்துவந்து, ஊட்டும் என்பதூஉம்
> சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
> சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
> நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்

என்னும் அடிகளால் இது உணரப்படும்.

பத்தினி வழிபாடு பௌத்தசமய வழிபாட்டில் ஓரம்சமாகிவிட்டது என்பதை மணிமேகலையில் வரும் மேல்வரும் அடிகள் மூலம் உணர முடிகின்றது:

> "அணியிழை அந்தரம் ஆறா எழுந்து,
> தணியா அக் காதல் தாய் கண்ணகியையும்
> கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்,
> கடவுள் எழுதிய படிமம் காணிய
> வேட்கை துரப்பக், கோட்டம் புகுந்து,
> வணங்கி நின்று குணம்பல ஏத்தி,
> 'அற்புக்கடன் நில்லாது, நற்றவம் படராது,
> கற்புக்கடன் பூண்டு, நுங்கடன் முடித்தது'
> அருளல் வேண்டும் என்று, அழுதுமுன்னிற்ப
> ஒருபெரும் பத்தினிக் கடவுளாங்கு உரைப்போல். "

வஞ்சி மாநகரிலுள்ள பௌத்தப் பள்ளியில் கோவலன், கண்ணகி ஆகியோரைப் படிமக் கோலத்தில் மணிமேகலை கண்டனள் என்பது கதை. மேலும் ஒரு பெரும் பத்தினிக் கடவுள் என்று கண்ணகி குறிக்கப்படுவதால் மணிமேகலை எழுதப்பட்ட காலத்திலே பத்தினி வழிபாடு தமிழகத்திலே பௌத்த சமயத்துடன் கலந்துவிட்டது என்று கொள்ளமுடிகின்றது.

தென்னிந்தியப் பௌத்த சமயம் ஏற்படுத்திய செல்வாக்கின் மூலமாகவே இலங்கையிற் பத்தினி வழிபாடு பரவியதென்று கருதமுடிகின்றது. ஆனால் அது எப்பொழுது பரவத்தொடங்கியது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்திலே (1412-1467) கோட்டை நகரிலுள்ள முத்தளக் கட்டுமானமாகிய பத்தினிக் கோட்டம் பற்றிச் சமகால நூலாகிய கோகில ஸந்தேஸய குறிப்பிடுகின்றது. கஜபாகு மன்னன் காலத்துப் புராதன கோயிலின் கட்டுமானத்தைப் போல அது அமைந்திருந்ததென்றும் அதன் சிகரம் பொன்மயமானது என்றும் அதிலே சொல்லப்படுகின்றது.

சீதாவக்கவிலுள்ள பத்தினி கோயிலுக்கு வழங்கிய நன்கொடைகளை மதகொட தேவாலே ஸன்னஸ குறிப்பிடுகின்றது. அது மாயாதுன்ன அரசன் காலத்திலே அவனாற் புனரமைக்கப்பெற்றது. மாயாதுன்னவின் மகனாகிய முதலாம் ராஜசிங்கன் அரசபதவி பெற்றபொழுது மதகொடவிலுள்ள பத்தினி தேவாலயத்துக்கு நன்கொடைகளை வழங்கினான்.

## மகாயானமும் அநுராதபுரத்திலே சங்கபேதமும்

பரத கண்டத்திலே காலப்போக்கிற் பௌத்த சமயம் பல பிரிவுகளாகப் பிரிந்துவிட்டது. விநய விதிகள் பற்றிச் சங்கத்தாரிடையில் ஏற்பட்ட பிரிவுகளும் பிறசமயக் கோட்பாடுகளின் செல்வாக்கும் பிரிவினை ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்களாகும். அசோகனுடைய காலத்திற்குப் பின்பு 18 பிரிவுகள் தோன்றிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. புத்தர் பிரானின் போதனைகளை எதுவித மாற்றமுமின்றிப் பின்பற்றியவர்களை ஸ்தவிரவாதிகள் (தேரவாதிகள்) என்று சொல்வது வழமையாகிவிட்டது.

இலங்கையில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் மஹிந்த தேரர் உருவாக்கிய மகாவிகாரை தேரவாதத்தின்



கண்ணகை அம்மன்
Image Source : facebook.com/cheddipalayamkannaki

நிலைக்களனாக நிலைபெற்றது. ஆதியான பௌத்த பாரம்பரியங்களும் இலக்கிய மரபுகளும் மகாவிகாரையினாற் பேணப்பட்டன. வழமைக்கு மாறான சிந்தனைகள் சங்கத்தாரிடையிலே தோன்றிய சமயங்களில் மகாசேனனின் ஆட்சிக்காலம் (கிபி 274-302) வரை அவற்றை அரசனுடைய ஆதரவோடு கட்டுப்படுத்திக் கொள்ளமுடிந்து தென்னிந்தியத் தொடர்புகள் மூலமாக மகாவிகாரையினரிடையிலே சங்கபேதம் ஏற்பட்டது. வட்டகாமனி அபையனின் காலத்திலே அநுராதபுரத்திலுள்ள சங்கத்தார் இரு வேறு பிரிவுகளாகப் பிரிந்துகொண்டனர்.

வட்டகாமனி அபையன் (கிமு.89-77) அபையகிரி விகாரத்தை அமைத்து, வழமைக்கு மாறாக அதனை திஸ்ஸதேரருக்கு வழங்கினான். அரசன் படையெடுப்பொன்றின் காரணமாகப் பதவியிழந்திருந்த காலத்திலே திஸ்ஸதேரர் ஆதரவு புரிந்தமையால் அதற்கான நன்றிக்கடனாக அவரிடம் விகாரையினை வழங்கினான். மகாவிகாரையின் சங்க நாயக்கர் அதனை விரும்பவில்லை. கட்டுமானங்களைச் சங்கத்தாருக்குப் பொதுமையில் வழங்குவதே பௌத்த சமய மரபாகும். நன்கொடைகளைப் பதிவு செய்யும் ஆவணங்களில் நாற்றிசையிலுமுள்ள சங்கத்தாருக்கு (சதுதிஸகஸ) அவை வழங்கப்படுகின்றன என்றே சொல்லப்படும்.

அரசனுடைய ஏற்பாட்டை விரும்பாத மகாவிகாரையினர் திஸதேரர் குடியானவர்களின் வீடுகளுக்குப் போய்வருகிறார் எனக் குற்றம் சுமத்தி, அவரை மகாவிகாரையிலிருந்தும் வெளியேற்றினார்கள். திஸ தேரரின் சீடரான பகலுமஸ்ஸ திஸ்ஸ என்னும் தேரர் மகாவிகாரையினரின் செயற்பாட்டை ஒப்புக்கொள்ளாது 500 பிக்குகளுடன், மகாவிகாரையிலிருந்தும் வெளியேறி அபயகிரி விகாரையில் இணைந்து கொண்டார். இதன் காரணமாகச் சங்கபேதம் ஏற்பட்டது. மகாவிகாரை அபையகிரி விகாரை ஆகியன வெவ்வேறான பிரிவுகளாகின.

தென்னிந்தியாவிலே பல்லவாராமத்திலிருந்து வஜ்ஜிபுத்தக நிகாயம் என்ற பிரிவினைச் சேர்ந்த தர்மருசி என்பவரின் சீடர்கள் அபையகிரி விகாரையினை அடைந்தனர். அவர்களுடைய போதனைகள் அங்குள்ளவர்களிற் பலரைக் கவர்ந்தன.

அவர்கள் புத்கல என்னும், ஆன்மாவின் நிழல் உண்டென்று கருதினார்கள். அது பௌத்த சம்பிரதாயத்தின் அடிப்படைக் கோட்பாடான அனாத்தவாதத்தை நிராகரிக்கும் பாங்கிலானது. தர்மமருசி நிகாயம் மகாயானச் சார்புடையது. வாடிக திஸ (கிமு.327) என்னும் அரசனின் காலத்தில் விநயபிடகத்திலே காணப்படும் விதியொன்றினைப் பற்றிய மாறுபட்ட கருத்துகளினால் மகாவிகாரையினர், அபையகிரி விகாரையினர் என்போருக்கிடையிலே தகராறு ஏற்பட்டடது. அதனைப் பற்றி விசாரணை செய்வதற்கு திக காராயண(ர்) என்ற புலமையாளரான பிராமணரை அரசன் நியமித்தான். அவர் மகாவிகாரையினர் சார்பாகத் தீர்ப்பு வழங்கினார்.

வொஹாரிக திஸ்ஸ (கிபி.214-269) என்னும் மன்னனின் காலத்தில் மீண்டும் தகராறு தோன்றியது. வைதுல்ய பிடகம் என்னும் மகாயானச் சார்புடைய நூலே புத்தர் போதனைகளின் சாரமானது என்பது தர்மருசி நிகாயத்தவரின் நிலைப்பாடாகியது. அதனால் சங்கத்தாரிடையே பெருந் தகராறு ஏற்பட்டது. மகாவிகாரையினரின் முறைபாட்டினால் அதனைப் பற்றி விசாரணை செய்யுமாறு அரசன் கபில என்ற அமைச்சனை நியமித்தான். வைதுல்ய பிடகத்தைப் பற்றி மிகவும் கண்டனமான தீர்ப்பினை அமைச்சன் வழங்கியதால் அரசனது ஆணைப்படி வைதுல்ய பிடகத்தின் பிரதிகள் எரிக்கப்பட்டன. அதன் கோட்பாடுகளைப் பின்பற்றிய சங்கத்தருக்குக் கடுந்தண்டனைகள் வழங்கப்பட்டன.

பௌத்த சமய விவகாரங்கள் சங்கத்தாருக்கு அப்பாலாகிவிட்டன. வாதப் பிரதிவாதங்களினாலே தீர்க்கப்படவேண்டிய விடயங்கள் அரசியல் மயமாக்கப்பட்டன. அதனால் ஒருதலைப் பட்சமான தீர்ப்புகள் வழங்கப்பட்டன. இது புராதன காலப் பௌத்த சமய வரலாற்றில் இலங்கை அரசியலுக்குரிய தனி அடையாளங்களாகிவிட்டன.

கோட்டாபய (கிபி 253-266) என்னும் பெயருடைய அரசனின் காலத்திலே மகாயானப் பிரிவினருக்கு எதிரான பக்கச்சார்பான செயற்பாடுகள் உன்னத நிலையினை அடைந்தன. அபையகிரி விகாரத்திலுள்ள சங்கத்தாரிற் சிலர் வைதுல்ய பிடகக் கோட்பாடுகளை மீண்டும் போதனை செய்யத் தொடங்கிவிட்டனர். அரசன் அதற்கெதிரான கொடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டான். வைதுல்யவதத்தினைத் தடைசெய்து, அதில் ஈடுபாடு கொண்ட 60 பிக்குகளைப் பிடித்து அவர்களைத் தீயினாற் சுட்டு,



மகா விகாரையின் மாதிரி உருவம்

Image source - wikipedia.org

இலச்சினையிட்டுச் சங்கத்திலிருந்தும் வெளியேற்றி, நாடுகடத்தினான். இவ்வாறு வெளியேற்றப்பட்ட தேரர்கள் தமிழ் நாட்டிலே புகலிடம் பெற்றனர். அவர்களுக்கு நேர்ந்த கொடுமை மகாவிகாரையின் மோலோங்கிய செல்வாக்கு மருவிப் போவதற்கு ஏதுவாகியது. அதற்கு காவிரிப்பட்டினத்திலிருந்து பழிவாங்கும் நோக்குடன் வந்த சங்கமித்திரர் என்ற துறவியே காரணமானவரென்று மகாவம்சம் பக்கச் சார்பாக குறிப்பிடும்.

நாடுகடத்தப்பட்ட பிக்குகள் சிலர் காவிரிப்பூம் பட்டினத்து விகாரையொன்றிலே வாழ்ந்தனர். அங்கிருந்த சங்கமித்தர் அவர்களுக்கு நேர்ந்தவற்றை விசாரணைகளின் மூலம் அறிந்துகொண்டார். இளைஞரான சங்கமித்திரர் பௌத்தாகம நூல்களிற் தேர்ச்சி பெற்றவர்; மகாயானத்தில் மிகுந்த ஆர்வங்கொண்டவர்; வாதப்பிரதி வாதங்களில் உன்னதமான திறமைகொண்டவர்; போதனா சக்தியில் வல்லவர். அவர் மகாயானத்தை நிலைநாட்டுவதற்கென்று அநுராதபுரம் சென்றார். அவரது திறமையைக் கண்டு அதிசயமுற்ற கோட்டாபயன் சங்கமித்த தேரரைத் தனது புதல்வர்களின் போதனாசிரியராக நியமித்தான். அரசகுமாரர்களில் மூத்தவனாகிய ஜெட்ட திஸ்ஸன் மகாயான சிந்தனைகளை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் சங்மித்தரின் மகாயானம் சார்பான போதனைகள் இளைய குமாரனாகிய மகாசேனனின் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. கோட்டாபயன் இறந்தபின் அவனது மூத்த மகன் அரசபதவி பெற்றான். சங்கமித்திரர் சோழநாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்.

ஜெட்ட திஸ்ஸன் (266-276) இறந்த பின்பு சங்கமித்தர் இலங்கைக்கு மீண்டும் சென்றார். அவர் மீது அபிமானங்கொண்டிருந்த மகாசேனனின் ஆட்சியில் மகாவிகாரையினர் பெருமளவிலான பின்னடைவுகளை எதிர்கொள்ள நேர்ந்தது. அரசன் மகாவிகாரைக்கு எதிரான பல நடவடிக்கைகளை மேற்கொண்டான். மகாவிகாரையினர் விநயவிதிகளை முறையாகக் கடைப்பிடிப்பதில்லை என்றும் அவர்களுக்குத் தானதருமங்கள் வழங்குவது தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்கள் என்றும் பிரகடனஞ் செய்தான். அந்நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் மலையதேசம், உறுகுணை ஆகியவற்றுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். மகாவிகாரையின் கட்டிடங்கள் ஒன்பது வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையிற் காணப்பட்டன.

கைவிடப்பட்ட நிலையில் உள்ளன என்ற காரணத்தினால் மகாவிகாரையின் கட்டிடங்கள் பல இடிக்கப்பட்டன. அதேசமயம் அபையகிரிவிகாரை, தக்கிண விகாரை என்பவற்றின் கட்டுமானங்கள் பலவாகிப் பெருகின. அந்நாட்களிலே பௌத்தசமய உலகின் அதிசயமான ஜேதவனாராம சேதியம் மகாசேனனால் உருவாக்கப்பட்டது. சென்ற நூற்றாண்டின் முடிவில் அது அமைந்துள்ள தலத்தில் ப்ரக்ஞாபாராமித என்ற மகாயான நூலில் அமைந்துள்ள ஒரு சிறிய பகுதி எழுதிய செப்பேட்டினைக் கண்டெடுத்தனர்.

மகாவிகாரைக்கு எதிரான கடுமையான நடவடிக்கையினால் அநுராதபுரத்திலே கலகம்



அபயகிரி விகாரை

Image source - dailynews.lk

ஏற்பட்ட பொழுதிலும் அதனால் அரசன் தனது கொள்கையினை பெரிதளவில் மாற்றிக் கொள்ளவில்லை. அந்தக் கலகங்களும் தலைநகருக்கு வெளியே பரவியதாகத் தெரியவில்லை. அக்காலத்தில் இலங்கையிலுள்ள பௌத்தரான பொதுமக்கள் தேரவாதம், மகாயானம் என்ற வேறுபாடுகளைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

இலங்கை மன்னர்களில் வேறெவரும் செய்யாதவொன்றை மகாசேனனாற் செய்துகொள்ள முடிந்தது. மகாவிகாரையின் பிரதான பிரிவுகளான பஞ்சாவாஸ் ஆயதனங்களின் ஏட்டுச்சுவடி நிலையங்களில் மகாயான நூல்களை கட்டாயப்படுத்தி வைப்பித்தான்.

இலங்கைப் பௌத்த சமய வரலாற்றில் மகாசேனனின் காலம் ஒரு நிலைமாறு காலமாகும். அதுவரை அரசரிடமிருந்து பெற்ற ஏகபோகமான ஆதரவை மகாவிகாரை நிரந்தரமாக இழந்துவிட்டது. அது மீட்சிபெற்ற பொழுதிலும் மகாயானச் சார்புடைய அபையகிரி விகாரை, தக்கிண விகாரை என்பவற்றின் செல்வாக்கு மேலோங்கியது. மகாசேனனுக்குப் பிற்பட்ட காலத்து மன்னர்கள் வேறுபாடின்றி எல்லாப் பிரிவினருக்கும் ஆதரவு புரிந்தனர். இலங்கையில் மகாயானம் எழுச்சி பெறுவதற்குத் தென்னிந்திய பௌத்த நிலையங்களோடு ஏற்பட்ட தொடர்புகள் ஏதுவாக இருந்தமை கவனித்தற்குரியது. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கைக்குச் சென்று, சிலகாலம் அநுராதபுரத்திலே தங்கியிருந்த சீன பௌத்த யாத்திரிகரான ஃபாஸியான், அபையகிரி விகாரையினைச் சேர்ந்த பள்ளிகளில் 5000 துறவிகள் வாழ்ந்தனர் என்றும் மகாவிகாரையோடு இணைந்தவற்றில் 3000 துறவிகள் வாழ்ந்தனரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தென்னிந்தியத் தொடர்புகளின் காரணமாக மகாயானச் செல்வாக்கு இலங்கையில் ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளிலும் ஏற்பட்டது. காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவரான வஜ்ரபோதி என்னும் துறவி இலங்கைக்கு இரு தடவைகள் சென்றார். முதல்முறை சீனாவுக்குப் போகும் வழியில் இலங்கைக்குச் சென்று சிலகாலம் அபையகிரி விகாரையிலே தங்கியிருந்து மகாயானக் கோட்பாடுகளைப் பற்றிப் பிரசாரஞ் செய்தார். சமனொளிபாதம் முதலான புனித தலங்களைத் தரிசித்த வஜ்ரபோதி உறுகுணையில் ஆட்சிபுரிந்த அரசனொருவனுக்கு மகாயானம் பற்றிய போதனைகளை வழங்கினார் என்று சொல்லப்படுகின்றது. அவரது சீடரான அமோகவஜ்ர என்பரை ஆறாம் அக்கபோதியின் ஆட்சிக் காலத்தில், கிபி. 736 இல், சீனாவுக்குத் தூதுவராக அனுப்பிவைத்தனர்.

பல்லவகிரந்த வரிவடிவங்களிலே சமஸ்கிருத மொழியில் எழுதிய மகாயானச் சார்புடைய சின்னங்களும் கல்வெட்டுகளும் மிகுந்தலை, திரியாய், குச்சவேலி ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன. இவை தமிழகத்திலிருந்தும் பரவிய மகாயான சிந்தனைகளின் அடையாளங்களாகும்.

2

### தமிழகத்துப் பௌத்தப் பள்ளிகளும் உரையாசிரியர்களும்

பாளி மொழியில் அமைந்த பௌத்த இலக்கியங்களுக்கு உரை எழுதியவர்களில் புத்ததத்தர், புத்தகோஷர் என்போர் மேதாவிலாசமானவர்கள். அவர்களில் மூத்தவரான புத்ததத்தர் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த விகாரங்களில் வாழ்ந்தவர். அவர் இளமைக் காலத்திலே மகாவிகாரையிலே தங்கியிருந்து துறவியாக ஞானஸ்தானம் பெற்றவர். வடஇந்தியாவிலே பிறந்த புத்தகோஷர் காஞ்சிபுரம், காவிப்பூம் பட்டினம், அநுராதபுரம் ஆகியவற்றிலுள்ள விகாரங்களிலே தங்கியிருந்து திரிபிடகத்தின் ஏடுகளை ஆய்வு செய்தவர். அவர்கள் இருவரும் எழுதிய நூல்கள் தேரவாதம் நிலைபெறும் நாடுகளிற் பெருஞ் செல்வாக்குப் பெற்றவை.

புத்ததத்தரின் பணிகள் தமிழகத்திலே தேரவாதம் பற்றிய அறிவு வளர்ச்சி பெறுவதற்கு ஏதுவாயிருந்தன. அபிதம்மாவதார, மதுரத்த விலாசினி, விநயவிநிச்சய, உத்தரவிநிச்சய என்பன அவரின் பெயரால் வழங்கும் நூல்களாகும். இந்த நூல்களை தமிழகத்திலும் இலங்கையிலுமுள்ள விகாரங்களில் வாழ்ந்த துறவிகள் பயின்றனர். உத்தர விநிச்சய அநுராதபுரத்திலே மகாவிகாரையில் வாழ்ந்த காலத்தில் எழுதினாரென்று கொள்ளப்படுகிறது. விநயவிநிச்சய என்ற நூலை அவர் காவிரிப்பட்டனத்திலிருந்து எழுதினாரென்றும் அதன் முடிவிலே சொல்லப்படுகின்றது (உரகபுரேன புத்ததத்தேன ரசிதோயம் உரகபுரத்திலுள்ள புத்ததத்த என்ற நான் இதனை எழுதினேன்). அபிதம்மாவதார என்ற நூலின் முடிவிலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.



புத்தகோஷர் குறித்த ஓவியம்

Image source - www.flickr.com

அவர் அபிதம்மாவதார என்னும் நூலின் பாயிரத்தில், அச்சுத விக்கிராத அரசனின் காலத்தில், சோழநாட்டில் பூதமங்கலம் என்னும் கிராமத்தில் வேணுதாஸனால் அமைக்கப்பட்ட விகாரத்தில் வாழும் காலத்தில் அதனைத் தான் எழுதியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மதுரத்த விலாஸினி, ஜினாங்கார என்ற நூல்களையும் புத்ததத்தர் எழுதினார் என்ற ஐதிகம் இலங்கையில் நிலவிவந்துள்ளது.

அசோகனது காலத்துக்குப் பின் பாளி இலக்கியத்தின் வளர்ச்சியிற் புத்தகோஷரின் பணிகள் முதன்மையானவை; அவை அளவில் மிக விசாலமானவை; ஆதியான பௌத்தாகம நூல்கள் அனைத்திற்கும் விளக்கமானவை. மகாபோதிக்கு அண்மையிலுள்ள ஊரொன்றிலே வாழ்ந்த பிராமண குலத்திற் பிறந்தவரான புத்தகோஷர் மூன்று வேதங்களிலும் சமயஞானத்திலும் கல்வியிலும் மேதாவிலாசமானவராக விளங்கினார். வாதப் பிரதிவாதங்களில் வல்லவரான அவர் நாவலந்தீவிலே தேசாந்தரஞ் சென்று சமயவாதங்கள் புரிந்தவர். அவர் ஞானோதயம் என்னும் அரிய நூலினையும் தம்மசங்கீனி பற்றிய அட்டசாலினி என்னும் நூலினையும் எழுதினார். இவை அனைத்தும் மகாவம்சத்திலே

**சோழப் பேரரசின் காலத்திலே சோழநாட்டில் பௌத்த நிறுவனங்கள் மீளுருவாக்கம் பெற்றன. நாகபட்டினத்துச் சூடாமணிவர்ம விகாரமான ராஜராஜப் பெரும்பள்ளி சர்வதேசப் பரிமாணங் கொண்ட நிலையமாகிவிட்டது. தமிழகத்திலே அமைந்திருந்த பௌத்தப் பள்ளிகள் அதனோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தன. அதனை ஆதாரமாகக் கொண்டு பௌத்த சமயம் தொடர்பான படிமக்கலை வளர்ச்சி பெற்றது. கற்சிற்பங்களும் உலோகவார்ப்பான பெருந்தொகையான படிமங்களும் உருவாக்கப்பட்டன.**

பதிவாகியுள்ள விடயங்களாகும். சுமங்கள விலாஸினி, விசுத்திமக்க ஸமந்தபாஸாதிகா, பாபஞ்ச சூதனி ஸாரத்தப்பகாஸினி, மனோரத பூரணி முதலானவை அவர் எழுதிய விரிவான உரைநூல்கள். அநுராதபுரத்து மகாவிகாரையிலுள்ள உரை நூல்களை ஆதாரமாகக் கொண்டு புத்தகோஷர் தனது நூல்களை தேரவாத அளவைநூற் கோட்பாடுகளுக்கு அமைவாகத் தெளிவான நூல்களை எழுதினார்.

தீகநிகாயத்திற்கான உரைநூலை முதலாவது பௌத்த மாநாட்டிற் கூடிய 500 துறவிகள் ஓதினார்களென்று சுமங்கள விலாஸினியிலே புத்தகோஷர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் வாழ்ந்த காலத்தில் அவர் எழுதிய முதலாவது நூல் விசுத்திமக்க என்பதாகும். அது பௌத்தசமயக் கோபாடுகள் பற்றிய அறிவுக்களஞ்சியம் போன்றது. அதிலே திரிபிடகங்களின் சில தெரிந்த பகுதிகளும் அவற்றைப் பற்றிய உரைகளும் அதில் அடங்கியுள்ளன. பாளி இலக்கியத்தில் அதற்கு நிகரான நூல் வேறெதுவும் இல்லை.

விநய பற்றிய நூல்களின் பெருந் திரட்டானது ஸமந்தபாஸாதிகா. அதில் விநய விதிகள் பற்றிய கோட்பாடுகள் மிக நுட்பமான முறையில் விளக்கப்படுகின்றன. தேவநம்பிய தீசனின் காலம் முடியும் வரையான பௌத்தசமய வரலாறு அதன் பிரதானமான பகுதிகளில் ஒன்றாகும். அந்த வரலாறு தீபவம்சம், மகாவம்சம் என்பவற்றிலே காணப்படுவதற்கு நிகரானது. அதில் புராதன கால இந்தியாவில் நிலவிய சமுதாய, அரசியல், பொருளாதார, சமய நிலைகள், சிந்தனைகள் என்பன பற்றிய விரிவான வரலாற்று விபரங்களும் பதிவாகியுள்ளன.

தீக நிகாய, மஜ்ஜிம நிகாய, அங்குத்தர நிகாய என்பவற்றுக்கான உரை நூல்களையும் புத்தகோஷர் எழுதினார். அவை முறையே சுமங்களவிலாஸினி, ஸாரத்தப்பகாஸினி மநோரத பூரணி என்னும் பெயர்களால் வழங்குவனவாகும். காஞ்சிபுரத்திலுலே தனது நண்பரான ஜோதிபாலரோடு கூடியிருந்த காலத்தில் மநோரத பூரணி என்னும் நூலைப் புத்தகோஷர் எழுதினார். மயூரபட்டினத்திலே புத்தமித்திர தேரரோடு வாழ்ந்த காலத்திலே பாபஞ்சசூதனி என்னும் உரைநூலை எழுதியதாக புத்தகோஷர் குறிப்பிட்டுள்ளார். ஏழாம் நூற்றாண்டிலே புத்தகோஷரின் விஸுத்திமக்க என்ற நூலுக்கு விருத்தியுரையாகப் பரமத்தமஞ்ஜுஸ என்னும் நூலை காஞ்சிபுரத்திலே பிறந்தவரான தர்மபாலர் எழுதினார்.

## பௌத்தசமய உறவுகள்

சோழப் பேரரசின் காலத்திலே சோழநாட்டில் பௌத்த நிறுவனங்கள் மீளுருவாக்கம் பெற்றன. நாகபட்டினத்துச் சூடாமணிவர்ம விகாரமான ராஜராஜப் பெரும்பள்ளி சர்வதேசப் பரிமாணங் கொண்ட நிலையமாகிவிட்டது. தமிழகத்திலே அமைந்திருந்த பௌத்தப் பள்ளிகள் அதனோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தன. அதனை ஆதாரமாகக் கொண்டு பௌத்த சமயம் தொடர்பான படிமக்கலை வளர்ச்சி பெற்றது. கற்சிற்பங்களும் உலோகவார்ப்பான பெருந்தொகையான படிமங்களும் உருவாக்கப்பட்டன.

புத்தமித்திரர் எழுதிய வீரசோழியம் என்னும் நூல் வீரராசேந்திரன் பெயரால் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அதற்கு உரை எழுதிய பெருந்தேவனார் மறைந்துபோன பௌத்த சமயம் பற்றிய நூல்கள் சிலவற்றின் பாடல்களை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார். அவற்றிலே சில சுந்தரசோழன் முதலான சோழ மன்னர்களைப் பற்றியவை.

வீரசோழியம் இலங்கையிலுள்ள பௌத்த, நிறுவனங்களில் அறிமுகமாகி விட்டமைக்குச் ஸிதத்ஸங்கராவ என்னும் சிங்கள இலக்கண நூல்

உதாரணமாகும். குண்டலகேசி, பிம்பிசாரக் கதை என்பனவும் சோழர்காலத்துப் பௌத்த நூல்களாகும்.

தேரவாதச் சார்புடைய பௌத்தப் பள்ளிகள் இருந்தமைக்கு சமகாலப் பாளி நூல்கள் ஆதாரமாகின்றன. அவற்றின் மூலமாக இலங்கையிலும் சோழநாட்டிலுமுள்ள சங்கத்தர் பரஸ்பரமான தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தமை வெளிப்படையாகின்றது. பௌத்தாகம நூல்களிலும் பாளி இலக்கியத்திலும் பாண்டித்தியம் பெற்ற சோழநாட்டுப் பௌத்த துறவிகள் சிலரைப் பற்றிய குறிப்புகள் இலங்கையில் எழுதப்பட்ட நூல்கள் சிலவற்றிலே காணப்படுகின்றன.

சோழர் காலத்தில் வாழ்ந்த, பாளி மொழி இலக்கியங்களிற் புலமை பெற்றிருந்த தேரர்களின் காலத்தால் முற்பட்டவர் அநுருத்ததேரர். அவர் காஞ்சிபுரத்துக் காவேரி நகரிற் பிறந்தவர். ஆயினும் அவர் தாம்பரட்டவிலுள்ள தஞ்சையில் நெடுங்காலம் வாழ்ந்தவர். பரமத்தவிநிச்சய, நாமரூபபரிச்சேத என்பன பாளி மொழியில் அவர் எழுதிய நூல்களாகும்.

தமிழகத்தில் வாழ்ந்த கஸப்பதேரர் பற்றிச் சாசனவம்சம் குறிப்பிடுகின்றது. அவர் சோழநாட்டில் வாழ்ந்த தேரர்களிற் பிரபலமானவரென்று விநயஸார்த்த தீபனி என்னும் நூலில் வாசீஸ்ஸர தேவர் குறிப்பிடுகின்றார். விநயவிதிகள் பற்றி இறுக்கமான போக்குடைய கஸப்ப தேரர் விநயாட்டகதா என்னும் நூலின் ஆசிரியர் என்பது ஐதிகம்.

மது அருந்துதல் பற்றி இலங்கைப் பிக்குகளுக்கும் சோழநாட்டுப் பிக்குகளுக்கும் இடையிலே தகராறு ஏற்பட்டது. புத்தப்பிய மகாதேரர் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்ப்பு வழங்கினார். தெரிந்தோ தெரியாமலோ வெறியூட்டும் மதுவினை அருந்துவது குற்றமான செயலாகும் என்பது அவருடைய தீர்ப்பாகும்.

சோழ நாட்டிலே பெருங் செல்வாக்கு பெற்றிருந்த ஆநந்த மகாதேரரைப் பற்றிய சாசனக் குறிப்புண்டு. சர்வ சித்துக்களை பெற்றிருந்த ஆநந்த மகாதேரர் தாம்ரட்டத்திலே சங்கசுத்தி செய்தமை பற்றி கிபி. 1137 இல் பொலன்னறுவையில் நிறுவப்பட்ட கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. தமிழகத்திலே பௌத்த சங்கத்தாரிடையே முதன்மையானவராகவும் வாலாதித்தம் சூடாமணிவர்ம விகாரம் போன்ற விகாரங்களின் நாயகராகவும் விளங்கிய ஆநந்த மகாதேவரைப் பற்றி ரூபசித்தி என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளனர்.

ரூபசித்தி ஆசிரியரும் மாணவருமாகிய இரு தேரர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவர்களில் ஆசிரியரான வனரதன ஆநந்த மகாதேரர் தம்பபண்ணியான இலங்கையைச் சேர்ந்தவர். அவரது சீடரான புத்தப்பிய திபாங்கரர் தமிழ்நாட்டிற் பிரசித்தி பெற்றவர்; வாலாதிச்ச விகாரம் சூடமணிகாராமம் என்னும் விகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்.

சூடாமணிவர்ம விகாரமான ராஜராஜப் பெரும்பள்ளியினையே ரூபசித்தி என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் அந்த விகாரம் தேரவாதப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் இருந்தமைக்கு ரூபசித்தியிற் பதிவாகியுள்ள குறிப்பு ஆதாரமாகின்றது.

## தமிழகத்துப் பள்ளிகளிற் புகலிடம் பெற்ற ஈழத்துப் பௌத்த துறவிகள்

பதின்மூன்றாம் நூற்றாண்டிலே காலிங்க மாகனின் ஆட்சிக் காலத்திலே பௌத்த சமய நிறுவனங்களுக்குப் பேரிடர் ஏற்பட்டது. பௌத்த சமயத்துக்கு விரோதமான கொள்கைகளை மாகன் கடைப்பிடித்ததால் பௌத்த நிறுவனங்களுக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அவனது ஆட்சியில் பௌத்தப் பள்ளிகள் பல படை நிலைகளாகிவிட்டன என்றும் அவற்றுக்கு மானியமாகவுள்ள நிலங்களை மாகன் தனது படையினருக்கு வழங்கினான் என்றும் சில நூல்களிற் கூறப்படுகின்றது.

அநுராதபுரம், பொலன்னறுவை என்னும் பெருநகரங்களிலுள்ள சங்கத்தார் பீடங்கள் நிலைகுலைந்தன. சங்கத்தவர்கள் பலர் மலயதேசம், தென்பகுதியான உறுகுணை என்பவற்றை நோக்கிச் சென்றுவிட்டனர். தேரர்களிற் பலர் சோழ, பாண்டிய நாடுகளிற் புகலிடம் பெற்றனர். அவர்களில் ஒருவரான பதந்த ஆநந்த மகாதேரர் பாண்டிநாட்டுக்குச் சென்று, அங்குள்ள வன்னிய சாமந்தனாகிய சோழகங்கன் அமைத்த குணாகரப் பெரும் பள்ளியிலே தங்கியிருந்தார். மூன்று விகாரங்களைச் சோழகங்கன் அமைத்திருந்தான். அவரோடு கூடிச் சென்ற வேறு சில தேரர்களும் ஆநந்த தேரரோடு அங்கு வாழ்ந்தனர். ரம்மியமான சூழலில் அமைந்திருந்த குணாகரப்பள்ளியில் வாழ்ந்த காலத்தில் உபாஸகஜனாலங்கார என்ற பாளி நூலை ஆநந்ததேர மகாதேரர் எழுதினார்.

இரண்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்திலே (1236-2371), முன்பு சீர்குலைந்துபோன சங்கத்தை மறுசீரமைப்பதற்காக சோழநாட்டிலிருந்தும் பாண்டித்தியம் பெற்ற பிக்குகள் பலரை இலங்கைக்கு

வரவழைத்தான். அதனைப் பற்றிச் சூளவம்சம் மேல்வருமாறு குறிப்பிடுகின்றது :

சோழநாட்டிலுள்ளவர்களான மூன்று பிடகங்களிலும் பயிற்சி பெற்றுப் பிரபலமாகிய சோழ நாட்டு பிக்குமார்களுக்குப் பல சன்மானங்களை அனுப்பி, விநய விதிகளைத் தவறாது பேணிவரும் பிக்குமார் பலரை தாம்ரபணி தேசத்துக்கு அரசன் வரவழைத்தான். அவர்கள் மூலமாக இரண்டு நிகாயங்களைச் சேர்ந்தவர்களிடையிலும் நல்லுறவுகளை ஏற்படுத்தினான்.

சோழநாட்டுப் பௌத்த தேரர்களின் ஆதரவை 14 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஆட்சிபுரிந்த அரசரிற் சிலராற் பெற்றுக்கொள்ள முடிந்தது. குருணாகலை இராசதானியாகக் கொண்டு ஆட்சிபுரிந்த நான்காம் பராக்கிரமபாகு (கிபி.1302 1326) விநய பிடகம் பற்றிய தெளிந்த அறிவுடைய சோழநாட்டு அறிஞரான தர்மகீர்த்தி தேரரை வரவழைத்து அவரை ராஜகுருவாக நியமித்தான். அவர் சர்வசமய ஆகமங்களில் அறிவுபெற்ற பன்மொழிப் புலவராக விளங்கினார்.

## உசாத்துணை


1. மகாவசம்ச்சம் IIV, XII-XIII
2. மேலது
3. மேலது
4. Peter Selalk, *"In Search of Buddhism in PrePallava Tamilakam", Buddhism Among Tamils in PreColonial Tamilakam and Ilam, Uppsala,* 2002, p.253.
5. *Iravatham Mahadevan, Early Tamil Epigrapy: From The Earlest Times to the Sixth Centuary CE. Revised and Enlarged Edition, Vol.I Central Institute of Classical Tamil, Chennai* 2004.
6. S.Pathmanathan, *"Buddhism in Sri Lanka and South India Interactions Among Monastic Centres", Facets of Sri Lankan History and Culture, Kumaran Book House,* 2015, p.290.
7. bid, Pp.116-118.
8. K.A.Nelakanta Sastri, *Foreign Notices of South India, Madras,* 1938, Pp.68-73.
9. மகாவசம்ச்சம் I: 44-51
10. மணிமேகலை, 7:44-63
11. மணிமேகலை, 10:67-69
12. மணிமேகலை, 10:80-82
13. மணிமேகலை, 11:19-29
14. மணிமேகலை, 28:103- 113
15. S.Pathmanathan, *"Hinduism and Buddhism in Sri Lanka: Some Points of contact between two Religious Traditions (Circa AD 1300-1600)", Kalyani Journal Volumes 5 and 6, University of Kelaniya,* 1986-1987.
16. மேலது
17. லப்பதிகாரம், புலியூர்க் கேசிகன் தெளிவுரை, பாரி நிலையம், சென்னை, 2000, ப.21
18. மேலது, ப.17
19. மணிமேகலை, 26:110
20. மேலது
21. S.Pathmanathan, *"Hinduism and Buddhism in Sri Lanka..."*
22. மேலது
23. மகாவம்சம,; 83:79-81
24. மகாவம்சம,; 83:95
25. மகாவம்சம,; 33:96
26. நிகாய சங்கிரஹய, ஆங்கில மொழிபெயர்ப்பு று. கு. குணவர்த்தன, கொழும்பு, 1908, ப.12
27. மேலது
28. மேலது
29. நிகாய சங்கிரஹய, ப.12
30. மகாவம்சம், 36:41; 111-112
31. மகாவம்சம், 36:113-116
32. மகாவம்சம,; 36:117
33. Amaradasa Liyanagamage, *"Conflict in StateSangha Relations in the Early History of Sri Lanka", Reflections On A Heritage...*p.173
34. மேலது, பக்.173-174
35. மேலது, ப.185
36. மேலது, ப.197
37. *Foreign Notices of South India, ed. K.A.Nelakanta Sastri,* p. 69
38. *University of Madras,* 1939, Pp.68-73
39. UCHC Vol.I, Pt.I, 1960, p.383
40. மேலது, ப.383
41. மேலது
42. GP Malalasekera, *The Pali Literature of Ceylon, Kandy,* 1994, p.106
43. மேலது
44. மேலது
45. G.P.Malalasekera, *The Pali Literature of Ceylon,* 1994, p.80.
46. மேலது, ப.90
47. மேலது, ப.80
48. மேலது, ப.93.
49. மேலது, ப.95.
50. மேலது, பக்.91-92
51. மேலது,
52. Amaradasa Liyanagamage, *"A Forgotten Aspect of the Relations between the Sinhalese and the Tamils", Reflections on a Heritage...* 2000, Pp.662-666.
53. A.Liyanagamage, *A Forgotten Aspect of the Relations Between the Sinhalese and the Tamils The Upsa Janlankra: A Reexamination of its date and authorship and its significance in the History of South India and Ceylon Reflections on a Heritage...,* 2000, p.310; Clavamsa (Cv) 30:22.
54. மேலது, பக். 305-306
55. மேலது, ப.128; சூளவம்சம், 84:9-10
56. சூளவம்சம், 90:98-99



இராமசாமி ரமேஷ்

கலாநிதி இரா. ரமேஷ் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். ஆட்சிமுறை, ஊழல், அரச சேவை வழங்கல், சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பாக தனது ஆய்வுகளைச் செய்து வருகிறார். மலையகம் குறித்தும் எழுதி வருகின்றார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை மறுசீரமைப்பு அறிக்கையும் அதன் பரிந்துரைகளும் : சில அவதானிப்புகள்



## அறிமுகம்

தற்போது இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி தொடர்பாகப் பரந்த கலந்துரையாடல் (ஆதரவாகவும் எதிராகவும்) பாராளுமன்றத்திலும், அரசியல் பரப்பிலும், சிவில் சமூக மட்டத்திலும் இடம்பெற்று வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குவதற்குப் பல்வேறு நிபந்தனைகளை விதித்திருப்பதனைப் பார்க்க முடிகிறது. அது IMF இன் பொதுவான நடைமுறையும் கூட. அந்தவகையில் கடந்த செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகளை ஆழமாக மதிப்பீடு செய்து, 139 பக்கங்களைக் கொண்ட ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது (Governance Diagnostic Report: file:///C:/Users/u;R%20LAP%201/Downloads/1LKAEA2023002.pdf). அந்த அறிக்கையில் இலங்கையின் ஆளுகைக் கட்டமைப்பில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான 16 மறுசீரமைப்புகள் மற்றும் மாற்றங்கள் குறித்து விரிவான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இந்தப்பரிந்துரைகள் ஒவ்வொன்றும் இலங்கையில் ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகள், அதிகார துஷ்பிரயோகம், நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள ஊழல் மோசடி, ஊழல் கலாச்சாரம், வெளிப்படைத்தன்மை இன்மை, பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஒட்டுமொத்த அறிக்கையிலும் தொடர்ச்சியாக அழுத்தி வலியுறுத்தப்படும் விடயம் யாதெனில் இலங்கையில் ஊழலற்ற ஒரு ஆளுகை செயன்முறையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும் (corruption - free governance process).

*ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகளை மிக விரைவில் களைய வேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்துவதுடன், அது பொருளாதார அபிவிருத்தி, வெளிநாட்டு முதலீடு, ஒழுக்கமுடைய பொது நிர்வாகம் மற்றும் பொறுப்புக்கூறும் ஆளுகைக்கு அவசியம் எனப்படுகின்றது. அவர்கள் முன்வைத்துள்ள 16 பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேறுப்பட்ட கால அவகாசத்தையும் வழங்கியிருப்பது இதில் இன்னுமொரு சிறப்பம்சமாக காணப்படுகிறது.*

*ஆகவே, இலங்கையின் ஆட்சி செயன்முறையில் காணப்படும் தோல்வியைச் சரி செய்ய, அதில் இருந்து இலங்கை நாட்டை மீட்டெடுக்க வேண்டுமாயின் இந்த சவால்மிக்க பரிசோதனையில் இலங்கை ஈடுபட வேண்டும் என்பது இங்கு வெளிப்படுகின்றது. இந்தக் கசப்பான மாத்திரையினை இலங்கை விரும்பியோ விரும்பாமலோ உட்கொள்ள வேண்டும் என்பது இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். ஆகவே, இந்த நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறுமாக இருந்தால் மூன்றாவது தவணைக் கடன் உதவியினைச் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக் கொள்வது இயலாத காரியமாக மாறக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம். இரண்டாவது தவணைக் கடன் ஜனவரி மாதம் அளவில் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கலாம். அதில் பெரியளவிலான சவால்கள் இருப்பதாகத் தென்படவில்லை. இந்த நாட்டில் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டப் பின்னர் ஆளுகை செயன்முறையில் காணப்படும் பிரதான குறைபாடுகளில் ஒன்றுதான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினுடைய கைகளில் சகல அதிகாரங்களையும் குவித்து பாராளுமன்றத்தையும், நீதிமன்றத்தையும் கேலிக்கூத்தாக மாற்றியமையாகும். இது இலங்கையில் நிறைவேற்று சர்வாதிகார ஆட்சியினை ஏற்படுத்தியது எனலாம். இதனை ஆளுகை செயன்முறையின் ஒரு பிரதான பிரச்சனையாக காணலாம். நாம் இன்று அனுபவிக்கும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் அனைத்திற்கும் ஆளுகை செயன்முறையில் காணப்படுகின்ற குறைபாடுகள் அல்லது ஆளுகை தோல்வி (governance failure) அல்லது தீங்கான ஆளுகை (mis governance) பிரதான காரணியாக உள்ளது. அரகலயப் போராட்டக்காரர்கள் தொடச்சியாக வலியுறுத்தியது ஆளுகை மறுசீரமைப்பாகும் - அதனை அவர்கள் முறைமை மாற்றம் (system change) என்றப் பெயரில் கோரினார்கள். அந்த வகையில் இக்கட்டுரையானது IMF இன் ஆளுமை மறுசீரமைப்பு பரிந்துரைகள் தொடர்பான ஒரு சாரம்சத்தினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு அமைந்துள்ளது.*

*இங்கு அவதானிக்க வேண்டிய பிறிதொரு விடயம் யாதெனில், IMF இலங்கைக்கு இத்தகைய பரிந்துரைகளை 16 தடவைகள் வழங்கியுள்ளது. அவற்றினால் ஆளுகை செயன்முறையில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன என்ற வினாவினையும் இங்கு முன்வைப்பது பொருத்தமாகும். இலங்கை அரசாங்கம் ஒவ்வொரு முறையும் கடன் பெறும்போது இது போன்ற எண்ணற்றப் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவை அமுல்படுத்தப்படவில்லை - அவை கிடப்பில் போடப்பட்டதுடன், ஊழல் மோசடிகள் நிறைந்த ஆளுகை முறையே தொடர்ந்தது. இப்போக்கினை பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அவதானிக்க முடியும். ஆகவேதான், இடதுசாரி அமைப்புகளும் சில அரசியல் கட்சிகளும் IMF இன் கொள்கைகளே நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலைக்கும் பொது மக்கள் அனுபவிக்கும் பொருளாதார பிரச்சினைகளுக்கும் காரணம் என விமர்சிக்கின்றனர்.*

*IMF இன் நவ தாராளக் கொள்கைகள் நாட்டின்*

IMF இன் நவ தாராளக் கொள்கைகள் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமென விமர்சிக்கப்படுகின்றது. இது பகுதியவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் என்றாலும், கொள்கை வகுப்பாளர்கள் IMF இன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை, தவறான கொள்கைகள் அல்லது பொருத்தமற்ற கொள்கைகளை தொடர்ச்சியாக உருவாக்கியமை, அரசியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டு பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தமை, அரசியலில் இன, மதத்தின் தலையீட்டினை வெளிப்படையாகவே அனுமதித்தமை, ஊழல் போன்ற வேறும் பல காரணிகளும் நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலைக்கு மற்றும் ஆளுகை தோல்விக்கு காரணம் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமென விமர்சிக்கப்படுகின்றது. இது பகுதியவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் என்றாலும், கொள்கை வகுப்பாளர்கள் IMF இன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை, தவறான கொள்கைகள் அல்லது பொருத்தமற்ற கொள்கைகளை தொடர்ச்சியாக உருவாக்கியமை, அரசியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டு பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தமை, அரசியலில் இன, மதத்தின் தலையீட்டினை வெளிப்படையாகவே அனுமதித்தமை, ஊழல் போன்ற வேறும் பல காரணிகளும் நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலைக்கு மற்றும் ஆளுகை தோல்விக்கு காரணம் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, இப்பொழுது IMF வழங்கியிருக்கும் பரிந்துரைகளை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி முன்னோக்கிச் செல்ல வேண்டிய தேவையுண்டு. எதிர்காலத்தில் IMF இன் கடன் உதவிகளை நாடிச் செல்லாதவகையில் பொருளாதாரக் கொள்கைகளை மறுசீரமைக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதற்கு, ஏற்றுமதி பொருளாதாரத்தினை, தன்னிறைவுடன் கூடிய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இவை நீண்டகாலத் திட்டங்களாக நிலைபேறுத்தன்மையின் அடிப்படையில் அமைய வேண்டும். தொடர்ச்சியான கடன் பொறிக்குள் இருந்து இலங்கையை மீட்டெடுக்க, நவப் பொருளாதார பிடியில் இருந்து மீட்க தீவிர மறுசீரமைப்புகளை உள்நாட்டு சூழலை அடிப்படையாகக் கொண்டு பாரிய பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் கலந்துரையாடல் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.


எவ்வாறாயினும், இம்முறை IMF வழங்கியுள்ள இப்பதினாறு பிரதானப் பரிந்துரைகள் இலங்கையில் ஆளுகைக் கட்டமைப்பில் நீண்டகாலமாக நிலவும் குறைப்பாடுகளை களைவதற்கான ஒரு நிழற்பட அச்சாகப் (blue print) பார்க்க முடியும். இவற்றை இலங்கை சரியான முறையில் பின்பற்றுகின்ற பட்சத்தில் ஆட்சிமுறை செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறலை மேம்படுத்த முடியும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையாகக் காணப்படுகின்து. அதேவேளை, இலங்கையில் நல்லாட்சியை விரும்பும் அனைத்து தரப்பினரும் இதனை விரும்புவர் என்றும் எதிர்ப்பார்க்கலாம். ஊழலற்ற இலங்கையினை (corruption free Sri Lanka) கட்டியெழுப்ப எத்தனிக்கும் எவரும் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை முற்றாக எதிர்க்க மாட்டார்கள். ஏனென்றால் இவை நாட்டிற்கு மிக அவசியமானவை. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து இன்றுவரையில் ஆளுகை செயன்முறையில் நாம் நான்கு பிரதான குறைபாடுகளை அவதானிக்கலாம். அவை முறையே,

1. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை
2. ஊழல் மோசடி
3. இனவாதம் அல்லது ஆட்சிமுறை செயற்பாட்டில் இனத்துவ மேலாதிக்கம்
4. அரசியல் செயற்பாடுகளில் பௌத்த மதத்தின் மேலோங்கிய செல்வாக்கு

இந்நான்கு காரணிகளும் இலங்கையின் தற்போதைய வங்குரோத்து நிலைமைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது என்பதனை எவரும் மறுதலிக்க முடியாது. ஆகவே இன்று பெரியளவிலான மறுசீரமைப்புகள் ஆளுகை மற்றும் இலங்கையின் அரசியல் முறைமையில் அவசியமாக உள்ளது.
இப்பின்புலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் 16 பரிந்துரைகளையும் அவதானிப்பது அவசியமாகும். இவ்வறிக்கையும் அதன் பரிந்துரைகளும் முழுக்க ஆளுகை செயன்முறையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக மாத்திரமே அவதானம் செலுத்துகின்றது என்பதனை குறிப்பிட வேண்டும். பிரதான 16 பரிந்துரைகளுக்கு அப்பால் எண்ணற்ற பரிந்துரைகள் ஒவ்வொரு துறை சார்ந்து முன்வைக்கப்பட்டுள்ளது. அவற்றினை இவ்வறிக்கையினை வாசிக்கும் பொழுது அவதானிக்க முடிகின்றது.

## இலஞ்ச மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை

இலங்கையின் இலஞ்ச மற்றும் ஊழல் எதிரப்பு ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஓர் ஆலோசனைக் குழுவை 2023 நவம்பர் மாதத்திற்குள் நியமிக்க வேண்டும் என்பதே முதலாவது பரிந்துரையாகும். இதனை நவம்பர் மாதத்தில் நிறைவுசெய்ய வேண்டும். இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிற்கு கடந்த காலங்களில் பதவியில் இருந்த ஜனாதிபதிகள் தமக்கு வேண்டப்பட்டவர்களை, விசுவாசமானவர்களை நியமித்த போக்கை




**இலங்கையின் ஊழல் சுட்டெண்**

Image source - take-profit.org

அழுத்தம், அரசியல் தலையீடு, 20 ஆவது சீர்திருத்தங்களின் கீழ் இவ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை மற்றும் அதன் நிலை வலுவிழக்கச் செய்யப்பட்டமை போன்றன இலஞ்சஊழல் ஆட்சிமுறை செயற்பாடுகளில் பரந்தளவில் இடம்பெறுவதற்கு அல்லது ஒரு கலாசாரமாக மாறுவதற்கு காரணமாக அமைந்து விட்டது. ஆகவே இந்த நிலைமையை மறுசீரமைப்பதற்கு இந்த ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையைப் பாதுகாக்க வேண்டும்.

அவதானித்துள்ளளோம். நிறைவேற்று அதிகாரத்தினைப் பயன்படுத்தி தமக்கு அரசியல் விசுவாசத்தினை காட்டும் நபர்களைக் மாறி மாறி பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் நியமித்தார்கள். இச்செயற்பாடும் இந்நாட்டில் ஆளுகை செயன்முறையின் பிரதான வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. ஆகவேதான் தகுதியான ஆலோசனைக் குழுவொன்றை நியமித்து, அவர்கள் வழங்குகின்ற ஆலோசனையின் பெயரில் இலஞ்ச மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிற்கான 5 உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்று இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது. இந்தக் காரியத்தினை அரசியலமைப்பு பேரவை முன்னெடுக்க வேண்டும்.

அதனூடாக ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவின் நியமன விடயத்தில் அரசியல் தலையீடுகளை தவிர்ப்பது, நேர்மையாக, வினைத்திறன்மிக்க வகையில் இந்த ஆணைக்குழு செயற்படுவதை உறுதிப்படுத்துவது, ஊழலுக்கு எதிராக செயற்படுவதற்கு அவகாசத்தை ஏற்படுத்துவது என்பன எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் இலஞ்ச ஊழலுக்கு எதிராகச் செயற்படுகின்ற பிரதான நிறுவனமாக ஒவ்வொரு நாட்டிலும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு காணப்படுகிறது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இவ் ஆணைக்குழு நிறுவன ரீதியான ஒரு கட்டமைப்பினைக் கொண்டிருந்தாலும் இதன் அதிகாரங்கள், கடமைகள், வளங்கள் தொடர்பாக பாரிய பிரச்சினைகளும், மட்டுப்பாடுகளும் காணப்படுகிறது. தொடர்ச்சியான அரசியல்

இவ்வாணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் போது ஒரு சுயாதீன ஆலோசனைக் குழுவை நியமிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. டிரான்ஸ் பேரன்சி இன்டர்நெசனல் நிறுவனம் 2017 ஆம் ஆண்டு ஆசியாவில் உள்ள ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுக்களின் செயற்றிறன் தொடர்பாக மதிப்பீடு ஒன்றினை செய்து அறிக்கை வெளியிட்டது (*Transparency International, Anticorruption agencies in Asia: an evaluation of their performance and challenges*). இதன்படி இலங்கையின் இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த பணியாளர் தொகை 802 ஆகும். அதில் 353 பேர் மாத்திரமே தற்போது சேவையில் இருப்பதாகவும் சுமார் 449 பதவி வெற்றிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவி வெற்றிடங்கள் இக்கட்டுரை எழுதும் தருணம் வரையில் முழுமையாக நிரப்பப்படவில்லை இன்னும் 300 பதவி வெற்றிடங்கள் இருப்பதனை கட்டுரையாசிரிருக்குக் கிடைத்த தகவல்கள் உறுதிசெய்கின்றன. இது அரசாங்கம் இலஞ்ச ஊழலுக்கு எதிராக போராடுவதில் காட்டுகின்ற அர்ப்பணிப்பின் அளவினை வெளிப்படுத்துகின்றது.

## அரசியல்வாதிகள் சொத்துக்களைப் பிரகடனப்படுத்தல்

இரண்டாவது பரிந்துரை 2024 ஆண்டு ஜீலை மாதமாகும் போது சகல அரசியல்வாதிகளும் தமது சொத்துக்களை பிரகடனப்படுத்தியிருக்க வேண்டும் என்பதாகும்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் தமது சொத்துக்களைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதே இங்கு குறிப்பிடப்படுகின்றது. இது வெளிப்படைத்தன்மைக்கும், பொறுப்புக்கூறலுக்கும் பெரிதும் அவசியமாகும். இதுவரைக்கும் 12 உறுப்பினர்கள் மாத்திரமே தமது சொத்துகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி உள்ளனர். அதுமட்டுமல்லாது சர்வதேச நாணய நிதியம் வெளிப்படுத்தும் இன்னுமொரு விடயம் அரசியல்வாதிகள் சொத்துக்களைப் பிரகடனப்படுத்திய பின்னர் அவற்றைப் பொதுமக்கள் அணுகக்கூடிய ஒரு இணையத்தளத்தில் காட்சிப்படுத்த வேண்டும். பொதுமக்கள் அவற்றைப் பார்ப்பதற்கான வசதியை, உரிமையை வழங்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. இது தனிப்பட்ட நபர்களை அடிப்படையாகக் கொண்ட இருந்தால் அரசியல்வாதிகள் சொத்துக்களை பகிரங்கப்படுத்துவது அவசியமாகும். அது மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமையும்கூட.

## கறுப்புப்பணத்தின் புழக்கத்தினைத் தடைசெய்தல்

மூன்றாவது பரிந்துரை சட்டத்துக்குப் புறம்பான பணத்தினைத் (கறுப்புப்பணம்) 'தூய்தாக்கல்' செய்வதனைத் தடுப்பதற்கு குற்றவியல் சட்டத்தை இறுக்கமாக்க வேண்டும். அதன் ஊடாக கறுப்புப் பணத்தினைத் தூய்தாக்குவதனைத் தடுக்க வேண்டும் என்கிறது (*anti -money laundering*). ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயம் (*UN Convention Against Corruption*) மற்றும் சர்வதேச நிதி நடவடிக்கை பணிக்குழுவின்

> **இலங்கையில் நிதி தூய்தாக்குதல் மிகவும் பிரச்சனைக்குரிய விடயமாக காணப்படுகிறது. அரசியல்வாதிகள் கருப்புப் பணத்தினை இலங்கையில் முதலிடுமாறு கடந்தகாலங்களில் பகிரங்கமாக அறிவித்தார்கள். இலங்கைக்கு நேர்மையான முதலீட்டாளர்கள் வருகைத்தராமைக்கு இது பிரதான காரணம் என்பதனை அரசியல்வாதிகள் இன்னும் உணரவில்லை போல் தெரிகிறது. கறுப்புப் பணத்தை வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வர முடியும் என்ற ஒரு சூழலைப் பசில் ராஜபக்ச தரப்பினர் இந்த நாட்டிலே உருவாக்கினார்கள்.**

முரண்பாடுகளை தவிர்ப்பதற்கு செய்வதற்கு அவசியமாகும்.

ஆட்சி செயன்முறையில் நேர்மைத் தன்மையும், வெளிப்படைத்தன்மையும், பொறுப்பு கூறலையும் கொண்டு வருவதற்குப் சொத்துகளைப் பிரகடனப்படுத்துவது அவசியமாக உள்ளது. சொத்துகளைப் பிரகடனப்படுத்துவதை இலங்கையின் பல அரசியல்வாதிகள் தொடர்ந்தும் தவிர்த்து கொண்டு வருகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் எவ்வாறு சொத்துக்களை சேர்த்தார்கள், எங்கிருந்து அவ்வளவு சொத்துக்களை சேர்த்தார்கள், எங்கு அதனை முதலீடு செய்கிறார்கள், எந்தந்த நாடுகளில் தமது சொத்துக்களை பதுக்கி வைத்திருக்கிறார்கள் போன்ற விடயங்களைப் பொதுமக்கள் அறிய முடியாதுள்ளனர். இது இன்னுமொரு பக்கத்தில் தேர்தல் காலத்தில் மோசமான ஊழல் மோசடியையும், பணத்தையும் பொருளையும் கொடுத்து வாக்குகளை விலைக்கு வாங்கும் கலாசாரத்தையும் இலங்கையில் உருவாக்கி இருப்பதை நாம் பார்க்க முடியும். இந்த மோசமான நிலையை முறியடிக்க வேண்டுமாக

தராதரங்களுக்கு ஏற்ப குற்றவியல் சட்டங்களை இறுக்கமாக்க (திருத்த) வேண்டும் என குறிப்பிடுகின்றது. சர்வதேச நிதி நடவடிக்கை பணிக்குழு (*Financial Action Task Force -FATF*) என்பது சட்டவிரோத பணப்புழக்கம் (கடத்தல்) மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதி அளிக்கப்படுவதனை தடுப்பதற்கான அரசுகளுக்கிடையிலான சர்வதேச கண்காணிப்பு அமைப்பாகும். அதன் தலைமையகம் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரத்தில் அமைந்துள்ளது. சட்டவிரோத பண பரிமாற்றத்தினை மற்றும் தூய்தாக்கப்படுவதனைத் தடுப்பதற்கு இவ்வமைப்பு பல தராதரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் நிதி தூய்தாக்குதல் மிகவும் பிரச்சனைக்குரிய விடயமாக காணப்படுகிறது. அரசியல்வாதிகள் கருப்புப் பணத்தினை இலங்கையில் முதலிடுமாறு கடந்தகாலங்களில் பகிரங்கமாக அறிவித்தார்கள். இலங்கைக்கு நேர்மையான
முதலீட்டாளர்கள்

வருகைத்தராமைக்கு இது பிரதான காரணம் என்பதனை அரசியல்வாதிகள் இன்னும் உணரவில்லை போல் தெரிகிறது. கறுப்புப் பணத்தை வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வர முடியும் என்ற ஒரு சூழலைப் பசில் ராஜபக்ச தரப்பினர் இந்த நாட்டிலே உருவாக்கினார்கள்.


இது சர்வதேச சட்ட பொறிமுறைகளுக்கு முரணான ஒரு விடயம். ஆகவேதான் சர்வதேச நாணய நிதியம் 2024 ஏப்ரல் மாதமாகும் போது ஓர் உறுதியான சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வந்து நிதி தூய்தாக்குதலை ஒரு குற்றமாக நிறைவேற்ற வேண்டும், அதில் ஈடுபடுவோரை தண்டிக்க வேண்டும், அந்த செயற்பாட்டை நிறுத்த வேண்டும், சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப அந்த காரியத்தை இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. 2016 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட, பணம் தூய்தாக்கலுக்கு எதிரான சட்டமானது பல குறைப்பாடுகளைக் கொண்டுள்ளது. அதனால் சட்டவிரோத பணப்புழக்கத்தினை நிறுத்த முடியாமல் உள்ளதாக இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

இந்தியாவில் மோடி ஆட்சிக்கு வந்தப் பின்னர் நிதி தூய்தாக்குதல் பெரியளவில் இந்தியாவில் நிறுத்தப்பட்டது. இதற்குக் காரணம் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமையாகும். இன்று பெரும் செல்வந்தர்களும், அதிகாரம் படைத்தவர்களும் சட்டவிரோத பணப்புழக்கத்தில் ஈடுபடுவதனை காண முடியும். இச்செயல் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அதைரியப்படுத்தும்; அவநம்பிக்கையினை ஏற்படுத்தும். இத்தகைய செயற்பாடுகள் இலங்கையில் வியாபாரம் செய்வதற்கான உகந்த சூழ்நிலையினை ஒருபோதும் உருவாக்க போவதில்லை என்பதனை புரிந்துக்கொள்ள வேண்டும். வியாபாரம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு மிகவும் கடினமான ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் இலஞ்ச கலாச்சராத்தினைக் கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னணியில் உள்ளது என்பதனையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். உலக வங்கியின் 2023 ஆம் ஆண்டுக்கான எளிதாக வணிகம் செய்யக்கூடிய (ease of doing business index) நாடுகளின் தரப்படுத்தலில் 190 நாடுகளில் இலங்கை 99 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலைமையில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருவது வெறும் பகல் கனவாகவே அமையும்.

## தேசியக் கணக்காய்வு சட்டத்தினைத் திருத்துதல்

நான்காவது பரிந்துரை தேசிய கணக்காய்வு சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதாகும். தேசிய கணக்காய்வு சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. தேசிய கணக்காய்வு சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் அரச நிறுவனங்களில் ஊழல், மோசடிகள் பல்கி பெருகுவதற்கு காரணமாக இருக்கின்ற அதேவேளை, அரச நிறுவனங்களில் பொது நிதியை பயன்படுத்துவதில் நேர்மைத்தன்மை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை இல்லாமல் போவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. சில அரச நிறுவனங்களில் கடந்தகாலங்களில் கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டமைக்கு எந்த சான்றுகளும் இல்லை.
ஒப்பந்தங்களை வழங்கும் போது, பெரும் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்கின்றப் போது ஸ்தாபிக்கப்பட்ட நிதி ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப பொது நிதி செலவிடப்படுவதில்லை. இது அரசியல் மற்றும் நிர்வாக ஊழலுக்கு பெரியளவில் வழிவகுக்கின்றது. ஆகவேதான் தேசிய கணக்காய்வு சட்டம் திருத்தப்பட்டு, அதில் புதிய ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டு கணக்காய்வு இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. கணக்காய்வு இறுக்கமாக இடம்பெறுகின்ற பொழுது பொறுப்புகூறலும், வெளிப்படைத்தன்மையும் ஏற்படும். மறுபக்கமாக பிரஜைகளுக்கு அரசாங்க நிறுவனங்கள் மீது நம்பிக்கை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம் இருக்கின்றது. அத்துடன், பொது நிதியினை பயன்படுத்தல் தொடர்பாக சரியான மேற்பார்வையினை செய்யத் தவறும் அதிகாரிகள் மற்றும் பிரதம கணக்காளர்கள் (அமைச்சின் செயலாளர் உட்பட) ஆகியோரிடம் கடமையை செய்யத் தவறியமைக்காக அதிக பணத்தினை வசூலிக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது.

ஐந்தாவது பரிந்துரை வியாபார செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் ஆகும். குறிப்பாக, கம்பனி சட்டத்தின் படி வணிக செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு தமக்கு கிடைக்கும் பயன்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு அவசியமான ஒழுங்குவிதிகளை இறுதி வடிவப்படுத்தி அதனை அமுல்படுத்த வேண்டும். அத்துடன்




**ஊழல் நடைபெறும் நாடுகளின் பட்டியல் - 2022**

Image source - www.transparency.org


உரித்துடைமையின் பயன்களை பொதுவில் காட்சிப்படுத்த 2024 ஏப்ரல் மாதம் ஆகும் போது ஒரு பதிவேட்டினை ஸ்தாபித்தல் வேண்டும்.

## பொது கொள்முதல் தொடர்பாகப் புதிய சட்டம் ஒன்றினை இயற்றுதல்

இலங்கைக்கு மிக மிக முக்கியமானது ஆறாவது பரிந்துரையாகும். இது நீண்டகாலமாக பேசப்பட்டு வரும் விடயமும் கூட. இலங்கையில் பொது நிறுவனங்களில் ஊழல் மோசடிகள் பாரிய அளவில் ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைவது கொள்முதல் தொடர்பான சட்டமொன்று இல்லாமல் இருப்பதாகும் (Procure ment law). இலங்கையில் அரச நிறுவனங்கள் கொள்முதல் செய்கின்றபோது சில வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகள் இருக்கின்றனவே தவிர சட்டமொன்று இன்னும் பாராளுமன்றத்தால் உருவாக்கப்படவில்லை. இந்த சட்டம் உருவாக்கப்படாமைக்கு காரணமும் அது ஊழல் மோசடிகளை தடுக்கும் என்பதாலாகும். ஆகவே பாராளுமன்றத்திலுள்ள பெரும்பாலான அரசியல்வாதிகள் இத்தகைய சட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்தும் விருப்பம் காட்டவில்லை. உலகில் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் தொடர்பான ஆராய்ச்சிகளில் தொடர்ச்சியாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு விடயம் யாதெனில் அரச நிறுவனங்களில் கொள்முதல் அல்லது பெறுகை (procurement) தொடர்பான விடயங்களில் காணப்படும் தவறான செயற்பாடுகளே ஊழல் மோசடிக்கான கதவை திறந்து விடுகின்றது என்பதாகும். 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக கொள்முதல் ஆணைக்குழுவொன்று கொண்டுவரப்பட்டபோதும், அது தொடர்பான சட்டம் ஒன்றினைக் கொண்டு வந்து கொள்முதல் செயன்முறையில் நீண்டகாலமாக காணப்படும் ஊழலை தடுப்பதற்கு எந்த ஒரு அரசாங்கமும் முயற்சிக்கவில்லை என்பது ஊழலை ஒழிப்பதில் இலங்கையின் அரசியல் தலைமைகள் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பின் அளவைக் காட்டுகின்றது.

ஆகவேதான் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆகின்ற பொழுது கொள்முதல் தொடர்பான சட்டத்தினை இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. ஊழலைக் கட்டுப்படுத்த இச்சட்டம் பெரிதும் அவசியமாகும். பொதுக் கொள்முதல் தொடர்பாக பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டும். பாரிய அளவிலான கொள்முதல் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. சீனிக் கொள்முதலாக இருக்கலாம் அல்லது அண்மைக்காலத்தில் சுகாதார அமைச்சு கொள்வனவு செய்த அவசர உபகரணங்கள் மற்றும் தரம் குறைந்த மருந்துப் பொருட்களாக இருக்கலாம்.
இவையனைத்தும் பாரிய

ஊழலுடன் தொடர்புடையவை என்பதனை ஊடகங்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியதனை இலகுவில் மறந்துவிட முடியாது.




## விலைமனு கோரல் செயன்முறையில் போட்டித்தன்மையினை ஊக்குவித்தல்

அரசாங்கம் விலைமனு ஊடாக கொள்முதல் ஒப்பந்தங்களைக் வழங்கும்போது போட்டித்தன்மையினை ஊக்குவிக்க வேண்டும் என்பது ஏழாவது பரிந்துரையாகும். போட்டித்தன்மையின் அடிப்படையில் இவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையினைப் பொதுமக்கள் பார்க்கக்கூடிய ஒரு இணையத்தளத்தில் பிரசுரிக்க வேண்டும் என்கிறது. இதனை 2024 டிசம்பர் மாதம் ஆகும் போது மேற்கொள்ள வேண்டும். காரணம், 2022 ஆம் ஆண்டு சுமார் 10 முக்கியமான அரச நிறுவனங்களில் போட்டித்தன்மை அடிப்படையில் விலை மனு கோரல் மற்றும் ஒப்பந்தங்கள் வழங்கல் இடம்பெறவில்லை. இந்நிறுவனங்கள் அரசியல் மற்றும் தனிப்பட்ட உறவின் அடிப்படையில் ஒப்பந்தங்களை வழங்கியுள்ளன. ஆகவே, பாரிய திட்டங்களுக்காக ஒப்பந்தங்களை கோருகின்ற போது அது போட்டித்தன்மை மிகுந்ததாக இருக்க வேண்டும். போட்டித்தன்மை இல்லாவிட்டால் அங்கு ஊழல் மோசடிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பெருகும். போட்டித்தன்மை திட்டங்களின் தரம், பணத்திற்கான பெறுமதி (*value for money*), வினைத்திறன் மற்றும் சிறந்த கண்காணிப்பு என்பவற்றுக்கு வழிசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எட்டாவது பரிந்துரை ஒரு பில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பொது கொள்முதல் தொடர்பான சகல ஒப்பந்தங்களையும் பொதுமக்களுடைய பாவனைக்காக காட்சிப்படுத்த வேண்டும்.

**அரசாங்கம் விலைமனு ஊடாக கொள்முதல் ஒப்பந்தங்களைக் வழங்கும் போது போட்டித்தன்மையினை ஊக்குவிக்க வேண்டும் என்பது ஏழாவது பரிந்துரையாகும். போட்டித்தன்மையின் அடிப்படையில் இவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையினைப் பொதுமக்கள் பார்க்கக்கூடிய ஒரு இணையத்தளத்தில் பிரசுரிக்க வேண்டும் என்கிறது.**

அது தொடர்பான தகவல்களை (ஒப்பந்தத்தினை பெற்றுக்கொண்டவர்களின் தகவல்கள் உட்பட) ஒரு பொது இணையத்தளத்தில் இற்றைப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. ஏனென்றால் மகிந்த ராஜபக்சக் காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற மாபெரும் அபிவிருத்தித் திட்டங்களையும், அதில் இடம்பெற்ற ஊழல் மோசடியையும், அந்த அபிவிருத்தித் திட்டங்கள் இலங்கை மக்களுக்கு ஏற்படுத்திய கடன் சுமையினையும் நாங்கள் இன்று அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம். அக்காலத்தில் இடம்பெற்ற மெகா அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இலங்கையின் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு எந்தவகையிலும் பங்களிப்பு செய்யவில்லை. மாறாக கடன் சுமையினை மாத்திரமே ஏற்படுத்தியது. அதற்கு மத்தள விமான நிலையம், ஹம்பாந்தோட்டையில் கட்டப்பட்ட மாநாட்டு மண்டபம், சூரியவெவ என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள சர்வதேச விளையாட்டு மைதானம் மற்றும் தாமரைத்தடாகக் கட்டிடம் என்பவற்றினைச் சிறந்த உதாரணங்களாக குறிப்பிடலாம். ஆனால், இந்தத் திட்டங்களை முன்னெடுத்த அரசியல்வாதிகளுக்கு அவை செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள உதவியாக இருந்தன என்பதில் ஐயமில்லை.

### வரி விலக்கு தொடர்பான தகவல்களை பொது மக்களுக்கு வழங்குதல்

மேலும், முதலீட்டு சபை மற்றும் தந்திரோபாய அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக வரி விதிவிலக்கினைப் பெறும் நிறுவனங்கள், வரி விலக்களிப்பட்ட (tax exemption) மொத்த தொகை, மற்றும் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வரி சலுகை வழங்கப்பட்ட நிறுவனங்களின் விபரங்கள் அனைத்தினையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இணையத்தளத்தில் இற்றைப்படுத்த (update) வேண்டும் என இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது. இதன் மூலம் வரி விலக்கு அளிக்கப்படும் நிறுவனங்கள், அதன் பெறுமதி தொடர்பான தகவல்களைப் பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் - அதன் ஊடாக விலைமனு மற்றும் வரி விலக்கு விடயங்களில் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்த முடியும். இன்று அரசியல்வாதிகள் அல்லது அமைச்சர்கள் தமக்கு வேண்டப்பட்ட நிறுவனங்களுக்கு அல்லது நண்பர்களின் நிறுவனங்களுக்கு வரி விலக்கு வழங்கும் நடைமுறையே காணப்படுகின்றது. அதில் எந்த ஒரு வெளிப்படைத்தன்மையும் பின்பற்றப்படுவதில்லை. தேர்தல் காலத்தில் பிரசாரச் செலவுகளுக்கு நிதி வழங்கும் நிறுவனங்களுக்கு அதிக வரி விலக்கினை வழங்குவது ஊழல் மோசடிகள் நிறைந்த தேர்தல் அரசியலின் ஒரு நிரந்தர அம்சமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### அரசுக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை மறுசீரமைத்தல்

அரசாங்கத்திற்கு சொந்தமான பொது நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான கொள்கை ஒன்றை அரசாங்கம் கொண்டு வர வேண்டும் என்பது ஒன்பதாவது பரிந்துரையாகும். அரசுக்கு சொந்தமான பொது நிறுவனங்களில் பாரிய நட்டம், ஊழல் மற்றம் மோசடிகள் மலிந்து காணப்படுகின்றன. அவை மறுசீரமைக்க வேண்டிய தேவை மிகவும் அவசரமாகவே காணப்படுகிறது. அவை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு எந்தவகையிலும் பங்களிப்பு செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. அவை பாரிய சுமையாக மாறியுள்ளது என சிலர் விமர்சிக்கின்றனர். அரசுக்கு சொந்தமாக 527 பொது நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சுமார் 55 நிறுவனங்கள் மாத்திரமே வருடாந்த அறிக்கையினை வெளியிடுகின்றன. இந்நிறுவனங்கள் மாத்திரமே ஓரளவுக்கு வினைத்திறனாக காணப்படுகின்றன. அதில் 10 விகிதமான நிறுவனங்களுக்கு மாத்திரமே நிதி தொடர்பான தகவல்கள் உள்ளன. 2006 - 2017 காலப்பகுதியில் இந்நிறுவனங்கள் சுமார் 795 பில்லியன் நட்டத்தினை ஏற்படுத்தியதாகக் கொழும்பில் அமைந்துள்ள எட்வகாட்ட (Advocata, 2019) நிறுவனம் அரசுக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆகவே அவை தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக இருப்பதனால், அவற்றினை மறுசீரமைத்து வினைத்திறன் மற்றும் விளைத்திறனை அதிகரிக்க வேண்டிய பெரிய தேவை காணப்படுகிறது. இந்நிறுவனங்களுக்கு நியமிக்கப்படும் ஆலோசனைச் சபை மற்றும் உத்தியோகத்தர்கள் திறமை, தகுதி கொண்டவர்களாகவும், ஒழுக்கம் மற்றும் சுயாதீனமாகச் செயற்படகூடிய இயலுமை கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் IMF அறிக்கை குறிப்பிடுகின்றது.

### தந்திரோபாய அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்துதல்

இலங்கை அரசாங்கம் கடந்தகாலங்களில் தொடர்ச்சியாக தந்திரோபாய அபிவிருத்தி செயற்திட்டங்கள் என்ற பெயரில் மேற்கொண்ட பல பாரிய செயற்திட்டங்களை நாம் அவதானித்துள்ளோம். கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட்டம் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். சர்வதேச நாணய நிதியம், இத்தகைய தந்திரோபாய அபிவிருத்தி செயற்திட்டங்கள் (strategic development projects) எதனையும் இனி மேற்கொள்ள முடியாது, அத்தகைய சட்டங்கள் இரத்து செய்யப்பட வேண்டும், அல்லது இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதனையே பத்தாவது பரிந்துரையாக முன்வைத்துள்ளது. ஏனென்றால் அத்தகையத் திட்டங்களில் ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் மாபெரும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றன. அரசியல்வாதிகளும், ஒப்பந்தக்காரர்களும் பெரும் இலாபத்தை ஈட்டுகின்ற, பொது மக்களின் பணத்தினை சூறையாடுகின்ற திட்டங்களாக அவை காணப்பட்டன. இலங்கையில் அப்படியான அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒரு வெளிப்படையான செயன்முறை, அத்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான வினைத்திறன் மிக்க பொறிமுறை என்பன உருவாக்கப்படும் வரைக்கும் அவை கைவிட வேண்டும் என வலியுறுத்துகின்றது.

இது தொடர்பாக அண்மைக்காலங்களில் பாராளுமன்றத்தில் உள்ள பொது நிதி தொடர்பான குழுவிலும் தொடர்ந்தும் பேசப்பட்டு வருகின்றது.

பொது நிதி தொடர்பான குழுக்கூட்டங்களில் கூட இத்திட்டங்களின் ஊடாக அரசாங்கம் சில கம்பனிகளுக்கு தொடர்ச்சியாக வரி விலக்கை வழங்கிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. சில கம்பனிகளுக்கு 17 ஆண்டுகள் வரைக்கும் அரசாங்கம் வரி விலக்கை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடதக்கதாகும். இவை அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் வரி வருமானத்தினை இல்லாது செய்துள்ளது. அந்த வரி விலக்கு ஊடாக யார் நன்மை அடைந்தார்கள் என்றால் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளும் வியாபாரிகளுமே ஆகும். அத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகளே இன்று பொருட்களின் விலை அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என பொதுமக்களுக்கு பாரிய சுமையை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறமாக நாட்டினை வங்குரோத்து நிலைக்கும் தள்ளியுள்ளது. ஆகவே அத்தகைய பாரியத் திட்டங்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியம் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றது.

### வரிச்சட்டத்தினைத் திருத்துதல்

இவ்வறிக்கை வலியுறுத்துகின்ற இன்னுமொரு பரிந்துரை யாதெனில் வரி தொடர்பான சட்டத்தைத் சீர்திருத்த வேண்டும் என்பதாகும். பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் அரசியல்வாதிகள் அல்லது அமைச்சர்கள் வரி அறவிடும் செயன்முறையை இல்லாது செய்ய வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும் என்பது பதினோராவது பரிந்துரையாகும். கடந்த காலங்களில் சில அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் சில பொருட்களுக்கு வரித் தீர்வை வழங்கினார்கள். சீனியில் ஏற்பட்ட மிகப்பெரிய மோசடி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். ஆகவே இவற்றை நிறுத்த வேண்டுமானால் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் மாத்திரமே வரித்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை இவ்வறிக்கை பரிந்துரைக்கின்றது. பொது நிதி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்துக்கு இருப்பதனால் வரி தொடர்பான விடயங்களில் மாற்றங்கள் செய்யும் போதும் பாராளுமன்றத்தின் அனுமதி அவசியம் என்பது இதன் மூலம் வெளிப்படுகின்றது.

### குறுங்கால ஊழல் ஒழிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்

பன்னிரெண்டாவது பரிந்துரை குறுங்கால ஊழல் ஒழிப்பு செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும். ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டங்கள் அரசாங்கத்துக்கு வருமானத்தினைப் பெற்றுத்தரும் சகல திணைக்களங்களிலும் இடம்பெற வேண்டும் - அதன் ஊடாக உள்ளக மேற்பார்வை, குற்றவியல் புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கம் என்பவற்றினை ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். இதற்கான காலக்கெடு 2023 டிசம்பர் மாதம் ஆகும். சுங்கத் திணைக்களம், மதுவரி மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை ஒழிப்பதை நோக்காக கொண்டு இப்பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. 2024 டிசம்பர் மாதம் ஆகும் போது இச்செயற்பாட்டினால் ஏற்பட்ட பெறுபேறுகள் என்ன என்பது தொடர்பாக பொது அறிக்கையொன்றினை நிதி அமைச்சு வெளியிட வேண்டும் எனக்குறிப்பிடுகின்றது.

### ஊழியர் சேமலாப நிதியினைப் பாதுகாத்தல்

பதின்மூன்றாவது பரிந்துரை, மத்திய வங்கியின் முகாமைத்துவத்தில் இருந்து ஊழியர் சேமலாப நிதியை விடுவிப்பதற்கு அவசியமான புதிய முகாமைத்துவ நடைமுறைகளை அடையாளம் காண்பதற்காக, 2024 ஜீன் மாதம் ஆகும்போது, பரந்த கலந்துரையாடலின் பின்னர், அமைச்சரவைப் பத்திரம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என்பதாகும். அதனூடாக முரண்பட்ட நலன்களைத் தவிர்க்க வேண்டும் என்கிறது. இப்பொழுது EPF தொடர்பான முழு அதிகாரத்தையும் மத்திய வங்கியே கொண்டுள்ளது. மத்திய வங்கி பொதுமக்களின் அனுமதி மற்றும் ஆலோசனை இல்லாமல் இந்நிதியை பயன்படுத்துவதை நாம் இன்று அவதானிக்க முடிகின்றது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்ற பெயரில் EPF பணத்தில் தற்போதைய அரசாங்கம் கைவைத்துள்ளது. அதனூடாகத் தொழிலாளர்கள் கடின உழைப்பால் வாழ்நாள் முழுவதும் சேமித்த பணத்திற்கு பெரும் ஆபத்தும் இழப்பும் ஏற்பட்டுள்ளது. ஆகவேதான் EPF நிதியை கையாள்வதற்குப் பிரத்தியேக நிறுவன கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதனை IMF வலியுறுத்துகின்றது. இன்று EPF பணம் தொடர்பான நம்பிக்கை பிரஜைகள் மத்தியில் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. அதனை மத்திய வங்கி தொடர்பிலும் காண முடியும். IMF இன் நிதி உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு EPF நிதியினைப் பாதுகாப்பதற்கு அவசியமான பொறிமுறை ஒன்றினை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

### அரச வங்கிகளின் சுயாதீனத்தன்மையினை உறுதிசெய்தல்

வங்கித் துறையிலே மேற்பார்வையைச் சக்திப்படுத்துவதற்காகச்

சட்டங்களைத் திருத்த வேண்டும், ஒழுங்கு விதிகள் மற்றும் செயன்முறைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பது பதினான்காவது பரிந்துரையாகும். அரச வங்கித் துறையிலே பாரிய ஊழல் மோசடிகள் காணப்படுகின்றன. அரச வங்கித்துறையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களை நியமிப்பதில் பாரிய அரசியல் தலையீடு மற்றும் வெளிப்படைத்தன்மையின்மை காணப்படுகின்றன. அது ஊழலுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர்கள் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றார்கள். அவர்கள் அரசியல்வாதிகளின் விருப்பத்திற்கு ஏற்ப தீர்மானம் எடுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் அரச வங்கிகளின் வீழ்ச்சிக்கும் சீர்குலைவுக்கும் காரணமாக அமைந்துள்ளது. இந்த நிலைமை மாற்றப்பட்டு வங்கிகள் சுயாதீனமாக இயங்குவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்துகின்றது. இன்று அரச வங்கிகளில் பண வைப்பு செய்வதனை மக்கள் தவிர்த்து வருகின்றார்கள். இது அரச வங்கிகள் மீதான மக்களின் அவநம்பிக்கையினைக் காட்டுகின்றது.

## காணிப்பதிவு செயன்முறையினை டிஜிட்டல் மயப்படுத்தல்

பதினைந்தாவது பரிந்துரை மிகவும் முக்கியமானதாகும். இலங்கையில் காணிப்பதிவு செயன்முறையில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். மிக முக்கியமாக, காணி தொடர்பான அளவை வரைபடங்கள் (*survey plan*) ஒரு இடத்திலும், காணி தொடர்பான உரித்துகள் (*title deed*) இன்னுமொரு இடத்திலும் பாதுகாக்கப்படுகின்றன. சிலநேரம் காணி தொடர்பான அளவை வரைபடங்கள் தொலைந்து போவதும் அல்லது உரித்து பத்திரங்கள் தொலைந்து போவதும், அல்லது வேண்டுமென்று காணாமல் ஆக்கப்படுவதும் இலங்கையில் நாம் காணும் பொதுவான பிரச்சினைகள் ஆகும். ஆகவே இந்த நிலைமையைச் சரி செய்வதற்காகக் காணிப்பதிவு செயன்முறையில் வெளிப்படைத்தன்மையினைக் கொண்டு வருவதற்காகக் காணிப்பதிவினை டிஜிட்டல் பதிவு முறையின் ஊடாக மேற்கொள்ள வேண்டும் (*Online digital land registry*) எனவும் அரச காணிகளைப் பதிவு செய்தல் மற்றும் உரித்து வழங்குதல் தொடர்பாக அடையப்பட்ட முன்னேற்றங்களைப் பொது மக்கள் பார்க்கக்கூடிய வகையில் ஒரு பிரத்தியேக இணையதளத்தில் 2024 டிசம்பர் மாதம் ஆகும் போது பதிவிட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது. காணிகளைப் பதிவு செய்வதற்கும், காணி தொடர்பான தகவல்களைப் பொது மக்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகிறது. இது மிகவும் முக்கியமானதாகும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் காணிகளைப் பெற்று வியாபார மற்றும் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிக்க முற்படும் போது காணி உரித்துகளைப் பெற்றுக் கொள்வதில் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். அந்த கடினமான செயன்முறையில் இருந்து விடுபடுவதற்காக முதலீட்டாளர்கள் கோடிக்கணக்கான பணத்தை அரசியல் வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இலஞ்சமாக வழங்கி காணிகளை பதிவு செய்து உரித்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இச்செயன்முறை வெளிநாட்டு முதலீட்டாளர்களை வெறுக்க செய்துவிடுகின்றது. அவர்களின் வர்த்தக ஆர்வத்தை இல்லாமல் செய்து விடுகின்றது. ஆகவே வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்கும், அவர்களுக்குக் காணிகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற பொறிமுறை ஒன்றினை இலங்கையில் உருவாக்கவும் இப்பரிந்துரையினை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஆகவேதான் காணிப்பதிவு செயற்பாடுகளை *Online* மூலமாக டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான ஆலோசனையை சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்றது. காணிப்பதிவு மட்டுமல்ல, ஏனைய அரச சேவைகளையும் டிஜிட்டல் மயப்படுத்துவதன் ஊடாக அரச பொது நிறுவனங்களில் பொதுச் சேவைகளை வழங்குவதில் நீண்டகாலமாக காணப்படும் ஊழல் மோசடிகளைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

## நீதிச்சேவை ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையினைப் உறுதிசெய்தல்

பதினாறாவதாக இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்படுகின்ற வளங்களையும், இருக்கின்ற திறன்களையும் விஸ்தரிப்பதற்கு திட்டம் ஒன்றினை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைக்கின்றது. அதனூடாக இவ்வாணைக்குழு தமது கடமை பொறுப்புகளைச் சுயாதீனமாக மேற்கொள்வதற்கான இயலுமை மற்றும் ஆற்றலை மேம்படுத்த முடியும். அத்துடன் நீதித்துறைக் கட்டமைப்பில் அல்லது செயன்முறையில் மாற்றங்களைக் கொண்டுவரவும், நீதித்துறையினை அபிவிருத்தி செய்யவும், நீதித்துறை

ஏனைய துறைகள் மீது கண்காணிப்பு, மேற்பார்வை என்பவற்றை சுயாதீனமாக மேற்கொள்வதற்கு இவ்வாணைக்குழுவிற்குப் போதிய வளங்களும் தகுதி மற்றும் திறமை கொண்ட ஆளணியினரும் நியமிக்கப்பட வேண்டும் என்கிறது. இது ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஒன்றாகும். இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவின் பலவீனத்தைச் சர்வதேச நாணய நிதியம் அடையாளம் கண்டுள்ளது. அந்த பலவீனம் எவ்வாறு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மற்றும் நிர்வகிப்பதில் தாக்கம் செலுத்துகிறது என்பதை அடையாளம் கண்டுள்ளது. இதன் மூலம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் அரசியல் தலையீட்டினை இவ் அறிக்கை வெளிக்காட்டுகின்றது.

## IMF இன் ஆளுகை சீர்திருத்தங்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளனவா?

1990 களில் முன்னைய சோவியத் யூனியனில் இருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்ட பல நாடுகளில் ஆளுகைச் செயன்முறையில் பாரிய குறைபாடுகள் காணப்பட்டன (ஊழல், வெளிப்படைத்தன்மையின்மை, பொறுப்புகூறலின்மை உள்ளிட்ட). அவற்றில் 15 நாடுகளில் IMF ஆளுகை முறையில் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தது.

அதன் விளைவாக, ஆர்மேனியா, ஜோர்ஜியா, எஸ்டோனியா, லிதுவேனியா, லெத்வியா, சேர்பியா ஆகிய நாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஆளுகைக் கட்டமைப்பில் ஏற்பட்டதுடன், அவை அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிதும் பங்களிப்பு செய்தன என்பதனை பல ஆய்வறிக்கைகள் எடுக்காட்டுகின்றன. இதன் காரணமாக இந்நாடுகள் ஊழல் தரப்படுத்தல், உலக வங்கியின் ஆளுகைக் குறிகாட்டிகள் (Governance indicators) மற்றும் ஜனநாயக தரப்படுத்தல், இலகு வணிகம் செய்தல் குறிகாட்டிகள் என்பவற்றில் கணிசமான முன்னேற்றங்களை அடைந்துள்ளன. ஆயினும், ஏனைய ஒன்பது நாடுகளில் IMF இன் ஆளுகைச் சீர்திருத்தங்கள் எதிர்பார்த்த வெற்றியினைப் பெற்றுத்தரவில்லை என்பதனையும் குறிப்பிட வேண்டும். இதற்கு அரசியல் மற்றும் நிர்வாக விருப்பமின்மை, அர்ப்பணிப்பின்மை, சமூக கருத்தொருமைப்பாட்டினைக் கட்டியெழுப்பாமை மற்றும் அதிகாரத்தினை மையப்படுத்திய ஊழல் மோசடிகள் நிறைந்த தேர்தல் அரசியல் கலாச்சாரம் என்பன பிரதான காரணங்களாக அமைந்தன.

மேலும், IMF 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூன்று ஆபிரிக்க நாடுகளில் தீவிர ஆளுகை மறுசீரமைப்புகளை அறிமுகம் செய்தது. அவை பொஸ்வானா, ருவாண்டா மற்றும் சிசெல்ஸ் ஆகிய நாடுகள் ஆகும். அவை இலங்கைக்கு இம்முறை பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்களுக்கு ஒப்பானவையாகும். அவற்றை இந்நாடுகள் மிக சிறப்பாக நடைமுறைப்படுத்தியதுடன், இன்று இந்நாடுகள் ஆபிரிக்காவில் வியக்கத்தக்க ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியினை கண்டுள்ளன. இதில் ருவாண்டா நீண்டகாலப் போரின் பின்னர் மீண்டெழுந்துள்ளது என்பது குறிப்பிடதக்கதாகும். அத்துடன் பொஸ்வானா வளர்ந்த நாடுகளுக்கு இணையான சாதனைகளைப் பொருளாதார மற்றும் ஆளுகைப் பரப்புகளில் கண்டுள்ளது என்பதனை இங்கு வலியுறுத்துவது பொருத்தமாகும். இதற்கு காரணம் IMF இன் ஆளுகைப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அந்நாடுகளில் அரசியல் விருப்பம், அர்ப்பணிப்பு மற்றும் சமூக கருத்தொருமைப்பாடு காணப்பட்டது - அவை படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டன. அதேவேளை, வேறும் பல ஆபிரிக்க நாடுகளில் IMF பரிந்துரைத்த முன்மொழிவுகள் வெற்றியளிக்கவில்லை -அவை பகுதியளவில் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டன. பல நாடுகளில் பரிந்துரைகளின் தோல்விக்கு எண்ணற்ற காரணங்கள் உண்டு - குறிப்பாக, அவை IMF இன் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான உபாயமாக மாத்திரம் கருதப்பட்டமை, சீர்திருத்த அமுலாக்கத்தில் நீண்டகால தரிசனமொன்று காணப்படாமை, நிலைபேறுத்தன்மை வெளிப்படையாகவே அலட்சியம் செய்யப்பட்டமை, IMF இன் நிதி வசதிகள் முடிவடைந்தப்பின்னர் இப்பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டமை அல்லது அமுல்படுத்துவதில் ஆர்வம் காட்டப்படாமை என்பவற்றுடன், மிக முக்கியமாக இவை சர்வதேச நன்கொடையாளர்களினால் திணிக்கப்பட்ட சீர்திருத்தங்களாக கருதப்பட்டு அந்நிறுவனங்களின் நிதியில் தங்கியிருந்தமையும் (நிதி உதவிகள் முழுமையாக நிறைவடைந்தப்பின்னர் கைவிடப்பட்டன அல்லது அமுலாக்கம் தொடரவில்லை) இதன் தோல்விக்கு பங்களிப்புச் செய்துள்ளன என வாதிட முடியும். கடந்தகால அனுபவங்களைப் பார்க்கும் போது இது இலங்கைக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை

இதுவரை கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது IMF முன்வைத்துள்ள 16 பிரதான பரிந்துரைகளும் இலங்கைக்குப் பெரிதும்

அவசியமாக காணப்படுகின்றன. இந்நாட்டில் புரையோடி போயிருக்கின்ற ஊழல் மோசடிகளை ஒழித்து வெளிப்படைத்தன்மை கொண்ட, பொறுப்புக்கூறுகின்ற, நேர்மைத்திறன் கொண்ட ஆட்சிமுறை கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு இப்பரிந்துரைகள் பெரிதும் அவசியமானவையாகும். ஆகவே இப்பரிந்துரைகளை எதிர்ப்பதில் நியாயமில்லை. கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, தற்போதைய நெருக்கடியான சூழலில் இத்தகையதொரு கசப்பானதொரு மாத்திரையை நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ உட்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. அவை எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை இந்நாட்டிற்கு கொண்டுவர உதவும். அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள காலக்கெடு பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் IMF வழங்கியுள்ள கால வரையறைக்குள் இப்பரிந்துரைகளை நிறைவேற்றுமா என்ற வினா எழுகின்றது. இப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு ராஜபக்சவின் மொட்டுக் கட்சியினர் எந்தளவுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்பது பிறிதொரு விடயமாகும். அதேவேளை, இப்பரிந்துரைகளை அமுல்படுத்துவதனைக் கிடப்பில் போட்டுவிட்டு அரசாங்கம் தொடர்ந்தும் மனித உரிமைகளையும், ஜனநாயக போராட்டத்திற்கான பிரஜைகளின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் நசுக்கும் சட்டங்களைக் கொண்டுவருமாக இருந்தால், அது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் காணப்படும் முக்கிய குறைபாடுகள் என்னவென்றால், இலங்கையில் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பாதுகாக்க மற்றும் சக்திப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக எந்த பரிந்துரையும் முன்வைக்கப்படாமையாகும். முப்பது ஆண்டுகால சிவில் யுத்தம், யுத்தத்திற்குப் பின்னர் எழுச்சிப்பெற்ற இன மேலாதிக்க சர்வாதிகார அரசாங்கம், தொடர்ச்சியான இராணுவமயமாக்கம் மற்றும் அண்மைக்கால இன மற்றும் மத அடிப்படையிலான வன்முறைகள் போன்றன இலங்கையின் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பெரிதும் அச்சுறுத்தலுக்குட்படுத்தியுள்ளன. ஆகவே, இலங்கையில் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் மீட்டெடுக்க வேண்டிய தேவையொன்று காணப்படும் நிலையில், அது தொடர்பாக இவ்வறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும். இவ்வறிக்கை முழுக்க முழுக்க ஆளுகை செயன்முறையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளது. ஆனால் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய இரண்டும் ஆளுகை செயன்முறையுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவை - அவை நல்லாட்சிக்கு பெரிதும் அடிப்படையானவை என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.

பிறிதொரு குறைபாடு யாதெனில், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக மிகவும் பலவீனமாக நிலையில் வாழும் சமூக குழுக்களுக்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும், அவர்களின் சமூகப் பாதுகாப்பினை எவ்வாறு உறுதிசெய்ய வேண்டும் என்பது பற்றியப் பரிந்துரைகள் தெளிவாக சொல்லப்படாமையாகும்.

இன்று எழுபது லட்சம் பேர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகப் பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றார்கள். விவசாயிகள், மலையக மக்கள், நாட்கூலித் தொழிலாளர்கள், முறைசாரா துறைகளில் வேலை செய்வோர், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் பாரிய வாழ்வாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், வாழ்க்கையின் விரக்தி நிலைக்கும் சென்றுள்ளனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மேற்கூறிய தரப்பினரை கவனத்தில் கொள்ள வேண்டும். சமூக பாதுகாப்புத் திட்ட அமுலாக்கத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

அவை ஆளுகைக் கட்டமைப்புடன் தொடர்புடையவை என்பதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். பொதுச் சேவை வழங்களில் காணப்படும் ஊழல், மோசடிகள், அரசியல் தலையீடு மற்றும் அரசியல் சகாய முறை என்பன உரியவர்களுக்கு அரச சேவைகள் கிடைக்காமைக்குக் காரணமாக அமைகிறது. ஆகவே இது தொடர்பாக இவ்வறிக்கையில் பரிந்துரைகள் முன்வைக்கப்படாமை குறிப்பிடத்தக்கதாகும்.

”யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.





நடராஜா செல்வராஜா

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.


6

# யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள்



**எரியூட்டப்பட்ட யாழ். பொது நூலகம்**

Image source - gopalanravindran.wordpress.com

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முகாமையாளர் சபையில் எழுது வினைஞராயிருந்த வே. இளையதம்பி அவர்களின் மகன் வே.இ. பாக்கியநாதன் இளைஞராயிருந்த போதே இந்துக் கல்லூரியில் சிலமாதங்கள் ஆசிரியராகவும் இருந்தவர். இவர் தனது மேற்படிப்புக்காக கல்கத்தா சென்று பொருளியல், வர்த்தகம் முதலிய பாடங்கள் படித்துப் பட்டம் பெற்று மீண்டும் கொழும்பில் வெஸ்லி கல்லூரியில் ஆசிரியரானார். வெஸ்லி கல்லூரியிருந்த காலத்தில் புல்பிறைற்

புலமைப்பரிசில் பெற்று அமெரிக்காவுக்குச் சென்று அங்கே அற்லான்ரா பல்கலைக்கழகத்தில் நூலகத்துறையில் (M.Sc. in Library Science) பட்டப் படிப்பையும் மேற்கொண்டு நாடு திரும்பியிருந்தார். பட்டப்படிப்பின் பின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள புகழ்பெற்ற சந்தியாகோ நூலகத்தின் சிறுவர் பகுதியில் ஒரு வருட காலம் பணிபுரிந்து மேலதிக பயிற்சியும் பட்டமும் பெற்றவர்.

திரு. வே. இ.பாக்கியநாதன் இலங்கைக்கு மீண்டதும், வளர்ந்து வந்த யாழ்ப்பாண நூலகத்துக்கு வாய்ப்பான நூலகராகப் பணிபுரிய நியமிக்கப் பெற்றார். அவர் **28.8.1964** இல் பதவியேற்றதும் ஆரம்பகால நூலகராக **01.02.1947** முதல் பணியாற்றிவந்த கே. நாகரத்தினம், உதவியாளராயிருந்து முழு மனதோடு அவருக்கு ஒத்துழைப்பு நல்கினார். திரு. வே.இ.பாக்கியநாதன் தாம் மேற்கு நாடுகளில் பெற்ற பயிற்சி அநுபவங்களைக் கொண்டு யாழ்ப்பாண நூலகத்தை இலங்கையில் முதற் தரமானதாக உயர்த்துவதற்கு வெகுவாக முயற்சி செய்தார். நவீன நூலக நடைமுறைகளை படிப்படியாக அறிமுகம் செய்தார்.

பாக்கியநாதன் யாழ்ப்பாணப் பொது நூலகத்தை பொறுப்பேற்ற வேளை புதிய கட்டிடத்தின் அடித்தளம் மட்டுமே பூர்த்தியாகியிருந்தது. மாநகர சபை அதிகாரிகளுடனும் ஆணையாளர்களுடனும் அரசியல்வாதிகளுடனும் சுமுகமான தொடர்பை வைத்திருந்தமையால் யாழ்ப்பாண நூலக அபிவிருத்தி தொடர்பாக பல செயற்திட்டங்களை அவரால் காலக்கிரமத்தில் வெற்றிகரமாகச் செய்து முடிக்கக் கூடியதாகவிருந்தது.

**28.8.1964** அன்று யாழ்ப்பாண நூலகத்தின் முழு நேர நூலகராக அவர் இணைந்தது முதல் **31.12.1968** இல் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்து நூலகவியல் விரிவுரையாளராக இணைந்து கொள்ளும் வரையிலான அவரது காலப் பகுதியில் யாழ்ப்பாண நூலகம் பல வரலாற்று நிகழ்வுகளைக் கண்டது. அவற்றுள் மூன்றையாவது இங்கே குறிப்பிட்டாக வேண்டும். யாழ்ப்பாணப் பொது நூலக விரிவாக்கத்திட்டம் பற்றிய அறிக்கையை நகரபிதா எஸ்.சி.மகாதேவா அவர்களுக்குச் சமர்ப்பித்து யாழ்ப்பாண நூலக அபிவிருத்தியை புதிய கண்ணோட்டத்தில் நோக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி பாரிய மாற்றங்களை நூலக நிர்வாகத்தில் ஏற்படுத்த வழி செய்தமை முதன்மையானது.

இரண்டாவது, யாழ்ப்பாணத்தில் நான்காம் குறுக்குத் தெருவில் அதுவரை இயங்கி வந்த அமெரிக்க தகவல் நிலையம் மூடப்பட்டு அங்கிருந்த நூல்கள் தளபாடங்கள் ஆகியவை கண்டியிலிருந்த அமெரிக்க தகவல் நிலையத்துடன் இணைக்கப்படவிருந்த வேளை, தன் அயராத உழைப்பாலும் விஷேட ஆணையாளர் திரு.மாணிக்கவாசகரின் ஒத்துழைப்புடனும் அமெரிக்க தகவல் நிலையத்தின் பெறுமதிமிக்க உசாத்துணை நூல்களின் சேகரிப்பையும், நவீன தளபாடங்களையும் கண்டிக் கிளைக்கு எடுத்துச் செல்லவிடாமல் யாழ்ப்பாணப் பொது நூலகத்துடன் இணைக்க வழி செய்தமை. நூலகர் பாக்கியநாதன் மேற்கொண்ட பகீரதப் பிரயத்தனத்தால் நூல்கள் மாத்திரமன்றி நவீன தளபாடங்கள், படச்சுருள்கள், படங் காட்டும் கருவி, குழாய் விளக்குகள் முதலிய சாதனங்களும் பொதுசன நூலகத்துக்கு இலவசமாக வந்து சேர்ந்தன. அமெரிக்கத் தகவல் நூலகத்தில் பணிபுரிந்த அநுபவம் மிக்க இரு இளைஞர்களின் சேவையும் அமெரிக்க தகவல் நிலைய நூலக ஒருங்கிணைப்போடு யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்திற்கு வந்து சேர்ந்தமை பெரு வாய்ப்பாயிற்று.

மூன்றாவதாகக் குறிப்பிடத்தகுந்தது, தனது சந்தியாகோ சிறுவர் நூலக அனுபவங்களை பிரயோகிக்கும் வகையில் சிறுவர் நூலகப்பிரிவு ஒன்றை யாழ்ப்பாணத்துப் பொது சனநூலகத்தில் உருவாக்க வழி செய்தமையாகும். செனட்டரும் உள்ளூராட்சி அமைச்சருமான திரு.மு. திருச்செல்வம் அவர்கள் பொதுசன நூலகத்தின் சிறுவர் பகுதியைத் திறந்து வைத்தார். பின்னாளில் யுனெஸ்கோ நிபுணரான செல்வி இவான்ஸ் இச்சிறுவர் நூலகத்தைப் பற்றிய தன் கருத்தை அறிக்கையாக்குகையில் இலங்கையிலேயே மிகச் சிறந்த சிறுவர் நூலகமாக அதைக் குறிப்பிட்டிருந்தார்.

நூலகர் திரு.வே.இ. பாக்கியநாதன் நூல்களோடு நூல்களாய் பழைய பனையோலை ஏடுகளையும் தேடிப் பாதுகாத்துப் பயன்படுத்த முயன்றார். பாக்கியநாதன் பனை ஒலை ஏடுகளிற் கொண்ட பசி தீருமளவில் முன்னாள் உள்ளூராட்சி மந்திரியார் உயர்திரு மு. திருச்செல்வம் அவர்கள்

ஒத்துழைப்பு நல்கினார். அவரது உதவியால் சித்த வைத்திய வாகட ஏடுகள் பல யாழ்ப்பாண நூலகத்துக்குக் கிடைத்தன.

வே.இ.பாக்கியநாதன் நூலகராக இருந்த காலகட்டத்தில் வட்டுக்கோட்டை எம்.பியாக இருந்தவரும், கூட்டுறவாளரும், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபருமாகிய திரு. வீரசிங்கம் அவர்கள் தமது மரண சாசனத்தில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்திற்கு பத்தாயிரம் ரூபா சாட்டுதல் செய்திருந்தமையால் நூலகத்துக்கு ரூபா பத்தாயிரம் நிதி கிடைத்தது. அவரை கௌரவித்து நினைவு கூரும் முகமாக அன்னாரின் உருவப்படம் நூலகத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராக அந்நாளில் சேவையாற்றிய திரு.பேராயிரவர் தலைமையில் படத்திறப்பு விழா நூலகத்தில் இடம்பெற்றது.

இராமநாதன் கனிஷ்ட பல்கலைக்கழகம் பலாலியில் திறக்கப்பட்ட போது **31.12.1968** இல் நூலகர் பாக்கியநாதன் அங்கு விரிவுரையாளராகக் கடமையேற்றுச் சென்றுவிட்ட நிலையில் நூலக உதவியாளராகவிருந்த திரு க.நாகரட்ணம் அவர்கள் மீண்டும் **01.01.1969** முதல் **31.12.1970** வரை பதில் நூலகராகப் பணியாற்றினார். அவரது காலகட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நூல் அன்பளிப்புக்களில் குறிப்பிடத்தக்கவை கோப்பாய் கோமான் திரு.வன்னியசிங்கம் அவர்களுடையதும் தொழிற்சங்கவாதி திரு. நித்தியானந்தம் அவர்களுடையதுமாகும். நூல்களுடன் அலுமாரிகளும் பொது நூலகத்திற்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

திரு. க. நாகரட்ணம் அவர்கள் **31.12.1970** அன்று ஓய்வுபெற்றதன் பின்னர் பட்டதாரியான செல்வி. செல்வலட்சுமி நவரத்தினம் என்பவர் **01.01.1971** இல் நூலகப் பொறுப்பாளராகப் பதவியேற்றார். நூலகர் செல்வலட்சுமி அவர்களுக்குத் திருமணமானதும் சிலகாலங்களின் பின்னர் பதவியிலிருந்து விலகிக்கொண்டதும், திரு அருளானந்தம் அவர்கள் தற்காலிக நூலகராக பணியாற்றிவந்தார். அவ் வேளையில் கலைப் பட்டதாரியான (B.A) திரு.எஸ்.எஸ்.சபாரத்தினம் அவர்கள் யாழ். பொதுசன நூலகத்தின் நூலகரானார்.

அவ்வேளையில் யாழ்ப்பாண மாநகர முதல்வராக பணியாற்றி வந்தவர் திரு.அல்பிரட் துரையப்பா அவர்கள். இவரது பதவிக்காலம் மூன்று தடவைகள் நிகழ்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. **11.8.1958** முதல் **27.06.1960** வரை முதலாம் கட்டத்திலும், **31.03.1966** முதல் **28.05.1966** வரையிலும் இரண்டாம் கட்டத்திலும், **22.04.1971** முதல் **27.07.1975** அன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்படும்வரை மூன்றாவது கட்டத்திலும் இவர் யாழ்ப்பாண நகரபிதாவாக சேவையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் தொடர்ச்சியாக நூலகர்கள் சிறிதுகால இடைவெளியில் விலகிச்செல்வதால் நூலகக் கட்டிட வேலை உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வது சிரமமாக இருந்த காரணத்தினால், மேயர் அல்பிரட் துரையப்பாவின் ஆலோசனையின் பேரில் மாநகரசபையின் அங்கீகாரத்துடன் 'நூலக ஆலோசகர்' என்ற பதவியொன்று புதிதாக உருவாக்கப்பட்டது.

திருநெல்வேலி, பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராகவிருந்து அண்மைக் காலத்தில் இளைப்பாறியிருந்த திரு. சி.சிவபாதசுந்தரம் அவர்களை நூலக ஆலோசகர் பதவியில் அமர்த்தியிருந்தார். அவ்வேளை உதவி நூலகராகவிருந்த எஸ்.எஸ்.சபாரட்ணம் அவர்கள் திரு. சி.சிவபாதசுந்தரம் அவர்களின் மேற்பார்வையில் நூலகப் பணியை ஆற்றிவந்தார். யாழ்ப்பாண மாநகரசபையின் நூலகராகப் பணியாற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகுதி, தரம் ஒன்றில் (Grade I) உள்ள நூலக சேவையாளருக்கே உரித்தானது. இது தரம் **3** இல் தம் பணியைத் தொடங்கும் உள்ளூராட்சி நூலகர்களிடையே உயர்ந்தவொரு தரம். அந்தத் தகுதியில் ஒரு நூலகரைத் தேடிக்கொண்டிருந்த வேளையிலேயே, அத்தரத்தினை எட்டாத குறைந்த தரத்தில் பணியாற்றியவர்களை வைத்து நூலகசேவைகளை தமக்கெட்டிய வகையில் மாநகரசபையினர் வழங்கி வந்தார்கள்.

இவ்வேளையில் திரு. சபாரத்தினம் அவர்கள் தொழில்நுட்பக் கல்லூரி நூலகராகப் பதவியேற்றுச் சென்றுவிட்டார். இந்நிலையிலேயே உள்ளூராட்சி சேவைகள் திணைக்களத்தினரால் யாழ் மாநகர பொது நூலகத்தின் பிரதம நூலகருக்கான பதவி வெற்றிடம் அரச வர்த்தமானியில் **1973** இல் விளம்பரம் செய்யப்பட்டது.




ரூபவதி நடராஜா

Image source - www.thinappuyalnews.com

திருமதி.ரூபவதி நடராஜா அவர்கள் இந்தப் பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் தேர்வுசெய்யப்பட்டு, 10.01.1974 இல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் தரம் 1 நூலகராகக் கடமையேற்றார்.

### திருமதி.ரூபவதி நடராஜாவின் காலம்

தனது ஆரம்பக் கல்வியை நாவலப்பிட்டி சென். அன்ட்ரூஸ் கல்லூரியிலும் 1958 இலிருந்து 1963 வரை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் சேர்ந்து, தனது உயர்கல்வியையும் பெற்றுக்கொண்டார். அங்கிருந்து பட்டப்படிப்பைத் தொடர, பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய இவர், 1963 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் கலைப்பீடத்தில் இணைந்து கலைமாணிப் பட்டத்தினை 1966 இல் பெற்றுக்கொண்டார்.

நூலகராகப் பணியேற்ற திருமதி ரூபவதி நடராஜாவும் நூலக ஆலோசகர் திரு. சி. சிவபாதசுந்தரம் அவர்களின் மேற்பார்வையின் கீழேயே பணியாற்ற வேண்டியிருந்தது. குழப்பகரமானதொரு நிர்வாகக் கட்டமைப்பில் திருமதி நடராஜாவினால் திருப்தியுடன் சுதந்திரமாக அங்கு பணியாற்றுவது கடினமாக இருந்தது. இதன் காரணமாக, குறுகிய கால யாழ்ப்பாணப் பொது நூலக சேவையின் பின் 1975 இல் கொழும்புப் பொது நூலகத்திற்கு தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். அங்கு தமிழ்ப் பகுதிக்கான உதவி நூலகராகப் பதவியேற்றார்.

இவ்வாண்டில் (20.12.1975) தான் யாழ்ப்பாணப் பொதுசன நூலக முன்வளவில், பிதா T.M.F. லோங் அடிகளாருக்கு சிலையொன்றும் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நகரசபை நூலகக் கட்டிடமொன்றை நிறுவத் தீர்மானித்த 1950 களில், ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்செய்து யாழ்ப்பாணத்தில் பொது நூலக கட்டிடத்திற்காக ஆரம்பகாலத்தில் நிதி சேகரித்து உதவியதுடன் நூலகத்தின் உருவாக்கத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் இவராவார். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் திரட்டிய நிதியைக்கொண்டு உருவாக்கப்பட்ட இச்சிலையை டாக்டர் ஜே. பீ.சீ. பிலிப் ஜே.பீ அவர்களின் தலைமையில், அன்றைய யாழ்ப்பாண அரசாங்க அதிபரான திரு. அன்ரன் அல்பிரட் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

1977 இல் இலங்கையின் தென்பகுதியில் மீண்டும் சிங்களவர்களின் தமிழ் இனவழிப்பு என்ற தீ மூண்டபொழுது, குடும்பத்தினருடன் யாழ்ப்பாணத்துக்கு திரும்பவேண்டிய சூழ்நிலை திருமதி ரூபவதிக்கு ஏற்பட்டது. அவரை யாழ்ப்பாணப் பொது நூலகமே மீண்டும் அரவணைக்கத் தயாராக இருந்தது. இப்பொழுது திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் நூலக ஆலோசகர் பதவியிலிருந்து இளைப்பாறிவிட்டிருந்தார். விஷேட ஆணையாளராக சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள்; 12.08.1975 முதல் பணியாற்றத் தொடங்கியிருந்தனர். மேயர் அல்பிரட் துரையப்பாவின் மரணத்தின் பின்னர் மேயர் பதவி வெற்றிடமாகவேயிருந்தது. (பின்னாளில் திரு. இராசா விஸ்வநாதன் மேயர் பதவியில் 01.06.1979 இல் அமர்த்தப்பட்டார். இவரது பணிக்காலம் 31.05.1983 வரை தொடர்ந்தது.)

திருமதி.நடராஜா அவர்கள் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் மீண்டும் பணியை ஏற்றிருந்த வேளையில் அனுபவ முதிர்ச்சிபெற்ற ஒரு நூலகராக அவர் மாறியிருந்தார். கொழும்புப் பொது நூலகத்தில் ஈஸ்வரி கொறயாவின் வழிகாட்டல்களினால் பெற்றிருந்த நூலக அனுபவங்களும், மேலதிகமாகச்

சேர்த்துக்கொண்ட நூலகவியல் துறைசார் கல்வி அறிவும் அவருக்குக் கைகொடுத்தன. வியத்தகு ஆளுமையுடன் அந்த நூலகத்தின் நூலக ஆளணியைக் கட்டுக்கோப்புக்குள் கொண்டுவந்து சிறந்ததொரு வளர்ச்சிப் பாதையில் நூலகத்தைப் பயணிக்கவைத்தார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக யாழ்ப்பாண நூலகம் வளர்ச்சிபெற்றது.

இந்நிலையிலேயே யாழ்ப்பாண நூலகம் 1981 இன் மே மாதம் 31 ஆம் திகதி பின்னிரவில் அரச கூலிப்படையினரால் தீவைக்கப்பட்டது. 97 ஆயிரம் புத்தகங்களும் தளபாடங்களும் ஒரு சில மணிநேரத்தில் எரிந்து சாம்பலாகக் கூடுமா என்ன? மே 31 பின்னிரவில் தொடங்கி, ஜுன் மாதம் 1 ஆம் திகதியும் சுற்றாடலில் பிரகடனப்படுத்தப்படாத ஊரடங்கை துப்பாக்கி முனையில் பிறப்பித்துவிட்டு, மாநகரசபையின் தீயணைப்புப் படையினரையும் நுழையவிடாது ஒட்டுமொத்த நூலகத்தையும் எரித்துச் சாம்பலாக்கிய பின்னர், அந்தச் செய்தியே குடாநாட்டைவிட்டு உடனடியாகப் பரவாதவாறு மறுநாள் ஜுன் 1 ஆம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கிவந்த ஒரேயொரு பத்திரிகை நிறுவனமான 'ஈழநாடு' அலுவலக அச்சியந்திரங்களையும் தீமூட்டி எரித்துவிட்டே அந்தக் கயவர்கள் அங்கிருந்து விலகிச்சென்றார்கள்.

நூலகம் எரிகின்றபோது, அதன் தீச்சுவாலையை தனது சென்.பற்றிக்ஸ் குடியிருப்பின் ஜன்னல் வழியாக அவதானித்த சென் பற்றிக் கல்லூரி ஆசிரியரும், பன்மொழிப் புலவரும், யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் நீண்டகால பயனாளியுமான சங். பிதா கலாநிதி தாவீது அடிகள் அவர்கள் மன உளைச்சலுடன் (தும்பளை தாவீது அடிகளார் எனவும், Rev. Dr. H.S. David எனவும் அறியப்பட்டவர்) 31.05.1981 இரவு தனது தனியறையில் படுக்கைக்குப் போனவர், மறுநாள் உயிருடன் எழுந்திருக்கவேயில்லை. இவர் மரணித்த நாட்களில் நிலவிய ஊரடங்குச் சட்டம், பொலிஸ் அராஜக நிலைமை ஆகியவற்றால் அவரது இறந்த தினம் பற்றிய சர்ச்சை இன்றும் தீர்வுபெறாமல் உள்ளது. இதற்குக் காரணம், இவரது மரண அத்தாட்சிப் பத்திரத்தில் இவரது மரணம் 02.06.1981 என்று தவறுதலாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது. இத்திகதியே இவரது சேமக்காலைக் கல்வெட்டிலும் பதியப்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மதகுருக்களை நல்லடக்கம் செய்யும் அந்த சேமக்காலையில் உள்ள மூவரது கல்வெட்டில் முதலாவதாகப் பொறிக்கப்பட்டுள்ள தனிநாயகம் அடிகளின் மரணத் திகதி 01.19.1980 (மரணித்த தினம்: 01.09.1980) என்று கவனயீனமாகப் பொறிக்கப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவரது தும்பளை இல்லத்தில் வாழும் நெருங்கிய உறவினரான மோஸஸ் என்ற ஆசிரியரின் கருத்துப்படி சங். பிதா கலாநிதி தாவீது அடிகளின் உயிரற்ற உடலத்தை 01.06.1981 காலை அவரை எழுப்பச் சென்ற சென். பற்றிக்ஸ் விடுதி ஊழியரே கண்டறிந்தார் எனவும், 2 ஆம் திகதி மிகுந்த சிரமங்களுக்கிடையே தான் அவரது இறுதிக் கிரியைகளை அவசர அவசரமாக நடத்தியதாகவும் என்னிடம் குறிப்பிட்டார். மேலும் தாவீது அடிகளாரின் மருமகனான லோரன்ஸ் எம்.பிலிப்னேரி (Lawrence M.Philip Neri) அவர்கள் கல்லூரி ஆண்டு மலரில் Father and Son என்ற தலைப்பிலான தனது குறிப்பின் இறுதியில் "He continued his research until he passed away suddenly on the night of 31st May 1981, the same night the Jaffna Library was burned down" எனத் தெளிவாக எழுதியுள்ளார். தாவீது அடிகளாரின் மரணத்தின் போது வாழ்ந்தவர்கள் முதுமை காரணமாக மறைந்து போகும் முன்னர் அவரது மறைவின் சரியான திகதி உரியவர்களால் மீளாய்வுசெய்து திருத்தப்படவேண்டும்.

யாழ் நூலக எரிப்பின் பின்னர் மன உளைச்சலுக்குள்ளான அனைவரையும் தேற்றி எடுத்து, தாய்மையின் அரவணைப்புடன் அவர்கள் அனைவரையும் ஒருமுகப்படுத்தி மீண்டும் நூலகப் பயணத்தைத் தொடர்ந்தார் திருமதி ரூபவதி நடராசா அவர்கள். அக்கால கட்டத்தில் நூலக ஊழியர்கள் 23 பேர் வரையில் பொது நூலகத்தில் பணியாற்றியிருந்தனர். அவர்கள் அனைவரினதும் அயராத உழைப்பின் பயனாக, பீனிக்ஸ் பறவையென நூலகம் சாம்பல் மேட்டிலிருந்து புத்துயிர் பெற்றெழுந்தது.

இந்த நூலகத் தகனம் பின்னாளில் முழு நாட்டையுமே அடுத்த 30 ஆண்டுகள் தமிழ் இளைஞர்களின் எழுச்சிமிக்க இன விடுதலைப் போராட்டம் என்ற தீச்சுவாலைக்குள் தள்ளியிருந்தது. யாழ்ப்பாண நூலக எரிப்பு பற்றிய விரிவான தகவல்கள் நூலியலாளர் என். செல்வராஜா எழுதி 2023 இல் வெளியிட்ட யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு, Rising from the Ashes ஆகிய இரு

நூல்களிலும் விரிவாகக் காணப்படுகின்றது.


நூலக எரிப்பின் பின்பு சில காலத்தில் சுதாரித்துக்கொண்ட எம்மவர்கள் நூலக சேவையை படிப்படியாகக் கட்டமைக்கலானார்கள். சிறிது காலம் மாநகரசபையின் கட்டிடத்தின் ஒரு சிறு பகுதியில் பத்திரிகை வாசிப்புப் பகுதி மட்டும் இயங்கியது.

எரிந்துபோன யாழ். நூலகத்தை மீளக் கட்டியெழுப்புதல் வேண்டும் என்கிற ஒரே எண்ணம் யாழ்ப்பாண மக்களையெல்லாம் ஒன்றுபடுத்தியது. அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் அரச உதவியாக வழங்கிய இருபது லட்சம் ரூபா நிதியுதவிப் பணத்துடன் (யாழ். அரசாங்க அதிபர் பரிந்துரைத்த ஒரு கோடி ரூபா நஷ்ட ஈடு என்றுமே வழங்கப்படவில்லை.) இந்நூலகத்தின் புனர் நிர்மாணப் பணி ஆரம்பிக்கப் பெற்றது. பொது நூலகத்திற்கென கட்டிடக் கலைஞர் நரசிம்மன் தயாரித்துத் தந்த மாதிரிப்படத்தின் படி, ஒரு சிறு பகுதியே நூலகம் எரியுண்ட வேளை கட்டிமுடிக்கப்பட்டிருந்தது. 1984 இல் மீள் புனரமைக்கப்பட்ட வேளையில் அதே மாதிரிக் கட்டிட வரைபடத்தின் படி, மேலதிகமாக ஒரு பகுதியையும் சேர்த்து எரிக்கப்பட்ட நூலகத்திலேயே மீள்கட்டுமானப்பணி ஆரம்பிக்கப் பெற்றது.

இப்பணிக்காக பொறியியலாளர் திரு ந. நடேசன் அவர்கள் முழுநேரப் பணியாளராக நியமிக்கப்பெற்று அதற்கான வேலைகளும் துரித கதியில் செயற்படுத்தப் பெற்றது. புனரமைக்கப் பெற்ற நூலகம் மீண்டும் பொது சன உபயோகத்துக்காக 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் நாள் அ.அமிர்தலிங்கத்தினால் திறந்து வைக்கப்பெற்றது.

மீண்டும் இன விடுதலைப் போர்க்காலத்தின்போது, யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த இராணுவத்தினரின் ஷெல் வீச்சுக்கு இலக்காகி யாழ். மாநகரசபையும் நூலகமும் சேதம் அடைந்து அழிந்து போனதால் நல்லூரில் உள்ள யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான கல்யாண மண்டபத்தில் (இதுவே பின்னர் இந்து விடுதியாக மாறியது) யாழ். பொதுசன நூலகமும் குடியேறியது.

சில காலத்தின் பின்னர் யாழ். நகரில் தொடர்ந்து இடம்பெற்ற போர்க்கால நெருக்கடிகளின் காரணமாக நூலகர் திருமதி. ரூபவதி நடராஜாவும் யாழ்.மாநகரசபை மேலதிகாரிகளும் கூடி ஆராய்ந்த பின் கிளை நூலகங்கள் திறக்கப்பட்டன. அங்கு பிரதான நூலகத்தின் நூல்சேர்க்கைகள் பகிர்ந்து வழங்கப்பட்டன. போதிய முன்னெச்சரிக்கையற்ற




என்.செல்வராஜா எழுதிய நூல்

Image source - globaltamilnews.net

இந்தத் தீர்மானம் பொதுநூலகத்தின் கணிசமான நூற்றொகையை இல்லாமல் செய்துவிட்டமை சோக வரலாறாகும்.

1977 முதல் 1987 ஆம் ஆண்டு இறுதி வரையிலான இலங்கையின் வரலாற்று முக்கியத்துவமான பத்தாண்டு காலத்திற்கு திருமதி ரூபவதி நடராஜா அவர்களின் சேவை யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்குக் கிட்டியிருந்தது. உள்ளூராட்சி சேவை நூலகர்களின் அதி உயர் தரமான சுப்ரா கிரேட் (Supra grade) நூலகராக இவர் 1987 இல் தரமுயர்த்தப்பட்டார். யாழ்ப்பாணப் பொது நூலக வரலாற்றில் அதுவரை காலமும் இந்த உயர்தரத்தை எட்டிய முதலாமவர் இவரே என்று கருதுகின்றேன்.

யாழ். பொதுசன நூலகர் திருமதி நடராஜா அவர்கள் 1987 இல் ஓய்வு பெற்றதினால் பதில் நூலகராக திருமதி மங்கையர்க்கரசி நித்தியானந்தன் நியமிக்கப்பட்டார். அவர் 1988 இல் மாற்றலாகிச் சென்றதனால் செல்வி.சுலோசனா இரகுநாதன், திரு. கே.இ.பாக்கியநாதன் ஆகியோர் 1988-1989 காலகட்டத்தில் பதில் நூலகராக நியமனம் பெற்றார்கள். இறுதியில் செல்வி.சுலோசனா ரகுநாதன் நூலகர் பதவியை குறுகிய காலத்திற்கு (01.04.1990 - 30.09.1990) பொறுப்பேற்றிருந்தார். இக்காலகட்டம் நூலகத்தின் தொடர் இடப்பெயர்வுகளுக்கான காலமாக அமைந்தது. ஷெல் வீச்சிலிருந்து பாதுகாப்புக் கருதி பல்வேறு இடங்களுக்கும் நூலகம் நகரவேண்டியிருந்தது.

## வி.எஸ்.தனபாலசிங்கத்தின் காலம்

அதன் பின்னர் திருகோணமலை நகரசபை நூலகத்தின் பிரதம நூலகராக இருந்த திரு. சபாரத்தினம் தனபாலசிங்கம் அவர்கள் யாழ்.

பொதுசன நூலக பிரதம நூலகராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அன்று தொடக்கம் இன்று வரை இக்கட்டான காலகட்டங்களில் இவரே நூலகக் கடமைகளை ஆற்றிவருகிறார். எத்தனையோ இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் நூலகத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் கடுமையாக உழைத்துக்கொண்டு மிகவும் துணிச்சலான நூலகராக சக ஊழியர்களுடன் நிர்வாகத்தை நடத்திச் செல்கின்றார்.



வி.எஸ்.தனபாலசிங்கம்

இவர் யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இப்பிரதேசத்தில் பரம்பரையாக வாழ்ந்த குடும்பங்களில் ஒன்றான வேலுப்பிள்ளை சபாரத்தினத்தினம் - பூமணி (பாக்கியம்) தம்பதியினருக்கு 16.7.1949 அன்று பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும், பரியோவான் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டவர்.

யாழ் பல்தொழில் நுட்பக் கல்லூரியில் ஆங்கில மொழி மூல சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சியைப் பெற்ற இவர், யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவு முகாமைத்துவப் பயிற்சியையும் பெற்றிருந்தார். ஆரம்பத்தில் நல்லூர் விவசாய உற்பத்தி நிலையத்தில் தற்காலிக இலிகிதராக பணியாற்றிய இவர், இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியலும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறியில் 1972 ஆம் ஆண்டில் இணைந்து அக்கற்கை நெறியின் முதலாம் பகுதியில் சித்தியடைந்தார். அதன் பயனாக இலங்கை உள்ளூராட்சி நூலகர் சேவைக்கு 01.01.1978 ஆம் திகதி நியமனம் பெற்று திருகோணமலை மாவட்ட, நிலாவெளி கிராம சபை பொது நூலகத்தில் நூலகராகப் பதவியேற்றார். அக்கற்கை நெறியைத் தொடர்ந்து பயின்று இலங்கை நூலகச் சங்கத்தின் டிப்ளோமா பரீட்சையை முடித்தார்.

இவரது நூலகச் செயற்பாட்டின் பயனாக 1978 ஆம் வருடம் நிலாவெளி கிராம சபை பொது நூலகம் திருக்கோணமலை மாவட்டத்தின் மாதிரி (Model) நூலகமாகவும் தெரிவுசெய்யப்பட்டதுடன், நூலகர் தனபாலசிங்கம், பிராந்தியத்தின் சிறந்த நூலகராகவும் திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் தெரிவு செய்யப்பட்டார்.

இவரது முயற்சியையும் சேவைத் திறமையையும் அவதானித்த திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. B.A.J. காசிநாதர், இவரை 01.07.1979 முதல் திருகோணமலை நகர சபைப் பொது நூலகராக இடமாற்றம் செய்திருந்தார். 1948 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திருகோணமலை பொது நூலகம் காலனித்துவகால ஆவணங்கள், நூல்களின் இருப்பிடமாகப் பெயர் பெற்றிருந்தது. மிகவும் பழமை வாய்ந்த திருகோணமலைப் பொது நூலகத்திற்கு, நீண்ட காலத்திற்கு முன்னரே ஒரு புதிய கட்டிடம் நிர்மாணிக்க ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. நூலகர் தனபாலசிங்கத்தின் பதவியேற்புடன், கட்டிடம் 1981 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. புதிய கட்டிடத்தில் நவீன முறையில் நூலகத்தை ஒழுங்குபடுத்தி திருகோணமலை மாவட்டத்தில் சிறந்த நூலகமாகத் தொழிற்பட வழிவகுத்த பெருமையும் தனபாலசிங்கத்துக்குரியது.

இந்நிலையில் இந்திய இராணுவம் இலங்கையில் கால்பதித்து, வடக்கு - கிழக்கை சமாதானப் படை என்ற பெயரில் ஆக்கிரமித்திருந்த வேளை, அவ்வாண்டு இறுதியில் திருமதி ரூபவதி நடராஜா யாழ்ப்பாணப் பொது நூலகத்திலிருந்து பணிஓய்வு பெற்று வெளியேறியிருந்தார். அவரது இடத்தினை தற்காலிகமாக 1988 ஜனவரி முதல், செல்வி சுலோசனா ரகுநாதன் அவர்கள் பொறுப்பேற்றிருந்தார். அவருக்கு உதவியாக, கலாநிதி வே.இ.பாக்கியநாதன் அவர்கள் நூலக ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்தார். திருகோணமலையில் நீண்டகாலம் பணியாற்றியிருந்த திரு. வி.எஸ்.தனபாலசிங்கம் அவர்கள், 1990 ஜனவரி மாதம் தொடக்கம் யாழ் மாநகர சபைப் பொது நூலகத்திற்கு இடமாற்றம் பெற்றிருந்தார்.

(தொடரும்.)

'காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' என்ற இந்தக் கட்டுரைத் தொடரானது இலங்கையின் வடக்குக் கடற்பகுதி மீன்பிடி சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரிமாணம் பற்றி ஆராய்கின்றது. இந்து சமுத்திரப் பிராந்திய கடல் அரசியலை விமர்சனப் பார்வையுடன் ஆராய்கின்ற இந்தத் தொடரானது, இலங்கையின் கடல் வளம் எவ்வாறு சர்வதேச சக்திகளால் கூறுபோடப்பட்டு சுரண்டப்படுகின்றது என்பதையும் அதன் பின்னணியிலுள்ள உள்ளூர் சக்திகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. மேலும், இலங்கைத் தமிழ் கடல்சார் மக்களின் கடல் தொடர்பான இறைமை, அதில் அவர்கள் சுதந்திரமாக மீன்பிடித்து தமது வாழ்வாதாரத்தை தேடும் உருத்து என்பவை தொடர்பிலும் இந்தக் கட்டுரைத் தொடர் பேசவுள்ளது.




மரியநாயகம் நியூட்டன்

சமூக ஆய்வாளர் மரியநாயகம் நியூட்டன் அவர்கள் 14 வயதில் ஈழத்திலிருந்து நோர்வே நாட்டுக்கு புலம்பெயர்ந்தவர். The Arctic University of Norway and NORD University Bod, Norway பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த இவர் இன்று வரை இலங்கையின் அரசியல், சமூக விடயங்கள் சார்ந்து பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். நோர்வே மாநில மற்றும் நகராட்சி நிர்வாகங்களில் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அரசியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்.


# என்ன செய்ய வேண்டும்?


வடமாகாண கடற்பிரதேசம் வடமேற்கு மாகாண கடல் எல்லையிலிருந்து கிழக்கு மாகாண எல்லை வரை பரந்துள்ளது. இலங்கையின் எந்த மாகாணத்துக்கும் இல்லாத வகையில் பலதரப்பட்ட தொழில்களைச் செய்வதற்கான வளங்களை கொண்டது வடமாகாணத்தின் கடற்பிரதேசம். பின்வருவன இன்றுள்ள வடமாகாணக் கடலில் வருவாய் தரக்கூடிய தொழிலாக இருப்பவை:

**1. ஆழ்கடல் மீன்பிடி**
**2. கரையோர மீன்பிடி**

## ஆழ்கடல் மீன்பிடி

போர் முடிவுற்ற காலத்தின் பின்பு ஆழ்கடல் மீன்பிடியை அபிவிருத்தி செய்ய அரசினால் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. தனியார்களின் மூலதனத்தை பயன்படுத்தி செய்யப்பட்டது வெறும் திருத்தல் வேலைகள் மட்டுமே. நவீன மீன்பிடிக்குக்தக்கது போல தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. உதாரணமாக, வடக்கு மீனவர்கள் தற்போது பாவிக்கும் விசைப்படகுகள் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்து இரண்டுசிலிண்டர் படகுகளாகும். இந்தப் படகுகளை வைத்துக்கொண்டு எவ்வாறு உலக





அளவில் பாரிய மீன்பிடித் தளங்களில் ஒன்றான, இலங்கை மக்களுக்கே சொந்தமான, பேதுரு கண்டமேடையில் (Pedro Fishing Banks) தொழில் செய்வது? இலங்கைக்கு உரித்தான கடல் எல்லைக்குள் காணப்படும் பேதுரு கண்டமேடைகள் தற்போது இந்தியர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. 1970-1985 வரையான காலத்தில், பேதுரு கண்டமேடை கடற்படுகைகள் இலங்கைத் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததே மாபெரும் அளவிலான மீன்களை வடக்கு மீனவர்கள் பிடிப்பதற்கு மிக முக்கிய காரணமாய் அமைந்தது.

தற்போது, இக் கடற்பிரதேசத்தில் இந்தியர்கள் செய்யும் கடற்கொள்ளையை நிறுத்துவது கடினமான விடயமாக மாறியிருக்கிறது. இதனை நிறுத்த, இலங்கை அரசும் அரசியல்வாதிகளும் பெரிய அளவில் முயற்சிகளை எடுக்கவில்லை என்பதை ஏற்கனவே பார்த்தோம். இந்தியாவின் ஏகாதிபத்திய போக்கு, அதன் பொருளாதார பலம், தொழில்நுட்ப அபிவிருத்தி என்பன இலங்கை தனது உரிமைகளை வடகடலில் நிலைநாட்ட முடியாமல் உள்ளமைக்கு காரணங்களாகின்றன. இலங்கை ஆழ்கடல் மீன்பிடிப் படையை (Deep Sea Fishing Fleet) கட்டியெழுப்புவதன் மூலம் மீண்டும் பேதுரு கண்டமேடை மீதான உரிமையையும், ஆதிக்கத்தையும் நிலைநாட்டக் கூடியவாறிருக்கும். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் இலங்கை தனது மிகச்சிறு பொருளாதார பலத்தைக்கொண்டு இதைச் செய்தது.

அதே போலவே, சர்வதேச அளவிலான ஒரு உதாரணத்தையும் கூற முடியும். சோவியத் யூனியன் இருந்த காலத்தில் அது நோர்வேயின் வடகடல் உரிமைகளை மதித்தது கிடையாது. அன்றிருந்த காலத்தில் உலகத்தின் பெரிய ஆழ்கடல் மீன்பிடி படையை (Deep Sea Fishing Fleet) சோவியத் யூனியன் வைத்திருந்தது. அத்துடன் பாரிய கடற்படையையும் நோர்வேயின் வடகடல் எல்லையில் நிறுத்தி வைத்திருந்தது. தனது பாரிய ஆழ்கடல் மீன்பிடி படையின் உதவியுடன் நோர்வேயின் வடகடலில் வளக்கொள்ளையை நிகழ்த்தியது. கடல் வளங்களை பங்கு போட்டு கொள்வதற்கான எந்தவித ஒப்பந்தங்களையும் செய்துகொள்ள சோவியத் மறுத்து வந்தது. இந்த நிலையில் 1970 இற்கு பின் வந்த காலத்தில் பொருளாதார வளர்ச்சியடைந்த நோர்வே முதலில் செய்த வேலை, தனது ஆழ்கடல் மீன்பிடி படையை அபிவிருத்தி செய்ததாகும். இதன் பின் சோவியத் யூனியன், கடலில் வளங்களைப் பங்கு போட்டுகொள்ளும் ஒப்பந்தத்தை செய்து கொள்ள உடன்பட்டது. அந்த ஒப்பந்தம் சோவியத் உடைவின் பின்னும் ரஷ்யாவினால் கடைப்பிடிக்கப்படுகிறது.

கடலட்டை வளர்ப்பு போன்ற தொழில்களினால் கிடைக்கும் அந்நிய செலாவணியை விட, ஆழ்கடல் மீன்பிடி படையை அபிவிருத்தி செய்வதன் மூலம் பலமடங்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். அத்துடன் கடற்கரை சமூகம் பரந்துபட்ட அளவிலான பொருளாதர வளர்ச்சியை அடைவதற்கும் இது வழிவகுக்கும்.

### 'கருவண்டன்' இறால் பிடிப்பு

அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் தொழில்களுள் வடக்கு கடல் படுக்கைகளில் காணப்படும் கருவண்டன் என்ற இறால் பிடிப்பு முக்கியமானது. சந்தையில் கிடைக்கும் வளர்ப்பு இறால்களை விட, அதிக சர்வதேச சந்தை மதிப்பு வாய்ந்த கருவண்டன்கள் இயற்கையாக கடலில் புளுத்துப் பெருகும். இலங்கைக் கடலில் காணப்படும் கருவண்டன் இறால்கள் இந்திய ரோலர்களினால் களவாடப்படுகிறது. இலங்கையைச் சேர்ந்த இலகுவகை ரோலர்கள், வாரத்தில் மூன்று நாட்கள் கருவண்டனை பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. ஆனால், உபயோகிக்கும் படகுகள், தொழில்நுட்பம் காரணமாக பெரிய வருவாயை எமது மீனவர்கள் பெற முடியாதுள்ளது.

### ஒடுகயிறு தொழில் மூலம் பிடிபடும் சூரை மீன்கள்

ஒடுகயிறு தொழில் மூலம் பிடிபடும் சூரை மீன்கள் சர்வதேச சந்தையில் மிகவும் விலை

மதிப்புள்ளவை. பருத்தித்துறைக்கு வடக்காக உள்ள கடல் தொடக்கம் நாயாறு வரை செய்யக்கூடிய தொழில் இது. இன்று பருத்தித்துறை, மயிலிட்டி, வல்வெட்டித்துறை போன்ற கிராமங்களைச் சேர்ந்த சில படகுகளே இத்தொழிலில் ஈடுபடுகின்றன. இப்படகுகள்கூட கரைக்கு மிகவும் அண்மையிலான கடற்பிரதேசத்திலேயே தொழில் செய்யக் கூடியவை. மீன்பிடிக்கச் செல்லும் அதே நாளிலேயே கரைக்கு திரும்ப வேண்டிய நிலையில் உள்ளவை. இவை பிடிக்கும் மீன்கள் ஐஸ்கட்டிகளை போட்டு பழுதடையாமல் பாதுகாத்து வைக்கப்படுவதனால் உடனடியாகவே கரைக்கு திரும்ப வேண்டிய நிலையில் காணப்படுகின்றன.



**கருவண்டு இறால்**

Image source - www.manettas.com.au

இன்றுள்ள நவீன மீன்பிடிக்கு ஏற்ப இத்தொழில் செய்வதற்கு கடலில் பல நாட்கள் தங்கி தொழில் செய்வதற்கான குளிர்சாதன வசதிகளுடனான நவீன படகுகள் (*Multi Day Fishing Boats - Vessels With Freezer Facilities*) தேவைப்படுகின்றன. தென்னிலங்கை நிறுவனங்களுக்கும், தனியாருக்கும் சொந்தமான இந்தவகை படகுகள் சில வடக்கில் சூரை மீன்பிடித் தொழிலை செய்கின்றனர். ஆயினும், மேலதிகமாக சில நூறு படகுகள் தொழில் செய்வதற்கான கடற்பரப்பு எம்மிடம் உள்ளது. இதே நிலமை தென்னிலங்கை கடற்பரப்பிலும் காணப்படுகிறது. இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக்கூடிய சூரை மீன்கள் இன்று சீன, இந்திய நாடுகளினால் கொள்ளையிடப்படுகிறது.

## ஆழ்கடல் ஒட்டு மீன்பிடி

மேற்கூறிய இருவகை தொழில்களும் தேசிய வருமானத்துக்காக டொலர்களை - அந்நிய செலாவணிகளைத் தரக்கூடிய ஏற்றுமதி சார்ந்த மீன்பிடிகளாகும். இலங்கையின் உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய தொழில்களையும் வடக்கின் ஆழ்கடலில் செய்ய முடியும். பாக்கு நீரிணையுடன் பிணைந்திருக்கும் பேதுரு மீன்பிடித் தளமானது பெரிய அளவிலான ஒட்டு மீன் (*Pelagic Fish*) வளத்தைக் கொண்டது. ஒட்டு மீன்கள் என்பவை பருவகாலத்தில், குறிப்பாக வாடைக்காற்று வீசும் காலத்தில், வடக்கின் கடற்பிரதேசத்துக்குள் வருபவை. இந்த மீன்களைப் பிடிக்க பலவகை வலைத் தொழில்கள் செய்யப்படுகின்றன. இன்று, சிறு கண்ணாடி இழைப்படகுகளையே எமது மீனவர்கள் பயன்படுத்துகின்றார்கள். இவை அதிகபட்சம் கரையிலிருந்து 10 km இற்கும் குறைவான பகுதியிலேயே மீன் பிடிக்கின்றன.

> வடமாகாணத்தின் எல்லா கரைகளிலும் வெள்ளை நண்டு பெருகிக் கிடக்கிறது. யாழ்ப்பாண குடாநாட்டுப் பகுதியில் பூநகரி தொடக்கம் வடக்கு நோக்கி யாழ் நகரத்தின் கரையோரம் ஈறாக, நாவாந்துறை, அராலி, தம்பாட்டி மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி வரை கருவண்டன் இறால்கள் களக்கடலில் பிடிக்கப்படுகிறது.

இப் படகுகள் மீன்கள் அதிகமாக காணப்படும் பேதுரு கண்டமேடையின் உள்ளே பிரவேசிப்பதில்லை. அதன் விழிப்பு பிரதேசத்திலேயே தொழில் செய்கின்றன. பேதுரு கண்டமேடையின் ஒட்டு மீன் வளத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனில் நவீனமயப்படுத்தப்பட்ட மீன்பிடிக் கலங்களும், புதிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட தொழில் முறையும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வீழ்ச்சி அடைந்துள்ள கரையோர மீன்பிடியை நம்பி வாழும் மீனவர்களுக்கு மானிய உதவிகளுடன், பலர் சேர்ந்து படகுகள், உபகரணங்களை

கொள்வனவு செய்யும் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அல்லது மீனவர் கூட்டுறவு (Cooperative) முறைமையின் ஊடாக உபகரணங்களைக் கொள்வனவு செய்து, கூட்டாகத் தொழில் செய்யும் முறை மறுபடியும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேற்கூறிய இரு முறைமைகளும் மீனவ சமூகத்தில் 1980 இன் நடுப்பகுதி வரை காணப்பட்டது. இவ்வகை கூட்டு முயற்சிகளை அறிமுகம் செய்வதன் மூலம் ஒவ்வொரு மீனவனும் நன்மை அடையலாம். இதனால், தேசிய வருமானத்துக்கான பங்களிப்பு உயர்வதுடன், இலங்கை மக்களின் புரதச்சத்து தேவையும் நிவர்த்தி செய்யப்படும்.

## கரையோர மீன்பிடி

### கரையோர இறால் பிடிப்பு மற்றும் வெள்ளை நண்டு பிடிப்பு

வடமாகாணத்தின் எல்லா கரைகளிலும் வெள்ளை நண்டு பெருகிக் கிடக்கிறது. யாழ்ப்பாண குடாநாட்டுப் பகுதியில் பூநகரி தொடக்கம் வடக்கு நோக்கி யாழ் நகரத்தின் கரையோரம் ஈறாக, நாவாந்துறை, அராலி, தம்பாட்டி மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி வரை கருவண்டன் இறால்கள் களக்கடலில் பிடிக்கப்படுகிறது.

இந்த வகை நண்டும் இறாலும் ஏற்கனவே பலகாலமாக இந்த கடற்பிரதேசங்களில் காணப்பட்டாலும், கடந்த 30 வருடங்களில் ஏற்பட்ட காலநிலை மாற்றம், கடல் நீரோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக முட்டைகளாகவும், குஞ்சுகளாகவும் கரைக்கு வந்து வளர்ச்சி அடைபவை. வெள்ளை நண்டின் வரத்துப் பற்றி இத்தொகுப்பில் உள்ள பிறிதொரு கட்டுரையில் விபரித்துள்ளேன். அதேபோலவே, இறால் முட்டைகளும் குஞ்சுகளும் நீரோட்டத்தில் கரைக்கு வருகின்றன.

2009 போர் முடிவிற்குப் பின்வந்த காலம் தொடக்கம் இன்றுவரை சில இலட்சங்கள் முதலிட்டுச் (வள்ளம் + வலைகள்) செய்யக்கூடிய நண்டுத் தொழிலும் இறால் பிடியும் பல்லாயிரம் மீன்வர்களினால் செய்யப்படும் தொழில்களாக இருந்து வருகின்றன. எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாமல் இவை பிடிக்கப்படுகின்றன. பிடித்த வரையும் இலாபம் என்ற சிந்தனையின் அடிப்படையில் மீனவர்கள் இந்த இரு கடல்படு திரவியங்களையும் கையாளுகிறார்கள். மிகவும் சிறிய குஞ்சு இறால்களும், குருக்கான் நண்டுகளும் பிடிக்கப்படுகின்றன.

இவை இரண்டும், வாடைக்காற்று வீசும் கார்த்திகை தொடக்கம் பங்குனி வரையான காலத்தில் குஞ்சுகளாகவும் முட்டைகளாகவும் நீரோட்டத்தின் உதவியுடன் வடக்கின் கடலை வந்து சேர்கின்றன. இவை வளர்ந்து பெருக்கும் காலம் பங்குனி தொடக்கம் மார்கழி வரையான காலம். குறைந்தது ஆறு மாதங்களாவது இவை வளர்ச்சியடையத் தேவை. ஆனால், இவை வளர வளர சில மாதங்களிலேயே பிடிக்கப்படுகின்றன. ஆறுமாத காலத்தில் 100 கிராம் அளவுக்கு வளரக் கூடிய நண்டுகளை முட்டுக்கண் தங்கூசி வலைகளைக் கொண்டு மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்திலேயே பிடித்து விடுகின்றனர். தமது அன்றாடச் சீவியத்துக்கு கிடைத்தால் போதும் என்ற இந்தப் போக்கு, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானத்தை இழக்கச் செய்கிறது.

இந்த நிலையை மாற்ற அரசும் மீனவ சமூகமும் சேர்ந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உதாரணமாக, சித்திரை மாதம் தொடக்கம் மார்கழி வரையான காலத்தில் நண்டு பிடிக்கும் தொழிலை நிறுத்தி வைக்க வேண்டும். நிறுத்தப்படும் காலத்தில் நண்டு பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான உதவிகளை அரசும் - மீனவ சமூகமும் இணைந்து வழங்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நண்டுபிடித் தொழில் நிறுத்தப்படும் காலத்தில், வருமானத்துக்காக மாற்றுத் தொழில்களைச் செய்வதற்கான பயிற்சிகள், வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும்.

இதே போலவே, கரைகளில் இறால்கூடு மற்றும் களங்கண்டிகள் வைத்து இறால் பிடிப்பவர்களுக்கும் சித்திரை தொடக்கம் புரட்டாதி வரையான காலம் வரையும் தொழில் செய்வதற்கு தடை விதிக்கப்படல் வேண்டும். குஞ்சு இறால்கள் வளர்ந்து, குறைந்தது 25 கிராம் அளவிலாவது வரும்வரை, இத்தடை இருக்க வேண்டும். நண்டு பிடிக்கும் தொழிலாளிகளுக்கு ஏற்பாடு செய்வது போலவே இவர்களுக்கும் மாற்று வருமானம் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனால், 69 மாதங்கள் தொழிற்தடை செய்யப்படுவதனால் ஏற்படும் நன்மையை மீனவர்கள் உணர்ந்து கொள்வார்கள். தடைநீங்கி தொழில் அனுமதிக்கப்படும் ஆறு மாதங்களில் வருமானத்தின் உயர்வை அவர்களே சுயமாகக் கண்டடைவார்கள். காலப்போக்கில் மானியங்களிலும், அரச




**கடலில் பல நாட்கள் தங்கி தொழில் செய்வதற்கான குளிர்சாதன வசதிகளுடனான நவீனப் படகு**

Image source - www.neilmarine.com

உதவிகளிலும் தங்கிச் சீவிக்கும் நிலையிலிருந்து வெளிவர முடியும்.

## எதிர்காலம் கடலை நம்பி மட்டுமல்ல

மீனவ சமூகங்கள் கடலை நம்பி மட்டும் இருக்கும் நிலையிலிருந்து வெளிவர வேண்டும். 80 களின் நடுப்பகுதி வரை கல்வி சார்ந்த உத்தியோகங்களில் பணி செய்யும் நிலைமை வளர்ந்து வந்தது. போரின் காரணமாக கல்வி, அது சார்ந்த பணிகளில் ஈடுபடும் தொகை, மீனவ சமூகங்களில் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. மீன்பிடி சார்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனப் பணிகளில் அதிகமாகப் பணி செய்த மீனவ சமூகத்தவரின் தொகையிலும்கூட வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கல்வி மற்றும் அது சார்ந்த பணிகளில் பங்கெடுக்கும் தொகையை அதிகரிப்பதற்கான முயற்சிகளை ஒரு சமூகமாக நாம் முன்னெடுக்க வேண்டும். கடல் சார்ந்த சமூகங்களில் A/L வரை படித்துவிட்டு கடற் தொழிலில் ஈடுபடும் இளைஞர்தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. இவர்களுக்கு நவீன மீன்பிடி முறைகளை கற்கையாக கற்பிப்பதன் மூலம், இயற்கைக்குச் சிநேகமான பல மாற்று மீன்பிடி முறைகளை அறிமுகம் செய்யலாம்.

மீனவ சமூகங்களில் படித்த, கடல்சார்ந்த அனுபவம் கொண்டவர்களின் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப கடல் சார்ந்த அரச பணிகளில் குறைந்தது 50% ஆவது வழங்கப்பட வேண்டும். இன்று, அரசியல் மற்றும் அதிகார வர்க்கத்துக்கு நெருக்கமானவர்களுக்கே பணிகள் வழக்கப்படுகின்றன. மீனை அருவருப்பாகவும், கடலை குப்பைத் தொட்டியாகவும், துடக்காகவும் பார்க்கும் ஒருவர் கடல் சார்ந்த அரசபணிகளில் ஈடுபடுவதற்கும் - கடல்சார்ந்து வாழும் சமூகப் பின்னணியை கொண்ட, அதன்மீது உளவியல் ரீதியான நெருக்கமும் அன்பும் இருக்கும் ஒருவர் இப்பணிகளில் ஈடுபடுவதற்கும் பாரிய வித்தியாசம் உள்ளது. இது விவசாயத்துறைக்கும் பொருந்தும்.

கடல், விவசாய சமூகப் பின்னணிகளிலிருந்து வருபவர்களை இத்தொழில்கள் சார்ந்த அரச பணிகளின் அமர்த்துவது இன்றும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ள முறைமையாக இருக்கிறது. வெறும் கல்வியை அடிப்படையாகக்கொண்ட அறிவை விட, மேலதிகமாக இவர்களுக்கிருக்கும் அத் தொழில்கள் சார்ந்த அனுபவ அறிவும், கலாச்சரப் புரிதலும், சமூகப் பொருளாதார அனுபவப் பார்வையும் இப்பணிகளை இலகுவாகவும், சரியான முறையிலும் நிறைவேற்ற உதவியாகவிருக்கும். கடல் சார்ந்து சீவிக்கும் மக்கள் சமூகம், கடல் பொருளாதாரத்தில் மட்டுமே தங்கி இருக்கும் நிலையிலிருந்து, பல் பொருளாதார சீவியம் நடத்தும் மக்கள் சமூகமாக மாற்றப்படல் வேண்டும்.

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக 'பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை' எனும் தொடர் அமைகின்றது.




நாகமுத்து பிரதீபராஜா

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# பிராந்திய காலநிலையியல்: வடக்குப் பிராந்தியம், இலங்கை

## அறிமுகம்

காலநிலை மாற்றம் உலகளாவிய பொருளாதாரத்திற்கும் (Mihailovic & Jovanovic, 2022) மற்றும் உலகளவில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இதன் தாக்கங்கள் வளர்ச்சிப் பொருளாதாரத்தின் அனைத்து முதன்மை மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கைத் துறைகளிலும் பரவலாக உணரப்படுகின்றன. பூகோள காலநிலை மாற்றம் காரணமாக வரட்சி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வெப்ப அலைகள், கடுமையான மழைப்பொழிவு, குளிர் உள்ளிட்ட தீவிர வானிலை நிகழ்வுகளின் நிகழ்வெண்ணிக்கை மற்றும் தீவிரத்தன்மை ஆகியன அதிகரித்துள்ளன. இவை அனைத்தும் உலகின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது ஆசியாவின் பல பகுதிகளில் அதிகமாக நிகழ்வதாக கணிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆசிய நாடுகளின் கடல் மேற்பரப்பு வெப்பநிலையில் 2030 ஆம் ஆண்டு 24 °C வெப்பநிலை அதிகரிப்பையும், 2022 முதல் 2050 வரை வெப்பமண்டல சூறாவளியின் தீவிரத்தில் 20% அதிகரிப்பையும் எதிர்கொள்ளும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. சமீபத்திய தசாப்தங்களில், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைத் தணிக்க பல நாடுகளும் அதிக முன்னுரிமைகளை வழங்குகின்றன. அந்தந்த நாடுகளில் ஏற்படும் காலநிலை மாற்றத் தாக்கங்களை மாற்றியமைக்க அல்லது குறைக்க அவர்கள் மற்ற நாடுகளுக்கு தங்கள் மதிப்புமிக்க ஆதரவை வழங்கியுள்ளனர்(Timmons & Lunn, 2022).



கடும் மழைவீழ்ச்சி - சப்ரகமுவ

Image source - www.adaderana.lk

காலநிலை மாற்றத்தால் கடுமையாக அச்சுறுத்தப்பட்ட முதல் வளம் நீர். எனவே, இயற்கை வளங்களில் காலநிலை மாற்ற பாதிப்புக்களை எதிர்கொள்ளும் முக்கியமான துறையான நீர் வளங்களை நிர்வகிப்பதில் பல நாடுகள் அதிக கவனம் செலுத்தியுள்ளன. காலநிலை மாற்றத்தின் தாக்கத்திலிருந்து நீரைப் பாதுகாக்க சில நாடுகள் புதிய கொள்கைகளை உருவாக்கியுள்ளன அல்லது ஏற்கனவே உள்ள அமைப்பை மறுசீரமைக்கின்றன. மேலும் அவை காலநிலை மாற்றம் குறித்த பொது விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொள்கின்றன. உலகளாவிய மற்றும் தெற்காசிய நாடுகளுக்குள்



**நீரைப்பெற மக்கள் வரிசையில் நிற்றல்**

**Image source - www.sundaytimes.lk**

எதிர்வுகூறப்பட்ட எதிர்கால காலநிலை மாற்ற எதிர்வு கூறல்கள் சராசரி காலநிலை நிலையை விட தற்போதைய காலநிலை மாறுபாட்டின் தீவிரத்தை பிரதிபலிக்கிறது (Liu et al., 2021).

உலகெங்கிலும் உள்ள பல வளரும் நாடுகள் காலநிலை மாற்றத்தால் கடுமையான நீர் தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றன. இலங்கை, இந்தியப் பெருங்கடலில் உள்ள வெப்பமண்டல மண்டலத்தில் அமைந்துள்ள ஒரு வளரும் நாடு. முப்பது வருட உள்நாட்டுப் போருக்குப் பிறகு அரசாங்கம் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், முப்பது வருடகால உள்நாட்டு முரண்பாட்டின் பின்னர், இலங்கையில் பல தரப்புக்களால் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இடம்பெயர்ந்த மக்கள் தமது நிலங்களில் மீள்குடியேற்றப்பட்டனர். அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் பல மறுவாழ்வு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றன. எவ்வாறாயினும், இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு, குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் காலநிலை மாற்றம் ஒரு முக்கியமான தடையாக உள்ளது. காலநிலை மாற்றத்தின் காரணமாக அதிகரித்து வரும் கணிக்க முடியாத தீவிர காலநிலை மாற்ற பாதிப்புக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. இலங்கை அரசாங்கம் ஒரே காலப்பகுதிகளில் வெள்ள நிவாரணத்தையும் வரட்சி நிவாரணத்தையும் வழங்குகின்ற அளவுக்கு 2023 ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையின் மேற்கு, தெற்கு மற்றும் தென் மேற்கு பகுதிகளில் கடுமையான வெள்ளப்பெருக்கும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் கடுமையான வரட்சியும் நிலவியதை குறிப்பிடலாம்(Qu & Motha, 2022).

இலங்கையின் வடக்குப் பிராந்தியம் நாட்டின் உலர் வலய வகைப்பாட்டில் அமைந்துள்ளதால் அப்பகுதியின் உயிர்வாழ்வைத் தீர்மானிக்கும் முக்கியமான வளங்களாக தரைமேல் மற்றும் தரைக்கீழ் நீர் வளங்கள் கருதப்படுகின்றன. காலநிலை மாற்றம் இலங்கையின் மேற்பரப்பு நீர் வளங்களில் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு பகுதியில் வடகிழக்கு பருவ மழைக்காலம், தென்மேற்கு பருவக்காற்று பருவம், முதல் பருவ மழைக்காலம், மற்றும் இரண்டாவது இடை பருவ மழைக்காலம் என நான்கு காலநிலை பருவங்கள் நிலவுகின்றன. இருப்பினும், மழைப்பொழிவு நான்கு பருவங்களிலும் சமமாக அமையவில்லை. ஏனெனில் இரண்டாவது இடைப் பருவக்காற்று காலம் மற்றும் வடகிழக்கு பருவமழைக் காலம் ஆகிய இரண்டு பருவங்கள் மட்டுமே போதுமான மழைப்பொழிவைக் கொண்டுள்ளன. வடகீழ் பருவமழை காலத்தில், குறிப்பாக நவம்பர் முதல் ஜனவரி வரை, இப்பகுதியில் பெய்யும் மழை, ஆண்டு முழுவதும் குடிநீர், உள்நாட்டு விவசாயம் மற்றும் உற்பத்தித் தேவைகள் போன்ற பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானது. சமீபத்திய காலநிலை மாற்றம் மழைப்பொழிவில் கணிசமான மாறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளது. ஒரு பருவத்தில் வரட்சியையும் மற்றொரு பருவத்தில் வெள்ளத்தையும் ஏற்படுத்துகிறது. எனவே, நீர் ஆதாரங்கள், குறிப்பாக வடக்கு பிராந்தியத்தின் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள், காலநிலை மாற்றத்தால் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன (Facts, 2022). தென்மேற்கு பருவக்காற்று பருவ காலத்தின் போது கடுமையான நீர் பற்றாக்குறை, நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தின் திடீர் வீழ்ச்சியைத் தூண்டுதல், ஆற்றுப்படுகைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் கிடைக்காமை, நீருக்கான தேவை அதிகரித்தல், நீர்த்தேக்கங்களில் நீர்

கிடைக்காமையால் நீர் வழங்கல் தடைப்படுதல் மற்றும் வரட்சி நிகழ்வுகளின் நிகழ்வு எண்ணிக்கை அதிகரிப்பது போன்ற பல பிரச்சினைகள் காலநிலை மாற்றத்தால் வட இலங்கையில் உருவாக்கப்படும் அனர்த்தங்களாகும்.

சமீபத்திய தசாப்தங்களில், உலர் வலய பகுதிகளில் நீர் பற்றாக்குறை ஒரு கடுமையான பிரச்சினையாக மாறி வருகிறது. நீர் தட்டுப்பாடு இலங்கை அரசுக்கு தேவையற்ற பொருளாதார சுமையை உருவாக்குகிறது. கிழக்கு, வடமேற்கு, வடக்கு, வடமத்திய மாகாணங்கள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் நீர்ப் பற்றாக்குறையினால் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. இதேவேளை, தென் மாகாணம், மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணங்கள் போன்ற சில பிரதேசங்கள் அடிக்கடி வெள்ளப்பெருக்குகளை எதிர்கொள்கின்றன. சமீபத்திய ஆண்டுகளில், வட மாகாணத்தில் உள்ள பல பகுதிகள் நீர் பற்றாக்குறை பிரச்சினைகளை சந்தித்துள்ளன. அதேநேரம், ஏனைய பிரதேசங்கள் மேலதிக நீர் பிரச்சினைகளை




யாழில் ஏற்பட்ட வெள்ளம்
Image source - www.tamilguardian.com

(வெள்ளப்பெருக்கு) எதிர்கொண்டன. காலநிலை மாற்றத்தினால் இந்தப் பிரச்சினைகள் வருடா வருடம் அதிகரித்து வருகின்றன, ஆனால் அவை இன்னும் தீர்க்கப்படவில்லை (ADB, 2022).

வரலாற்று ரீதியாக சமீப காலம் வரை, இலங்கையின் வடக்கு மாகாணம் ஒரு கொடூரமான உள்நாட்டுப் போரை அனுபவித்தது. 2017 ஆம் ஆண்டு, வடக்கு மாகாண சபையின் கூற்றுப்படி, இறுதி யுத்தத்தின் போது மட்டும் 115,000 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர்; 60,000 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்; 500,000 இற்கும் அதிகமான மக்கள் தங்கள் நிலத்திலிருந்து இடம்பெயர்ந்தனர். இதன் விளைவாக, எந்த துறைகள் குறித்தும் எந்தவிதமான ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படவில்லை. ஆராய்ச்சியாளர்கள் உட்பட மக்கள் உயிருடன் வாழ்வதையே தம்முடைய பிரதான இலக்காக கருதினர். இலங்கையின் வட பிராந்தியத்தின் எதிர்கால காலநிலை மாற்றம் பற்றி சில ஆரம்ப ஆய்வுகள் இருந்தாலும், இவை முதன்மையாக வெப்பநிலை மற்றும் மழை மாற்றங்களுடன் தொடர்புடையவையாக மட்டுமே இருந்தன. பிற நாடுகள் தங்களது எதிர்கால வளர்ச்சித் திட்டங்களை அந்தந்த நாடுகளில் எதிர்வுகூறப்பட்ட காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப பொருத்தமான உத்திகளுடன் செயல்படுத்தியுள்ளன அத்தோடு அதில் வெற்றியும் அடைந்துள்ளனர். இலங்கையில் உள்நாட்டுப் போர் காரணமாக இதுபோன்ற திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் குறைவாகவே உள்ளன. சமீபத்திய ஆண்டுகளில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு, இந்த பகுதிகளில் காலநிலை மாற்றம் பற்றிய ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. எனவே, இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கு அல்லது வடிவமைக்க எதிர்கால காலநிலை மாற்ற வடிவத்தை ஆய்வு செய்ய வேண்டிய அவசரத் தேவை உள்ளது. எனவே, இந்த ஆய்வு இலங்கையின் வடக்கு மாகாணத்தில் நீர் வளங்கள் மற்றும் அவற்றின் மேலாண்மையில் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் பற்றிய ஆராய்ச்சியுடன் தொடர்புடைய இடைவெளிகளை பூர்த்தி செய்யும் (Rahman & Rahman, 2022).

இலங்கையின் மேற்பரப்பு நீர்வள நிர்வாகம் மிகவும் வித்தியாசமானது. ஏனெனில் நிர்வாக ரீதியாக இரண்டு பிரிவுகள் உள்ளன. முக்கியமாக நீர் நிர்வாக அதிகாரங்கள் மாகாண அரசாங்கத்தின் கீழ் வருவதுடன் அவை மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. இருப்பினும், ஏதேனும் ஆறு அல்லது நீர்த்தேக்கம் இரண்டு மாகாணங்களுடன் தொடர்புடையதாக அமைவு பெற்றால் அதன் நிர்வாக செயற்பாடுகள் மற்றும் அதன் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் நீர்ப்பாசனத்துறைக்குரியதாக நிர்வாகமாக அமைகின்றது. இருப்பினும், இந்த இரண்டு திணைக்கள அதிகாரிகளும் காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட நெருக்கடிகளின் கீழ் நீர் பகிர்வை நிர்வகிப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மேலும் காலநிலை மாற்ற அவசரநிலைகளின் கீழ் நீர் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான கொள்கை ரீதியான ஏற்பாடுகள் எதுவும் மத்திய மாகாண நீர்ப்பாசன திணைக்களங்களிடம் இல்லை. தற்போதைய நீர் முகாமைத்துவ அமைப்பு இரண்டு நிர்வாகங்களிலும் காலநிலை மாற்ற நிலைமைகளுக்கு ஏற்றதாக இல்லை.

(தொடரும்)

# இலங்கை தமிழ் பௌத்தர்கள்

## பகுதி 1




இரா. சடகோபன்

இரா. சடகோபன் என்று எழுத்து உலகில் அறியப்பட்ட இராமையா சடகோபன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு பட்டதாரி ஆவார். அதன்பின் ஒரு சட்டத்தரணியாக தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் மூன்று நூல்களுக்குத் தேசிய சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார்.

விஜய் சிறுவர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான இவர், 'சுகவாழ்வு' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஆவார். இதனைத் தவிர மலையக மக்கள் மேம்பாடு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். சடகோபன் ஊடகத்துறையில் ஆற்றிய பணிக்காகச் சிறந்த ஊடகவியலாளருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்

***குறிப்பு :*** *பேராசிரியர் சுனில் ஆரியரத்ன அவர்களின் 'தமிழ் பௌத்தன்' எனும் நூல் தமிழ் பவுத்தம் பற்றி மிக விரிவாகப் பேசுகிறது. இந்தியாவில் தமிழ் பவுத்தத்தின் தொடக்க நிகழ்ச்சிகளிலிருந்து இலங்கையில் தமிழ் பவுத்தம் வரை விரிவான தகவல்களோடு எழுதப்பட்டிருக்கிறது. சமகால அரசியலின் தேவை கருதியும், தமிழ் பவுத்தம் பற்றிய கருத்தாக்கத்தை தமிழ் வாசகர்கள் அறியச் செய்யவும் இந்நூலின் இலங்கை தமிழ் பவுத்தம் பற்றிப் பேசும் 'இலங்கை தமிழ் பவுத்தர்கள்' எனும் அத்தியாயம் தெரிவுசெய்யப்பட்டு மொழிபெயர்க்கப்படுகிறது. இம் மொழிபெயர்ப்பு மூன்று பகுதிகளாக எழுநாவில் வெளியாகிறது.*



**எல்லாளன் சிலை**

Image source - wikipedia.org

எங்களது பௌத்தநூல் 'தமிழ் பௌத்த' நூலேயாகும். அதன்படி தென்னிந்தியாவில் வசித்த, வசிக்கிற தமிழ் பௌத்தர்களை நாம் இதுவரை சந்தித்துள்ளோம். மேலே குறிப்பிட்டுள்ளபடி தென்னிந்தியா அல்லது தமிழ்நாடு மாநிலம் தவிர இலங்கையிலேயே தமிழ் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. அவர்கள் மத்தியில் தமிழ் பௌத்தர்கள் இருக்கின்றனரா? இதற்கு பதில் சொல்வது எளிதான காரியம் அல்ல. ஏனெனில் ஸ்ரீ லங்காவில் தமிழ் பௌத்தம் பற்றிய பரிசோதனைகளும், ஆய்வுகளும், மிக அரிதானதாகவே காணப்படுகின்றன.

இலங்கை, மியான்மர், தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், வியட்நாம், திபெத், மங்கோலியா, சீனா, மஞ்சூரியா, தைவான், கொரியா, ஜப்பான், சிக்கிம் மற்றும் பூட்டான் ஆகியவை இன்றைய ஆசியாவில் உள்ள பௌத்த நாடுகளாகும். இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், சோவியத் ஆகிய நாடுகளையும் பௌத்தம் இருக்கும் நாடுகள் என்று கூறலாம். மலேசியா மற்றும் இந்தோனேசியாவிலும் போதுமான பௌத்தர்கள் உள்ளனர். எனவே நமது பௌத்த நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள பௌத்தர்கள் மாத்திரமே வாழ்ந்தார்கள் என்று கூறப்படுவதிலும், எந்தக் காலத்திலும் தமிழர்கள் பௌத்தத்தை தழுவிக்

கொள்ளவில்லை என்று கூறப்படுவதிலும், இருசாராருக்குமிடையே எந்த மாதிரியான மத உறவுகள் இருந்தன என்பது தொடர்பிலும் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

தமிழ்நாடும் இலங்கையும் 23 மைல்கள் குறுகிய தூரத்தில் ஒன்றிலிருந்து மற்றொன்று கடலால் பிரிக்கப்பட்டுள்ளன. கடலுக்கு அந்தப் பக்கம், அதாவது தமிழ்நாடு மாநிலத்தில் 55 மில்லியன் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். மிக அருகருகில் வசிக்கும் இந்த இரு மக்கள் சமூகங்கள் தொடர்பில் வல்பொல ராகுல தேரரின் கருத்து பின்வருமாறு காணப்படுகிறது.

“தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையேயுள்ள குறுகிய இடைவெளி காரணமாக இரு நாடுகளுக்கும் தொடர்ந்த உறவைப் பேணுவதற்கு எந்தத் தடையும் இல்லை. பிற்காலத்தில் தென் இந்தியாவின் சக்திமிக்க மன்னர்கள் இந்த நாட்டின் மீது அவ்வப்போது படையெடுத்து நாட்டை சூறையாடிய போதும் தன் குழந்தையைப் பராமரிக்கும் அன்பான தாயைப் போல இந்தியா எப்போதும் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராக இருந்துவந்துள்ளது”. (இலங்கையில் பௌத்த கால வரலாறு, பக். 62)

விஜய இளவரசனும் மற்றும் அவனது தோழர்களும் தென்னகத்தின் பாண்டிய ராஜ்யத்தின் மதுராபுரியிலிருந்து தங்கள் மனைவிகளை அழைத்து வந்தனர் என்று கூறப்படுகிறது (ம.வ.அத். 7, சரணங்கள் 48-58). அப்போது மதுராபுரியின் மன்னனாக இருந்தவன் பதினெட்டு கைவினைஞர் குழுக்களை சேர்ந்த சாதியினர் 1000 பேரை தன் மருமகனுக்கு உதவும் பொருட்டு அனுப்பி வைத்தான் (ம.வ.அத். 7, சரணங்கள் 50-57). விஜய மன்னனும் தன் பங்குக்கு, மாமனாருக்கு முத்துக்களையும் ரத்தினங்களையும் காணிக்கையாக அனுப்பி வைத்தான் (சரணம் 73 அத். கி.பி 7). மன்னன் விஜயவுக்கு பின்னர் ஆட்சி அதிகாரத்தை பெற்ற பாண்டுவாசுதேவ மன்னன் வட இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட சாக்கிய இளவரசியை மணந்தார் (அத். 18, சரணங்கள் 18-27). அதன் பின்னர் மேலும் 60 சாக்கிய இளவரசர்கள் வந்தனர்.


**பேராசிரியர் சுனில் ஆரியரத்ன**

Image source - fragmenteyes.blogspot.com

பௌத்தத்திற்கு முந்தைய காலத்தின் மிகப் பெரிய அரசன் பண்டுகாபய என்பவனே. பண்டுகாபய மன்னர் காலத்து இளவரசர்களில், திசாயு என்ற ஷாக்ய இளவரசன் பெயர் பெற்றவனாக இருந்தான். இந்த சாக்கிய இளவரசர்கள் பௌத்தர்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த காரணத்திற்காகவே பிற்கால மன்னர்கள் புத்தரின் சாக்கிய குடும்பத்தில் இருந்து வந்தவர் என்று கூறினர் (4 வது மகிந்த மன்னன், தான் பண்டுகாபய மன்னன் மற்றும் மன்னன் சுத்தோதனன் ஆகியோரின் வழிவந்தவன் என்று கூறுகிறார் - E.Z. iii,p . 227).

பண்டுகாபயவின் ஆட்சிக்கால தொடக்கத்திலிருந்து 19 ஆம் நூற்றாண்டில் சிங்கள அரசின் அழிவு வரை அரசாங்கத்தின் ஆதிக்கம் பௌத்தருக்கு மட்டுமே உரித்தானததாக இருந்தது. எனவே இந்த நாட்டை ஆளும் அரசர்கள் ஜாதி எதுவாக இருந்தாலும், மதம் பௌத்தமாக இருக்க வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. கி.மு 01 ஆம் நூற்றாண்டு சுரதிஸ்ஸ மன்னனை விரட்டியடித்து அனுராதபுர ராஜ்ஜியத்தைக் கைப்பற்றிய சேன, குத்திக என்ற இரண்டு குதிரை வர்த்தகர்களும் பௌத்தர்களாக இருந்ததால் நாட்டை 22 ஆண்டுகள் ஆண்டனர். இந்திய ஆய்வாளரான ஜி.வி. சரோஜா அவர்கள் கூற்றின்படி அவர்கள் பௌத்தர்கள்தான் என நிச்சயமாக கூற முடியும் (Buddhism In Tamil Nadu .p. 14). வல்பொல ராகுல தேரரின் கருத்தும் அதே தான். அவர்கள் பௌத்தர்கள் இல்லையென்றால், அவர்கள் நாட்டை தர்மத்தால் ஆண்டிருக்க முடியாது என்று மகாவம்சத்தை எழுதிய நூல் ஆசிரியர் திடமாக கூறுகின்றார் (ல.பு.இ. p. 96).

அவர்கள் தமிழர்கள் இல்லை என்பது ஆய்வாளர் பரணவித்தானவின் கருத்து. தமிழ் நாட்டு குதிரைகள் வர்த்தகம் தொடர்பாக பிரசித்தமாக இல்லாது இருப்பதுடன் அவர்களின் பெயர்கள் தமிழ் பெயர்களா என்றும் தெரியவில்லை. இவர்கள் இருவரும் இளவரசர் விஜய வந்த வடமேற்கு இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்று கூறப்படுகிறது (இலங்கை பல்கலைக்கழக வரலாறு, ஆர்ய குடியேற்றம்).

இந்த நாட்டுக்கு வரும் எவராலும் பௌத்தராக இல்லாமல் இருந்து இந்த நாட்டை ஆண்டிருக்க முடியாது என ராகுல தேரர்

கூறுகிறார். திராவிடர்கள் இந்நாட்டை அவ்வப்போது ஆண்டபோதும் ஆழ்மனதில் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவர்கள் தமக்குக் கீழ் ஆழப்படுபவர்களிடமிருந்து மன்னன் என்ற பட்டத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் பௌத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருந்தார்கள். சேன, குத்திக ஆகிய தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்து 30 வருடங்கள் கழித்து அதாவது கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்தில் ஆட்சி செய்த எல்லாள மன்னன் ஒரு சோழ இளவரசன். அவன் பௌத்த சங்க தேரர்களை தரிசித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொள்வதற்காக மிஹிந்தலைக்கு சென்றான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்த மதத்தின் மகத்துவமும் மதிப்பும் அவனுக்குத் தெரியாது என்றாலும் அவன் மிஹிந்தலைக்குச் சென்று முன்னைய வழக்கப்படி பௌத்த சங்கத்தினரை அழைத்ததாக மகாவம்சம் கூறுகிறது. எல்லாள மன்னன் புத்த மதத்தின் மீது உண்மையான ஆர்வத்தைக் காட்டவில்லை என்ற போதும், நாட்டின் பௌத்த சமய பழக்கவழக்கங்களை பின்பற்ற ஆர்வம் காட்டினான் என்று மகாவம்ச ஆசிரியர் கூறியுள்ளார் (ல.பு.இ. P.94). மன்னன் எல்லாளன் தொடர்பான மேற்படி விளக்கம் மகாவம்சத்தில் இருந்து பெறப்பட்டது ஆகும். எல்லாள மன்னன் மிஹிந்தலையிலிருந்து திரும்பி அனுராதபுரத்திற்கு வந்தபோது, அவனுடைய வாகனத்தின் ஒரு பக்க சில்லு மோதியதால் விகாரையின் ஒருபகுதி உடைந்து சேதம் ஏற்பட்டது. இது குறித்து அரசனிடம் அமைச்சர்கள் கூறியதும் உடனே தேரில் இருந்து இறங்கி பாரபட்சமின்றி அனைவருக்கும் சமமாக நீதி வழங்க வேண்டும் கூறி தனது தலையை தேர்சில்லில் வைத்து துண்டித்து விடுமாறு அமைச்சர்களை மன்னன் பணித்தான். எனினும் புத்த தர்மத்தின் படி அது அவசியமில்லை என்றும் உடைந்த விகாரையின் பகுதியை திருத்திக் கொடுப்பதன் மூலம் பிராயச்சித்தம் செய்ய முடியும் என்றும் அமைச்சர்கள் எடுத்துக்கூறினர். இதன் பிறகு மன்னனின் பெயர் தர்மத்தின் பால் மிகப் பிரசித்தமானது (ம.வ. அத். 21, 22-25 பாக்கள்).

கி.பி 5 ஆம் நூற்றாண்டில் மன்னர் புத்த பாரிந்தவின் மனைவியால் ஒரு விகாரைக்கு தானம் வழங்கப்பட்டது தொடர்பில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் அவரது கணவர் ஒரு தமிழர் என்றும் அவரது பெயர் புத்ததாச பரிதேவ என்றும் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது (E.Z. iv.p.114). புத்ததாச என்ற சொல்லை பயன்படுத்தியதன் மூலம் அவன் தமிழ் பௌத்தனாக மாறியுள்ளதைக் காணமுடிகிறது. அவனுக்கு முன் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் பாரிந்தாவும் புத்த மடாலயத்திற்கு நன்கொடை அளித்துள்ளான். அவனது கல்வெட்டு ஒன்று, வழங்கப்பட்ட பொருள்களின் தொகுப்பைக் குறிப்பிடுகிறது. தாதிய என்ற மன்னரும் பாரிந்த மன்னரும் தமிழ் வம்சத்தைச் சேர்ந்தவரே என்றும் கூறப்படுகிறது. இவர் கதிர்காமத்தைச் சேர்ந்த கிரிவிஹாரைக்கு தான பொருட்கள் வழங்கியுள்ளார் ( E.Z. iv.p. 218).

மொத்தம் 27 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்ட இந்த தமிழ் மன்னர்கள் மதத்தால் பௌத்தர்கள் என்று நம்பப்படுகிறது என ஆய்வாளர் பரணவிதான கூறுகின்றார். அவர்கள் பௌத்தர்கள் மட்டுமல்ல, அவர்கள் தங்கள் நாட்டையும் நாட்டு மக்களையும் ஒன்றாக இணைத்துக் கொள்வதற்காக அபய, மஹானா (மஹாநாக) முதலிய குடிப் பெயர்களுடன் சிங்களப் பெயர்களையும் தமது பெயர்களுக்கு முன்னால் சேர்த்திருந்ததை பரணவிதான மேலும் சுட்டிக்காட்டியுள்ளார் (E.Z. iv.p.114).

பொத்தகுட்டா, பொத்தசாத ஆகிய பெயர்கள் கொண்ட தமிழ் அமைச்சர்கள் மன்னர் நான்காம் அக்கபோதியின் அமைச்சரவையில் (கி.பி 658-674) சேவை செய்தவர்கள். மகாகந்தா என்ற தமிழ் அமைச்சர் பௌத்த மடங்களுக்கும் விகாரைகளுக்கும் தான தர்மங்கள் செய்து கொடுத்ததாகக் கூறப்படுகிறது (ம.வ. சரணங்கள் 19-23 அத். 46). பொத்தகுத்தா, மாடம்பியா ஆகிய இரண்டு விகாரைகள் அவைகளுக்கென இரண்டு கிராமங்கள், ஒரு ஏரி மற்றும் சேவை செய்வதற்காக அடிமைகள் முதலானவற்றை தானமாக வழங்கினார்கள். மேலும் கற்பூரப் பிரிவெனா மற்றும் குருந்தலபில்ல பிரிவெனா ஆகியவற்றுக்கான பிரகாரங்கள் கட்டப்பட்டதுடன் ஜேதவன விகாரையில் பொத்தசாத அமைச்சரினால் தனது மன்னனின் பெயரிலும் மகாகந்தா என்பவரின் பெயரிலும் பிரிவெனாக்கள் கட்டப்பட்டு அவர்களது பெயர்களும் சூட்டப்பட்டன.

முதலாம் விஜயபாகுவின் வேளக்கார தமிழ் கல்வெட்டின்படி அரசனால் பொலன்னறுவை தலதா ஆலயத்தின் பாதுகாப்பு தென்னிந்தியாவிலிருந்து வந்த வேளக்கார படைவீரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வேளக்கார படையினரின் மத்தியில் பௌத்தர்களும் இருந்தார்கள் என்பது தெரிய வந்தது. கணபதி என்ற தமிழ் சேனாதிபதி 'விக்ரமசால மேஷ பெரும்பள்ளி' என்ற ஒரு மடத்தை தானே அமைத்து அரசர் விக்ரமபாகுவிடம் ஒப்படைத்தார் என திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாயிலிருந்து பெற்ற கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. மேலும் வேளக்கார கல்வெட்டில் உள்ளதானது, மேற்படி தலதா ஆலயம் 'ஸ்ரீ தலதா பெரும்பள்ளி' என்று அழைக்கப்படுகிறது

என்பதாகும். காரணம் இந்தக் கல்வெட்டு தமிழில் எழுதப்பட்டது என்பதினாலாக இருக்கலாம். ஆனால் அதில் புத்தரைபற்றியும் மூவித ரத்தினத்தை பற்றியும் குறிப்பிடப்படுகிறது. 'நமோ புத்தாய' என்ற வசனமும் காணப்படுகிறது. அது மட்டுமின்றி ஆலயத்தின் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தை மீறினால் பஞ்சானந்தரியம் என்ற பாவச் செயல் செய்யப்பட்டுள்ளது என்று கருதப்பட்டு, தவறு செய்பவர்கள் சாபம் அடைவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்தர் அல்லாத ஒருவருக்கு இந்த செய்தியின் தீவிரத்தன்மை எந்த அளவுக்கு புரியும் என்று சிந்திக்க முடியாது.

அனுராதபுர மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் பெரிய புளியங்குளத்தில் இருந்து கிடைத்த இரண்டு கல்வெட்டுகளில் (E.Z. v.p.224) தமிழ் பௌத்த துறவிகளுக்கு பூஜை செய்வதற்காக குகைகள் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச திருமண வைபவங்களின் போது சிங்களபௌத்ததமிழ்இந்து அனைத்தும் சேர்ந்து கலந்திருந்தன. பௌத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் நிகழ்ந்த இவ்வாறான சில சம்பவங்கள் மேலே உள்ளவாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. சில பிற்கால நிகழ்வுகளின்போது, மகாதாதிய மகாநாக மன்னன் ஒரு தமிழ் இளவரசியை தனது பட்டத்து ராணியாக வைத்திருந்தான் என்றும், இளநாக அரசனின் பட்டத்து ராணி 'தமிழ் ராணி' என்ற பெயரால் பிரசித்தமாக இருந்தாள் என்றும் கூறப்படுகிறது. இளவரசி சந்திரமுகசிவா, இளநாக மன்னரின் மகனின் ராணி ஒரு திராவிட இளவரசியாகும். மன்னன் விஜயபாகுவின் சகோதரி இளவரசி மித்தாவை தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி சோழ மன்னன் கோரினான். எனினும் விஜயபாகு மன்னன் தன் சகோதரியை பாண்டிய இளவரசன் ஒருவனுக்கே திருமணம் செய்து வைத்தான். ராணி அனுலா மகாராணியின் தளபதிகளில் இரண்டு பேர் தமிழர்களாக இருந்தனர். அனுராதபுரத்தின் நகராதிபதியாக வடுக என்ற தமிழர் ஒருவர் பதவி வகித்தார். மகாராணி அனுலாவின் அரண்மனை புரோகிதையாக இருந்தவள் 'நீலி' என்ற தமிழ் பெண்மணியாகும். தமிழர்கள் சிங்கள பௌத்தர்களை மணந்தனர்.

இளவரசிகள் எந்த மதத்தைப் பின்பற்றினார்கள் என்று வரலாறு குறிப்பிடுகிறது. மன்னர் மானாபரன் இளவரசி ரத்னாவலியை மணந்தார். புத்த பாரிந்த என்ற தமிழ் மன்னர் ராணி சபாவை மணந்தார். அவள் ஒரு புத்த விகாரைக்கு வயல் நிலங்களையும் ஆடைகளையும் தானம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. திருமணத்தால் அரசர்களின் மதம் மாறாமல் இருந்தமைக்கான காரணம் அவர் புத்த சாசனத்தின் காவலராகவும் காணப்பட்டமையினாலாகும். பௌத்தர்கள் அல்லாதவர்களுக்கு இலங்கை இராச்சியத்தில் உரிமை இல்லை என்று சிங்கள மன்னர்கள் ஆவணப்படுத்தியிருந்தார்கள் (கற்புத்தகம் என்ற கல்வெட்டு E.Z. ii.p 109, பொலன்னறுவை மேற்கு வாயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு E.Z . ii.p159).

வலகம்பா மன்னன் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் இலங்கையை தாக்கிய ஏழு தமிழ் குண்டர்கள் புத்தரின் நினைவுச் சின்னத்தைத் திருடிச் சென்றனர். எதையுமே எடுத்துக் கொள்ளாமல் 'தன்னிடம் இது இருப்பதாக' கூறி இந்தியாவிற்கு ஓடிவிட்டனர் (ம.வ. 46 அத். 33, சரணம் 55). புத்தரின் நினைவுச்சின்னம் ஒரு தேசிய பொக்கிஷம் என்பதை இந்த தமிழ் குண்டர்கள் அறிந்திருந்தனர் என்பதை இது காட்டுகிறது.

பல பேரிடர் சந்தர்ப்பங்களில் சிங்கள பௌத்த பிக்குகள் தமிழ் நாட்டுக்கு தப்பிச் சென்றார். அதேபோல் தமிழ் நாட்டைச் சேர்ந்த புத்த துறவிகள் இலங்கைக்குத் தப்பிச் செல்வது வழக்கமாக இருந்தது. இலங்கையில் திராவிட பௌத்த துறவிகளும் பல்வேறு பௌத்த பிரிவுகளை பிரபலப்படுத்துவதில் ஆர்வம் காட்டினர். இலங்கையில் பாளி இலக்கியத்திற்கு விளக்கவுரைகளை எழுதி வளர்த்தெடுத்தவர்கள் தமிழ் பௌத்த பிக்குகளே.

பௌத்தர்களும் தமிழர்களும் இரு வேறு பிரிவினர் என்ற கருத்து வலகம்பா காலத்திலிருந்து பேசப்பட்டு வருகிறது. தமிழ் படையெடுப்பாளர்களிடமிருந்து தப்பிக்க வலகம்பா காட்டுப்பகுதியில் மறைந்திருந்தார். அவரது சில வன்முறைச் செயல்கள் சிங்கள தளபதிகளை அவரை விட்டு விலகிச் செல்ல வைத்தது. இவர்களை சமரசம் செய்ய ஹம்புகல்லக்க விகாரையில் பணிபுரிந்த திஸ்ஸ என்ற கற்றறிந்த துறவி முன்வந்தார். அவர் கேட்டார் : அதாவது அரசனைக் கொண்டு பௌத்தம் வளர முடியுமா? அல்லது தமிழர்களைக் கொண்டா ? அல்லது இரண்டுடனுமா ? (ம.வ. 46 அத். 33, 67 - 76 சரணம்).

இந்த சிறு சிறு சம்பவங்களால் இலங்கை பௌத்தர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் அழிந்து போய்விடவில்லை. ஏனெனில் கலிங்கமாகன் என்ற தமிழ் மன்னன் சூளவம்சத்தை மூடநம்பிக்கை, சுயநலமானது, பொறுமையற்றது, பிடிவாதமானது, அநீதியானது என்று கூறி புத்ததர்மத்தை அழித்தவன் என்று விவரிக்கப்படுகிறான். சூளவம்சம், இலங்கை தீவைக் காப்பதில் அலட்சியமாக இருந்த நாட்டவரின் வன்முறை பாவச்செயல்களால் இந்த பேரழிவு ஏற்பட்டது

என்று கூறுகிறது (சூ.வ. lxxx, 53-58). ஆனால் மாகன் என்ற இந்த கொடூர மனிதன் தமிழன் அல்ல என்பதை வரலாற்றாசிரியர்கள் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளனர். முதலாவதாக, பண்டைய சிங்கள இலக்கியப் படைப்புகளில், திராவிடம், தமிழ் மற்றும் 'தெமழு' ஆகிய சொற்கள் 'ஆக்கிரமிப்பாளர்' என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பறங்கியரைக் கூட 'தெமழு' என்று குறிப்பிடுகின்றன (விமல விஜேசூரிய, வடக்கில் கலிங்க இராச்சியம் மற்றும் திராவிட நாடுகளின் வரலாறு, 1984, பன்னிப்பிட்டி, பக். 17-18). பேராசிரியர் பரணவிதான, சி.டபிள்யூ. நிக்கலஸ் போன்ற வரலாற்றாசிரியர்கள் கலிங்க மாகவின் படையெடுப்பு 'ஆக்கிரமிப்பு' என்ற வகையில் ஏற்பட்டதாக கூறுகிறார்கள். ஆனால் அவன் இனத்தால் தமிழன் அல்ல என பேராசிரியர் பரணவித்தான மற்றும் சி. டபிள்யூ. நிக்கலஸ் ஆகியோர் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் அவர்கள் முன்வைக்கும் வாதங்கள் பின்வருவன. மாகன், திராவிட நாட்டில் இருந்து வரவில்லை. அவன் திராவிட நாட்டிலிருந்து வந்திருந்தால், அவனின் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்ட பௌத்த துறவிகள் புனித பற்சின்னத்தையும், பாத்திரச் சின்னதையும் மறைத்து வைத்துவிட்டு திராவிட நாட்டிற்கு ஓடியிருக்க மாட்டார்கள். பௌத்த விகாரைகளை மட்டுமன்றி இந்து ஆலயங்களையும் அவன் அழித்தான். இதன்படி கலிங்க மாகன் 'தாந்த்ராயன பௌத்தம்' என்ற பிரிவை சேர்ந்தவன் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அவன் தேரவாத புத்தகங்களை எரித்திருக்கிறான் என்றும், அவனது தாயகம் மலாயாவில் சுமாத்ரா என்றும், மாகன் தமிழ் கூலிப்படைகளுடன் வந்ததை பரணவித்தான ஒப்புக்கொண்டாலும், 24,000 பேர் கொண்ட இராணுவமும் மலாய்க்காரர்களே என்று நிக்கலஸ் கூறுகிறார் (Concise History Of Ceylon p. 244).

1923 முதல் 1926 வரை தமிழ் நாட்டில் வாழ்ந்து இலங்கையில் உள்ள தமிழ் கல்வெட்டுகளில் இருந்து தொல்லியல் துறையையும் பயின்ற பேராசிரியர் பரணவித்தானவால் 9 கல்வெட்டுக்கள் வாசிக்கப்பட்டு திருத்தப்பட்டன. 1926 முதல் 1960 வரையிலான முற்பத்து நான்கு ஆண்டுகளில் இலங்கையில் உள்ள தமிழ் கல்வெட்டுகளை படிக்கவும், புரிந்து கொள்ளவும், வெளியிடவும் பேராசிரியர் பரணவித்தானவை தவிர உலகில் எந்தத் தமிழறிஞரும் ஆர்வம் காட்டவில்லை என்று தமிழறிஞரான பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா தெரிவித்துள்ளார் (இலக்கியம், பரணவித்தான. எண். பக். 43).

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பெரிய குளம் என்ற பெயர் கொண்ட இத்தலத்தில் காணப்படும் சில கல்வெட்டுகளோடு மதவாச்சி, ஹொரவபத்தான வீதி,



இராசராச பெரும்பள்ளி
Image source - www.geevanathy.com

மாத்தளை தல்கஹகொட விகாரை மைதானத்தில் காணப்பட்ட கல்வெட்டு போன்ற கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ் பௌத்தர்கள் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன.

திராவிட மன்னன் ஒருவனால் பௌத்த விகாரை ஒன்று புதுப்பிக்கப்பட்டு அதற்கு திராவிடப் பெயரும் வழங்கப்பட்டது தொடர்பிலான விவரங்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த கோவில் பற்றி கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் விளக்கம் பின்வருமாறு உள்ளது :

'அவர்கள் பௌத்த வெறுப்பாளர்களாக இருந்ததுடன் சிங்களவர்களால் மிகுந்த மரியாதையுடனும் பாதுகாக்கப்புடனும் பேணப்பட்டு வந்த தேசிய பௌத்த விகாரைகளை அழித்தவர்கள்' என இலங்கை வம்சபரம்பரை கதைகளில் சோழர்கள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் திராவிடர்களால் ஒரு பௌத்த வணக்கத்தலத்திற்கு திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கிடைத்த கொடைகள் பற்றிய கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இதில் ஒரு கல்வெட்டு, முதலாவது ராஜேந்திர சோழ மன்னனின் ஆட்சிக் காலத்திற்கு உரியது. இந்த விகாரைக்கு சிங்களத்தில் 'வெல்கம் விஹாரை' என்று பெயரிடப்பட்டுள்ளது. புகழ்பெற்ற சோழ மன்னன் முதலாம் இராஜராஜனின் நினைவாக 'ராஜராஜபெரும்பள்ளி' அர்ப்பணிக்கப்பட்டதாக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (இலங்கை பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாறு, இரண்டாவது தொடர், பக். 395-396). சி.டபிள்யூ. நிக்கலஸ் இந்த ஆலயத்தின் விளக்கத்தையும் அளித்துள்ளார். சோழர்கள் புத்த விகாரைகளை அழித்ததாகவும், பொக்கிஷங்களை கொள்ளையடித்ததாகவும் கூறப்படுகின்றபோதும்

பழமையான வெல்கம் கோவில் தொடர்பில் வித்தியாசமாக நடந்துகொண்டனர் என்று கூறப்படுகிறது. தற்போது 'நாத்தனார் கோவில்' என்ற பெயரில் உள்ள இத்தலத்தின் புகழ்பெற்ற கல்வெட்டு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மிக முக்கியமான கல்வெட்டாக கருதப்படுகிறது. இக்கோயில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் சிங்கள பௌத்தர்களால் கட்டப்பட்டது. சோழர் ஆட்சியின் போது சோழர்கள் இக்கோயிலுக்கு உதவிகள் வழங்கி கட்டிடங்களை பழுதுபார்த்த பிறகு, மன்னரின் பெயரால் இது 'ராஜராஜ பெரும்பள்ளி' என்று அழைக்கப்பட்டது. புதிய பெயரும் சூட்டப்பட்டது. இந்த இடத்தில் அவர்களால் அமைக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இந்த பௌத்த விகாரைக்கு நன்கொடைகள் வழங்கப்பட்டதை கூறுவதாக ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடுகின்றனர். இந்தக் கல்வெட்டுகள், இது சோழ மன்னர்களான இராஜராஜன் மற்றும் ராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தது என சுட்டிக்காட்டுகின்றன. அக்காலக் கல்வெட்டுகளின்படி, கோவிலின் உரிமை சிங்களவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வெல்கம் கோயிலின் சிலை, கட்டிடம் என்பன இந்து கட்டிடக்கலைப்படி கட்டப்பட்டிருக்கிறது. இலங்கையில் உள்ள ஒரே தமிழ் விகாரை அல்லது பௌத்த தேவாலயம் இதுதான் (ல.இ.p.413).

வெல்கம் கோவிலில் 18 தமிழ் கல்வெட்டுக்கள் உள்ளன. அவை வெல்கம் கோவிலுக்கு சிங்கள, தமிழ் பக்தர்கள் வழங்கிய காணிக்கைகள் பற்றி குறிப்பிடுவதாக கூறும் தொல்பொருள் ஆய்வாளர் எல்லாவல மேதானந்த தேரரின் 07 கட்டுரைகள் சிங்கள மொழிபெயர்ப்புகளுடன் வழங்கப்பட்டுள்ளன (கிழக்கு மற்றும் வடக்கு மாகாணம் சிங்கள பௌத்த பாரம்பரியம், பக். 462-468).

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மேதானந்த தேரரால் 72 பௌத்த விகாரைகளும் வட மாகாணத்தில் 25 பௌத்த விகாரைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. 1980 ஆம் ஆண்டு, உதவி தொல்பொருள் ஆணையாளர் எம்.எச். சிறிசோமா வடக்கை ஆய்வு செய்தார். கிழக்கு பிராந்தியங்களில் ஆய்வு செய்த தொல்லியல் திணைக்களம், இது இலங்கையின் சிறந்த பௌத்த எச்சங்களைக் கொண்ட ஒரு தொல்பொருள் தளமாகும் என்றும் பௌத்த இடிபாடுகளுடன் 261 இடங்கள் இனங்காணப்பட்டு வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளது. அப்போது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் கைத்தொழில் மற்றும் விஞ்ஞான அமைச்சராக இருந்த களனி பிரதேசத்தைச் சேர்ந்த சிறில் மெத்தியூ எம்.பியின் முன்னுரைடனும் வரைபடத்துடனும் "சிங்களவர்களே! புத்த சாசனத்தை காப்பாற்றுங்கள்" (சேருவில பூஜா நகர அபிவிருத்திச் சங்கம்) என்ற ஒரு நூல் (1981) வெளியிடப்பட்டது. இது 1975 முதல் 2002 வரையான பாராளுமன்ற ஹன்சார்ட் அறிக்கையாகும். அதாவது வடக்கு, கிழக்குப் பிரிவுகளின் சிங்கள பௌத்த மரபுரிமையை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் திரு. மெத்யூ ஆற்றிய உரைகள் இந் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த உரைகளில் இருந்து வடக்கு கிழக்கு மாகாணங்கள் நீண்ட காலமாக சிங்கள பௌத்த அரசுக்கு உட்பட்டதாக இல்லை என்று கூறப்படுகிறது. இருந்ததைக் காட்டிலும், அந்த மாகாணங்களில் சிங்கள பௌத்த மக்கள் வாழ்ந்ததில்லை என்றும் அவற்றில் உள்ள பௌத்த சமய புராண இடிபாடுகளை தமிழர்கள் அழிக்கிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டிகாட்டியுள்ளது. இது பல அறிக்கைகளின் தொகுப்பாகும். திருகோணமலையில் கோகர்ண புத்த கோயிலின் பழங்கால கற்சிற்பங்கள் மற்றும் புத்தர் சிலைகள் கடலில் தூக்கி எறியப்பட்டுள்ளன. கிளிவெட்டியிலுள்ள ஸ்ரீவர்தன புத்தர்கோயில் சிலைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

குச்சவெளி கல்வெட்டுகளுக்கு அடுத்துள்ள பௌத்த தாகபா உடைக்கப்பட்டு கல்வெட்டில் தார்பூசி அழிக்கப்பட்டுள்ளது. இந்த ஆறாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளன. குச்சவெளியில் இருந்து சுமார் 05 மைல் தொலைவில் உள்ள செம்பிமலையில் அமைக்கப்பட்டிருந்த 9 1/2 அடி உயர புத்தர் சிலை அக்டோபர் 1978 பின் ஒரு மாதம் கழித்து அழிக்கப்பட்டுள்ளது. திருகோணமலைகந்தளாய் வீதியில் உள்ள விலாங்குளம் என்ற இடத்தில் ஒரு சில தமிழ் குடும்பங்கள் ஏரியை அண்டிய பகுதியில் புராதான தாகபாக்கள் இருந்த இடத்தில் வீடுகளை அமைத்துள்ளதுடன் கழிப்பறைகளும் கட்டியுள்ளனர். புத்தர் இலங்கைக்கு விஜயம் செய்த இடமான லங்கா பட்டணவில் உள்ள இரண்டு தாகபாக்களின் இடிபாடுகளின் மீது ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் நெலுங்குளத்தில் சுமார் 30 அடி உயர தாகபாவின் இடிபாடுகளின் மீது கொங்கிரீட் மதில் போடப்பட்டு, திரிசூலம் பொருத்தப்பட்டுள்ளது. இவை திரு. மெத்யூவால் வழங்கப்பட்ட சில விபரங்கள் மட்டுமே. இந்த விபரங்களிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியது என்னவென்றால் தமிழர்கள் மத்தியில் பௌத்த விரோதத் தன்மை காணப்படுவது போலவே சிங்களவர் மத்தியிலும் தமிழ் விரோதத் தன்மை காணப்படுகின்றது என்பதாகும். அதனால்தான் இலங்கையில் 'தமிழ் பௌத்தம்' போன்ற கருத்துருவுக்கு இடமில்லாதிருக்கிறது போலும்.

# பகுதி 2

இலங்கைத் தமிழர்களுக்கு
பௌத்தம் ஏன்
அந்நியமாகிப் போனது?
தமிழ் பௌத்தம் இலங்கையில் ஏன் அழிந்தது? இந்த கேள்விகளுக்கான பதில்கள் தமிழர் ஒருவரிடம் இருந்து தான் வர வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு தமிழரை எம்மால் காணமுடியவில்லை. அதனால் அந்த தமிழ் மனிதனைப் பற்றிய விவரங்கள் மற்றும் கேள்விகளுக்கான பதில்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் புத்த பாரம்பரியம் குறித்த சர்வதேச கல்வி மாநாடு 1992 மே 25 முதல் 30 வரை தென்னிந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தின் தலைநகரான சென்னையில் நடைபெற்றது. உலகம் முழுவதும் இருந்து இந்த மாநாட்டிற்கு வருகை தந்த நாற்பது அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். ஸ்வீடனில் உள்ள உப்சலா பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பானில் பௌத்த நன்கொடையாளர்கள், தமிழ்நாட்டின் அடையாறில் அமைந்துள்ள 'ஆசியாடிகா ஆய்வு மையம்' ஆகியன இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்ததன. மாநாடு ஆங்கிலத்தில் நடைபெற்றது.

முந்தைய மாநாட்டில் இலங்கையில் தமிழ் பௌத்தம் என்ற கருப்பொருள் தொடர்பில் மாநாட்டு கட்டுரை திரு.ஏ. வேலுப்பிள்ளை என்ற இலங்கைத் தமிழரால் சமர்ப்பிக்கப்பட்டது. அவர் ஸ்வீடனில் உள்ள உப்சலா பல்கலைக்கழகத்தின் வருகைதரு பேராசிரியர் ஆவார். முன்னதாகவே அவர் தமிழ் பௌத்தம் பற்றி இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றில் முதலாவதான *Religions In Yalpanam up to the Thirteenth Century AD* (1990) எனும் கட்டுரை *Lanka* சஞ்சிகையின் 5 ஆவது இதழில் எழுதப்பட்டது.
இரண்டாவது கட்டுரையின் தலைப்பு, *The Manimekalai - Its Historical Back ground And Indigenization of Buddhism* (1990). அடுத்ததாக உப்சலா பல்கலைக் கழகத்தின் மதக் கற்கை நெறிகள் தொடர்பான பேராசிரியர் பீட்டர் ஷால்க், (Peter Schalk) 1988 இல் எழுதிய *The History of Religions in Yalpanam* எனும் கட்டுரை முன்வைக்கப்பட்டது (இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது). அத்துடன் 1991 இல் மேற்படி இதழுக்காக எழுதப்பட்ட கட்டுரை அவர் ஒரு மிதவாதி என்பதை காட்டுகிறது. அதனை ஒரு ஆய்வுக் கட்டுரை என்று குறிப்பிட முடியாது. ஒரு கல்வி ஆவணம். விரிவுரைத் தொனி சில இடங்களில் மேலோங்கி உள்ளது. சில இடங்களில் வரலாறு திரிக்கப்பட்டும் உள்ளது.

ஆனால் சிங்கள பௌத்தத்திற்கு எதிரான தமிழ் பௌத்தத்தின் வடிவத்தை அடையாளப்படுத்துவதில் எதிர்ப்பின் காரணங்கள், எதிர்ப்பின் வரலாறு, அந்த காரணங்களின் உண்மை தன்மை ஆகியவற்றைப் புரிந்து கொள்ள வேலுப்பிள்ளையின் விரிவுரையும் உண்மையை உணர்த்தும் எழுத்தும் பயனுள்ளதாக இருந்தது என்பதை இவ்விடத்தில் கூற முடியும். வேலுப்பிள்ளையின் ஆங்கில ஆவணத்தின் சிங்கள மொழிபெயர்ப்பும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வேலுப்பிள்ளை தனது ஆங்கிலக் கட்டுரையில ஒரு இடத்திலாவது 'இலங்கை' என்ற வார்த்தைக்குப் பதிலாக *'Sri Lanka'* என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை. ஆங்கிலத்திலும் கூட *'Sri Lanka'*



கந்தரோடை விகாரைகள்

Image source - jaffna.city

என்று இருந்த வார்த்தையை 'இலங்கை' என்றே குறிப்பிடுகின்றார். வேலுப்பிள்ளையின் தொனியை அடையாளம் காண்பதற்காக, 'இலங்கை' என்று அழைக்கப்படுவதை, அப்படியே இருக்க அனுமதிப்போம். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பௌத்தம் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டது. அந்தத் தமிழ் பௌத்தத்தின் மறுமலர்ச்சியே தமிழ்ப் பண்பாட்டை மெருகூட்டுவதற்கு ஒரு காரணமாக

இருந்திருக்கலாம். தமிழ் பௌத்தத்தின் மீள்கட்டுமானத்தின் தேவை மிகவும் பாரதூரமானது. அதை நன்கு உணர்ந்த ஒரு மக்கள் கூட்டமாகவே இலங்கைத் தமிழ் மக்கள் இருக்கின்றனர். இலங்கை மக்கள் தொகையில் முக்கால்வாசி பேர் சிங்களவர்கள். அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பௌத்தர்கள். பல தசாப்தங்களிலிருந்து இப்போது வரை சிங்கள பௌத்த நலன்களே இலங்கை அரசியலின் அடிப்படையாக இருந்து வருகிறது. தமிழ் சிறுபான்மையினரால் இந்த நிலைமையை பொறுத்துக்கொள்ள முடியாது.

நாட்டுக்கு வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இலங்கையில் சிங்கள பௌத்தம் எந்த அளவுக்கு அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொள்வது கடினமானதாகவே இருக்கும். அது அப்படி நடக்கின்றதா என்று கற்பனை செய்வது கூட கடினம். 'அகிம்சை' போன்ற பௌத்தக் கருத்துக்கள் திரிபுபட்டே காணப்படுகின்றன. தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் பௌத்த பிக்குகள், பௌத்த தலைவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எதிர்ப்பு பிரச்சாரங்கள் தொடங்கப்படுகின்றன. இவற்றால் கோபமடைந்த சிங்கள மக்களின் நடவடிக்கைகளால் இரத்தம் சிந்திய நிகழ்வுகளும் வரலாற்றில் உள்ளன. ஆனால் இதற்கு சிங்கள பௌத்த இனவாதமே காரணமாக இருந்துள்ளதன்றி புத்தரின் மகத்தான போதனைகளை இழிவுபடுத்தும் அளவிற்கு தமிழ் மக்கள் மோசமானவர்கள் இல்லை.

பௌத்தம் தன் வரலாற்றுக் காலத்தில் தமிழர்களிடையே மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது என்பது உண்மைதான். தமிழ் பௌத்தர்கள் தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததற்கு பல வரலாற்று சான்றுகள் உள்ளன. தமிழ் பௌத்தர்களின் பாரம்பரிய தாயகமான இலங்கையிலேயே (The Traditional Home lands of Ilankai) அவர்களது பௌத்த கலைகள், கைவினைகள் பிறந்தன. இலங்கையில் அண்மைக்காலம் வரை விஞ்ஞான ரீதியாக தொல்லியல் அளவை முறைகள் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் எச்சங்கள் கூட அடிக்கடி சிங்கள பௌத்தர்களின் பாளி மூலங்களின் படி விளக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. பாளியில் தேரவாத பௌத்த தர்மங்களே அதிகம் பொதிந்துள்ளன. இந்த விளக்கங்களின்படி, இலங்கை தமிழ் பௌத்த மக்களுக்கு அதில் அதிகமாக இடமில்லை. இதனால் தமிழர் தாயகம் என்ற கருத்தாக்கம் பற்றி சிந்திக்க வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது (The Tamils have no place in Ilankai and the recognition of a tamil region is unthinkable).



இவ்வாறான இனவாத சித்தாந்தங்களுக்கு மத்தியில் இலங்கையில் யதார்த்தத்திற்கு இடமில்லை. இலங்கையில் தமிழ் மக்கள் பரந்து வாழ்ந்தாலும் அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயே அதிகமாக உள்ளனர். அந்த இரண்டு மாகாணங்களின் நிலப்பரப்பு, முழு இலங்கை நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு அளவு. 1930 வாக்கில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நாட்டின் மொத்த சிங்கள மக்கள் தொகையில் சிங்களவர்களின் எண்ணிக்கை 5% ஆகும். அந்த சதவீதம் 80 களின் நடுப்பகுதியில் 25 % ஆக உயர்ந்தது. காரணம், சுதந்திரத்திற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்கள அரசுகளால் பாரம்பரிய தமிழர் தாயகம் சிங்களவர்களுக்கு கையளிப்பு செய்யப்பட்டது. அதன் விளைவாக மணலாறு போன்ற தமிழ் கிராமப் பெயர் வெலிஓயா என்று சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

தமிழர்களின் கிராம நிலங்களை அபகரிப்பதை நியாயப்படுத்தும் சிங்களவர்கள், அவர்களின் பூமியில் பௌத்த இடிபாடுகள் இருப்பதனை காரணமாக முன்வைக்கிறார்கள். அத்தகைய இடிபாடுகள் முதலானவற்றை மீட்டெடுக்கவும் பாதுகாக்கவும் புத்த பிக்குகள் குடியேற்றப்பட்டனர். பின்னர் விகாரையை மையப்படுத்தி சிங்கள பௌத்த குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. புதிதாகக் குடியேற்றப்பட்ட இந்தச் சிங்களவர்களுக்கே அப்பகுதியின் நிர்வாகமும் வழங்கப்பட்டது. பயங்கரவாதத்தை ஒழிக்கிறோம் என்ற போர்வையில் அசல் தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறே மணலாறு வெலிஓயாவாக மாறியது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவாவில விஹாரை மற்றும் வெல்கம் விஹாரை தொடர்பிலும் இதுதான் நிலைமை. செருவாவில மற்றும் வெல்கம் விஹாரை பௌத்த வழிபாட்டுத் தலங்களாக மாற்றமடைந்தன. அருகில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டனர். அசல் தமிழ் குடியேறிகள் வெளியேற்றப்பட்டனர். தொல்பொருள் மதிப்புடையது என்று தீர்மானிக்கப்படாத இடத்திலும் கூட அரச மரங்களை நட்டு தொன்மையைக் காப்பாற்றுகிறோம் என்று பாசாங்கு செய்து அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த சிறில் மெத்யூ மேற்படி தமிழர் வாழ்கின்ற பகுதிகளில் பௌத்தர்களின் 276 இடிபாடுகள் இருப்பதாகவும், அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும்

யுனெஸ்கோவுக்கு பொய் தகவல்கள் அடங்கிய கடிதம் ஒன்றை எழுதி அனுப்பப்பினார்.

இத்தகைய நிலையில் 'பௌத்தம்' என்ற வார்த்தையைக் கேட்கக்கூட இலங்கைத் தமிழ் மக்கள் அஞ்சுகின்ற நிலைமை ஏற்பட்டது. தமிழர் பகுதியில் பௌத்த இடிபாடுகள் இருப்பதாக கேள்விப்பட்ட உடனேயே சிங்களவர்கள் தங்களை வெளியேற்றி விடுவார்கள் என தமிழ் மக்கள் கருதுகின்றனர். பௌத்தர்களுக்கு ஒவ்வொரு பௌத்த எச்சமும் சிங்கள பௌத்த எச்சமாகவே தோன்றுகிறது. அதனால் தமிழ் மக்கள் பௌத்த சிங்கள இடிபாடுகளை அழிப்பதாகவும் கூறுகிறார்கள்.

தீபவம்சம், மகாவம்சம் முதலான பாளி குலக் கதைகளில் கூறப்படும் தொன்மங்கள் சிங்களவர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்கவை. மேற்படி வம்சக் கதைகளின் வாயிலாகவே தூய புத்த தர்மம் சிங்களவர்களால் இலங்கையில் பாதுகாக்கப்படுகிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். புத்தர் மூன்று முறை இலங்கைக்கு விஜயம் செய்தார். அதில் இரண்டு விஜயங்கள் நாகர்கள் வசிக்கும் நாகதீப மற்றும் களனி ஆகிய இடங்களில் நடைபெற்றன. மகாவம்சத்தின் படி, சிங்களவர்களின் முன்னோர்களான விஜய என்பவன் இந்தியாவின் வடநாட்டில் இருந்து வந்து இந்நாட்டில் இறங்கியதும் புத்தரின் பரிநிர்வாணம் நிகழ்ந்ததும் அதே நாளிலாகும்.

மிஹிந்த தேரர் கிபி. 3 ஆம் நூற்றாண்டில் பௌத்தத்தை இலங்கைக்கு கொண்டு வந்தார் என்பது உண்மையென்றாலும், அதற்கு முன்பே இங்கு பௌத்தம் இருந்திருக்கிறது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

வம்ச பரம்பரைக் கதைகளின்படி, சிங்கள மன்னர்கள் முழு நாட்டையும் ஒன்றிணைத்தனர் என்று கூறப்படுகிறது. மன்னர் புத்த மதத்தைத் தழுவிய உடனேயே நாட்டு மக்களும் பௌத்தர்களாக மாறினர். ஆயினும் இத்தகைய பாளி வம்சக் கதைகளில் கிடைக்கப்பெறும் ஆதாரங்களை விட, கல்வெட்டுகள் கடந்த காலத்தைப் பற்றிய உண்மையான தகவல்களைக் கூறுகின்றன. அதிர்ஷ்டவசமாக, பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்ட பல பிராகிருத ஆவணங்கள் கிடைத்துள்ளன. எனினும், பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்களின் விளக்கம் சிங்கள பௌத்தர்களின் மகிழ்ச்சிக்காகவே எழுதப்பட்டுள்ளது என்று தோன்றுகிறது.

பிராகிருத மொழியில் எழுதப்பட்ட பிராமி கல்வெட்டுகளும் இந்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதும் அவற்றின்படி வட இந்திய மக்கள் மட்டுமே இங்கே இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. இலங்கையில் அன்றைய காலத்தில் வலுவான தமிழ் அல்லது திராவிட சமூகம் வாழ்ந்ததாக இலங்கை தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனர். இலங்கை மற்றும் தென்னிந்திய திராவிட தொடர்புகளை, பண்டைய பானை ஓடுகள் நிரூபிக்கின்றன. இவை அனுராதபுரத்திற்குள் பல பிரதேசங்களில் காணப்பட்டமை நிரூபணமாகியுள்ளது. வட இந்திய ஆரியர்களைக் காட்டிலும் தென்னிந்திய திராவிடர்களைக் கொண்ட இலங்கை இராச்சியம் தொடர்பாக பேராசிரியர் P.E.E. பெர்னாண்டோ, Dr சுதர்சன் செனவிரத்ன, பேராசிரியர் டபிள்யூ.எஸ். கருணாரத்ன, பேராசிரியர் ஆர்.ஏ.எல்.எச். குணவர்தன முதலிய சிங்கள அறிஞர்களும் கருத்துக் கூறியுள்ளனர். மேற்படி கருத்துக் குறித்து அவர்கள் பேராசிரியர் பரணவிதானவிடம் கேள்வி எழுப்பி உள்ளார்கள்.

பௌத்தம் பிராகிருத மொழி மூலம் இலங்கைக்கு வந்தது என்பது இரகசியமல்ல. பிராகிருதத்தில், பழங்கால பிராமி எழுத்துக்களும் முழுமையாக திராவிடமாகவே வெளியிடப்பட்டுள்ளது. கிபி. 2 ஆம் நூற்றாண்டில் தொலமி வரைந்த இலங்கை தீவின் முதல் வரைபடத்தின்படி, தெற்கில் உள்ள மக்கள் சிங்கள மொழியை பேசவில்லை மாறாக தமிழ் மொழியையே பேசியுள்ளனர். மேற்படி கருத்துக்களின்படி பண்டைய பௌத்தம் சிங்கள பௌத்தமாக இருந்திருக்க முடியாது.

பாளி நூல்களின்படி, பேரரசர் அசோகர் உலகின் அனைத்து நாடுகளுக்கும் பௌத்த தர்ம தூதுக்குழுக்களை அனுப்பினார். அசோகப் பேரரசின் தெற்கு எல்லை தமிழ்நாட்டின் வடக்கு எல்லை வரை பரவியிருந்தது. ஆனால் தமிழகத்தில் பௌத்த தர்மம் பரப்பப்படுவதைப் பற்றி பாளி நூல்கள் மௌனமாகவே உள்ளன. பாளி எழுத்தாளர்கள், அசோகரின் மகன் மகிந்த தேரர் இலங்கைக்கு ஆகாய மார்க்கமாகவே வந்தார் என்று கூறியிருக்கின்றனர். அதேபோல் பிக்குனி சங்கமித்த வெகு தூரத்திலிருந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக வந்தாள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தை வேண்டுமென்றே புறக்கணிப்பதே இப்படி கூறுவதற்கு காரணம். பல வரலாற்றாசிரியர்கள் அசோக மன்னரின் பல கல்வெட்டுகளைக் கொண்டு தமிழ் பௌத்தத்துக்கும் சிங்கள பௌத்தத்துக்குமான தொடர்பை நிரூபித்துள்ளனர். அந்தக் கல்வெட்டுக்களின் படி கேரளபுத்திரன், சத்தியபுத்திரன், சோழன், பாண்டிய, தம்பபண்ணி

ஆகிய பிரதேசங்களுக்கு மன்னர் அசோகர் தனது பௌத்ததர்ம தூதுக்குழுக்களை அனுப்பினார் என்று தெரிகிறது. முதலில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பிரதேசங்களும் தமிழ்நாட்டை சேர்ந்தவை என வரலாற்றாசிரியர்கள் அடையாளம் கண்டுள்ளனர். ஐந்தாவது தம்பபண்ணி என்பது இலங்கை என்று அறியப்பட்டுள்ளது. அசோகப் பேரரசர் இந்தப் பகுதிகள் எதையும் தனித்தனியாக இனம் காணவில்லை. அதற்குக் காரணம் மூன்றாம் நூற்றாண்டில் இந்த ஐந்து தமிழ் பிரதேசமும் ஒன்றாக இணைந்த தமிழ் மாநிலமாக கருதப்பட்டதாக இருக்கலாம்.



**வல்லிபுரம் புத்தர் சிலை**

Image source - namathu.blogspot.com

அசோகப் பேரரசரின் பௌத்த தர்ம தூதர்கள் சென்ற மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது பௌத்த தர்மத்தை விரிவாக்கும் நடவடிக்கைகள் இங்கு மிக வெற்றிகரமாக இருந்துள்ளன. இலங்கை பேராசிரியர் கலாநிதி பொன்னம்பலம் ரகுபதியால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் படி இங்கு காணப்பட்ட பௌத்த தர்மம் நாட்டுக்கு மத்தியில் காணப்பட்ட பௌத்தம் அல்ல, மாறாக வணிகத்துடன் தொடர்புடைய புத்த மதம் ஆகும். அவரது கூற்றுப்படி கந்தரோடை ஸ்தூபியானது, அமராவதி அல்லது நாகர்ஜுனகொண்டா போன்ற அமைப்பில் காணப்படுகிறதேயன்றி நாட்டின் தெற்கு பகுதியில் அல்லது அனுராதபுரத்தில் அமைந்துள்ள ஸ்தூபிகளுக்கு சமமானதாக அல்ல. யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட பௌத்த கட்டிடங்களுக்கு உள்ளூர் மூலப் பொருட்களான அரிதான பவளம் மற்றும் சுண்ணாம்புக் கற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. காணப்படும் மட்பாண்டங்களும் தென்னிந்திய கலாச்சாரத்தை ஒத்தவையாகவே உள்ளன. பாளி நூல் ஆசிரியர்களின் கூற்றுப்படி, இங்கு வாழ்ந்த மக்கள் நாக கோத்திரத்தைச் சேர்நத பூர்வ ஆரிய குடியேற்றக்காரர்கள் என்பது தெரியவந்துள்ளது.

சோழர்கள் 'நாகநாடு' என்ற பிரதேசத்துடன் திருமணப் பாரம்பரியங்கள் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டதாக மணிமேகலை காவியம் விபரிக்கிறது. கலாநிதி ரகுபதியின் கூற்றுப்படி, யாழ்ப்பாணத்தில் பௌத்தம் கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து கிபி 12 ஆம் நூற்றாண்டு வரை பரவிக் காணப்பட்டுள்ளது. நாகநாடு என்பது 'இலங்காபதீபம்' அல்லது 'இரத்தினதீபம்' என அழைக்கப்பட்டது என்றும் ஆனால் அது இலங்கையில் இருந்து பிரிந்த ஒரு சுயாதீனமான நாடாக இருந்தது என்றும் பீட்டர் ஷால்க் கூறுகிறார். கலாநிதி ரகுபதி, இந்த சுதந்திர ராஜ்ஜியம் 5 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சி அடைந்தது என தனது தொல்லியல் ஆய்வுகளின் வாயிலாக குறித்துக் காட்டுகின்றார். நாகநாடு பிரதேசத்தின் பிராந்தியத் தலைவர் ஒருவரால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகிழக்கு பகுதியில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டதாக வல்லிபுரம் பொன் தகட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிபி. 6 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தம் வீழ்ச்சியடைய தொடங்கியது. இதற்கு இரண்டு விஷயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. முதலாவது அனுராதபுரத்தில் இருந்து ஆட்சி செய்த சிங்கள மன்னர்கள் யாழ்ப்பாணத்தின் மீது அதிகாரத்தை பிரயோகித்தமை. இரண்டாவது, சிங்கள பௌத்த போதகர்கள் யாழ்ப்பாணம் செல்வதில் அக்கறை காட்டமை. ஆனால் கிபி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்களக் கல்வெட்டு ஒன்று யாழ்ப்பாணத்தின் கந்தரோடை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது தற்போது யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அசோக சக்கரவர்த்தியின் விருப்பமான பெயரான 'தேவநம் ப்ரிய' அவருக்கு மரியாதை தரும் பெயராக அனுராதபுர மன்னரால் பயன்படுத்தப்பட்டது. சேர நாடு அல்லது கேரளா, திராவிட நாட்டு தமிழ் மன்னர்களும்கூட 'தேவநம் ப்ரிய' என்ற பெயரை 'தேவனுக்கு பிரியமானவர்' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தியதாக கலாநிதி எம்.ஜி.எஸ். நாராயணன் கூறுகிறார். இதேபோல் மேலும் இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை 'வானவரன்பன்' மற்றும் 'இமயவரம்பன்' ஆகியனவாகும்.

அசோகரால் பௌத்தம் மதம் கேரளாவிற்கு





Fig. 1. Gold Plate Grant (from Vallipuram) by King Vasabha (67–111 A.D.). The surface measures 3.5 in. by 1 in.; weight: 69.5 grains.



**வல்லிபுரம் பொன் தகடு**
**Image source - amazinglanka.com**

கொண்டுவரப்பட்டது அசோகரால் அனுப்பிவைக்கப்பட்ட பௌத்த தர்ம தூதுவர்களாலேயாகும். பௌத்தம் கேரளா வழியாக யாழ்ப்பாணத்திற்கு வந்ததாக ஒரு கருத்து உள்ளது. அதற்கு காரணம் யாழ்ப்பாண குடா நாட்டை அண்டிய பகுதிகளில் பல தீவுகள் ஆழமற்ற கடலில் அமைந்திருப்பதனாலாகும். இந்த கடல் மார்க்கம் சங்கு மற்றும் முத்து சிப்பிகளுக்கு பெயர் பெற்றதாகும். வரலாற்றுக் காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் முத்து, சிற்பிகளை சேகரித்து ஆபரணங்கள் செய்வதற்கும் வணிகத்தில் ஈடுபடவும் பழகியிருந்தார்கள். இந்த உண்மை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கேரளாவை சேர்ந்த இந்த மக்கள் ‘முக்குவர்’ சாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கிபி. ஆறாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் குடியேறி இருந்ததாகக் கருதப்படுகின்றது. தமிழ் காவியமான மணிமேகலையில் மணிபல்லவம் பற்றிய அறிமுகத்தில் சங்குகள், முத்துச்சிப்பிகள், பவளப்பாறைகள் பற்றிய குறிப்பும் இவை அக்காலப் பகுதியில் இந்த சமூகத்தின் பொருளாதாரத்திற்கு பங்களித்தமை தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்குவர்கள் புலம்பெயர் சமூகத்தினராக இருந்ததுடன் வர்த்தக சமூகமாக இருந்து தமிழ் பௌத்தத்தை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்ததார்கள் என்று கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 18 தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளில் 9 ஆய்வுகளில் புத்த கட்டிடங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை சிறிய தீவுகளிலும், களப்பு மற்றும் கடற்கரைகளுக்கு அருகிலும் காணப்பட்டுள்ளன. நாகநாடு என்று அழைக்கப்பட்ட பிரதேசத்தின் தலைநகரை கந்தரோடை என்று அழைத்தார்கள். வல்லிபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தர் சிலை அமராவதி புத்தர் சிலையின் வடிவமைப்புக் குணாதிசயங்களைக் கொண்டிருந்தாலும், அமராவதி கல்வெட்டுக்களிலும் வல்லிபுரம் தங்கத் தகட்டிலும் காணப்படுகின்ற மொழியை ஒப்பிடும்போது, அது ஒத்ததாக இல்லை என பேராசிரியர் பரணவிதான கூறுவது சிங்களவர்களை மகிழ்விப்பதற்காகவே எனக் கருத இடமுண்டு.

வல்லிபுரம் தங்கத் தகட்டில் உள்ள பிராகிருத மொழியில் திராவிடத்தின் செல்வாக்கு காணப்படுகிறது என பின்னர் அறிவிக்கப்பட்டது. ஆந்திரப் பிரதேசத்தில் இக்காலத்தைச் சேர்ந்த பிராகிருதக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்களும் திராவிட பாணியைச் சேர்ந்தவை என பேராசிரியர் பீட்டர் ஷால்க் குறிப்பிடுகின்கிறார். வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்கத்தகட்டின் மொழியானது ஆந்திராவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் காணப்படுகின்ற மொழியான பிராகிருதத்தில் எழுதப்பட்டிருக்கின்றமையானது, பண்டைய பிராமி கல்வெட்டுகளோடு ஒப்பிடும்போது ஒத்ததாக காணப்படுகின்றன. இதே வகையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தங்க நாணயமும் அதே மொழி வகைக்குள் அடங்குகின்றன. இந்த திராவிடத் தாக்கத்தை புரிந்துகொள்ள தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பல்லவர்களின் சமகாலத்து கல்வெட்டுக்களையும் வல்லிபுரம் தங்கத்தகட்டு குறிப்புக்களையும் பிராகிருத கல்வெட்டுக்களுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்வது சாலச் சிறந்தது.

வல்லிபுரம் பொன் தகடு மிகச் சுருக்கமான ஆவணம் என்பதால் அதனை உறுதியான முறையில் அலசல் செய்வது கடினம் என்பது உண்மைதான். ஆனால் அதைப் பற்றி பரணவிதான சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. வல்லிபுரம் புத்தர் சிலை அமராவதி பௌத்த கலை பாரம்பரியத்தால் ஈர்க்கப்பட்டிருந்தாலும், கந்தரோடை ஸ்தூபிகளைப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட புத்த மதம் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தது என்பது தெளிவாகிறது. இப்படித்தான் பௌத்தம் பல வகைகளில் வேறுபட்டு இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட பௌத்தம் ஒருபோதும் சிங்கள பௌத்தத்திற்கு சமமானதாக இருக்கவில்லை.

வடஇந்திய பௌத்தம் யாழ்ப்பாணத்திற்கும் வந்தது என்பதற்கு கலாநிதி ரகுபதி போதுமான சான்றுகளை வம்சக் கதைகளின் வாயிலாக முன் வைத்துள்ளார். காசி நாட்டிலிருந்து காரதீப நகருக்கு ஒரு துறவி

பயணம் செய்ததாக ஜாதகக் கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது அவற்றுள் ஒன்று. காரதீபம் என்றால் யாழ்ப்பாணத்தின் காரைநகர் என்றும், இன்றும் காரைநகர் கரையில் 'விஹாரகொடல்ல' என்ற ஒரு இடம் காணப்படுகின்றது என்றும் இது 'வேறபிட்டி' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது என்றும் கலாநிதி ரகுபதி எடுத்துக் கூறுகிறார்.

இளவாலை, கரவெட்டி, மந்துவில், பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களிலிருந்தும் பௌத்த இடிபாடுகள் கிடைத்துள்ளன. தமிழ்ச் சொல்லான பச்சிலைப்பள்ளி என்பது சமஸ்கிருதத்தில் பர்ணஷாலா, பாளியில் 'பன்னஷாலா' என்ற சொற்களைப் போன்றது. இது ஆனையிறவு என்ற இடத்துக்கு அருகே அமைந்துள்ள ஒரு தமிழ் பௌத்த விகாரை ஆகும். பௌத்தம் இலங்கையின் தென் மாகாணத்தில் இருந்து வந்தது என்ற கூற்று உண்மையாயின் அதற்கான நுழைவாயில் ஆனையிறவில் அமைந்துள்ள பச்சிலைப்பள்ளி வாயிலாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடந்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள மற்ற பௌத்த மையங்களுக்கு பச்சிலைப்பள்ளி வழியாகவே பௌத்தம் பரவியது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாக கோத்திரர்கள் பௌத்தத்தை ஏற்றுக்கொண்டது பற்றிய பாளி மரபுவழிக் கதைகளுக்கு புதிய விளக்கம் அளித்து தமிழ் பௌத்தமத வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சப்பட்டுள்ளது.

இலங்கையில் சிங்கள அரசு அமைவதற்கு முன்னரேயே நாகதீபமும் களனியும் இருந்துள்ளதுடன் அவற்றுக்கு புத்தபெருமான் விஜயம் செய்துள்ளார் என்பதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது நாகதீபம் அல்லது நாகநாட்டின் நாக கோத்திரர்கள் தமிழ் பேசினர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அப்படியானால் அப்போது இலங்கையில் காணப்பட்ட பௌத்தம் தமிழ் பௌத்தமாகவே இருந்திருக்க வேண்டும். பின்னர் இந்த தமிழ் பௌத்தம் மகிந்த தேரரின் வருகையின் பின்னர் சிங்கள் பௌத்தத்துடன் கலந்திருக்க வேண்டும்.

மணிமேகலை என்ற பிரசித்தி பெற்ற தமிழ் காவியத்தில் குறிப்பிடப்படுகின்ற 'மணிபல்லவம்' என்ற பௌத்த வணக்கத்தலம் புத்தரின் பாதம் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு புனிதத் தலமாகும். இது தமிழ் பௌத்தர்களின் பிரதான வணக்கஸ்தலமாக இருந்ததுடன் அது 'ஸ்ரீ பாத'





"ஸ்ரீ பாத"
Image source - www.ceylonexpeditions.com

என்று வணங்கப்படுகின்ற சிங்களவர்களின் புனித பூமியாகவும் கருதப்பட்டதால் அது சிங்களவர்களுக்கும் ஒரு பிரதான வணக்கஸ்தலம் ஆனது. மேற்படி மணிபல்லவத்தில் காணப்பட்ட ஸ்ரீபாத பௌத்த வணக்கஸ்தலம், ஆரம்பகாலத்தில் தமிழ் பௌத்தர்களின் வணக்கஸ்தலமாக மட்டுமே இருந்த போதும் பின்னர் அது சிங்களவர்களால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.

மணிமேகலை என்ற பௌத்த மத காவியம், குறிப்பாக தமிழில் பௌத்த மதத்தை பிரச்சாரப்படுத்தும் முக்கிய காவியமாக திகழ்ந்த போதும், அது ஒரு இடத்தில்கூட ஒரு சிங்கள பௌத்த மன்னர் பற்றி குறிப்பிடவில்லை என்பது இங்கே மனதிற் கொள்ளவேண்டிய ஒரு விடயமாகும். அதுமட்டுமன்றி இந்தக் காவியத்தில் ஸ்ரீ மகாபோதி பற்றியோ, மிகிந்தலை பற்றியோ, மகா விகாரை தொடர்பிலோ, ஸ்ரீ தலதா மாளிகை பற்றியோ எங்கும் குறிப்பிடப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

கிபி. 7 ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழ்நாட்டை மையமாகக் கொண்டு இந்து மத தர்மமானது வேகமாகப் பரவத் தொடங்கியது. ஞானசம்பந்தர், அப்பர் ஆகிய சைவ சமய நாயன்மார்கள் தமிழ்நாட்டில் பௌத்தர்களுக்கும் ஜைனர்களுக்கும் பெரும் தொந்தரவுகளைச் செய்து வந்தனர். சம்பந்தர், தேவார திருப்பதிகம் என்ற பக்தி கீதங்களை எழுதி பௌத்த சமயத்தை காரசாரமாக விமர்சித்தார். 'பெரியபுராணம்' என்ற சைவ சமய நூல் கூறுகின்றதன்படி சோழ மண்டலத்தில் 'போதிமங்கை' என்ற இடத்தில் ஞானசம்பந்தர் அமைதியாக சைவ சமய மதப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போதும், சில சமயங்களில் அவர் கலகக்காரர் போல் நடந்து கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. மேற்படி இடத்தின் பெயரால் கொண்டு நடத்தப்பட்டது ஒரு பௌத்த வணக்கஸ்தலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பகுதி 3

தமிழ்நாட்டில் ஏற்பட்ட சைவ மறுமலர்ச்சி இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கருதப்பட முடியும். இரு நாடுகளுக்கும் இடையில் இந்து சமய உறவுகள் இருந்ததற்கான ஆதாரமாக இலங்கை வடமாகாணத்தில் அமைந்துள்ள திருக்கேதீசுவரம் பற்றிய பக்தி பாடல் ஒன்றும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் கோயிலைப் பற்றிய பக்தி பாடல் ஒன்றும் திருஞானசம்பந்தரால் இயற்றப்பட்டுள்ளமையை கூறலாம். மேலும் சைவ மத பிரச்சாரகராக விளங்கிய சுந்தரர் கிபி. 9 ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இந்த சிவன் கோவிலில் ‘கேது வழிபாடு’ ஒன்றையும் நடத்தியுள்ளதாக தெரிகிறது. ‘கேது’ என்பது பாம்பின் வடிவம். இங்கு ‘சைவ பாத’ வழிபாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நாக பழங்குடியினரிடையே இருந்த ‘புத்தர் சிரிபா’ வழிபாடு என்பது ‘ஸ்ரீ பாதஸ்தான புத்தர் சிரிபா வந்தனா’ பாதயாத்திரைகளில் இருந்து பிறந்திருக்கலாம் என்று நினைக்கலாம்.

தமிழ் பௌத்தரும் தமிழ் சிவபக்தரும் பொதுவான இலக்கை அடையும் மார்க்கம் ஒன்று அவசியமாகிறது. அதுவே மறுபிறவி தொடர்பான கருத்து. மறுபிறப்பு என்பது கர்மாவின் காரணமாக நிகழ்கின்றது என்று இரு குழுக்களும் நம்புகின்றன. ஆனால் இதில் ஒரு வித்தியாசம் உள்ளது. அதாவது, பௌத்தர் தர்மத்தின் மூலம் கர்மாவை வெல்கிறார். சிவ பக்தன் சிவ நம்பிக்கை மூலம் சிவன் மீது நம்பிக்கை கொண்ட வாழ்க்கையை நடத்துவதன் மூலம் அதனை அடையலாம் என்று நம்புகிறான். சிவன்பார்வதி காதல் உறவு இதற்கு ஒரு நல்ல உதாரணம். சைவ தர்மப் பிரச்சாரகர் சம்பந்தர் எழுதிய பக்திப் பாடல்களில் இந்த விஷயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன என்பது அறியக் கிடைக்கின்றது.

திருகோணமலையில் உள்ள சிவன் கோயில், சம்பந்தர் என்ற பெரும் சிவ பக்தரால் போற்றிப் பாடப்பட்ட ஒரு சிவஸ்தலமாகும். அவர் அதை தெற்கு கைலாஷம் என்றே கருதினார் (கைலாச பர்வதம் என்பதே சிவபெருமானின் வாச பூமியாகும்). கைலாசம் என்பது பசு உருவம் பொறிக்கப்பட்ட கொடியால் உருவகப்படுத்தப்படுகிறது. சம்பந்தர் தம் பாசுரத்தில், முதலில் கோவிலில் உள்ள கொடி பற்றிய கீர்த்தனையையே முன்வைத்துள்ளார். அவரது கீர்த்தனையின் இறுதியில் திருகோணமலையில் உள்ள இக்கோயில் அனைத்து சிவன் கோவில்களைக் காட்டிலும் உயர்வானது என்று குறிப்பிட்டுள்ளதுடன் அவர்களுக்காக அல்ல, அங்கு வாழும் சிவபெருமானுக்காக பாடுபவர்களாக இருந்தாலும் சரி, கேட்பவராக இருந்தாலும் சரி, அனைவரும் ஒரே மாதிரியான உடல் வடிவத்திலேயே சுவர்க்கபுரியை அடைவார்கள் என்று கூறப்படுகிறது.

தமிழ் பௌத்தத்தின் வீழ்ச்சிக்கு இது போன்ற பாடல்கள்தான் காரணமாக அமைந்தன என்று கூறப்பட்ட போதும், யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கைத் தீவு முழுவதும் தமிழ் பௌத்தத்தின் வீழ்ச்சிக்கும் இது காரணமாக அமைந்தது. சிவதர்ம போதனையை செய்ய முனைந்தவர்கள் அனைவரிலும் மாணிக்க வாசகர் சுவாமிகள் என்பவரே ஈழத்தில் இந்து தர்மம் மேலெழுந்து வர மூல காரணமாக இருந்தவராகும் என்று கூற முடியும் (*The furtherance of saivism in Ilam*). இது தொடர்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால 1958 இல் வெளியிடப்பட்ட ஔவை எஸ். துரைசாமி பிள்ளையின் ‘தமிழ் இலக்கிய வரலாறு’ என்ற இலக்கியம் சம்பந்தப்பட்ட நூலில் ஒரு அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகரின் சொந்த ஊர் தமிழ்நாடு. கிபி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பாண்டிய மன்னனுக்கு குதிரைகளை வாங்கிக் கொடுக்கச் சென்று சிவபக்தனாக மாறியதாக நம்பப்படுகிறது. திருப்பெருந்துறை என்ற இடத்தில் பணத்தை எடுத்துக்கொண்டு குதிரை வாங்குவதற்காக புறப்பட்ட இவருடன் திருவாதவூர் என்ற இடத்தில் இருந்து ஈழத்து அரசர் ஒருவர் இணைந்து சிதம்பரம் சென்றதாகவும் அவ்வேளை மாணிக்கவாசகர் பௌத்த பிக்கு ஒருவருடன் மத வாதவிவாதத்தில் ஈடுபட்டதாகவும் பௌத்த துறவி வாதத்தில் தோற்றத்துடன் அவரும் சிவபக்தனாக மாறினார் என்றும் அந்த ஈழ மன்னனும் சிவ பக்தனாக மாறியதுடன் அரசனின் மகளையும் அவள் ஊமையாக இருந்ததிலிருந்து குணமாக்கினார் என்றும் புராணம் கூறுகிறது.

மேற் சொல்லப்பட்ட நூலில் இப்படிப்பட்ட கதைகள் பல இருந்தாலும், அப்படிப்பட்ட ஒரு ஈழத்துச் சிங்கள மன்னன் தொடர்பில் சரித்திர சான்றுகள் இல்லை. சில சமயங்களில் இந்த ஈழ மன்னன் என்பவன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஒரு மன்னனாக இருக்கலாம். எப்படி இருப்பினும், இந்த கருத்துக்களிலிருந்து வெளிப்படும் ஒரு உண்மை உள்ளது.
அதாவது யாழ்ப்பாணக் கடற்கரையானது தமிழகக் கடற்கரையில் உள்ள திருப்பெருந்துறைக்கு மிக அருகில் உள்ளது. சிறிது காலம் மாணிக்கவாசகர் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து இந்து மதப் பிரச்சாரத்தில்

**தமிழ் பௌத்தரும் தமிழ் சிவபக்தரும் பொதுவான இலக்கை அடையும் மார்க்கம் ஒன்று அவசியமாகிறது. அதுவே மறுபிறவி தொடர்பான கருத்து. மறுபிறப்பு என்பது கர்மாவின் காரணமாக நிகழ்கின்றது என்று இரு குழுக்களும் நம்புகின்றன. ஆனால் இதில் ஒரு வித்தியாசம் உள்ளது. அதாவது, பௌத்தர் தர்மத்தின் மூலம் கர்மாவை வெல்கிறார்.**

ஈடுபட்டிருக்கலாம் என்று ஊகிக்க முடியும். அவர் வியாபாரிகள் மற்றும் மீனவர்களுடன் மன்னாருக்கு வந்தார் என்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணினார் என்றும் தெரிய வருகிறது. மாணிக்கவாசகர், இலங்கையில் ஒரு மத குருவாக பிரசித்தம் பெற்றிருந்தார் என்றும் அதற்கு சாட்சியாக கொழும்பு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் கிபி.11 ஆம் நூற்றாண்டை சேர்ந்த மாணிக்கவாசகரின் பித்தளைச் சிலையையும் கூறலாம்.

இலங்கையில் சைவ சமயம் பரவியதற்கு இங்கு வசித்த சோழ மக்கள் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இந்த மக்கள் குழுவினருக்கு சமய வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக கிபி. 11 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் முதலாம் இராஜேந்திர மன்னர் நல்லூர் சிவன் கோவிலை கட்டி பூஜை செய்ததாக வரலாற்று சான்றுகள் உள்ளன. பின்னர் தமிழ் பௌத்த மேலாதிக்கத்திற்கு எதிராக நல்லூர் கந்தரோடையை மையமாக கொண்ட தமிழ் சைவசமய ஆதிக்கம் உயர்ச்சியடைந்திருக்கலாம் என்று அனுமானிக்க இடம் உண்டு. மாவிட்டபுரத்தில் சோழ இளவரசி ஒருவர் கந்தசுவாமி கோயில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியதாக வரலாற்று சான்றுகள் உள்ளன. அவர் கதிரமலை என்ற இடத்தில் வசித்த யாழ்ப்பாண அரசரை மணந்தார் என்றும், அவர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களை சைவத்திற்கு மாற்றியதாகவும் புராணக்கதைகள் கூறுகின்றன. கதிரமலை அருகே உள்ள கந்தரோடை தீவுகளின் கூட்டமாகும். கந்தரோடை என்பது புதிய பெயர். முதலில் இருந்த பெயர் இந்து மதத்தை சேர்ந்தது என்று கூறப்படுகிறது.

பாளி மரபுப்படி சோழர்கள் பௌத்தத்தின் எதிரிகள். ஆனால் 'சோழர்கால பௌத்தம்' என்றொரு கருத்து இருந்ததைக் குறிப்பிடத்தான் வேண்டும். இங்கு சோழர்கள் பௌத்த சமய அனுசரணையாளர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ விஜய என்ற பேரரசரின் வேண்டுகோளின்படி சோழர்களால் சோழர் துறைமுகத்திற்கு அருகில் நாகப்பட்டிணம் என்ற இடத்தில் ஒரு பெரிய புத்த விஹாரை கட்டப்பட்டது. அதற்கு ஆனைமங்கலம் என்ற கிராமத்தில் உள்ள அனைவரும் பங்களிப்பு செய்துள்ளனர் என்று தெரிய வருகிறது. இது தொடர்பில் லாகர் லேடன் (Larger Laydon) அவர்களின் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராஜராஜன் என்ற சோழ மன்னன் ஒரு புத்த கோவிலுக்கு தன் பெயரை வைத்திருக்கலாம் என்று நினைப்பதற்கான காரணங்கள் உள்ளன. அவரது பெரும் கோயில் திட்டமான தஞ்சாவூரில் அமைக்கப்பட்ட சிவன் கோவிலுக்கு எவ்வாறு 'ராஜராஜேஸ்வரம்' என்று பெயர் சூட்டினாரோ அதேபோல் திருகோணமலை சிவன் கோவிலுக்கு அருகில் உள்ள பௌத்த விகாரைக்கு 'இராஜராஜப்பெரும்பள்ளி' என்று பெயர் வைக்க இணக்கம் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது. 'பெரும்பள்ளி' என்பதனை தமிழில் 'மகா விஹாரை' என்று குறிப்பிடலாம். 'இராஜராஜன்' என்ற பெயர் சோழ மன்னனால் சேர்க்கப்பட்டது. இந்த விஹாரை திருகோணமலையில் உள்ள பெரியகுளம் என்ற இடத்தில் உள்ளது. இந்த இடத்தைப் பற்றி மற்ற விவரங்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

சோழர்களின் வருகைக்கு முன்னர் கடலோரப் பகுதிகளில் தமிழ் பௌத்தம் பரவி இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. கிழக்கு கடற்கரையில் திரியாய் மற்றும் குச்சவேலியில் காணப்படுகின்ற கிபி. 8,9 ஆம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட பல்லவகால எழுத்துக்களில் எழுதப்பட்ட சமஸ்கிருத கல்வெட்டுக்களிலிருந்து திருகோணமலையில் பல நூற்றாண்டுகளாக தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பது புலனாகிறது. இவர்கள் இராஜராஜபெரும்பள்ளி என்ற தமிழ் பௌத்த விஹாரை கட்டப்பட்ட பிறகு அவர்கள் அதனை பூஜிப்பவர்களாக ஆனார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இலங்கையில் தமிழ் பௌத்தம், தமிழ் விஹாரை கட்டிடக்கலை போன்றவை சோழர்களின் ஆதரவிலேயே பிறந்தன. இன்னும் ஒரு விஷயத்தையும் கூற வேண்டியுள்ளது. இலங்கை தீவு ஒரு காலத்தில் 'மும்முடிச்சோழமண்டலம்'

என்று அழைக்கப்பட்டது. இந்தப் பெயர் தொடர்பில் திருக்கேதீஸ்வரம், ஸ்ரீபாதி கிராமம் மற்றும் இராஜராஜபெரும்பள்ளி ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மும்முடிச்சோழன்; மூன்று கிரீடங்கள் கொண்ட சோழ மன்னன். அவர் சேர (கேரளா) - சோழ - பாண்டிய ஆகிய ராஜ்ஜியங்களின் கிரீடத்தை வைத்திருந்தார். அதன்படி தமிழ் நாடும் சோழர்களுக்கு சொந்தமானதாக இருந்தது. அப்போது, இலங்கைத் தீவும் சோழ மன்னனின் கீழ் தமிழ்நாட்டின் மாநிலமாக மாறி இருந்திருக்கலாம். அக்காலத்தில் இலங்கைத் தீவு 'சேயகம்' (பிள்ளை நாடு) என்று அழைக்கப்பட்டதுடன் தமிழ்நாடு 'தாயகம்' அல்லது தாய் நாடு என்றும் அழைக்கப்பட்டுள்ளது. அதனால் சேயகம் அல்லது பிள்ளை நாடு எப்போதுமே தாய் நாட்டையும் தாய் நாட்டின் கலாச்சாரத்தையும் சார்ந்தே இருந்தது என்பதுடன் தாயகம் சேயகத்தை உணவளித்து போசித்தும் வந்தது என்று நம்பலாம்.



**மாணிக்க வாசகர் சிலை**

Image source - www.youtube.com/Sivoham TV

சோழர்கள் இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதியில் சிறப்புக் கவனம் செலுத்தினர். திருகோணமலைக்கும் தென்கிழக்காசியாவுடனான வர்த்தகத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்பட்டமை இதற்குக் காரணமாக அமைந்தது. தெற்காசியா உடனான இணைப்புக்கு திருகோணமலை அமைவிடம் முக்கியமானது என்று கருதப்பட்டது. சோழர்களுக்கு அடிபணிந்திருந்த அக் காலத்தில், தமிழகத்தில் சில ஊர் பெயர்களை மாற்றினார்கள். அதேபோல் திருகோணமலையில் உள்ள கிராமத்தின் பெயர்களையும் மாற்றி 'மண்டலம்' என்று வைத்தார்கள். துணை மண்டலங்கள் 'வளநாடு' என்று அழைக்கப்பட்டன. இராஜராஜபெரும்பள்ளியில் இருந்து கிடைக்கப் பெற்ற கல்வெட்டுக்களின்படி சோழர்கள் திருகோணமலையை 'பரகேசரி வளநாடு' என்று அறிமுகப்படுத்தியதாக தமிழ் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. சில இடங்களில் 'அபயாஷா' வளநாடு என்றும் மற்றும் சில இடங்களில் இராஜேந்திரசிங்கன் (ராஜேந்திரசிங்க என்பதை மேற்சொன்ன விதத்தில் உச்சரித்திருக்கலாம்) வளநாடு என்ற பெயர்களும் காணப்பட்டுள்ளது.

தமிழ் கல்வெட்டுகள் அதிகம் உள்ள இடம் இராஜராஜபெரும்பள்ளி என்று கருத முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அங்கு கிடைக்கப்பெற்ற 16 ஆவணங்களில் அதிகமாகமானவை அழிக்கப்பட்டுவிட்டன.

சோழர்கள் தீவிர சிவபக்தர்களாக இருந்தபோதிலும், அவர்கள் வைணவம், பௌத்தம், சமணம் போன்றவற்றையும் ஆதரித்து வந்ததாக தெரிகிறது. இந்த ஆதரவு தென்னிந்தியாவின் மத நல்லிணக்கத்தை தெளிவுபடுத்துகிறது. ஆனால் இலங்கையின் சிங்கள பௌத்தர்கள் சோழர்களுக்கு எதிராக செயல்பட்டார்கள்.

சோழர்கள் திருகோணமலையை சைவசமயக் கோட்டையாகப் பராமரிக்க முயன்றதற்கான ஆதாரங்கள் போதுமான அளவுக்கு கிடைத்துள்ளன. திருகோணமலையில் பிரமாண்டமான சிவன் கோயிலைக் கட்டியபோது, சோழ நாட்டிலிருந்து தமிழ் சைவ தொண்டர்களை வரவழைத்து கோவிலை பராமரிக்கவும், பழுது பார்க்கவும், அதற்குப் பொறுப்பாக குளக்கோட்டன் என்ற சோழ இளவரசனை நியமித்ததாகவும் கோணேசர் கல்வெட்டு என்னும் கோயிலின் வரலாறு குறித்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின்படி, கந்தளாய் குளமானது கோவிலின் பயிர்ச்செய்கைக்கு தண்ணீர் பெறுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டது என்பது தெரியவந்துள்ளது. கந்தளாய் ஏரிக்கு அருகில் 'சதுர்வேதிமங்கலம்' என்ற பிராமண கிராமம் உருவாக்கப்பட்டது. சோழர் காலத்திற்குப் பிறகும் இந்த ஊர் இருந்துவந்துள்ளது. இராஜராஜப்பெரும்பள்ளி தமிழ் பௌத்த

விஹாரையானது தீவிர சோழ சைவாகம சூழலில் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இராஜராஜபெரும்பள்ளி கோயில் கடந்த காலங்களில் வேறு பல பெயர்களாலும் அறியப்பட்டிருந்து. தமிழ் கல்வெட்டுகளில் அந்த பெயர்கள் 'வெல்கா விஹாரை' , 'வெல்கா வெரத்து' , 'வெல்கம் வேரம்', 'வெல்காமபள்ளி' முதலிய பெயர்களில் அறியப்பட்டிருந்து. நான்கு கல்வெட்டுகள் 'வெல்கம் வேரம்' பற்றிக் குறிப்பிடுகின்றன. 'வெல்கம்பள்ளி' என்ற பெயர் இரண்டு கல்வெட்டுகளில் காணப்படுகிறது. விஹாரம் அல்லது விஹாரை என்பது தமிழில் கோயிலுக்குப் பதிலாக பயன்படுத்தப்படுகிறது. 'வேரம்' என்ற சொல் கொச்சையான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ்ச் சொல் ஆகும். வெல்காமபள்ளி என்றால் 'வெல்கம பன்சல' என்று அர்த்தப்படுத்தப்பட்டது. எனினும், இந்த வெல்கம விஹாரையை வழிபட்டவர்கள் தமிழ் பௌத்தர்களா அல்லது சிங்கள பௌத்தர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்த விஹாரையின் கட்டிடக்கலை முற்றிலும் திராவிடமயமானது. அனுராதபுரம் - பொலன்னறுவ ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டு இருந்த விஹாரைகள் சிங்களப் பாணியிலான விஹாரைகளாகவும் புனித இடமாகவும் இருந்திருக்க வேண்டும். வெல்கம வெஹெர பின்னர் 'நாதனார் கோவில்' என்று எவ்வாறு அழைக்கப்பட்டது என்பது தொடர்பில் தகவல்கள் இல்லை .


சிதிலமடைந்த வெல்கம விஹாரையின் எச்சங்கள் உள்ளூர் தமிழர்களால் சிவன் கோவிலின் எச்சங்கள் என்று கருதப்பட்டன. மாணிக்கவாசர் எழுதிய திருவாசகம் என்ற பாசுரத்தில் சிவபெருமான் 'நாதா' என்று அழைக்கப்படுகிறார். சமஸ்கிருதத்தில் நாதா என்றால் கடவுள், அதாவது சிவன் என்று பொருள்படும். நாத நம்பிக்கையானது வடக்கு வங்காளத்தின் இமயமலைப் பிரதேசம் மற்றும் தாந்திரீகத்தினை பின்பற்றுவோரின் நம்பிக்கையாகவும் இருந்தது. பின்னர் அது பௌத்தத்துடன் தொடர்புடையதாக மாறியது. காரணம் அவலோகிதேஸ்வரர் உருவத்தில் மறைந்திருந்த போதிசத்துவர் நாதா என்று அறியப்பட்டதாகும். இதனால் ஞானம் பெற்ற போதிசத்துவர்கள் சிவனுக்கு சமமானவர்கள் ஆனார்கள். இவை மற்றும் பிற காரணிகள் வெல்கம வெஹெர, நாதனார் கோயிலாக பரிணாம வளர்ச்சியடைய வழிவகுத்தன. தேரவாத பௌத்தர்களால் மகாயான தாந்திரீகங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டாலும், தேரவாதிகளின் மணிமகுடமாகக் கருதப்படும் கண்டியில் உள்ள தலதா மாளிகைக்குப் பக்கத்தில் நாதா கோயில் ஒன்று இப்போதும் பராமரிக்கப்படுவதைக் காணலாம்.

இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றி ஆராய்ச்சி செய்த பேராசிரியர் பீட்டர் ஷோல்க், வெல்கம வெஹர என்ற இடத்தில் அணையா விளக்கொன்று காணப்பட்டது தொடர்பில் ஆராய்ந்த போது கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் அங்கு ஒரு இந்து கோவில் இருந்ததாக ஊகிக்கிறார். இந்த கோவிலுக்கு அணையாத விளக்குகள் என்று அழைக்கப்படுகின்ற 'நந்தாவிளக்கு', 'நொந்த விளக்கு', 'நுந்த விளக்கு' என பல பெயர்கள் கொண்ட விளக்குகளை காணிக்கையாக கொடுத்தவர்கள் தொடர்பில் பல ஆவணங்களை மேற்படி ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளார். அந்த ஆவணங்களின்படி சூரியனும் சந்திரனும் இருக்கும் வரை இந்த உலோக விளக்குகள் எரிந்து கொண்டே இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இந்த தீபங்களுக்கு தொடர்ச்சியாக நெய் வார்ப்பதற்காக 84 பசுக்கள் காணிக்கையாக வழங்கப்பட்டிருந்தது என்றும், அந்தப் பசுக்களிடமிருந்து பெறப்படும் நெய்யால் தீபம் ஏற்ற வேண்டும் என்றும் மற்றொரு ஆவணம் கூறுகிறது. பேராசிரியர் அவர்களின் கூற்றுப்படி, இத்தகைய பாரம்பரியம் கிபி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து தென்னிந்தியாவில் பிரபலமாக காணப்பட்ட ஒரு இந்து சடங்கு முறை ஆகும். பௌத்த விஹாரை வழிபாட்டிலும் விளக்குப் பூஜை நடத்தும் பாரம்பரியம் உண்டு. புத்தரை விளக்குக்கு ஒப்பிடுகிறார்கள். 'பன்னிரு மகா தீபம்' எனப்படும் அணையாத உலோக விளக்கும் புத்தருக்கு ஏற்றப்படுகிறது. ஆனால் நந்தா விளக்கு என்று அழைக்கப்படும் தீபம் அங்கு வாழும் தேவர்களுக்கு அல்லது கடவுளுக்குப் படைக்கப்பட்டதாக வெல்கம விஹாரை தொடர்பான மற்றொரு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. மறுபுறத்தில் புத்தர் ஒரு கடவுள் அல்ல என்றும் அவர் 'தேவாதி தேவர்' என்றும் வர்ணிக்கப்படுகிறது. ஆனால் மற்றொரு விடுவிக்கப்படாத புதிர் ஒன்றும் உள்ளது. அதாவது புத்தரின் பேரில் 05 காளைகளும் 35 பசுக்களும் நன்றிக் காணிக்கை செலுத்தியதாக (புண்ணியத்துக்கு) மற்றொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்த விலங்குகள் கோயிலைப் பராமரிக்க அர்ப்பணிக்கப்பட்டவை என்று அனுமானிக்கலாம். இந்த உண்மைகள் அனைத்தையும் மூன்று வழிகளில் விளக்கலாம். முதலாவதாக, இந்துக்கள் புத்தரைக் கடவுளாக வழிபட்டிருக்கலாம். புத்தர் தமிழ் மொழியில் 'அய்யனார்' என்றும் அழைக்கப்படுகிறார். இரண்டாவதாக, புத்தருக்கும் கடவுள்களுக்கும் இங்கு பிரசாதம் வழங்கப்பட்டது. மூன்றாவதாக, புத்தருக்கான கடவுள்களின் காணிக்கையிலும் அவர்கள்

அதே முறையைப் பின்பற்றியுள்ளனர். வடக்கு கிழக்கில் மட்டுமன்றி சிங்கள பௌத்த மையங்களான அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இடங்களிலும் தமிழ் பௌத்தம் இருந்ததை அந்தந்த பிரதேசங்களில் கிடைத்த தமிழ் கல்வெட்டுகள் காட்டுகின்றன என்று கூற முடியும்.

அநுராதபுரத்தில் தமிழ் இந்து இடிபாடுகள் இருப்பதாக நம்பப்படும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் கல்வெட்டு, அவ்விடத்தில் 'மாக்கோடைப் பள்ளி' என்ற புத்த கோவில் இருந்ததாக குறிப்பிடுகிறது. அந்த ஆவணத்தின்படி, இந்த கோயிலானது தருமபாலன் (தர்மபாலன்) என்ற தமிழ் பௌத்த துறவியால் கட்டப்பட்டது என்றும் அதை தமிழ் பேசும் வணிகர் குழுவான 'நான்கு நாடார்' வணிகச் சமூகத்தினர் கவனித்து பராமரித்து வந்தனர் என்றும் கூறப்படுகின்றது. இந்த கோயிலின் பெயரால் மற்றொரு முக்கியமான விஷயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மாக்கோடை என்ற இடப்பெயர் இடைக்கால கேரளாவின் தலைநகராக இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அந்தத் தலைநகரின் முக்கிய பௌத்த மையமாக மாக்கோடைப்பள்ளி இருந்துள்ளது. அப்படியானால், கேரளாவிலிருந்து இங்கு வந்த கேரளத் துறவிகள் அனுராதபுரத்தில் அந்தப் பெயரில் ஒரு கோயிலைக் கட்டியிருக்க வேண்டும். இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தமிழ் ஆவணம் கிபி. 9 - 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதனை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அப்போது கேரளாவில் இந்து எழுச்சிக் கலவரங்கள் நடந்து கொண்டிருந்ததால் கேரளாவில் இருந்து தப்பி ஓடி வந்த தமிழ் பௌத்த துறவி ஒருவர் இந்த விஹாரையை கட்டியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இலங்கையின் தமிழ் கல்வெட்டுகளில் உள்ள (*The Tamil Inscriptions, part ii, p 15*) ஆவணத்தின்படி, ஆயிரம் திசைகளில் இருந்து வந்த 500 தமிழ் வணிகர்கள் (திசை ஆயிரத்து ஐந்நூறுவர்) பொலன்னறுவையில் ஒரு கோவிலை பராமரித்து வந்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

காலனித்துவ காலத்திற்கு முன்பே சிங்கள பௌத்தமும் தமிழ் இந்துமதமும் தனித்தனியாகவே இருந்தன. பௌத்தத்தைச் சுற்றி சிங்கள மக்கள் ஒன்றிணைந்ததால், அது ஒரு இனவாத மதமாக மாறியது. இது தமிழ் பௌத்தத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் மீண்டும் சுதந்திரக் குழுவின் தலைமையில் பௌத்தம் ஆரம்பமானது. ஆனால் சிங்கள பௌத்த இனவாதத்தால் தமிழ் பௌத்தம் அதிலிருந்து ஆதரவைப் பெறவில்லை.



அநுராதபுரத்தில் சோழர்கள் கட்டிய சிவாலயம்

Image source - telibrary.com

13 ஆம் நூற்றாண்டில், தமிழ் பௌத்தத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான பல காரணிகள் பின்னணியில் காணப்பட்டன. முதலாவதாக, மேலே குறிப்பிட்டதுபோல், சிவாகமத்தின் வளர்ச்சி தமிழ்நாட்டில் சைவ சித்தாந்தமாக வளர்ந்தது. தென்னிந்தியாவின் தொண்டை மண்டலத்திலிருந்து வந்த சிவாகம வெள்ளாளச் சாதியைச் சேர்ந்த பல குடும்பங்கள் யாழ்ப்பாண கிராமப் பகுதிகளில் குடியேறினர். பௌத்த தத்துவத்தை 'சிவஞான சித்தியார்' என்ற நூல் அலசி ஆராய்ந்ததுடன் பௌத்த சமயம் முற்றாக மறுத்தலிக்கப்பட்டது. கதை வடிவில் வழங்கப்பட்ட ஸ்கந்த புராணம் என்ற சைவ சித்தாந்தத் தத்துவம் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து முக்கிய கோவில்களிலும் கந்த புராணம் பயன்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தம் முற்றாக மறைந்துவிட்டது. ஒரு சில இடிபாடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. வல்லிபுரம் ஒரு காலத்தில் பிரசித்தி பெற்ற பௌத்தப் பிரதேசமாக இருந்தது. இன்று வல்லிபுரம், விஷ்ணு கோயிலாக மாறியிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இவ்விதம் சிந்திப்பதற்கு பல ஆதாரங்கள் சாட்சிகளாக உள்ளன.
முதலாவது, விஷ்ணு

கோயிலில் உள்ள வட்டமான பொருள், புத்தரின் தர்மச் சக்கரம் என்று நம்பப்படுகிறது. இரண்டாவதாக, இந்தக் கோயில் ஆழ்வார் கோயில் என்று அழைக்கப்படுகிறது. தமிழ் பௌத்தர்கள் புத்தரையும், அவரது நினைவுச் சின்னங்களையும், புத்த துறவிகளையும் ஆழ்வார் என்ற சொல்லைக் கொண்டே அழைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் உள்ள 09 பழமையான தமிழ் பௌத்த விகாரைகளில் 04 அய்யனார் கோவில்களாக மாறியுள்ளன. அய்யனார் சிவபெருமானின் புத்திரன் என்று இந்துக்கள் நம்பினாலும் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பத்தினி வழிபாடு பௌத்தத்துடன் தொடர்புடையதாக இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. புங்குடுதீவு மற்றும் கரவெட்டி பௌத்த விகாரைகளில் வெசாக் மற்றும் பொசன் தினங்களில் விசேட பத்தினி பூஜைகள் இடம்பெற்றமைக்கான சான்றுகள் உள்ளன.



வல்லிபுர ஆழ்வார் கோவில்

Image source - ibctamil.com

தமிழ் பௌத்தம் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும். மணிமேகலை காவியத்தின் தமிழ் பௌத்தக் கவிதைகளில் வெளிப்படுத்தப்படும் வணிகப் பௌத்தம் (Mercantile Buddhism ) மற்றும் சிங்களவர்களின் நீரியல் பௌத்தம் (Hydraulic Buddhism) கேரளாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பௌத்தம் (Imported Buddhism) ஆகியவற்றுக்கு இடையே தொடர்ந்தும் மோதல்கள் இருந்து வந்தன. எனினும் பௌத்தம் யாழ்ப்பாணத்திற்கு கேரளாவில் இருந்து வந்தது என்று கூறுவதற்கு பல காரணிகள் உள்ளன. திருகோணமலையில் பௌத்த மதமும் இந்து மதமும் கலந்திருந்தது. இது தவிர, மணிமேகலை மகாகாவியத்தின்படி, வடக்கே நாகநாட்டில் சுதந்திரமான பௌத்த மரபுகள் காணப்பட்டமைக்கும் ஆதாரங்கள் உள்ளன.

தமிழ் பௌத்தர் ஹீனயான பௌத்த பிரிவைச் சேர்ந்தவர்களா? அல்லது மகாயான பௌத்த பிரிவை சேர்ந்தவர்களா? முக்கிய தமிழ் பௌத்தர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்? இந்தக் கேள்விகளுக்கு விடை இன்னும் கிடைக்கவில்லை. இந்தக் கட்டுரை ஒரு விஷயத்தை மறுதலிக்கிறது. அதாவது இலங்கைத் தீவில் உள்ள பௌத்தர்கள் அனைவரும் சிங்களவர்கள் அல்ல. இலங்கையில் பௌத்தம் வாசிக்கப்பட வேண்டியது மத ரீதியாக அல்ல.

இதுவரை முன்வைக்கப்பட்டவை தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் ஒருவரின் கருத்துக்கள். சிங்கள பௌத்த பிக்கு ஒருவரினால் தமிழ் பௌத்தம் பற்றிய யோசனை ஒன்றை முன்வைத்து இந்த அத்தியாயத்தை நிறைவு செய்யலாம் என்று நினைக்கிறேன். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளுக்கு எல்லாம் சென்று பௌத்த மதத்தைப் பரப்ப நம் பெருமக்கள் தயாராக இருந்தும், நம் தாயகத்தின் வடபகுதிக்குச் சென்று அங்குள்ள மக்களுக்குப் புத்த தர்மத்தைப் பரிசாகக் கொடுக்க நினைக்காதது வருந்தத்தக்கது. அந்த நற்செயலை முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்னரே செய்து அந்தப் பிரதேசத்தில் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் நாடு எதிர்நோக்கும் இனப்பிரச்சினை இவ்வளவு மோசமாகியிருக்காது. இதற்கான பொறுப்பை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று விஹாரைகளை நிறுவிய அமைப்புக்களும் தேரர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப இத்தகைய பொறுப்பு ஒன்றை நிறைவேற்றுதல் கடினமானதாக இருக்கும் என்பதால், நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்பட்ட பின்னர், தமிழ் பிள்ளைகளுக்கு திரிபிடக தர்மம் மற்றும் சிங்களம், பாளி, சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்றவற்றை கற்க ஆர்வமூட்ட வேண்டும் என்பதுடன் மத விவகாரங்களின் பொறுப்பும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வது நிச்சயமாக எதிர்காலத்தில் தேசிய நல்லிணக்கத்தையும் நாட்டில் வளத்தையும் செழிப்பையும் ஏற்படுத்த வழிவகுக்கும். இதில் அரசாங்கமும் கல்விக்கு பொறுப்பான குருமார்களும் கவனம் செலுத்த வேண்டும் (வெள்ளவத்தை ஞானாபிவன்ச தேரர், தினமின வெசாக் வெளியீடு, 1996, ப.22).


எமது சுற்றாடல் உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளால் ஆக்கப்பட்டுள்ளது. இக் கூறுகளின் ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கமைந்த செயற்பாடுகளே சுற்றாடலின் நிலைபேறான அபிவிருத்தியில் பங்காற்றும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றும் சுற்றாடல் பற்றி சரிவர அறிந்துகொள்ளப்படுதலும் சிறப்பான வழிமுறைகளில் பயன்படுத்தலும் இக்கூறுகளை பேணிப்பாதுகாத்தலும் முக்கியமானவைகள். அந்த வகையில் வடக்குகிழக்கு அபிவிருத்தியில் உயிர்ப்பல்வகைமையின் பங்களிப்பு பற்றிய பயனுள்ள கருத்துகளை 'வடக்கு-கிழக்கு பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்' எனும் இக் கட்டுரைத் தொடர் தாங்கிவருகின்றது.




சி. ஜேம்சன் அரசகேசரி

விவசாய விஞ்ஞானியும் சூழலியலாளருமான கலாநிதி.சி.ஜேம்சன் அரசகேசரி அவர்கள் விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் முன்னைநாள் மேலதிக பணிப்பாளர் ஆவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் விவசாயத்துறையில் மூன்று தசாப்தங்களாக பயனுள்ள பங்காற்றி வருவதுடன் மிளகாய், வெங்காயம், நிலக்கடலை, குரக்கன் மற்றும் மா போன்ற பயிர்களில் புதிய வகைகளைக் கண்டுபிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. விவசாயம் சம்பந்தப்பட்ட அநேக பிரச்சினைகளின் தீர்வுகளுக்கு வழிவகுத்துள்ள அரசகேசரி அவர்கள், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் விவசாய மற்றும் சுற்றாடல் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு ஆலோசகராகவுள்ளதுடன் சமூக சேவையாளராகவும் திகழ்கிறார்.


# காடும் காடுசார் பல்வகைமையும்



**உலகின் காடுகளின் நிலப்படம்**

Image Source - www.visualcapitalist.com

கற்றது கைமண் அளவு கல்லாதது கடலளவு என்பதற்கு ஏற்ப கடல் பற்றிய எம் அறிவுக்கெட்டிய விபரங்கள் முதலாவது அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளன. இவ் இரண்டாம் அத்தியாயம் காடும் காடுசார் உயிரியல் பல்வகைமை பற்றியும், அதனுடனான அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களையும் தாங்கிவருகின்றது. காடுசம்பந்தமான ஒரு பொதுஅறிமுகத்துடன் இவ் அத்தியாயத்தில் நுழைந்தால் மட்டுமே வடக்கு கிழக்கு காடுகள் பற்றிய ஓர் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காடு அல்லது வனம் எனும் பதம் உலகில் பல்வேறு நாடுகளால் வெவ்வேறு விதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. வரைவிலக்கணங்களில் மரங்களின் அடர்த்தி, உயரம், அங்குள்ள பயன்பாடு, சட்டரீதியான வரையறை மற்றும் சுற்றாடல் சார்ந்த பங்களிப்புகள்

வரையறுக்கப்பட்டுள்ளன. உலக விவசாய ஸ்தாபனத்தின் (FAO) வரைவிலக்கணத்தின்படி, அரை ஹெக்டயரைவிட அதிக பரப்பில், ஐந்து மீற்றருக்கு மேலான உயரமுடைய மரங்களையுடையதும் அம் மரங்களால் அப் பகுதியின் 10 வீதத்துக்கும் மேலான இடப்பரப்பை மூடும் வகையிலும் பரந்துகாணப்படும் பகுதி காடு ஆகும். இருப்பினும் விவசாயப் பகுதிகளுக்கோ அல்லது நகர்ப் பகுதிகளுக்கோ இவை பொருந்தாது. 2020 ஆம் ஆண்டின் உலக வனவளக் கணிப்பீடு, காடானது 4.06 பில்லியன் ஹெக்டயர் - அண்ணளவாக 40.6 மில்லியன் சதுர கிலோ மீட்டர் - வரையில் பரந்துள்ளதாகவும், நிலப்பரப்பின் 31 வீதத்தை உள்ளடக்கியுள்ளதாகவும் கூறுகிறது. காடுதான் உலகில் மிகப்பரந்துபட்ட சூழல்தொகுதி ஆகும். இப் பரந்துபட்ட பிரதேசத்தில் 45 சதவீதமான காடுகளே இடைவலயப்பகுதியில் பரந்துள்ளது.

காட்டிலிருந்தே அண்ணளவாக 75 வீதத்திற்கு மேற்பட்ட உயிர் சம்பந்தமான உற்பத்திப்பொருள்கள் கிடைக்கப்பெறுகிறது. இது 80 வீதமான உயிர்த்திணிவைக் (Biomass) கொடுக்கின்றது. இவ்வுயிர்த்திணிவானது ஏனைய பகுதிகளில் கிடைப்பதைவிட வித்தியாசமானது என்பதுடன் அவ்வவ் பகுதிகளின் கடல் மட்டத்திலிருக்கும் உயர்வு, மத்திய தரைக்கோட்டின் அமைவிடம், கிடைக்கப்பெறும் மழை வீழ்ச்சியின் அளவு, வெப்பநிலை என்பவற்றில் தங்கியுள்ளது. இப் பகுதிகளை சரியாகப் பேணிப் பாதுகாப்பதிலுள்ள முக்கியத்துவத்தை மனித சமுதாயம் அறியாமல் போனது விந்தையானது. ஆதிமனிதனின் வாழ்விடமான ஏதேன் தோட்டத்திலிருந்து (விவிலியம்) தற்காலம் மனிதர் வாழும் நிலப்பரப்புகள் காடாகவே இருந்துள்ளன. இக் காடே மனித சமுதாயத்துக்கு பிரயோசனமுள்ளது. மனிதனின் பெருக்கத்தோடு காடுகளின் பரம்பல் குறைந்துகொண்டு சென்றதே வரலாறு.

2010 ஆம் ஆண்டளவில் இலங்கை, 28.8 வீதம் காடாக இருந்துள்ளது. இது 1995 இல் 32.2 வீதத்தையும் 2019 இல் 16.5 வீத்தையும் எட்டியுள்ளமை இலங்கையில் அதிவேகமாக காடழிப்பு நிகழ்வதை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் 9 வீதமான காடுகளே கன்னிக் காடுகளாகும். இக் காடுகளே அதிகளவில் உயிரியல் பல்வகைமையைக் கொண்டுள்ளதாகவும் உலகில் மிகப்பெரிய காபன் சேமிப்பு இடமாகவும் அறியப்பட்டுள்ளது. இலங்கையின் காடுகள் 61 மில்லியன் மெற்றிக்தொன் அளவு காபனை உயிர்த்திணிவாகக் கொண்டிருந்தமை 2010 இல் நிரூபணமாகியுள்ளது. 1990 களிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் இலங்கை தனது காட்டுப்பகுதியில் 17.7 வீதத்தை இழந்ததன் மூலம் பாரிய சுற்றாடல் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது வருத்தத்திற்குரிய விடயம். இக்காலப் பகுதி வடக்கு கிழக்கு பகுதியின் யுத்த காலமாகும். வளமான காட்டை அழித்தொழிப்பதில் எம்மவரின் பங்கும் குறிப்பிடத்தக்களவு உள்ளது என்பது கசப்பான உண்மையாகவே சூழலியலாளர்களால் கருதப்படுகிறது.

ஆரம்பத்தில் இலங்கையின் நிலப்பரப்பில் 70 வீதமானது காடாக இருந்துள்ளமையும் இப்பரப்பு 16 வீதமாக குறைவடைந்தமையும் அண்மைக்காலத் தரவுகளால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. இலங்கையின் தேசிய சிவப்பு விபர தரவுகளின்படி, (National Red List) 253 நில வகைகளில் 243 வகையான வண்ணத்துப்பூச்சிகளும், 240 வகையான பறவைகளும் 211 வகையான ஊர்வனவும் 748 முள்ளந்தண்டு உடையவையும் 1472 வகையான முள்ளந்தண்டு அற்றவையும் இக்காட்டுப்பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன.

### வடக்கு - கிழக்கு காடுகளும் உயிர்ப்பல்வகைமையும்

கடலிலுள்ள அநேக இரகசியங்கள் வெளிப்படாமலிருப்பது போல காடுகளிலும் அநேக உயிரியல் இரகசியங்கள் வெளிப்படாமலிருக்கின்றன. வடக்கு கிழக்கு காடுகளில் மண், மண்ணின் மேற்பரப்பு, அக்காடுகளுக்கு இடையிலுள்ள நீர்நிலைகள் ஆகியன அநேக உயிர்வாழ் அங்கிகளையும் உயிரற்ற உள்ளடக்கங்களையும் கொண்டுள்ளன. காட்டின் நிலப்பரப்பு காலாகாலமாக குழப்பப்படாத மண், மண்ணிலுள்ள நுண்ணங்கிகள், பூச்சி, புழு, அவற்றில் வாழும் உயிரினங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. வடக்கு கிழக்கு காடுகளில் அண்ணளவாக 44 வீதமான பரப்பு அடர்காடுகளாகும். இக் காடுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

1. உலர் காலநிலைக்காடுகள்
2. வரள்நிலக் காடுகள்
3. ஆற்றுக்கரையோர வரள்காடுகள்
4. கரையோர உலர் காடுகள்
5. கண்டல் காடுகள்

வடக்கின் 5 மாவட்டங்களில் யாழ். மாவட்டம் ஒரு வீதமான காட்டையே உள்ளடக்கியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டமே அதிகளவில் காடுகளைக் கொண்டுள்ள பிரதேசமாகும். மன்னார், வவுனியா, கிளிநொச்சி என்பனவும் முறையே பரப்பளவில் அதிகளவு காடுகளைக் கொண்டுள்ள பிரதேசங்களாக நிரற்படுத்தப்பட்டுள்ளன.

### உலர் காலநிலைக்காடுகள் (Dry Monsoon Forest)

முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இவ் வகைக் காடுகள் அதிக பரப்பில் காணப்படுகின்றன. வடக்கில் மொத்தமாக 0.67 மில்லியன் ஹெக்டயர் இவ்வகைக் காடுகளாகும். வரள் நிலத்தில் தாழ்நிலமாக கருதப்படும் இடங்களில் கடல் மட்டத்திலிருந்து அதிகளவு உயரமில்லாத இடங்களில் இவ்வகைக் காடுகள் பரந்துள்ளன. 30 மீற்றருக்கு மேற்பட்டு உயரமாக வளரும் மரங்கள் இக்காடுகளில் குறைவாகவே உள்ளன. தொடரில்லாத அங்குறு அமைப்பிலுள்ள மரங்களே (ஊசியிலை மரங்களைப் போல் அல்லாதவை) இக் காடுகளை ஆக்கிரமித்துள்ளன. பாலை (Manilkara), முதிரை (Chloroxylon) என இரு வகை சமுதாயங்களை இக் காடுகள் கொண்டுள்ளன. இவற்றுடன் இணைந்து வேறுபல மரங்களும் இக் காடுகளில் வளரும். இனங்களின் வேறுபாடானது வரள் நிலத்தில் உள்ள மண், நீர்ப்பரம்பலும் நீர் கிடைக்கப்பெறும் அளவும், மண்ணின் ஆழம் என்பவற்றிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இக் காரணிகளின் அடிப்படையிலேயே மரங்களின் பரம்பலும் அமைந்துள்ளது. வெளியாக காணப்படாத பட்சத்திலும், பாலை மரங்களின் வளர்ச்சி களிமண் பரப்பில் அதிகளவிலும், முதிரை மரங்களின் பரம்பல் மணற்பாங்கான நிலப்பரப்பில் அதிகளவிலும் வளர்வதிலிருந்து இது உறுதியாக்கப்பட்டுள்ளது. இக் காடுகளில் நெல்லி (Phyllanthus emblica), விளாம்பழம் (Feronia Limonia), பற்றையாக வளரும் பாவட்டை (Pavetta Species) மற்றும் கடுவநாவல் (Lantana Camara) என்பன அதிகளவில் காணப்படுகின்றன. ஆனால் இவை ஆக்கிரமிப்பு களைகளாகும். இக்காடுகளில் அதிகளவு பெறுமதிமிக்க மரங்களைக் கொண்டுள்ளன.


### வரள் நிலக் காடுகள் (Arid Zone Forest)

முன்பு முட்களும் பற்றைக்காடுகளும் என அழைக்கப்பட்டு வந்திருந்த இந்த வகைக் காடுகள் தற்போது வரள் நிலக் காடுகள் என பெயர்மாற்றம் பெற்றிருக்கின்றன. மூன்று நிலை உயரங்களில் வளரும் மரங்களைக் கொண்டுள்ளமை இக் காடுகளின் தனித்துவமாகும். முதிரை, பாலை, வேம்பு என்பன இங்கு பரம்பி வாழும். உயரமான மரங்கள், மிகக் குறைவாகவும் ஆங்காங்கே பரம்பியும் வளரும். நில மட்டத்தில் வாழும் தாவரப் பரம்பலானது வரள் நிலத் தாவரங்களின் இசைவாக்கத்தைக் கொண்டிருக்கும். அதிகளவில் கற்றாளை வகைகளும் (Aloe Barbadensis), நாயுருவி வகைளும் (Asparagus) இவ் வகைக் காட்டில் உள்ளடக்கப்படுகின்றன. அண்மைக் காலத்தின் காலநிலை மாற்றமானது இப் பகுதி மரங்களை பெரிதளவில் அழிவடையச் செய்வதால் இயற்கையாகவே இந்த வகைக்காடுகளின் பரம்பல் குறைவடைவது துரதிஷ்டமானது. அதிகளவு வரட்சியைத் தாங்கும் உயிரியல் பல்வகைமைகள் ஆபத்தில் சிக்கியுள்ளமையே இதற்கான காரணமாகும்.

### ஆற்றுக்கரையோர உலர் வலயக் காடுகள்

ஆற்றோரங்களை அண்டிய பகுதிகளிலும் ஆற்றுக் கரையோரங்களில் நீர் பரம்பக்கூடிய இடங்களிலும் இவ் வகைக் காடுகள் பரந்துள்ளன. இக் காடுகளில் மருதமரம் (Terminalia arjuna), இலுப்பை (Madhuca Longifolia), இன்னும் சிலவும் அதிகமாகக் காணப்படும். இவ் வகைக்காடுகள் வட பிராந்தியத்தில் மிகக் குறைவாக காணப்படுதல் இப்பிரதேசத்தில் ஆறுகளின் குறைவான எண்ணிக்கையை எடுத்துக்காட்டுகிறது. மன்னாரை அண்டிய பகுதிகளில் அண்ணளவாக 568 ஹெக்டயர் நிலப்பரப்பில் இவ்வகைக் காடுகள் பரம்பலடைந்துள்ளன. வட மாநிலம் எந்தவொரு நிரந்தரமான ஆற்றையும் கொண்டிருக்கவில்லை. சில சிற்றாறுகளே காணப்படுகின்றன. இந்தச் சிற்றாறுகளில் வருடம் பூராகவும் நீரோட்டம் காணப்படுவதில்லை. மிகச் சொற்ப அளவிலேயே இவ் ஆற்றோரங்களில் தாவரங்களின் பரம்பல் காணப்படுகின்றன.

அக்கராயன் ஆறு, அருவியாறு, கனகராயன் ஆறு, கோடாரிக்கல்லு ஆறு, மண்டைக்கல் ஆறு, நாயாறு, நெத்தலி ஆறு, பாலி ஆறு, வல்லவராயன்கட்டு ஆறு, பறங்கி ஆறு, பேயாறு, பிரமந்தலால் ஆறு, தேராவில் ஆறு என்பன இச் சிற்றாறுகளாகும். யாழ். மாவட்டத்தில், கந்தரோடைக் குளத்திலிருந்து அராலியைச் சென்றடையும் மிகச் சிறிய வாய்க்காலான வழுக்கையாறு ஆறுகளில்லா பற்றாக்குறையைத் தீர்க்கிறது. கரையோர மரங்களைக் கொண்டிருக்காத இவ் ஆறு, பல்வகைக் காடுகளை ஊடறுத்துச் செல்வதும், அதன் உயிரியல் பல்வகைமையின் முக்கியத்துவமும் பின்னர் ஆராயப்படும்.




**இலங்கையின் காடுகள்**

Image Source - www.mwfc.gov.lk

கண்டல் காடுகள் பற்றிய விளக்கம் முதலாவது பகுதியில் சொல்லப்பட்டிருப்பினும் இங்கு மீண்டும் காடுகள் பற்றிய அறிவுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் பிரயோசனமானது. மன்னார் மாவட்டத்திலுள்ள கள்ளியடி, இலுப்பைக் கடவை, மூன்றாம்பிட்டி போன்ற பகுதிகளில் சீவகமுளைத்தலைக் காட்டும் ரைசோபோரா (Rhizophora Mucronate) மற்றும் சுவாச வேர்களைக் கொண்ட அவிசீனியா போன்ற தாவர இனங்களைக் கொண்டிருக்கும் கண்டல் காடுகள் காணப்படுகின்றன. இவை மரமாகக் கருதப்படாவிட்டாலும் 3,4 மீற்றர் உயரத்தில் வளரக்கூடியவை.

## கிழக்கு மாகாண காடுகள்

வடக்கை போலவே கிழக்கு மாகாணத்திலும் காடுகள் பரந்துள்ளன. கரையோரக் காடுகள், கண்டல் காடுகள் போன்ற வகைக் காடுகள் பெரிதும் காணப்படுகின்றன. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளில் அண்ணளவாக 8000 ஏக்கருக்கு மேற்பட்ட இவ் வகைக் கண்டல் கரையோரக்காடுகள் காணப்படுகின்றன. மொத்த நிலப்பரப்பில் கண்டல் காடுகள் அண்ணளவாக 3 இல் ஒரு பகுதியாக உள்ளது. கண்டல் காடுகள் மரங்களை மட்டுமல்ல கண்டல் பகுதியிலுள்ள நீரில் வாழும் உயிரினங்களை உள்ளடக்கியுள்ளது. கிளிரு, நான்கு - ஐந்து வகை நண்டுகள், இறால், சேற்று மட்டி, முதலை போன்ற 65 இற்கு மேற்பட்ட இனங்களின் பல்வகைமை இப் பகுதிகளில் பரந்திருக்கின்றது. நாசிவான்தீவு, வாகரை, மட்டக்களி மற்றும் கின்னியா போன்ற பகுதிகளில் இக் கண்டல் காடுகளில் அநேகமானவை சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டதாக பதிவாகியுள்ளது. இப் பகுதிகளில் சில வனத்திணைக்களத்திற்கு சொந்தமாக இல்லாதிருப்பதால் பெரிதும் பேணப்படுவதில்லை.

## இடைத்தரக் காடுகள்

பற்றைக் காட்டிலிருந்து பெருமரங்களின் எல்லை ஆரம்பிக்கும் பகுதி இப் பெயரால் அழைக்கப்படுகின்றது. இவ் வகைக் காடுகளை வரையறுப்பதில் தெளிவற்ற தன்மைகள் உள்ளன. இருப்பினும் இவ்வகைக் காடுகளில் வேம்பு, அன்னமுன்னா, பனை, எருக்கலை, இலந்தை மற்றும் பாலை என்பன காணப்படும். இப் பகுதிகளில் மக்கள் குடியேறுவது இலகுவானதால் இக் காடுகளின் பரம்பல் சற்றுக்குறைவாகவே உள்ளது. 1978 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட புயலுடன் கூடிய சுனாமியாலும் இப்பகுதி பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றது. வேம்பு, மா போன்றன மீண்டும் வளர்ந்திருந்தாலும், கயூவின் பரம்பல் முன்பைவிட குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது.

## கரையோரக் காடுகள்

இக் காடுகள் ஓரளவு ஸ்திரத் தன்மையை எட்டியுள்ளது என்றாலும் மாற்றத்திற்குள்ளாகும் கரையோரத்தின் காலநிலை காரணமாக இக் காடுகள் அடிக்கடி பாதிப்பைச் சந்திக்கலாம் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இப் பகுதியில் காணப்படும் மண்மேடுகள், தரைத்தோற்றம் என்பன இக் கரையோரக் காடுகளுக்கு வெளிக்காடுகள் அல்லது முட்காடுகள் அல்லது வரள் நிலப் பச்சைக் காடுகள் எனப் பல்வேறுவகையான பெயர்களை பெற்றுக்கொடுக்கிறது. பானமவின் தென்பகுதியில் இவ்வகைக் காடுகள் அதிகம் காணப்படுகின்றன. இக் காடுகளிலும் பாலை வீரை, வேம்பு, என்பன செறிந்து காணப்படுகின்றன. ஓரளவு புற்தரைகள் காணப்படுவதால் கோவேறு கழுதைகளின் பரம்பலையும் கொண்டிருக்கின்றது. கடல் மட்டத்திலிருந்து சற்று உயரமான பகுதியான இறக்கக்கண்டி போன்ற பகுதியிலுள்ள காடுகளில் மரபுரீதியாக தேனெடுக்கும் தொழில் நடைபெறுகின்றது. இதுபற்றி கீழ்வரும் பகுதிகளில்

விபரமாக காணமுடியும். செங்கமான் கண்டி, கதிரவெளிப் பகுதிகளில் சிறு குன்றுகளிலும் கூட இவ் வகைக் காடுகள் காணப்படுகின்றன.
காட்டுப்பகுதிகளிலுள்ள விலங்குகள் பற்றிய பரம்பல் பின்னர் ஆராயப்படுமாயினும் சிறுத்தை, கரடி, யானை, மான், மரை என்பனவற்றை இக்காட்டில் வாழும் விலங்குகளாக இங்கே குறிப்பிடலாம். இங்கும் சுனாமித் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

### அடர்காடுகள்

அம்பாறையின் தெற்குப் பகுதி, ஹபரணை, மணலாற்றுத் தொடர் என்பன கிழக்கு கரையோரக் காடுகளின் அடர்பகுதிகளாகும். பல்வகைமை நிறைந்த இக்காட்டைப் பற்றி பின்னரும் ஆராயப்படவுள்ளதால், இங்கே குறிப்பாக மட்டும் சொல்லப்படுகின்றது.

### வடக்கு கிழக்கு காடுகளின் பொதுவான தன்மைகள்

காடுகளிலுள்ள மண்ணானது மிகவும் வளமுள்ளது. ஆண்டாண்டு காலமாக சிதைவடையாமல் பேணப்படும் இம் மண், மண்ணின் சகல கூறுகளையும் கொண்டுள்ளது. அதிகமாக காணப்படும் பிரிகையாக்கும் பக்டீரியாக்கள் இப் பகுதியின் சமநிலையைப் பேணுவதில் பெரும்பங்காற்றுகிறது. வேருடன் இணைந்து ஒன்றிணைந்து வாழும் அநேக பக்டீரியாக்கள் இங்கு கண்டறியப்பட்டுள்ளன. பிரிகையாக்கிகளான பங்கசுகளும் இங்கு உண்டு. வேருடன் இணைந்துவாழும் பக்டீரியாக்கள் மண்ணிலுள்ள பொஸ்பரஸை கரைத்து தாவரங்களுக்கு தேவையான போசணைகளை வழங்குவதில் பங்காற்றுகின்றன. காட்டில் வளரும் காளான்கள் ஒருவகை பிரிகையாக்கும் பங்கசுகளே ஆகும். இவை மனித உணவிற்குப் பயன்படுவதோடு காடுகளில் வாழும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உணவாக்கின்றன. இப் பகுதியில் அதிகளவான மண்புழுக்களும் வாழுகின்றன. காடுகளில் காணப்படும் தரைப் பகுதி, ஊர்வன மற்றும் முள்ளந்தண்டுள்ள, முள்ளந்தண்டற்ற விலங்குகள் அத்துடன் பூச்சியினங்களுக்கு உகந்த வாழிடமாக அமைகின்றது. இப் பகுதியில் தனித்துவமான உயிரியல் சமநிலை பேணப்படுகின்றது. காட்டில் உருவாக்கப்படும் உணவுச் சங்கிலித் தொடரில் இப் பகுதிக்கு முக்கிய பங்குண்டு. ஊர்வன,



நாயுருவி

Image Source - tamil.webdunia.com

பூச்சிகள், முள்ளந்தண்டுள்ளவைகள் என்பன இவ் உணவுச் சங்கிலியின் பிரதான பங்காளிகள் ஆகும். இக் காட்டில் வளரும் தாவர வகைகள் இப் பகுதி மண்ணிற்கு பத்திரக் கலவையாக தொழிற்படுவதால் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதில் பிரயோசனமுள்ள பங்காற்றுகிறது. பெருந்தொகையில் படையெடுத்து நகரும் வண்ணத்துப்பூச்சிகளின் கூட்டுப்புழுப் பருவம் இப் பகுதிகளிலேயே நிறைவடையும். ஆக காடுகளில் இருக்கும் இவ்வகை நிலப்பரப்பு பெரிதும் உயிரியல் பல்வகைமை பேணிப்பாதுகாக்கப்படும் ஒரு தொகுதியாகும்.

பூச்சிகளுக்கு மட்டுமல்ல பாம்புகளுக்கும் இப் பகுதி வாழ்விடமாக அமைகிறது. நாகம், புடையன் விரியன் மற்றும் வெங்கனாந்தி போன்றவற்றுடன் பச்சைப்பாம்பு, சுருட்டை போன்ற பல வகைப்பாம்புகள் இங்கு காணப்படுகின்றன. குக்கிளான், முயல், கீரி உடும்பு, காட்டுப்பூனை போன்ற சிறு மிருகங்களும் மான், மரை, கரடி, குழுவன், எருமை, சிறுத்தை மற்றும் யானை போன்ற காட்டு விலங்குகளும் இப் பகுதிகளில் காணப்படுகின்றன. தரையில் வாழ்விடங்களை கொண்டவற்றைப் போன்று அங்குரப் பகுதிகளில் காணப்படும் பல்வகைமையும் குறிப்பிடத்தகுந்தவை. முசுறு, காட்டெறும்பு, தேனீக்கள் மற்றும் குரங்கு போன்றன அங்குரப் பகுதிகளை வாழ்விடங்களாகக் கொண்டுள்ளன.

### காடுசார் பொருளாதாரம்

வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள காடுகளில் விசேடித்தமான காடுசார் பொருளாதாரம் ஒன்று



**காட்டுப்பூனை**

Image source - thuppahis.com

சுவையுள்ள இந்தப் பாலைப்பாணி அதிக மதிப்புடையது. காடுகளில் காணப்படும் இலுப்பை மரங்களை அண்டிய பகுதிகளில் கிடைக்கப்பெறும் இலுப்பை கொட்டைகள் இலுப்பெண்ணை வடித்தலுக்கும் அரப்பு உற்பத்திக்கும் பயன்படுகிறது. காட்டாறுகளில் காணப்படும் மண்வகைகள் வரையறைகளுடன் பாவனைக்குட்படுத்தப்படும் போது பயனுள்ள பொருளாதாரமாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. இவ் வகைப் பொருளாதாரம் பாரம்பரியமிக்கதும் பயனுள்ளதுமாதலால், ஆற்றோர அபிவிருத்திக் குடியிருப்புகளை மேற்கொள்ளும்போது கவனம் பேணப்படவேண்டும். யானைத்தந்தம், புலிப்பல், மான்தோல், மான்மரைக் கொம்புகள் அதிக பெறுமானத்தைப் பெறும் பொருளாதாரம் ஆகும். இவ்வகை செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளது என்பது வாசகர்கள் அறிந்ததே.

நடைமுறையில் உள்ளது. இப் பகுதிகளை அண்டிவாழும் மக்கள் இவ்வகைப் பொருளாதாரத்தினால் நன்மையை பெற்றுக்கொள்கின்றனர். ஏலவே குறிப்பிட்டதற்கு அமைவாக மான், மரை, குக்கிளான் என்பன வேட்டையாடப்பட்டு காட்டுறைச்சி எனும் பெயரில் விற்பனைசெய்யப்படுகிறது. இவற்றில் பல விலங்குகளை கொல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தாலும் இவ்வகை செயற்பாடு தொடர்ந்தும் நடைபெறுகிறது. வடகாடுகளின் குஞ்சுக்குளம் பகுதிகளிலும், கிழக்குகரைப் பகுதிகளில் வெருகல் மற்றும் ஹபரணை கதிரவெளிக் காடுகளிலும் தேனெடுக்கும் வழக்கம் உண்டு. இது பெரும் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இப்பகுதிகளில் காணப்படும் வீரை மரமானது நன்கு எரியக்கூடிய விறகுவகைகளில் ஒன்றாகும். அத்துடன் வீரை மரங்களின் பரம்பல் அதிகரித்துக்காணப்படுவதால் விறகுக்காக வெட்டப்படும் மரங்களால் இக் காடுகளின் சமநிலைக்கு பெரும்பாதிப்பு ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சித்திரை மாதங்களில் பழுக்கும் பாலைப் பழங்களும் ஆவணி - புரட்டாதி மாதங்களில் பழுக்கும் நாவல் பழங்களும் இக் காடுசார் பொருளாதாரத்தில் குறித்துச் சொல்லப்படவேண்டிய விடயங்களாகும்.

அதிகமாக பாலைப்பழம் கிடைக்கும் காலங்களில் கிராமத்தவர்களால் பாலைப்பாணி உருவாக்கப்படும். தேனைப் போல

தேக்கு மரநடுகை மிகவும் பயனுள்ள மீள்வனமாக்கல் பொறிமுறையாகும். அழிக்கப்படும் மரங்களை விட குறித்த பரப்பில் அதிக மரங்களை நடும் பொறிமுறை இத் தேக்கு மரநடுகையால் எய்தப்படக்கூடும். தேக்கு மரங்களை வெட்டியபின் வேரிலிருந்து கிளம்பும் இளங்கன்றுகள் பெருவிருட்சமாக மாறுதல் தேக்கின் பிரதான நன்மையாகும். மர அரிவு இயந்திர தொழிற்சாலைகளின் மரத்தூள் மீள்சுழற்சிக்குட்படுத்தப்பட்டு விறகுக் கட்டைகளாக மாற்றப்படுகிறது. அத்துடன் வீடு கட்டப் பயன்படுத்தப்படும் செங்கற்கள் போன்ற கற்களை உருவாக்குவதிலும் பயன்படுகிறது. மரத்தேவைக்கு பயன்படுத்தப்பட்ட பின்பு மீந்திருக்கும் கிளைப் பகுதிகள் உயிர்க்கரியாக மாற்றப்படுகிறது. இவ் உயிர்க்கரி சேதன விவசாயத்துக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

காடுகளில் காணப்படும் சிறு சிறு நீர்பரப்புகள் அவ்வப்போது காட்டாறுகளால் தொடர்புபடுத்தப்படுவதால் பல மீன்வகைகள் இவ் நீர்ப்பரப்புகளை வந்தடைகின்றன. இறால் மற்றும் விலாங்கு என்பன குறித்துச்சொல்லப்படும் மீன்வகைகளாகும். ஆதலால், கரையோரக் காடுகளும்,

கண்டல்காடுகளும், அடர்காடுகளும் காடுசார் பொருளாதாரத்தில் பங்களிக்கின்றன எனக்கூறுவது பொருத்தமானதாக இருக்கும். மரத்தேவைக்கு பயன்படும் மரங்கள் பற்றி இங்கு சொல்ல எத்தனிக்கப்படவில்லை. இருப்பினும் பாலை, தேக்கு, முதிரை, வேம்பு என்பன பெரும் பொருளாதாரத்தை ஈட்டித்தருகின்றன என்பதை குறிப்பிடலாம்.

### காடுசார் பல்வகைமை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்

இயற்கைக் காடழிப்பு மாற்றத்தால் காடுகள் மட்டுமல்ல பல்வேறுவகைப்பட்ட சூழலியல் மாற்றங்களும் ஏற்படுகின்றன. சுனாமி, வெள்ளப்பெருக்கு என்பன பாதிப்புகளை ஏற்படுத்துவது வழக்கம். இயற்கைப் பாதுகாப்பு




பாலைப்பழம்

Image source - jaffnazone.com

நடவடிக்கைகள் மூலம் இவ் அச்சுறுத்தல் அவசியம் தவிர்க்கப்பட வேண்டும். நவீனமயமாக்கல், ஆற்றோரக் குடியேற்றங்கள் மற்றும் காணியற்றோருக்கான குடியமர்த்துதல்கள் போன்றன கரையோரக் காடுகளுக்கும் ஆற்றோரக்காடுகளுக்கும் பெரும் அச்சுறுத்துலாக அமைகின்றன. சமகாலத்தில் இந் நடவடிக்கைகளும் இன்றியமையாதவையே. ஆகையால் சமுதாயக் காடுகள், திட்டமிட்ட மரநடுகை நடைமுறைகள் என்பன மேற்கொள்ளப்பட்டால் அழிக்கப்படும் காடுகளுக்கு இணையான ஒரு காட்டுப்பரம்பலை ஏற்படுத்தாவிடினும் அவ்வப்பகுதியில் தங்கியிருக்கும் மக்களுக்கான விறகுத் தேவை மற்றும் மரம்சார் அபிவிருத்திக்குரிய நடவடிக்கைகளையாவது ஓரளவு ஈடுசெய்யக்கூடும். அத்துடன் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது சுற்றாடல் தாக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை (*Environment Impact Assessment*) சரி பார்க்கப்படவேண்டும்.

அபிவிருத்தி என்பது காட்டிலுள்ள விலங்குகளின் வாழ்விடங்களை பெரிதும் பாதிப்பதால் உயிரியல் பல்வகைமைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது. யானைகள், குரங்குகள் போன்றவை வாழ்விடங்களை இழந்து கிராமங்களுக்குள்ளும் விவசாய நிலங்களுக்கும் புகுவது அண்மைக்காலமாக நடந்துவருகிறது. பொதுவாக யானைகள் பழக்கப்பட்ட பாதைகளூடாக செல்வது இதற்கு காரணமாகும். வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் மனிதன் - யானை போராட்டம் அண்மைக்காலத்தில் அதிகரிப்பதும் இதனால் சூழலியல் சமநிலைகள் குழப்பப்படுவதும் அறியப்பட்டுள்ளது. குரங்குகள் விவசாய நிலங்களைத் தாக்குவது இக் காடழித்தலுடன் தொடர்புபட்ட இன்னொரு அச்சுறுத்தலாகும். லேசர் கருவிகள், வாயுத் துப்பாக்கிகள் என்பவற்றை பயன்படுத்துதல் இவற்றிற்கான தடுப்பு நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்பட்டாலும் மனித விலங்குப் போராட்டம் அதிகரிக்கும் போக்கே காணப்படுகின்றது.

அபிவிருத்தியில் மின்சாரமயமாக்கல் மிக முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றது. குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குகையில் கணிசமான எண்ணிக்கையுள்ள பெரு மரங்கள் அழிக்கப்படுகின்றன. இவை காட்டின் பரம்பலுக்கு மட்டுமல்ல பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாகும். வடக்கு கிழக்குப் பகுதியில் அநேக ஆண்டுகளாக அபிவிருத்தி ஏற்படாத இடங்களில் வளர்ந்துள்ள காடுகளிடையே ரயில் கடவைகள் மற்றும் மின்சாரக் கம்பங்கள் அமைக்கப்பட்டதால் அப் பகுதியின் பாதைகளை வழக்கமாகக் கொண்டிருந்த யானைகள், ரயில் விபத்துக்குள்ளாகி உயிரிழக்கும், காயமடையும் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அடிக்கடி இடம்பெறுகின்றன. யானை வேலிகள் சூரிய மின்கலத்தாலோ அல்லது வழமையான மின்னோட்டத்தாலோ அமைக்கப்பட்டிருப்பினும் அவற்றைத் தாண்டி இவ் ஆபத்துகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதுள்ளன. மட்டுமல்லாது புதையல் தோண்டுவோர், வேட்டைக்காரர்கள் யானையைக் கொன்று தந்தம் எடுப்போர் இவ் அரிதான யானைகளைக் கொல்வது துரதிஷ்டமே. ஆசிய யானைகள் ஆபிரிக்க



யானைகள் வீதியைக் கடத்தல்

Image source - www.dailymotion.com



சட்டவிரோத மண் அகழ்வு

Image source - www.newmannar.lk

யானைகளை விட வேறுபாடானவை. வேட்டையாடுவோர் அரிதான மிருகங்களைக் கொல்வது உயிரியல் பல்வகைமையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அழுங்கு, உக்குளான், உடும்பு, மான், மரை என்பனவும் இவ்வகை அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளன.

அடிக்கடி தோன்றும் வெள்ளப்பெருக்கு காடுசார் உயிரியல் பல்வகைமையை பாதிக்கின்றது. காலநிலை மாற்றத்துடன் கூடிய வரட்சி மேற்பரப்பில் வேர் விட்டு வளரும் மரங்களையும் அதனுடன் இணைந்து வாழும் மிருகங்களையும் பாதிக்கின்றது. நெடுந்தீவு மற்றும் அதனை அண்டிய தீவுகளில் காணப்படும் கோவேறு கழுதைகள், உள்ளூர் ஆடுகள், மாடுகள் தமது சூழலிலுள்ள பற்றைக்காடுகள் அழிவடைவதால் உணவின்றி இறத்தல் உயிரியல் பல்வகைமையில் பெரும் சரிவை ஏற்படுத்துகிறது.

சட்டவிரோத மண்ணகழ்வு, மரம்வெட்டல் போன்றன அண்மைக்காலத்தில் காடுசார் பல்வகைமைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் காரணிகளுள் முதலில் நிரற்படுத்தப்படுகின்றன. இவற்றைவிட மான்களின் அதிகரிப்பு மற்றும் தரையில் வாழும் விலங்குகளின் அதிகரிப்பு என்பனவும் இக்காட்டுச் சமநிலையில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். சட்டவிரோதப் பயிர்ச்செய்கையாலும் காடு அச்சுறுத்தப்படுகிறது. விசேடமாக குளக்கரையை அண்டிய பகுதிகளில் காடழித்து விவசாயம் மேற்கொள்ளல் அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவ்வகையான அச்சுறுத்தல்கள் காணப்படுவதால் சமுதாயக் காடு வளர்ப்பு மற்றும் விவசாயக் காடு வளர்ப்பு போன்றவற்றை அதிகரித்தளவில் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமல்லாது பாடசாலை மட்டத்தில் காடழித்தல், வனமாக்கல் சம்பந்தமான பிரயோசனமான தகவல்கள் அடங்கிய பரப்புரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். காடுகள் பற்றிய இத்தரவுகளை ஆய்ந்தறிந்த எமக்கு, காடுகளைக் காப்பாற்றும் கடமை உள்ளது எனும் கருத்தை ஆதரிக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

(தொடரும்.)

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.



# சைவ சித்தாந்தம்


நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.




**இஸ்ரேலிய தாக்குதலின் பின், காசா**

Image source - www.bbc.com


உலகச் சமநிலை மாற்றத்தைத் தீவிர நிகழ்வுகள் முனைப்புடன் வேகப்படுத்தியவாறுள்ள சூழலில் இந்தத் தொடரில் இணைந்து பயணிக்கிறோம். அதிலும் இந்த அத்தியாயம் மத்திய கிழக்கில் இயங்கி வருகின்ற உலக மேலாதிக்கச் சக்தியின் ஒரு குவிமையமான இஸ்ரேல் தனது மேலாதிக்க ஆற்றலின் பலவீனத்தை முதல் தடவையாக வெளிப்படுத்தியவாறு இருக்கும் 2023 நொவெம்பர் மாதத்துக்கு உரியதாக உள்ளது. ஏற்கனவே ஐந்தாறு வருடங்களாக ஐக்கிய அமெரிக்க மேலாதிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியத் திணையானது அதனது பொருளாதார வலுவில் மிக வேகமான சரிவைச் சந்திக்கத் தொடங்கிய போது ஒடுக்கப்பட்ட தேசங்களாயிருந்த சீனா, இந்தியா, முன்னாள் சோசலிசக் கட்டமைப்புத் தகர்க்கப்பட்டதனால் பலவீனப்பட்டுப்போன ருஷ்யா என்பன முன்னேறும் பொருளாதார

வல்லாண்மையை வெளிப்படுத்தி வரலாயின. ஒரு வருடத்துக்கு மேலாக நீடிக்கும் உக்ரேன் - ருஷ்யப் போர் ஏகாதபத்தியத் திணையின் அரசியல் மேலாண்மைக்கு மரண அடி கொடுப்பதாக அமைந்து வருகிறது.

இன்னமும் கருத்தியல் மேலாதிக்கத்தைத் தக்க வைக்கும் காப்பிரேட் மூலதனத்தின் ஊடகக் கையாளுகையே ஏகாதிபத்தியத் திணையின் பொய்ப் பிரசாரங்கள் வாயிலாக உலக ஆளுகைக்கான வாய்ப்பைத் தக்கவைத்தவாறு இருந்தது. காசாப் பிரதேச வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்களுக்கு இஸ்ரேலினால் கூறப்பட்ட காரணங்களை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் சோடிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஊடகப் புனைந்துரைகளின் போலிச் சான்றாதாரங்களை அம்பலப்படுத்தவல்ல இன்றைய சமூக ஊடக ஜனநாயக வாய்ப்புகள் காப்பிரேட் மூலதனத்தின் ஊடக மேலாதிக்கத்தையும் கேள்விக்கு உள்ளாக்கி வருகின்றன. ஏகாதிபத்திய ஒடுக்குமுறையே தீர்மானமிக்க அம்சம் என்பது இவற்றின் வாயிலாக இறங்குதசையடைந்து வரும் சூழலில் தேசங்கள் இடையே ஜனநாயகத் தொடர்பாடலுக்கான வாய்ப்பு அதிகரித்து வருகிறது. டொலரின் உலக மேலாதிக்கத்தை ஊடறுத்தவாறு பிராந்தியங்கள் இடையே சீனாவின் யென், ருஷ்யாவின் ரூபிள், இந்தியாவின் ரூபாய் என்பன வர்த்தக ஊடாட்டத்துக்குரிய இடை ஊடகங்களாக மாறி வருகின்றன. ஐ.நா. வில் ஏகாதிபத்திய அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான ஒடுக்கப்பட்ட தேசங்களின் சொந்த விருப்பங்களை வெளியிடும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன.

நூறு வருடங்களின் முன்னர் பலஸ்தீனப் பிரதேசத்தில் ஏகாதிபத்தியச் சுயம் நிர்ணயித்த வண்ணம் இஸ்ரேல் என்ற தேசம் விதைக்கப்பட்டு அதன் சியோனிச ஆக்கிரமிப்புக் கெடு நோக்குகள் நேற்று வரை வெற்றிபெற இயலுமாக இருந்தது என்ற நிலை மாற்றம் பெற்றுப் பலத்த அடியை இன்று எதிர்கொண்டு வரும் புதிய செல்நெறியின் தொடக்கத்தைக் குறிக்கும் வெளிப்பாடுகள் இவை. உடனடியாகவே விடுதலைத் தேசிய விழிப்புணர்வு எங்கெங்கும் பிரகாசம் பெற்று ஒளிரும் என்பது இவற்றின் பொருளல்ல. மக்கள் விடுதலை எழுச்சிகளின் திசை நோக்கிய மாற்றத்தின் வேகம் இனித் துரிதப்படும்.

இரண்டாம் உலக யுத்த



சேக்கிழார்

Image source - www.bbc.com

முடிவில் பிரித்தானிய ஏகாதிபத்தியத் தலைமையில் இருந்த ஐரோப்பிய ஏகாதிபத்தியத் திணை பலவீனப்பட்ட வாய்ப்புடன் ஒடுக்கப்பட்ட தேசங்கள் (ஏகாதிபத்தியச் சுயநிர்ணயத்தையும் உள்வாங்கிய படி) அரைச் சுதந்திரத்தை நாற்பதாம் ஆண்டுகளின் கடைக்கூறில் இருந்து பெற்று வந்தன. இரண்டு தசாப்தங்கள் கடந்த நிலையில் (எழுபதாம் ஆண்டுகளில்) ஒவ்வொரு நாடுகளின் தேசிய முதலாளி வர்க்கத் தலைமையிலான அரசுகள் சுயசார்புப் பொருளாதார முன்னெடுப்பை மேற்கொள்ள இயலுமாக இருந்தது. அதற்கான வாய்ப்பினை வழங்கும் பின்னணியைச் சோசலிச முன்னெடுப்பில் அபாரமான வளர்ச்சியை எட்டியிருந்த சோவியத் ருஷ்யா வழங்கியிருந்தது.

ஐரோப்பியத் தலைமையிலான ஏகாதிபத்தியத் திணையின் இயங்கு முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற அவா புதிய தலைமையைக் கையகப்படுத்த இருந்த ஐக்கிய அமெரிக்க முதலாளித்துவத்துக்கும் இருந்தது. இத்தகைய அரைச் சுதந்திர நாடுகளில் தனது சுரண்டலை ஐரோப்பியத் திணையை மேவியதாகவும் சுதந்திரமாகவும் மேற்கொள்ள இயலும் என்ற காரணத்தினாலேயே ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம் அந்தச் சுதந்திர

முன்னெடுப்பை ஆதரித்தது. மத்திய கிழக்கு நாடுகளில் பெற்றோலியக் கனிமம் கண்டறியப்பட்டு அதனை அபகரிக்கும் நோக்கில் ஐக்கிய அமெரிக்கத் தலைமையை ஏற்றுக்கொண்ட ஏகாதிபத்தியத் திணை இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கெடுபிடிகளுக்குத் தூபமிட்டு வந்தது. உலக நாடுகள் அனைத்தையும் தமது இராணுவ, பொருளாதார, அரசியல், பண்பாட்டு மேலாதிக்கத்தின் கீழ் வைத்து ஆட்சியைச் செலுத்திய ஏகாதிபத்திய வல்லாதிக்கம் தகர்க்கப்பட்டு தேசங்கள் ஒவ்வொன்றும் பூரண விடுதலை பெற இயலும் என்பதற்கான நம்பிக்கை இன்று வலுவடைந்து வருகிறது.

மூலதன வாய்ப்புடன் மேலைத்தேச ஏகாதிபத்திய சகாப்தம் தொடர்ந்துகொண்டு இருப்பதாக இன்றைய வரலாற்று இயங்கு நிலை; இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக மேலைத்தேச நாடுகள் உலக ஆதிக்கத்தின் உச்ச நிலையை வெற்றி கொள்வதற்கு மூலதனத் திரட்சி கைகொடுத்திருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான மருதத் திணை மேலாதிக்கம் கட்டியெழுப்பி வந்த அதிகார வல்லாதிக்கம் கிபி 9 - 12 ஆம் நூற்றாண்டுகளில் உலகின் முதல்நிலை வல்லரசு நாடுகளில் ஒன்றாகத் தமிழகத்தை ஆக்கியிருந்தது. இந்த நான்கு நூற்றாண்டுகளின் உச்ச நிலை ஒன்றுக்குரிய ஒரு நூற்றாண்டில் ஏற்கனவே தமிழகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவந்த சோழப் பேரரசே உலகின் முதல் நிலையைப் பெற்றிருந்தது. விவசாய வாய்ப்புடன் இவ்வகை மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பிய மருதத் திணையின் வாரிசுகளான வெள்ளாளர்களது கருத்தியலாக மேற்கிளம்பிய சைவசித்தாந்தம், கடவுள் கோட்பாட்டின் அதியுயர் வடிவமாக அமைய இயலுமானதில் அந்த அதியுச்ச நிலை ஆதிக்க வெளிப்பாட்டைக் காண இயலும் !

## வெள்ளாள மேலாதிக்கப் பிராமணியம்

வெள்ளாளர்கள் நிலப்பிரபுத்துவத்தின் அதியுயர் வளர்ச்சியை எட்டியிருந்த சோழப் பேரரசர் காலத்தில் சைவசித்தாந்தம் படைக்கப்படவில்லை. அப்போது வேத வேதாந்தத்துக்குரிய பிராமணர்களை மென்மேலும் வரவழைத்து நிலங்களை அவர்களுக்குமானதாக வழங்கித் தமக்குச் சமதையான நிலப்பிரபுக்களாக வளர்த்தெடுத்தவாறு இருந்தனர். அனைத்துச் சாதியினரையும் ஐக்கியப்படுத்தி ஆக்கிரமித்திருந்த நிலபுலங்களில் ஏனைய சாதிகளைத் தொண்டூழியத்துக்கு உரியோராக ஆக்கி ஒட்டச் சுரண்டும் வரலாற்றை முன்னெடுக்க வேண்டி இருந்தது. பிராமணியம் வழங்கிய சாதியக் கருத்தியல் சற்சூத்திரர்களாக வெள்ளாளர்களை அங்கீகரித்துக்கொண்டு ஏனைய சாதிகள் இடையே தொண்டூழியத்துக்கு உரிய மனப்பாங்கை ஏற்க வைக்கும் கருத்துருவாக்கங்களால் அடிமைகொண்டன ஆதிக்கச் சாதிகள் இரண்டும். ராஜராஜ சோழன் உள்ளிட்ட மன்னர்கள் கல்வெட்டுகள் வாயிலாகவும் 'பிராமணர்கள் போன்ற தண்டனை விலக்களிக்கப்பட்ட புனிதச் சாதியினராக' வெள்ளாளர்களைப் பதிய வைத்துக்கொண்டனர்!

சாதிகள் இடையேயான உறவு அன்று எவ்வகையில் இருந்தது என்பதனை இன்றைய உணர்வு நிலையில் இருந்து கணிப்பிட இயலாது. அன்றைய வரலாற்றுத் தேவை வெள்ளாள பிராமண உறவை ஒன்றித்த நலனுக்கு உரியதாக அமைத்திருந்தது. முன்னதாக அறநெறிக் காலத்தில் அதிகாரச் சாதியாக இருந்த வணிகத் திணையை முறியடிக்கும் கிபி. 7 ஆம் நூற்றாண்டின் பக்திப் பேரியக்க முன்னெடுப்பின் போது வீழ்த்தப்பட வேண்டிய வணிக சக்தியின் ஒரு தரப்பையும் ஐக்கியப்படுத்திய திணை அரசியல் செயலொழுங்கு வெள்ளாள - பிராமண தலைமையில் அனைத்துச் சாதிகளையும் ஒன்றுபடுத்தியதாக இருந்தது. முழுமையாக விவசாயத் திணை மேலாதிக்கம் நிலைநிறுத்தப்பட்ட சோழப் பேரரசின் உச்சக் கட்டத்தில் நிலத்துடன் பிணைக்கப்பட்டு இருந்த ஏனைய உழைக்கும் சாதிகளைத் தர வரிசைப்படுத்தி சாதி பேதம் வலுப்படுத்தப்பட்ட போது வெள்ளாள - பிராமண உறவு சமநிலையிலும் ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை நல்குவதாகவுமே இருந்தது.

இதன் வெளிப்பாட்டை, பக்தி இயக்க வரலாற்றை அடிப்படையாக கொண்டு உருவான "பெரிய புராணம்" எனும் காப்பியத்தில் காணலாம். குலோத்துங்க சோழச் சக்கரவர்த்தியின் மந்திரி என்பதோடு வெள்ளாள சமூகத்தவராகவும் விளங்கிய சேக்கிழார் படைத்தளித்த பெரிய புராணம் மேலாதிக்கச் சாதிகள் இரண்டினதும் இணக்கத்தைக் காட்டும் ஒரு படைப்பு. தமது சாதியின் புனிதத்தை வலியுறுத்தும் நன்றிக் கடனாகப் பிராமணரை உச்சந்தலையில் வைத்துக் கொண்டாடி இருந்தது பெரிய புராணம். எந்தச் சாதிய வர்க்கத்திடம்

இருந்து அதிகாரத்தை வெள்ளாளர்கள் கையகப்படுத்திக் கொண்டனரோ அந்த வணிகத் தரப்பாரது நலன்களைத் தமது மேலாதிக்கத்தின் கீழ் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பையும் கூட அந்தப் படைப்பு வெளிப்படுத்தி இருந்தது. வணிகச் சிறுவன் ஒருவனுக்கு நீதி கிடைப்பதற்காக பரம்பொருளாகிய சிவனே வந்து வழக்காடிய திருவிளையாடலையும் இத்தகைய புராணங்கள் வெளிப்படுத்தி இருப்பதனைக் கவனங்கொள்ளலாம்.

திணை அரசியல் செயலொழுங்கில் அதிகாரக் கைமாறுதலின் பொருட்டு வீழ்த்தப்படுகின்ற சாதியை எதிரியென 'அழித்தொழிக்க' முற்படாத இந்தப் பண்பு மிகுந்த கவனிப்புக்கு உரியது. வர்க்கச் சமூக முறைமையில் இதனை எதிர்பார்க்க இயலாது. ஆண்டான்கள் ஆதிக்கம் செலுத்திய கிரேக்க - ரோம் சமூகங்களில் அந்த அதிகார வர்க்கம் வணிகத்தையும் மேற்கொண்டிருந்தது. ஆண்டான் - அடிமைச் சமூக முறைமை வீழ்த்தப்பட்டு நிலப்பிரபுத்துவ வர்க்கம் அதிகாரம் பெற்றபோது வணிகம் எதிர் நிலைக்கு உரிய பாவச்செயலாக ஐரோப்பா முழுமையிலும் கணிக்கப்பட்டது. நிலப்பிரபுத்துவச் சமயமாக எழுச்சி பெற்ற கிறிஸ்தவ மதம் வணிக எதிர்ப்பைப் பரப்புரை செய்தது. எதிர் கருத்தியலுடைய யூதர்கள் சிறுபான்மையினராக இருந்து ஐரோப்பியச் சமூகத்துக்கான வணிகத்தை மேற்கொண்டனர். ஷேக்ஸ்பியரின் படைப்புகளில் யூதர்களது வணிக மோசடி சித்திரிக்கப்படுவது ஐரோப்பியர்களது பார்வையில் வெளிப்படும் யூத - கிறிஸ்தவ முரண்பாட்டின் குறிகாட்டி!

ஐரோப்பியர்கள் தாமே முதலாளித்துவ - வணிக வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டி இருந்த போது போட்டியாளர்களாக எதிர்ப்பட்ட யூதர்கள் மீதான வெறுப்பு மேலும் பன்மடங்காக அதிகரித்தது. தலைமுறை தலைமுறையாக வணிக வளத்துடன் செழிப்புற்றிருந்த அறிவும் பணமும் யூதர்களுக்கு உரியதாக இருந்த காரணத்தால் அவர்களுக்கு எதிரான வன்மத்தை ஐரோப்பியர்கள் வெளிப்படுத்துதல் தவிர்க்கவியலாததாக ஆயிற்று. அதன் உச்சமான கொலை வெறி இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிற்லர் தலைமையில் ஜெர்மனியால் மேற்கொள்ளப்பட்டது. முன்னதாக ஐரோப்பாவில் இருந்து வெறுக்கப்பட்ட சமூகமாகத் துரத்தப்பட்ட யூதர்களை சென்ற நூற்றாண்டின் இருபதாம் ஆண்டுகளிலேயே பலஸ்தீன மண்ணில் குடியேற்றும் கைங்கரியத்தை நீண்டகால ஏகாதிபத்திய நலனின் பேரால் பிரித்தானிய ஏகாதிபத்தியம் மேற்கொண்டது. தம்மைத் துரத்தியடித்துக் கொலைபாதகம் புரிந்த ஐரோப்பியச் சமூகத்தின் அதிகாரக் கும்பலுடன் கைகோர்த்தவாறு தமக்குப் புகலிடம் தந்து அரவணைத்த பலஸ்தீன மக்கள் மீது கொலைவெறித் தாண்டவத்தை இன்றைய யூத மதப்பிரிவின் அதிகாரக் கும்பல் மேற்கொள்கிறது!

சமூக சக்திகள் தமக்கிடையே எதிர் நிலை - ஐக்கியப்படல் என்பவற்றில் எதனைத் தேர்ந்தெடுப்பது என்பதனைக் குறித்த வரலாற்று நிலையில் அவரவர்களது நலனை அடிப்படையாக வைத்தே தீர்மானிப்பர். ஏகாதிபத்தியமாகப் பரிணமிப்பதை நோக்கி வளர்ந்தவாறு இருந்த ஐரோப்பியக் கிறிஸ்தவ அதிகாரத் தரப்பு தொடக்க நிலையில் யூதர்களை எதிரியாக இனங்கண்டது. துரத்தப்பட்ட ஏதிலிகளென அடைக்கலம் வழங்கி அரவணைத்த இஸ்லாமிய மக்களைப் பயங்கரவாத முத்திரை குத்தி எதிரியாகச் சித்திரித்தபடி இன்றைய யூத அதிகாரத் திணை தம்மைத் துரத்திய ஏகாதிபத்தியத் திணையுடன் கூட்டமைத்துள்ளது.

இவ்வகையிலான மாறுபடுகின்ற ஐக்கியமும் - எதிர் நிலையும் என்பதனை வெள்ளாளர் - பிராமணர் எனும் இரு சமூக சக்திகள் இடையிலும் காண இயலும். நிலப்பிரபுத்துவ அதிகாரத்தை நிலைநிறுத்தும் ஆரம்பக் கட்டத்தின் போது இரு தரப்பாரும் ஒன்றுபட்டு இயங்கினர். சுரண்டல் வாய்ப்பு வலுப்பட்ட பின்னர் தம்மைவிட மேலாதிக்கத்தில் பிராமணர் கூடுதல் சலுகைகளுக்கு உரியோராகிவிட்டனர் எனக் கண்டபோது தமக்கான தனித்துவமிக்க தத்துவமாக சைவசித்தாந்தத்தைக் கட்டமைக்க நிர்ப்பந்திக்கப்பட்ட வெள்ளாளர்கள் ஒருவகை எதிர்நிலையை அதன் வாயிலாக வெளிப்படுத்த வேண்டியவர்களாயினர். வெள்ளாளர்களுக்கானதாக இருந்த பிராமணியம் எனும் கட்டத்தைத் தாண்டிய வரலாற்றுச் சூழலின் வெளிப்பாடு இது!

## பிரமத்தைக் கடந்த பதி

தமிழகத்தின் பெரும்பகுதி விஜய நகரப் பேரரசின் ஆட்சியின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிலையில் தமிழும் வெள்ளாளரும் இரண்டாம் தரப்பட நேர்ந்தது. ஆட்சியாளர் அனுசரணையைப் பெற்ற மொழியாகத் தெலுங்கும் சமூக சக்தியாக வெள்ளாளர்களைக் காட்டிலும் பிராமணர்களும் (மற்றும் தமிழகத்தில் புதிய நிலப்பிரபுக்களான தெலுங்கு

வம்சாவழியினரும்) மேலான வாய்ப்புகளைப் பெற்ற போது வேதாந்தமும் சமஸ்கிருத மொழியும் மேலாண்மை செலுத்தும் நிலை வளர்ந்து வரலாயிற்று. அதன் பின்னரே வெள்ளாளர்கள் தமிழ் மொழியூடாகத் தமக்கான இறையியல் தத்துவமாக சைவசித்தாந்தத்தை வெளிப்படுத்த நிர்ப்பந்திக்கப்படனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுச்சி பெற்ற சைவசித்தாந்தம் பிராமணியத்துடன் அடிப்படை முரண்பாட்டை உடையதல்ல எனும் கருத்தும் புறக்கணிக்க இயலாத ஒன்றே தான். அடிப்படையில் வெள்ளாள - பிராமண முரண் என்பது பகைமைக்கு உரியதல்ல; ஒரே வாழ்வியலுக்கு உரிய இரு சமூக சக்திகள் இடையிலானது என்ற வகையில் ஒத்த பண்புக் கூறுகள் பலவற்றைக் கொண்டிருப்பனவே பிராமணர்களது வேதாந்தமும் வெள்ளாளர்களின் சைவசித்தாந்தமும்!

அதேவேளை பிராமணர்களின் வேதாந்தம் இருக்கு வேதத்தை அடித்தளமாகக் கொண்டு எழுச்சி பெற்றது - சைவசித்தாந்தம் ஆகமங்களை மூலாதாரமாகப் பின்பற்றியது என்பதிலுள்ள பண்பு ரீதியான வேறுபாட்டை மனங்கொள்ளாதிருக்கவும் இயலாது. திராவிடரிய நோக்காளர்கள் வெள்ளாள - பிராமண முரணைத் தொடக்கம் முதலாகப் பகைமைக்கு உரியதாகப் பார்ப்பதில் தவறிழைக்கிறார்கள் என்பதைப் போன்றே இந்து மதப் பற்றாளர்கள் வேதாந்தத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் இடையே அடிப்படையான வேறுபாடு எதுவும் இல்லை எனக் கூறுவதிலும் உள்ளது.

மாயாவாதத்தை முன்னிறுத்தியவாறு உண்மைப் பொருளல்லாதது இந்தப் பிரபஞ்சம், வெளியே உள்ள பிரமம் மட்டுமே உள்பொருள் என்பது வேதாந்தம்; பதி, பிரபஞ்சம், ஆன்மா எனும் முப்பொருள் உண்மையை வலியுறுத்துவது சைவசித்தாந்தம். இருக்கு வேத இலக்கியத்துடன் ஆரியர்களது வருகை ஏற்பட முன்னர் இருந்தே தொன்றுதொட்டு இருந்து வருவதென வலியுறுத்தப்பட்டு வந்த ஆகமம் மட்டுமன்றி அதனை வழங்கிய சிந்துவெளிப் பண்பாட்டுடன் தொடர்புபட்ட மற்றொரு மரபுக்கு உரியதான ஆசீவகம் கிமு. 6 ஆம் நூற்றாண்டு முதல் நாலைந்து நூற்றாண்டுகளாக ஆளுமையுடன் இயங்கிய தமிழக அனுபவங்களை உள்வாங்கியதாக சைவசித்தாந்தக் கருத்தியல் அமைந்துள்ளது. பதி, பிரபஞ்சம், ஆன்மா என்பன மூன்றும் உண்மைப் பொருட்கள் என்பதோடு பதி (கடவுள்) போன்றே மற்றிரண்டும் கூட அனாதியானவை என்பதிலுள்ள ஆசீவகத் தாக்கம் நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்று !

கிபி. 7 ஆம் நூற்றாண்டுக்கு உரியவராக ஆய்வுலகம் வலியுறுத்தும் திருமூலர் பெருமத நெறியின் முன்னோடி எனக் கொள்ளப்படுகிற அதேவேளை சித்தர் மரபின் தொடக்குனராகவும் வலியுறுத்தப்படுகிறவர். பெருமதச் சடங்காசாரங்களை நிராகரித்து உண்மைப் பொருளைத் தேடும் ஞானியர்களாகச் சித்தர்கள் கருதப்படுவர்; அதிலே உண்மை உண்டு. பெருமத எழுச்சி ஏற்பட முன்னரே எப்படி திருமூலர் வாயிலாகச் சித்தர் மரபு தொடங்க இயலும்? அவரது கருத்தியல் தளமே சைவசித்தாந்த அடிப்படையாக எவ்வாறு அமைய இயலுகிறது? தொடர்ந்து இயக்கம் கொண்டு வளர்ந்த ஏற்றத்தாழ்வுச் சமூக அமைப்பில் தனக்கான வடிவில் இயங்க இயலாமல் போனபோது ஆசீவகமானது அவைதிக, வைதிக நெறிகள் ஊடாகச் செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டமை குறித்து முந்திய இயல்களில் பேசி வந்துள்ளோம். புதிய சூழலுக்கு அமைவாக, கடந்தும் உள்பொதிந்தும் உள்ள பதியையும் தனக்கேயான வாழ்வியலின் உண்மைத் தன்மைகளையும் சைவசித்தாந்த மற்றும் சித்தர்கள் மரபுகள் சார்ந்த இரு வழித்தடங்களிலும் பயணிக்க அடித்தளம் இடும் ஆளுமையாகத் திருமூலரை இனங்காண இயலுமாக உள்ளது !

உடலைப் பேணி வளர்ப்பவரே ஆன்மாவைச் செழுமைப்படுத்திப் பதியெனும் உண்மைப்பொருளைக் கண்டு அதனுடன் கலக்க இயலுமென வலியுறுத்தியவர் திருமூலர். இதே சமகாலத்தில் வீறுகொள்ளத் தொடங்கிய பக்திப் பேரியக்கமும் திருமூலரின் தத்துவத் தேடலும் இணைந்த பரிணமிப்பாகவே 13 ஆம் நூற்றாண்டின் சைவசித்தாந்தம் முன்னிறுத்திய பதிக் கோட்பாடு வெளிப்பட்டது. கிபி. 7 ஆம் நூறாண்டுகுப் பின்னரான தமிழகத்தின் நிலப்பிரபுத்துவம் முழு இந்தியாவிலும் வீச்சுடையதாக அமைந்திருந்தமையும் அதன் பேறாக இந்தியாவுக்குரிய மிகப் பரந்ததும் நீண்டகால ஆட்சியைக் கொண்டிருந்ததும் என்ற வகையில் இந்தியாவின் முதல் நிலைப் பேரரசு என வரலாற்றாசிரியர்களால் வலியுறுத்தப்படுகிற சோழப் பேரரசின் சக்கரவர்த்திகளது ஆள்புலம் சார்ந்த கருத்தியல் விஸ்தீரணத்துடன் உலக மதங்களில் கடவுள் குறித்த அதியுயர் விளக்கத்துக்கு உரியதாக சைவசித்தாந்தத்தின் பதி வெளிப்பட்டிருந்தது !

கடவுளுக்கான அந்தப் ‘பரிபூரண மேலாண்மை’ வேதாந்தத்தின் பிரமத்துக்கு வந்தமையவில்லை. இயற்கை அம்சங்கள் அனைத்தையும் சமநிலையில் வழிபடுவதாக அமைந்த வேத இலக்கியம் கிமு. 6 ஆம் நூற்றாண்டில் ஏற்றத்தாழ்வான வாழ்முறையும் சுரண்டலும் வலுப்பட்டு பேரரசு உருவாக்கங்கள் ஏற்படத் தொடங்கிய சூழலில் வேதக் கருத்தியல் போதுமானதாக இருக்கவில்லை; அப்போது தோற்றம்பெற்ற உபநிடதக் கோட்பாடு இயற்கை உலகுக்கு அப்பாலான பிரமம் பற்றிய தத்துவத் தேடல்களில் இறங்கியது. வைதிக நெறி இத்திசையில் இயங்க முற்பட்ட சமகாலத்தில் வணிகக் கருத்தியலான பௌத்தமும் சமணமும் வலுப்பெற்று வளர்ந்து ஆதிக்க நிலையை விரைவில் எட்டின. அப்போது உருவாகி வந்த பேரரசு வணிக நலனின் பொருட்டு பாதுகாப்புடனான போக்குவரத்துக்கு அவசியப்பட்ட நிர்மாணங்களுக்கு முன்னுரிமை வழங்கியது. அந்தவகையில் அவைதிக மதங்களை, குறிப்பாக பௌத்தத்தை அந்தப் பேரரசுகள் ஆதரித்தன. இயங்கியல் அணுகுமுறையுடன் மாற்றங்களை உள்வாங்கிய பௌத்தம் சூனியவாதத்தை முன்னிறுத்தும் கட்டத்தை எட்டியது. உழைப்பைப் பிரிந்த நிலப்பிரபுத்துவச் சிந்தனை முறைக்கு உகந்ததான அந்த மாயாவாதத்துடன் பிரமத்தை விளக்கங்கொண்ட அத்வைத வேதாந்தக் கோட்பாட்டை சங்கரர் ஒழுங்கமைத்து வெளிப்படுத்திய நிலையிலேயே பின்னர் நிலப்பிரபுத்துவத்துக்கான இந்து மதமாக வைதிக நெறியால் தலைதூக்க இயலுமாக இருந்தது. வெற்றிபெற்று உறுதிப்பட்ட பின்னர் மாயாவாதக் கறைபடிந்த ‘மறைவான பௌத்தர்’ என்ற குற்றச்சாட்டை சங்கரர் மீது சுமத்தியபடியே பிரமக் கோட்பாட்டை பின்வந்த பிராமணியம் புதிய வடிவங்களுக்கு அமைவாக வியாக்கியானப்படுத்தி வந்தது!

எந்த வடிவில் முன்னிறுத்தப்படுகிற பிரமும் பதி அளவுக்கு முழுமைப்படவில்லை. சங்கரரது அத்வைதம் பிரமத்தை மட்டும் உள்பொருளாக கொண்டு மாயையுடன் இணைந்த பிரமத்தின் திரிபுக் கூறான உலகை உண்மைப் பொருளாக மயங்கும் ஆன்மாவையும் பிரமத்தின் விம்பமாகவே வியாக்கியானப்படுத்தியது. இராமானுஜரின் விசிஸ்டாத்வைதம் விசேடித்த பண்புகளுடன் பிரமத்தை வேறுபடுத்திப் புனிதப்படுத்திய போதிலும் ஆன்மாக்களைத் தனித்த உள்பொருளாகக் கொள்ளவில்லை. மத்துவரின் துவைதம் பிரமத்தினின்றும் வேறாக ஆன்மாக்களுக்கான இருப்பை வலியுறுத்திய போதிலும் அதன் பிரமம் பற்றிய விளக்கங்களில் இஸ்லாத்தின் தாக்கம் கவிந்துள்ளதாகக் கூறி நிராகரிக்கப்படும் நிலை மத்துவரது துவைதக் கோட்பாட்டுக்கு நேர்ந்துள்ளது (சொந்த அடித்தள மரபுடன் ‘முழுநிறைவான பரிபூரணத்துவத்தை’ விளக்க இயலாத நெருக்கடி பிரமத்துக்கு). பின்னரான விவேகானந்தரின் செயல்முறை வேதாந்தத்துடன் மீண்டும் பிரமம் ஆன்மாக்களுடன் அத்வைத சங்கமிப்புக்கு உள்ளாகும் வியாக்கியானங்களைப் பெற்ற சூழலில் சமத்துவத்துக்கான

பிராமண மேலாதிக்கம் என்னதான் ஆன்மீகப் புனித மேலாண்மையைச் சமூகத்தின் மத்தியில் கொண்டிருந்த போதிலும் ‘மறைவான பௌத்தம்’, ‘தனித்துவப் பண்பில் இஸ்லாத்தின் தாக்குறவு’ எனப் பந்தாடப்படும் கடவுள் கோட்பாடாகவே இருந்து வந்துள்ளது.

போராட்டங்களுடன் இணைத்துப் பார்க்க இயலுமாகி இந்த உலகுக்குள் கடவுள் கரைந்து போகவும் இடமேற்பட்டது !

பிராமண மேலாதிக்கம் என்னதான் ஆன்மீகப் புனித மேலாண்மையைச் சமூகத்தின் மத்தியில் கொண்டிருந்த போதிலும் ‘மறைவான பௌத்தம்’, ‘தனித்துவப் பண்பில் இஸ்லாத்தின் தாக்குறவு’ எனப் பந்தாடப்படும் கடவுள் கோட்பாடாகவே இருந்து வந்துள்ளது. மாறாக, திருமூலரால் தொடக்கப்பட்டு சந்தான குரவர்களால் 13 ஆம் நூற்றாண்டுக்கு உரியதாக வளர்க்கப்பட்ட பதிக் கோட்பாடு சமூக மேலாதிக்க உச்ச நிலைகளை நோக்கி வளர்ந்து வந்த பரிணமிப்புடன் விருத்திபெற்று வந்ததும் சொந்தக் கோட்பாட்டு அடித்தளப் பரிணமிப்புக்கு உரியதும் என ஏற்கப்பட்டுள்ளது. இவ்வகையில் ஒரு சீரான வளர்ச்சி அமைய இயலுமானதில் தமது தலைமையில் சமூக மேலாதிக்கத்தை வளர்த்தெடுத்த வெள்ளாளர்களுக்கான ஆளுமையைக் காண இயலும். சத்திரியர்கள் ஆக்கிரமித்துத் தர மாறிவருகிற சமூகச் சூழல்களுக்கு ஏற்ற அவசியப்பாட்டின் கருத்தியல்களை ஒட்டுண்ணியாக



இருந்துகொண்டு வருவிக்க முயலுகின்ற பிராமணியத்திடம் அத்தகைய ஆளுமை வந்தமையவில்லை !

### வேதாகம இணைவு

திணை அரசியல் செயலொழுங்குக்குரிய எமது சமூகத்தில் அரசு யந்திரத்தின் ஒடுக்குமுறையை விடவும் கருத்தியல் மேலாண்மையே தீர்க்கமான பாத்திரம் வகிப்பது. அந்தப் புரிதல் தமக்கான அரசியல் அதிகாரத்தைத் தெலுங்கு பேசும் ஆட்சியாளரிடம் இழந்த பின்னரே வெள்ளாளருக்கு உறைக்க ஆரம்பித்துத் தமக்கான தனித்துவக் கருத்தியல் வெளிப்பாடாகச் சைவசித்தாந்தத்தை வடிவப்படுத்தினர். அதற்கு முன்னரே ஆன்மிகத் தலைமையை உறுதியாகப் பிராமணருக்கு வழங்கித் தம்மைவிடவும் புனிதச் சாதியெனக் கருவறை அதிகாரத்தையும் தமது படைப்புகளூடாக வெளிப்படுத்தி இருந்த அங்கீகாரம் காரணமாக வெள்ளாளர்களால் ஆன்மிகத் தளச் சமத்துவத்தைப் பிராமணர்களுடன் எட்ட இயலாமல் போனது.

மற்றொரு அம்சம் மிகப் பிரதானமானது. பிராமணியம் சமூக மாற்றங்களை உள்வாங்கிப் புதிய சூழலுக்கு அமைவான மாறுபட்ட கருத்தியல்களை வெளிப்படுத்த வல்லதாகத் திகழ்வது. நிலப்பிரபுத்துவக் கொடுமுடியாக வெளிப்பட்ட சைவசித்தாந்தத்தினால் அந்நிய ஆக்கிரமிப்புக்கு ஆட்பட்டிருந்த காலத்துச் சுதந்திரப் போராட்டக் களத்துக்கு அமைவான கருத்தியலை வழங்க இயலவில்லை. சுதந்திரப் போராட்டப் பேரெழுச்சியின் தமிழகத்துக்கான முதல் அரசியல் தலைவராக வெளிப்பட்ட வ.உ. சிதம்பரனார் சைவசித்தாந்தத்துக்குச் சமகாலப் புரிதலுடன் உரை எழுதிய போதிலும் சுதந்திரப் போராட்டக் கருத்தியலாகக் காட்ட இயலாத நிலையே இருந்தது. அரசியல் வாழ்வுடன் தொடர்பற்ற சமய - ஆன்மிக நாட்டத்துக்கு உரியதாக மட்டுப்பட்டு இருந்தது சைவசித்தாந்த அபிமானம்!

மாறாக, கிமு. 6 ஆம் நூற்றாண்டின் முதல் பேரரசு உருவாக்கத் தொடக்கத்தில் வெளிப்பட்ட பிரமக் கோட்பாடு நிலப்பிரபுத்துவ உச்ச வளர்ச்சிகள் எட்டப்பட்ட போது (கிபி. 12 ஆம் நூற்றாண்டளவில்) விசேடித்த பிரமமாக விசிஸ்டாத்வைதத்திலும் முற்றிலும் பிரிந்து தனி நிலைக்குரிய பிரமமாக துவைதத்திலும் வியாக்கியானப்படுத்த இயலுமாக இருந்தது. மேலாதிக்கங்களைத் தகர்த்து விடுதலைத் தேசங்களாகச் சுதந்திரம் பெறத் துடித்த நவீன

சமூகத்தில் செயல்முறை வேதாந்தமாக அரசியல் நெறிக்குரிய தத்துவமாகவும் அத்வைதத்தால் தகவமைப்புப்பெற இயலுமாக இருந்துள்ளது. தேச சுதந்திரத்தையும் கடந்து சமூக - பொருளாதார சமத்துவத்தை எட்டுவதற்கான கருத்தியல் அவசியப்பட்ட போது வேதாந்தத்தைக் கடந்து 'பச்சை வேதத்துக்கு' செல்ல பாரதியால் வழிப்படுத்தவும் பிராமணியத்தின் நெகிழ்வுப் பண்பு இடமளிப்பதாக அமைவு பெற்றுள்ளது !

பிராமணர்கள் மட்டுமே பிரமத்தை உணரவும் இறை நிலை எய்தவும் இயலுமெனச் சங்கரரது அத்வைதம் (நிலப்பிரபுத்துவம் அதிகாரத்தை வென்றெடுத்த ஆரம்ப நிலையில்) அமைய, 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' எனும் முதலாளித்துவச் சமூக நியதிக்கு உரியதாக விவேகானந்தரின் 'செயல்முறை வேதாந்தம்' எனப் பரிணமித்துப் பிராமணரல்லாதோருக்குமான அத்வைதமாக - இந்து விடுதலை நெறிக்கு உரியதாக - வியாபிதம்பெற இருந்த வாய்ப்பு, அதற்குமப்பால் பூரண சமத்துவத்துக்கான 'பச்சை வேதம்' என்பதாகப் பிராமணத் திணையால் அமைவுபெறச் சாத்தியப்படுகின்ற வரலாற்று இயங்கு நிலை என்பன கவனிப்புக்குரியன. புராதனப் பொதுவுடைமைச் சமூக முறையுடன் நாடோடிகளாக இந்தியாவினுள் பிரவேசித்த இருக்கு வேத ஆரியர்களிடையே பிராமணர் என்பது ஆன்மிக நாட்டமுள்ள எவரும் பெறத்தக்க வர்ணப் பிரிவு தான். சமூக மாற்றத்துடனான வரலாற்றுத் தளங்களைக் கவனங்கொள்ளாத பிராமண எதிர்ப்பு மனப்பாங்கு காரணமாக சமத்துவ சமூக உருவாக்கத்துக்கும் பிராமணியத்தால் வழிகாட்ட இயலும் என்ற கருத்தை விளங்கிக்கொள்ளுதல் சாத்தியமற்றது தான் !

அதேவேளை, மேலாதிக்க ஒடுக்குமுறையுடன் பிராமணியம் இழைத்துவரும் கொடூரங்களை இனங்காண்பதையும் கைவிட்டுவிட இயலாது. அதுகூட 'ஆரியச் சதியே பிராமணியம்' என்ற அணுகுமுறையுடன் கையாளத்தக்கது அல்ல என்ற தெளிவுக்கு உட்பட்டு அமைந்தாக வேண்டும். சமத்துவ வாழ்நிலையுடன் இந்தியாவினுள் நுழைந்த ஆரியர்கள் இங்கு நிலையான விவசாயப் பண்பாட்டு வாழ்வியலுக்கு ஆட்பட்ட மாற்றத்தை எட்டி ஏற்றத்தாழ்வுச் சமூக நியதிகளை வந்தடைந்த போது திராவிடப் பூசகர்களுடன் இணைந்த புதிய பிராமணச் சாதி என்ற வடிவம் கைவரப்பெற்ற பின்னரே குடும்பத் தொடர்ச்சி உடைய, வம்சாவழியான பிராமண வர்ணத்தட்டு உருப்பெற்றது.

தொன்றுதொட்டு இருந்து வந்த திராவிடருக்கு உரிய ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்ற மூர்த்தி, தலம், தீர்த்தம்,

**பிராமணர்களின் வேதாந்தம் இருக்கு வேதத்தை அடித்தளமாகக் கொண்டு எழுச்சி பெற்றது சைவசித்தாந்தம் ஆகமங்களை மூலாதாரமாகப் பின்பற்றியது என்பதிலுள்ள பண்பு ரீதியான வேறுபாட்டை மனங்கொள்ளாதிருக்கவும் இயலாது. திராவிடரிய நோக்காளர்கள் வெள்ளாள பிராமண முரணைத் தொடக்கம் முதலாகப் பகைமைக்கு உரியதாகப் பார்ப்பதில் தவறிழைக்கிறார்கள் என்பதைப் போன்றே இந்து மதப் பற்றாளர்கள் வேதாந்தத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் இடையே அடிப்படையான வேறுபாடு எதுவும் இல்லை எனக் கூறுவதிலும் உள்ளது.**

விருட்சம் என்பவற்றை உள்ளடக்கும் கோயிலில் உச்சாடனம் செய்யப்படும் மந்திரமாக இருக்கு வேதம் மாற்றம்பெற்ற பின்னர் புதிய சமூக சக்தியாக பிராமணச் சாதி வடிவம் பெற்றுக்கொண்டது. கோயிலை மையமாக வைத்துச் சமூக மேலாதிக்கத்தைச் சாத்தியப்படுத்துதல் இந்த ஆகம - வேத இணைப்பின் பேறு !

பிராமணித்தின் சாதி பேத வாழ்வியலுக்கு எதிரான இயக்கம் ஆயிரம் வருடத்துக்கு முன்னரே மேற்கிளம்புவதில் கூட பிராமணர் ஒருவருக்குப் பங்கிருந்துள்ளது. "சாதி மறுப்பு இயக்கங்கள் : வீர சைவம், சீக்கியம்" எனும் பொருளுக்குரிய அடுத்த இயலில் அது குறித்துப் பேச இயலும் !

(தொடரும்.)

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.




**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.



# 18 ஆம் நூற்றாண்டின் நிலப்படங்களில்

# யாழ்ப்பாணக் குடாநாடும் அதை அண்டிய பகுதிகளும்

17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரால் வரையப்பட்ட இலங்கையின் நிலப்படங்களில் யாழ்ப்பாணத்தையும் அதை அண்டிய பகுதிகளையும் பற்றிய தகவல்கள் குறித்து ஏற்கெனவே பார்த்தோம். 18 ஆம் நூற்றாண்டில் இறுதி நான்கு ஆண்டுகள் நீங்கலாக, இலங்கை ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழேயே இருந்தது. அக்காலத்தில் வரையப்பட்ட இலங்கைப் படங்களில், தீவின் வடிவம் படிப்படியாகத் திருத்தமடைந்து வந்தது.

அத்துடன், பல்வேறு தேவைகளுக்காக இலங்கையின் வடபகுதியின் பல்வேறு பகுதிகளைக் காட்டும் விவரமான நிலப்படங்களையும் வரைந்தனர். அதேவேளை, இக்காலப்பகுதியில் வெளியான சில நிலப்படங்கள் பழைய நிலப்படங்களைத் தழுவி வரையப்பட்டதால் அவற்றில் இலங்கையின் வடிவம் துல்லியமாக இல்லை. அவற்றிலுள்ள தகவல்களும் சிலவேளைகளில் அவற்றின் காலத்துக்குப் பொருத்தமானவையாக இல்லை.

எடுத்துக்காட்டாக 1724 - 1726 காலப்பகுதியில் வெளியான பிரான்ஸ்வா வலன்டைனின் நூலில் உள்ள இலங்கையின் நிலப்படம் ஒன்று தீவின் வடிவத்தை அக்காலத்தில் அறிந்திருந்த அளவுக்குத் துல்லியமாகக் காட்டவில்லை. அதேவேளை, வடபகுதியில் குறிப்பாக வன்னிப் பகுதியில் நிர்வாகப் பிரிவுகள் முறையாகக் காட்டப்படவில்லை. மிகப்பழைய



**படம் - 1 இலங்கைப் படமும் 22 கோட்டைகளும்**

Image source - National Archives

நிலப்படங்களில் காணப்பட்ட 'வேடர்களின் நிலம்' என்னும் பிரிவும் நிலப்படத்தில் உள்ளது.[1]

யொவான்னஸ் ஃபொன் கம்பன் (*Joannes van Campen*) என்பவர் வரைந்த இலங்கையின் புறவுரு நிலப்படம் ஒன்று நெதர்லாந்தின் தேசிய ஆவணக் காப்பகத்தில் உள்ளது. இது 1719 ஆம் ஆண்டில் மார்ட்டினஸ் லெயுசிகாம் என்பவரால் தொகுக்கப்பட்ட நிலப்படத் தொகுப்பு ஒன்றில் காணப்படுகிறது. இத்தொகுப்பு யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் பல்வேறு பகுதிகளைக் காட்டும் பல நிலப்படங்களை உள்ளடக்கியது. மேற்கூறிய இலங்கையின் புறவுருவ நிலப்படத்தில் வடபகுதி தொடர்பில் குறிப்பிடத்தக்க விவரங்கள் இல்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அருகிலுள்ள தீவுகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளதுடன், வடபகுதியிலிருந்த கோட்டைகளையும் நிலப்படம் பெயர் குறித்துக் காட்டுகிறது. யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை, பருத்தித்துறைக் கோட்டை, பூநகரிக் கோட்டை, ஆனையிறவுக் கோட்டை, பெஸ்ச்சூட்டர்க் கடவைக் கோட்டை, மன்னார்க் கோட்டை, இலுப்பைக்கடவைக் கோட்டை, அரிப்புக் கோட்டை ஆகியவற்றை நிலப்படத்தில் காணலாம். பெஸ்ச்சூட்டர்க் கடவைக் கோட்டையின் அமைவிடம் பிழையாக உள்ளது. பைல் கடவைக் கோட்டை நிலப்படத்தில் இல்லை. மேலே குறிப்பிட்ட நிலப்படத் தொகுப்பிலுள்ள ஏனைய நிலப்படங்கள் இந்தக் கட்டுரைத் தொடருக்கு முக்கியமானவை. இவற்றைப் பற்றிப் பின்னர் விவரமாக ஆராயலாம்.

போல்ட்டஸ் யாக்ப்ஸ் ஃபொன் லியர் (*Baltus Jacobsz van Lier*) என்பவர் 1751 ஆம் ஆண்டில் வரைந்த இலங்கையின் நிலப்படம்

அக்காலத்து நிலப்படங்களில் குறிப்பிடத்தக்கது. இதில் நடுவில் இலங்கையின் படமும் அதைச் சுற்றிலும் உட்செருகலாக அக்காலத்தில் இலங்கையில் இருந்த 22 கோட்டைகளின் வரைபடங்களும் உள்ளன. **(படம்-1)** இவற்றுள் 11 கோட்டைகள் வடபகுதியிலுள்ளவை. இந்த நிலப்படம் குறிப்பாக, இலங்கையில் அக்காலத்திலிருந்த நிர்வாகப் பிரிவுகளைக் காட்டுவதற்காகவே வரையப்பட்டதாகத் தெரிகிறது. ஆனாலும், முக்கியமான வீதிகள், ஊர்கள், கோட்டைகளின் அமைவிடங்கள் முதலியவற்றையும் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது.

இந்த நிலப்படத்தில் யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள தீவுகளுக்கு ஒல்லாந்தர் வழங்கிய பெயர்களுடன் உள்ளூரில் வழக்கிலிருந்த பெயர்களையும் குறித்துள்ளனர். இவை நெடுந்தீவு (*Nedantivo*), புங்குடுதீவு (*Poengartivo*), அனலை தீவு (*Annelletivo*), நயினா தீவு (*Nayentivo*), எழுவை தீவு (*Ellevativo*), காரை தீவு (*Caretivo*), இரணை தீவு (*Jrrenetivo*), பாலை தீவு (*Paletivo*) என்பன. இங்கே அடைப்புக்குறிக்குள் உள்ளவை நிலப்படத்தில் உள்ளபடி தமிழ்ப் பெயர்களின் ஒல்லாந்த மொழி ஒலிபெயர்ப்புகள் ஆகும். இப்பெயர்களை ஒல்லாந்தர் ஆட்சிக்காலத் தொடக்கத்திலிருந்தே பல்வேறு ஆவணங்களில் காண முடிந்தாலும், 17 ஆம் நூற்றாண்டின் நிலப்படங்களில் அவை முழுமையாகப் பயன்படவில்லை. குறிப்பாக, அனலை தீவு, எழுவை தீவு, பாலை தீவு ஆகியவற்றுக்கு நெருக்கமான பெயர்களைப் பழைய நிலப்படங்களில் காணமுடியவில்லை. போல்ட்டஸ் யாக்ப்ஸ் ஃபொன் லியரின் நிலப்படத்தில் மேற்படி பெயர்கள் காணப்படுவது, அக்காலத்து ஒல்லாந்த நில அளவையாளர்கள் உள்ளூர் வழக்குகளுக்குப் பழக்கப்பட்டிருந்ததை அல்லது உள்ளூர் அதிகாரிகளின் உதவியைப் பெற்றுச் சரியான தகவல்களைத் தருவதில் அக்கறை கொண்டிருந்ததை காட்டுகிறது எனலாம். இந்நிலப்படத்தில் வேலணைத் தீவின் பெயரைக் குறிக்கவில்லை. தவறுதலாக விடுபட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது..

நிலப்படம், நிர்வாகப் பிரிவுகளைத் தடித்த எல்லைக்கோடுகளால் பிரித்து, வெவ்வேறு நிறங்கள் தீட்டித் தெளிவாகக் காட்டுகிறது. இலங்கையின் வடபகுதியின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரிவுகளைக் காட்டுவதுடன் பெருநிலப்



படம் - 2 : த லேயு, ஆனையிறவு, பெஸ்சூட்டர், பைல் கோட்டைகளின் அமைவிடம்


Image source - National Archives

பரப்பிலுள்ள 15 நிர்வாகப் பிரிவுகளும் நிலப்படத்தில் உள்ளன.

1766 ஆம் ஆண்டில், கண்டி இராச்சியத்துக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் இன்னொரு நிலப்படம் 1751 ஆம் ஆண்டின் நிலப்படத்தை ஒத்ததே. ஆனால், 1766 ஆம் ஆண்டின் நிலப்படத்தில் உள்ள விளக்கக் குறிப்புகள் வடபகுதியிலிருந்த நிர்வாகப் பிரிவுகளைப் பற்றிச் சில கூடுதல் தகவல்களைத் தருகின்றது. பெருநிலப் பரப்பிலிருந்த கரைச்சிப் பிரிவும்; பூநகரி, இலுப்பைக்கடவை, பல்லவராயன்கட்டு ஆகியவற்றை உள்ளடக்கும் பகுதியும்; மன்னாரைச் சேர்ந்த மாதோட்டம், நானாட்டான், முசலி ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியும் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் நேரடி ஆளுகைக்குள் இருந்தன. பனங்காமம், கருநாவற்பற்று, மேல்பற்று, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, தென்னமரவாடி ஆகிய பிரிவுகள் வன்னியர்களால் ஆளப்பட்டதாகவும், இதற்காக அவர்கள்


ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனிக்கு யானைகள் கொடுத்ததாகவும் மேற்படி விளக்கக் குறிப்பிலிருந்து அறியமுடிகிறது. பிரிவுகளின் பெயர்களில் வேறுபாடுகள் காணப்பட்டபோதும், இந்தியாவுக்கான ஒல்லாந்த ஆளுநர் நாயகம் ரைக்கிளோஃப் ஃபொன் கூன்ஸ் (Ryclof van Goens) யாழ்ப்பாணக் கட்டளைத்தளபதி அந்தனி பவிலியனுக்கு 1665 இல் எழுதிய குறிப்பிலும் இதே தகவல் இருப்பதைக் காணலாம்.[2] 1697 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கட்டளைத்தளபதி சுவார்டெக்குரூன் எழுதிய வழிகாட்டற் குறிப்பில், பரந்த வன்னிப் பிரதேசம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வன்னியர்களின் பொறுப்பில் விடப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வன்னியர்கள் ஆண்டுதோறும் மொத்தமாக 42 ½ யானைகளை ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனிக்குத் திறையாகச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள். ஆனாலும், வன்னியர்கள் இந்தத் திறையை ஒழுங்காகச் செலுத்தாமல் தவிர்த்து வந்தனர்.[3]

1751 ஆம் ஆண்டின் நிலப்படத்தில் உட்செருகலாக வரையப்பட்டுள்ள கோட்டைகளுள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதற்கு அண்மையிலும் அமைந்துள்ளவையாகக் காட்டியுள்ள கோட்டைகள் ஆறு. அவை, யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறைக் கடற் கோட்டை (ஹமென்ஹீல்), பருத்தித்துறைக் கோட்டை, பூநகரிக் கோட்டை, ஆனையிறவுக் கோட்டை, த லேயு கோட்டை, பெஸ்ச்சூட்டர் கடவைக் கோட்டை, பைல் கடவைக் கோட்டை என்பனவாகும். யாழ்ப்பாணக் கோட்டை யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் முதன்மைக் கோட்டை. ஊர்காவற்றுறைக் கடற் கோட்டை இந்து மாகடற் பகுதியிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டைக்கான அணுகுவழியைப்




படம் - 3 : பூநகரிக் கோட்டை

Image source - National Archives




படம் - 4 : போல்ட்டஸ் யாக்ப்ஸ் ஃபொன் லியரின் நிலப்படத்தில் உள்ளபடி ஆனையிறவு, பெஸ்ச்சூட்டர், பைல், த லேயு ஆகிய கோட்டைகளின் வரைபடங்கள்

Image source - National Archives




படம் - 5 : 1789 ஆம் ஆண்டின் "நிர்வாகப் பிரிவுகளைக் காட்டும் இலங்கைத் தீவின் நிலப்படம்" என்னும் தலைப்பிட்ட நிலப்படத்தின் வடபகுதியைக் காட்டும் படம்

Image source - National Archives

பாதுகாப்பதற்காகக் கடலில் அமைக்கப்பட்டது. பூநகரி, ஆனையிறவு, பெஸ்ச்சூட்டர் கடவை, பைல் கடவை ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோட்டைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் வன்னிப் பிரதேசத்துக்கும் இடையிலான போக்குவரத்துப் பாதைகளை அண்டி அமைந்துள்ளன. த லேயு (*De Leeuw*) கோட்டையைப் பச்சிலைப்பள்ளிப் பிரிவில் ஆனையிறவுக்கு மேற்கே நீரேரிக் கரையோரமாக நிலப்படத்தில் குறித்துள்ளனர். (படம்2) இந்தக் கோட்டையைப் பற்றி வேறு ஆவணங்கள் எதிலும் தகவல் இருப்பதாகத் தெரியவில்லை. *1766* ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கட்டளைத்தளபதி மூயார்ட் எழுதிய குறிப்பில் அப்பகுதியில் ஆனையிறவு, பெஸ்ச்சூட்டர், பைல் ஆகிய மூன்று கோட்டைகளை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். இந்தக் கோட்டையின் வரைபடமும் நிலப்படத்தில் இருப்பதால், வேறெங்காவது இருக்கவேண்டியதை இவ்விடத்தில் காட்டினரா, அல்லது கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்டதா என்பது தெரியவில்லை.

யாழ்ப்பாணக் கோட்டை ஐங்கோண வடிவமும் மூலைகளில் அம்புத்தலைவடிவக் கொத்தளங்களும் கொண்டமைந்தது. அக்காலத்தில் நவீனமாக இருந்த பாதுகாப்புத் தொழில்நுட்பங்களைத் தழுவி வடிவமைக்கப்பட்டது. இதைப் பற்றிய விவரமான விளக்கங்களைப் பின்னர் பார்க்கலாம். பருத்தித்துறையில் அமைக்கப்பட்டிருந்த கோட்டை வழமைக்கு மாறான முக்கோண வடிவம் கொண்டது. இதில் ஒரு கொத்தளம் மட்டுமே இருந்தது. இலங்கையிலிருந்த கோட்டைகளுள் பாதுகாப்புப் பெறுமானம் மிகக் குறைவாகக் காணப்பட்ட கோட்டை இதுவே.[4]

பைல் கடவைக் கோட்டை சுண்டிக்குளப் பகுதியூடாக வன்னிக்குச் செல்லும் பாதையை அண்டி அமைந்துள்ளது. ஆனையிறவுக் கோட்டை யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்கும் இடையில் அமைந்த கடல்நீரேரி குறுகலாக இருக்கும் பகுதியை அண்டி இருக்கிறது. அக்காலத்தில், ஆனையிறவுக்கூடாக வன்னிக்குச் செல்லும் கண்டி வீதி இல்லை. ஆனால், குறுகலான இப்பகுதியூடாக வள்ளங்களைப் பயன்படுத்தியும், கோடை காலங்களில் நடந்தும் போக்குவரத்து இடம்பெற்றிருக்கும். பெஸ்ச்சூட்டர் கோட்டை மேற்கூறிய இரண்டு கோட்டைகளுக்கும் இடையில் கோயில்வயல் பகுதியில் உள்ளது.

பூநகரிக் கோட்டை யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனையூடாக வன்னிக்குள் வரும் பாதையை அண்டி அமைந்துள்ளது. இக்கோட்டைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் வன்னிக்கும் இடையிலான போக்குவரத்தைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டவை. குறிப்பாக, மனிதர்கள் போய்வருவதைக் கண்காணித்தல், அனுமதி இல்லாமல் பொருட்களை எடுத்துச் செல்வதைத் தடுத்தல், யானைகள் நுழைவதைக் கட்டுப்படுத்துதல், வன்னியர்களைக் கண்காணித்தல் என்பன இக்கோட்டைகளின் முக்கிய

பணிகளாக இருந்தன.[5]

பூநகரி, ஆனையிறவு, பெஸ்ச்சூட்டர் கடவை, பைல் கடவை, த லேயு ஆகிய இடங்களிலுள்ள கோட்டைகள் எதிர் மூலைகளில் இரண்டு கொத்தளங்களைக் கொண்ட சதுர வடிவமானவை. பூநகரிக் கோட்டை இவற்றுட் பெரியது. (படம்3) இதன் ஒரு பக்க மதிலின் நீளம் 100 அடி (ஏறத்தாழ 30 மீட்டர்). ஏனைய நான்கும் சிறிய கோட்டைகள், ஏறத்தாழ ஒரே வடிவமும் அளவும் கொண்டவை. (படம்4) இவற்றின் ஒரு பக்க மதில் 50 அடி (ஏறத்தாழ 15 மீட்டர்) நீளமானது.[6]

பருத்தித்துறைக் கோட்டை ஒல்லாந்தர் காலத்திலேயே கைவிடப்பட்டு அழிந்துவிட்டது. பெஸ்ச்சூட்டர் கடவை, பைல் கடவை ஆகிய இடங்களிலிருந்த கோட்டைகள் ஒல்லாந்தர் காலத்துக்குப் பின்னர் பயன்பாடின்றி அழிந்துவிட்டன. பூநகரிக் கோட்டை பிரித்தானியர் காலத்திலும் வேறு தேவைகளுக்குப் பயன்பட்டுப் பிற்காலத்தில் கைவிடப்பட்டு அழிந்தது. ஆனையிறவுக் கோட்டை அண்மைக்காலம் வரை இராணுவப் பயன்பாட்டிலிருந்து உள்நாட்டுப் போர்க்காலத்தில் முற்றாக அழிந்துவிட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையும் அண்மைக்காலம்வரை பல்வேறு பயன்பாடுகளுக்கு உட்பட்டிருந்து உள்நாட்டுப் போரில் பெருமளவு சேதத்துக்கு உள்ளாகியபோதும், தற்போது பகுதியளவாகத் திருத்தப்பட்டுள்ளது. உள்ளேயிருந்த இராணி மாளிகை, தேவாலயம் உள்ளிட்ட எல்லாக் கட்டடங்களும் அழிந்துவிட்டன.

'நிர்வாகப் பிரிவுகளைக் காட்டும் இலங்கைத் தீவின் நிலப்படம்' என்னும் தலைப்புடன், 1789 ஆம் ஆண்டில் வரையப்பட்ட நிலப்படம் ஒன்று நெதர்லாந்தின் தேசிய ஆவணக் காப்பகத்தில் உள்ளது. (படம்5) இந்த நிலப்படம் ஒல்லாந்தரின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளின் பெரும் பிரிவுகளில் உள்ள துணைப் பிரிவுகளையும் காட்டுகிறது. வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடு, தீவுப்பகுதி, பூநகரிப் பகுதி, கரைச்சி, மன்னாருக்கு உட்பட்ட பகுதிகள் என்பவற்றின் துணைப்பிரிவுகளின் எல்லைகளையும் பெயர்களையும் நிலப்படம் காட்டுகிறது. 1719 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரிவுகளுக்குத் தனித்தனியான விவரமான நிலப்படங்கள் வரையப்பட்டன. அவை அப்பிரிவுகளின் துணைப் பிரிவுகளையும் தெளிவாகக் காட்டுகின்றன. இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1789 ஆம் ஆண்டின் நிலப்படத்திலுள்ள துணைப்பிரிவுகளின் எல்லைகள் துல்லியமானவையாக இல்லை. எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாண நகரை அண்டிய வண்ணார்பண்ணை, நல்லூர், சுண்டிக்குழி, கோப்பாய் ஆகிய துணைப்பிரிவுகளின் எல்லைகளைச் சரியாக வரையவில்லை.

ஜோன் டு பெரோன் (Jean Du Perron) என்னும் பிரான்சியர் 1789 இல் வரைந்த இன்னொரு நிலப்படமும் நெதர்லாந்தின் தேசிய ஆவணக் காப்பகத்தில் உள்ளது. இலங்கையின் புறவுரு மேலே விளக்கிய நிலப்படத்தில் உள்ளதுபோலவே இருப்பதால் அதையும் ஜோன் டு பெரோனே வரைந்திருக்கக்கூடும் என்ற கருத்து உண்டு.7 இதுவும் இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் ஆட்சிப் பகுதிகளிலிருந்த துணை நிர்வாகப் பிரிவுகளைக் காட்டுகிறது.

## குறிப்புகள்


1. *Atlas of Mutual Heritage, Map of Ceylon, https://www.atlasofmutualheritage.nl/en/page/2984/mapofceylon*
2. *Instructions from the GovernorGeneral and Council of India to the Governor of Ceylon 16561665, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1908), 85.*
3. *Memoir of Hendrick Zwaardecroon, Commandeur of Jaffnapatam 1697, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1911), 5.*
4. *W. A. Nelson, The Dutch Forts of Sri Lanka, The Military Monuments of Ceylon (with updates by R. K. de Silva) (Colombo: Sri LankaNetherlands Association, 2004), 103.*
5. *Memoir of Anthony Mooyart, Commandeur of Jaffnapatam for the information and Guidance of his Successor Noel Anthony Lebeck 1766, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1910), 9.*
6. *Nelson, The Dutch Forts of Sri Lanka, 97101a.*
7. *Rob van Diessen and Bert Nelemans, Comprehensive Atlas of the Dutch United East India Company – IV Ceylon (Voorburg: Asia Maior/ Atlas Maior, 2010), 48.*

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.





விவேகானந்தராஜா
துலாஞ்சனன்

விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.

இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்புமலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.


# வரலாற்றுக்கு முற்பட்ட இலங்கை




**உரு. 01. பொதுமூதாதையொன்றிலிருந்து பல்வேறு மந்தி இனங்களும் மனிதனும் தோன்றியதைக் காட்டும் படம்**

எழுதப்பட்ட ஆவணங்களே வரலாற்றுக்கு ஆதாரம். எழுத்துக் கிடையாத காலத்தில் வேறு தொல்லியல், மானுடவியல் எச்சங்களைக் கொண்டு கட்டமைக்கப்படும் போது அது 'முன்னைவரலாறு' (PreHistory) என்று அழைக்கப்படும். முன்னைவரலாற்றின் குறைந்தபட்ச எல்லை என்பது அங்கு எழுத்துச் சான்று கிடைத்த காலமே. நாம் வரலாறை எப்போதும் மனிதனை மையமாகக் கொண்டே வரைவதால், ஒரு நாட்டின் முன்னைவரலாறானது அங்கு முதல் மாந்தன் தடம் பதித்த காலத்திலிருந்து, அங்கு கிடைத்த முதல் எழுத்துச் சான்று வரையான காலம் என்று

மதிப்பிடப்படுகிறது. முன்னைவரலாற்றுக் காலமானது மனிதன் அந்தந்த இடங்களில் குடியேறி தன் வரலாற்றை எழுத்தில் பொறிக்க ஆரம்பித்த காலத்தைப் பொறுத்து இடத்துக்கிடம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. உதாரணமாக அவு`ச்திரேலியக் கண்டத்தில் இற்றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் குடியேறிவிட்டான். ஆனால் அவு`ச்திரேலியப் பழங்குடிகளின் மொழிகளுக்கு எழுத்து இருக்கவில்லை. அங்கு முதல் காலனித்துவக் குடியேற்றம் ஏற்பட்ட 1788 இல் தான் ஐரோப்பியக் குடியேறிகள் மூலம் எழுத்து ஆரம்பமானது. எனவே அவு`ச்திரேலியாவின் முன்னைவரலாறு 1788 உடன் முடிவடைகின்றது.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரை முன்னைவரலாற்றுக் காலமானது அங்கு இன்றைய மனிதன் குடியேறிய இற்றைக்கு ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தொடங்கி அங்கு எழுத்துப்பொறிப்புகள் கிடைக்கின்ற பொமு. 500 களில் முடிவடைகின்றது. இற்றைக்கு சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் புத்தேள் மாந்தனின் வருகையுடன் ஆரம்பமாகும் இலங்கையின் முன்னைவரலாற்றுக் காலம், பிராமிக் கல்வெட்டுகள் கிடைக்க ஆரம்பிக்கும் சுமார் பொபி 500 ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது.

## இலங்கையில் முன்னை வரலாற்றின் தொடக்கம்

மனித இனம் உலகில் தோன்றியதும் அது உலகமெலாம் பரந்ததும் மிகுந்த சிக்கலான அதேவேளை மர்மம் மிகுந்த விஞ்ஞானக் கருதுகோள்களுள் ஒன்று. பொதுவாகச் சொல்லப்படும், "மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான்" என்ற சொலவடையை விட, குரங்கும் மனிதனும் தங்களுக்குப் பொதுவான ஒரே மூதாதையிலிருந்து கூர்ப்பால் தோன்றின என்று சொல்வதே சரி. இந்தப் பொதுமூதாதைக்கு "மாமந்தி" (Great Ape) என்று பெயர். மாமந்தியிலிருந்து தான் மனிதனும், சிம்பன்சி, கொரில்லா, ஒரங்குட்டான் உள்ளிட்ட குரங்கு இனங்களும் தோன்றின (உரு. 01).

ஃகோமோ சபியன்`ச் (Homo sapiens) என்பது இன்றைய மனிதனைக் குறிக்கும் அறிவியற் பெயர். மனிதனைப் போல "ஃகோமோ" பேரினத்தைச் சேர்ந்த பல மாந்த மூதாதைகள் வாழ்ந்து மறைந்துவிட்டார்கள். நியாண்டதால் மாந்தன் (Neanderthal), நிமிர் மாந்தன் (H. erectus), டெனிசோவ மாந்தன் (Denisovan) முதலிய இந்த மாந்த மூதாதையரை "தொல்மாந்தர்" (ஃகொமினினா, Hominina) என்பது வழக்கம். இந்த ஃகோமோ பேரினத்தை சேர்ந்த மாந்தர் உலகில் 2.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றினர். ஃகோமோ பேரினத்தில் நான்கு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றி, ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் மறைந்த நிமிர் மாந்தன் ஆபிரிக்காவிலிருந்து வெளியேறிய முதல் தொல்மாந்தனாகக் கருதப்படுகிறான். நிமிர் மாந்தரது உயிர்ச்சுவடுகள் ஐரோப்பா, வியட்நாம், இந்தோனேசியா உள்ளிட்ட பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்றைய புத்தேள் மாந்தன் (Modern Human) அல்லது ஃகோமோ சபியன்`ச், இற்றைக்கு மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவில் தோன்றி உலகெங்கும் பரவினான்.

எவ்வாறெனினும் தொல்மாந்தன் என்றதும் நாம் கற்பனையில் தோன்றுகின்ற, "அவர்கள் குகையில் அம்மணமாக வாழ்ந்த காட்டுமிராண்டிகள்" என்ற சித்திரம் தவறு என்பதை சமகால ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. நிமிர் மாந்தனே முதன்முதலில் தீயைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தியவன். நிமிர் மாந்தரும் ஐரோப்பா, தென்மேற்கு ஆசியா, உ`ச்பெகி`ச்தான் பகுதிகளில் நான்கு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் வரை வாழ்ந்து மறைந்த நியாண்டதால் மாந்தரும் (Neanderthal Human, Homo neanderthalensis ) உணவைப் பதப்படுத்தி வைக்கவும் ஆடை நெய்யவும் கடலோடி மீன் பிடிக்கவும் காயங்களைக் குணப்படுத்தவும் அறிந்திருந்தனர்.


நிமிர் மாந்தர் மற்றும் நியாண்டதால் உயிர்ச்சுவடுகளிலிருந்து அவர்கள் கலையுணர்வு மிகுந்தவர்கள் என்பதும் அரிய மணிகளை சேமித்து அலங்கரிக்கும் வழக்கம் அவர்களிடம் இருந்தது என்பதும் அறியப்பட்டிருக்கிறது. நியாண்டதால்கள் புல்லாங்குழல் முதலிய இசைக்கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்தியதுடன் 65,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சில பழங்கற்கால ஓவியங்கள் நியாண்டதால் மாந்தரால் வரையப்பட்டவையாகக் கருதப்படுகின்றது. மிகக்குறைவான சான்றுகளிலிருந்து அவர்கள் தொடர்பாடலுக்கென மொழியைப் பயன்படுத்தி இருக்கக்கூடும் என்பதும், சமய நம்பிக்கைகளைக் கொண்டிருந்திருக்கலாம் என்பதும் கூட ஊகிக்கப்படுகிறது.

புத்தேள் மாந்தன் (Modern Human) இற்றைக்கு மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவில் தோன்றினான். அவனது குறிப்பிடத்தக்கதும் முக்கியமானதுமான ஆசியாவுக்கான பரம்பல் 70,000 தொடக்கம் 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது (உரு. 02). இன்றைய ஆபிரிக்காவுக்கு வெளியேயுள்ள சகல புத்தேள் மாந்தரும் இந்த இறுதிப் புலம்பெயர்வின் பிரதான விளைவே என்றே பெரும்பாலான ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். நிமிர்மாந்தன், நியாண்டதால் மாந்தன் ஆகியோருடன் இடைத்தாக்கம் புரியும் வாய்ப்பு புத்தேள் மாந்தனுக்குக் கிடைத்திருக்கும் என்பதால் ஏனைய மாந்த இனங்களின் மறைவுக்கு இவன் காரணமாயிருக்கக்கூடும் என்றும் நம்பப்படுகின்றது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தொல்மாந்தன் எப்போது குடியேறினான் என்பது சரியாகத் தெரியவில்லை. நிமிர் மாந்தன் இங்கு இரண்டு அல்லது ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியிருக்கலாம் என்று பாகிஸ்தானில் கிடைத்த கல்லாயுதங்களைக் கொண்டு ஊகிப்பார்கள். தொல்மாந்தரின் மறைவுக்கு அதுவும் ஒரு காரணம் என சிலர் ஊகிப்பர். எவ்வாறெனினும் தமிழகத்தின் அத்திரம்பாக்கத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு கிடைத்த தொல்லியல் எச்சங்கள், இந்தியத் துணைக்கண்டத்தில் புத்தேள் மாந்தன் அல்லது தொல்மாந்தன் 2.85 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே குடியேறியிருக்கவேண்டும் என்று ஊகிக்கவைக்கின்றன (Kumar et al, 2017: 97101).

ஆனால் தெற்காசியாவிலேயே திருத்தமாகக் காலம் கணிக்கப்பட்ட மாந்த உயிர்ச்சுவடு என்று புகழ்பெற்ற “பலாங்கொடை மனிதன்” எச்சங்கள், இலங்கையில் இரத்தினபுரிக்கு அண்மையிலுள்ள பலாங்கொடையிலேயே கண்டறியப்பட்டன (உரு.03). இவை இற்றைக்கு நாற்பதாயிரம் ஆண்டுகள் முற்பட்டவை.

பெல்லன்பெந்திபலசை, பாத்ததொம்பலேனை உள்ளிட்ட இடங்களில் இருந்த குகைகளில் பலாங்கொடை மனிதனின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. பாத்ததொம்பலேனையில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்களிடையே அம்பு அல்லது வேல்முனைகள் என எண்ணத்தக்க கல்லாயுதங்கள், நெருப்புக்கோழி முட்டையோட்டிலிருந்து தயாரான மணிகள் என்பன குறிப்பிடத்தக்கவை. பலாங்கொடைக்கு வெளியே சுமார் 3500 பேர் ஒரே நேரத்தில் வசித்திருக்கக்கூடிய தெற்காசியாவின் மிகப்பெரிய இயற்கைக்குகையான கல்லுத்துறை பாகியன் குகையிலும் பலாங்கொடை மனிதனின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. எச்சங்கள் கண்டறியப்பட்ட இடங்களில் மாத்திரமன்றி இவர்கள் இலங்கைத்தீவு முழுவதும் பரந்து வாழ்ந்தனர் என ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.




**உரு. 02. தான் தோன்றிய கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து புத்தேள் மாந்தனின் புலம்பெயர்வு ஆண்டுகளில்**

Image source - Peter Hermes Furian / Adobe Stock

இவர்கள் பெரும்பாலும் கடல்மட்டம் தாழ்ந்து இந்தியப்பெருநிலம் இலங்கையோடு இணைந்திருந்தபோது அல்லது கடல்வழிப் பயணத்தின் மூலம் இலங்கைத்தீவை வந்தடைந்திருக்கலாம்.

## கற்காலம்

முன்னைவரலாற்றை கற்காலம் (Stone Age), இரும்புக்காலம்

(*Iron Age*), வெங்கலக்காலம் (*Bronze Age*) என்று பிரிப்பது உலகளாவிய ஆய்வு நடைமுறை. இலங்கையில் கற்காலத்தின் முடிவிலேயே எழுத்துச் சான்றுகள் கிடைக்க ஆரம்பிப்பதால், இலங்கையின் இரும்புக்காலத்தையும் வெங்கலக்காலத்தையும் தனித்து ஆராயத்தேவையில்லை. எனினும் இலங்கையின் தொடக்க இரும்புக்காலம் (*Early Iron Age*) பற்றி விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தற்காப்பு, குடியிருப்பு, அலங்காரம் முதலிய பல்வேறு தேவைகளுக்காக கல்லை உடைத்து பல்வேறு பொருள்களை புத்தேள் மாந்தன் அமைக்க ஆரம்பித்த காலம் கற்காலம் (`ச்டோன் ஏச், *Stone Age*). கல்லை உடைப்பதற்கு தீயைக் கையாளும் மனிதனின் இயலுமை பெருமளவு உதவியது. பாறைகளைச் சூடாக்கி நீரை ஊற்றிக் குளிர்வித்து அவற்றை வெடிக்கச் செய்வதன் மூலமோ, மர ஆப்பு, அல்லது வேறு கற்களைச் செருகி அடித்துப் பிளப்பதன் மூலமோ, இந்தக் கல்லாயுதங்கள் உருவாக்கப்பட்டன. இலங்கையின் கற்காலம் இற்றைக்கு முன் 3500 ஆண்டுகள் வரை நீடித்திருந்தது. இதை பழம்பாறைக்காலம் (பலியோலிதிக், *Paleolithic*), நடுப்பாறைக் காலம் (மீசோலிதிக், *Mesolithic*), பூப்பாறைக்காலம் (நியோலிதிக், *Neolithic*) என்று மூன்றாகப் பிரிப்பர்.

**தெற்காசியாவிலேயே திருத்தமாகக் காலம் கணிக்கப்பட்ட மாந்த உயிர்ச்சுவடு என்று புகழ்பெற்ற பலாங்கொடை மனிதன்" எச்சங்கள், இலங்கையில் இரத்தினபுரிக்கு அண்மையிலுள்ள பலாங்கொடையிலேயே கண்டறியப்பட்டன**

செய்யப்பட்ட ஆயுதங்களும் ஆபரணங்களும். இவை இலங்கை முழுவதும் பரவலாகக் கிடைத்துள்ளன.

கிளிநொச்சி இரணைமடுவில் கிடைத்த பழம்பாறைக் கால எச்சங்கள் நன்கு ஆய்வுசெய்யப்பட்டுள்ளன (*Pichumani*, 2004). இக்கால மக்கள் வேடுவோர் - சேகரிப்போராக நாடோடி வாழ்க்கை வாழ்ந்ததுடன், இவர்களுக்கு சமய நம்பிக்கை இருந்ததாகவும் இறப்போரைப் புதைக்கும் வழக்கம் தோன்றிவிட்டதாகவும் நம்பப்படுகின்றது. இலங்கையில் ஒப்பீட்டளவில் வடக்கு மற்றும் தென்கிழக்கு உலர் வலயப் பகுதிகளில் இந்தத் தொல்மாந்தர் வாழ்ந்திருப்பதற்கான அதிக சாத்தியங்கள் காணப்படும் போதும் (*Dereniyagala*, 1991:17882), கீழைக்கரையில் அவர்களது வதிகை தொடர்பாக விரிவான ஆய்வுகளெதுவும் இடம்பெறவில்லை.



**உரு. 03. பெல்லன்பெந்திபலசை குகையில் அகழப்பட்ட பலாங்கொடை மனிதனின் எச்சம்**

Image source - roar.lk

பழம்பாறைக் காலம், எளிமையான கல்லாயுதங்களையும் கல்லணிகளையும் மாந்தன் பயன்படுத்தத் தொடங்கிய காலம். இலங்கையில் இது இற்றைக்கு முன் மூன்று இலட்சம் ஆண்டுகளில் தொடங்கி 35,000 ஆண்டுகள் வரை நீடித்தது. பழம்பாறைக் காலச் சான்றுகளில் முக்கியமானது பளிங்குக்கல்லில்

இலங்கையின் நடுப்பாறைக்காலம், இற்றைக்கு முன் 34,000 ஆண்டுகளில் தொடங்கி இற்றைக்கு முன் 5000 ஆண்டுகளில் முடிவடைகின்றது. இக்காலத்துக் கல்லாயுதங்களும் அணிகலன்களும் நுட்பமும் திருத்தமும் பெறுகின்றன. செதுக்கப்பட்ட பூகோளவடிவ குறுணிக்கற்கள் இந்தக் காலத்தில் அதிகம் கண்டறியப்பட்டதால் நடுப்பாறைக் காலம்,

“குறுணிக்கற்காலம்” என்றும் அழைக்கப்படும். ஐரோப்பாவை விடப் பழைமையான குறுணிக்கற்கள் இலங்கையிலேயே கிடைத்துள்ளன (Deraniyagala, 1998).

நாடோடியாகத் திரிந்த பழம்பாறைக்கால மாந்தனை விட, நடுப்பாறைக் கால மாந்தன் சிற்சில இடங்களில் குறிப்பிட்ட நாள் தங்கியிருக்க ஆரம்பிக்கின்றான். நாம் முன்பு பார்த்த பலாங்கொடை மனிதன் இந்தக் காலத்தைச் சேர்ந்தவன் தான். பலாங்கொடை மனிதன் வாழ்ந்த பாகியன்கல் மலையில் தான் ஆபிரிக்காவுக்கு வெளியே மிகப்பழைய வில்லம்பு பயன்படுத்தப்பட்டதற்கான சான்று கிடைத்தது. நாய், கோழி, பன்றி முதலியவற்றையும் நடுப்பாறைக்கால மாந்தனே வீட்டு வளர்ப்புக்குப் பயன்படுத்த ஆரம்பித்திருந்தான்.

வேடுவர், சேகரிப்போர், மீன்பிடிப்போராக விளங்கிய மாந்தர், விவசாயத்தையும் விலங்கு வளர்ப்பையும் கற்றுக்கொண்டு நிரந்தரக் குடியிருப்புகளை உருவாக்கிக்கொண்ட காலம், பூம்பாறைக்காலம். நெடுநாள் தங்கியிருப்பதற்கும் பொருட்களைச் சேமித்து வைக்கவும் உதவியாக, மட்பாண்டங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இக்காலத்தில் செப்பு பயன்பட்டதற்கான சான்றுகளும் கிடைப்பதால், பூப்பாறைக்காலத்தை செப்புப்பாறைக்காலம் (Chalcolithic) என்றும் அழைப்பதுண்டு. பெரிய கற்கள் (பெருங்கல் அல்லது மாப்பாறை - megalith) வெட்டப்பட்டு நினைவுச்சின்னங்களும் வழிபாட்டுப்பொருட்களும் அமைக்கப்பட ஆரம்பித்த காலமும் இது தான். பூப்பாறைக்காலத்திலிருந்து வரலாற்றுக் காலமான பொமு. 200 ஆம் ஆண்டு வரை அமைக்கப்பட்ட மாப்பாறை அமைப்புக்கள் தென்னகத்திலும் இலங்கையிலும் கண்டறியப்பட்டுள்ளன.

இலங்கையின் பூப்பாறைக்காலம் (அல்லது புதிய கற்காலம்) இற்றைக்கு முன் 5000 இலிருந்து 1000 ஆண்டுகள் வரை என்று மதிப்பிடப்படுகின்றது. இலங்கைக்கும் தென்னகத்துக்கும் பூப்பாறைக்காலச் சான்றுகள் தொடர்பில் நிரம்ப ஒற்றுமைகள் கண்டறியப்பட்டுள்ளன (Senaviratne, 1989) பூப்பாறைக்காலத்தில் பொமு 1800 இல் தயாரிக்கப்பட்ட செம்பாலான கலைப்பொருட்கள் மன்னார் மாந்தையில் கண்டறியப்பட்டன (Deraniyagala, 1998). மாந்தைக்கு மேலதிகமாக, அனுராதபுரம், பொன்பரப்பி, சிகிரியா, உள்ளிட்ட இடங்களில் பூப்பாறைக்காலச் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.

விலங்குகளின் வீட்டுவளர்ப்பு இயல்பாகியமை, நிரந்தர வசிப்பிடங்கள், நெற்பயிர்ச்செய்கை என்பன பூப்பாறைக்காலத்தின் முதன்மை அடையாளங்கள். ஈமச்சடங்குகள் மற்றும் வானியல் நோக்கம் என்று ஊகிக்கப்படும் பெரும்பாறைகளும் இக்காலத்தில் அமைக்கப்படலாயின.

கீழைக்கரையின் வடஅந்தத்தில் வாகரைப்பகுதியில் பூப்பாறைக்காலத்துக்குரிய பெரும்பாறைகள் சிலவற்றை க.தங்கேஸ்வரி அடையாளம் கண்டிருந்தார். அங்கு கதிரவெளியிலிருந்த குரங்கு படையெடுத்த வேம்பு என்ற இடத்தில் கற்பதுக்கைகள், கற்கிடைகள் என்பன அவரால் அவதானிக்கப்பட்டிருந்தன (தங்கேஸ்வரி, 2007:43) தென் அந்தத்தில் பாணகை, உகந்தைப்பகுதியிலும் பெரும்பாறைகள் அவதானிக்கப்பட்டுள்ளன (Ranawella, 2018:12). 1880 களில் சம்மாந்துறைக்கருகே மல்கம்பிட்டியில் கல்மூடி கொண்ட ஈமத்தாழியொன்றை கியூ நெவில் கண்டுபிடித்தார் (Nevill, 1887:129). இவை பூப்பாறைக்காலத்தின் இறுதியில் பயன்பட்டிருக்கக்கூடும்.

### உசாத்துணை


1. தங்கேஸ்வரி, க. (2007). கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, சென்னை : மணிமேகலைப் பிரசுரம்.

2. Deraniyagala, S. U. (1998). *Pre and protohistoric settlement in Sri Lanka. In XIII UISP congress proceedings*, 5, pp. 277-285.

3. Kumar, A., Pappu, S., Haresh, M.R., Yanni, G., Anil, D.S., Ashok, K.S. (2017). *Early Middle Palaeolithic culture in India around 385-172 ka reframes Out of Africa models, Nature*, 554, pp. 97-101.

4. Nevill, H. (1887). *The Taprobanian*, pp. 129-130.

5. Pichumani, K., Subramanian, .T.S., Deraniyagala, D.U. (2004), *“Prehistoric basis for the rise of civilisation in Sri Lanka and southern India”, Frontline*, 21 (12).

6. Ranawella, G.S. (2018). *History of the Kingdom of Rohana: From the Earliest Times to 1500 AC. Colombo: Ministry of Higher Education and Department of Archaeology.*

7. Seneviratne, S. (1989). *PreState Chieftains And Servants of the State: A Case Study of Parumaka, Sri Lanka Journal of Humanities vol. XV*
1989, pp. 99-131


(தொடரும்.)

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.




சிவபாத சுந்தரலிங்கம்
கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.


# பால்மா
## உற்பத்தியும் மனித நுகர்வும்

**விலங்குகளின் பாலை கறந்து அருந்திய மனிதன், மித மிஞ்சிய பாலைச் சேமிக்க வேண்டிய தேவை ஏற்பட, அதற்கென பல வழிமுறைகளைக் கையாளத் தொடங்கினான். அதில் ஒரு முறைதான் பாலின் தண்ணீரை அகற்றி அதனை மாவாகச் சேமித்தலாகும்**

இலங்கை மக்களில் பெரும்பாலானவர்களின் காலைத் தேநீரில் பால் சேர்க்கப்படுகிறது. எனினும் அதிகளவில் பொதி செய்யப்பட்ட பால் மா வடிவிலேயே சேர்க்கப்படுகிறது. திரவப் பால் வடிவில் அது சேர்க்கப்படுவது மிக மிகக் குறைவு. அதற்கு பல காரணங்கள் உள்ளன.

இலங்கையில் நுகரப்படும் பால் மா நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டே உள்ளூர் சந்தைக்கு விநியோகிக்கப்படுகிறது. பால் மா இறக்குமதிக்கே பல பில்லியன் டொலரை வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டியிருக்கிறது. இது நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. Highland, பெலவத்தை போன்ற உள்ளூர் பால் மா நிறுவனங்கள் தமது உற்பத்திகளை உள்ளூர் சந்தைக்கு விநியோகிக்கின்ற போதும் அவை நியூசிலாந்தின் fonterra போன்ற நிறுவனங்களின் பால் மா உற்பத்திகளை விட மிக மிக குறைவே. மக்களும் உள்ளூர் உற்பத்திகளை விட வெளிநாட்டு இறக்குமதிக்கே அதிக விருப்பத்தைக் காட்டுகின்றனர். சுதேசிய உணர்வுள்ள சில படித்த

சிங்கள மக்கள் மாத்திரமே இலங்கையின் உள்ளூர் பால் மாவை அதிகமாக வாங்குவதைக் காணமுடிகிறது. உள்ளூர் பால் மா வகைகள் உள்ளூரின் சகல இடங்களிலும் கிடைப்பது குறைவு என்பதோடு வெளிநாட்டுப் பால் மா வகைகள் கிராமத்தின் பட்டி தொட்டி எங்கும் கிடைப்பது கிராம மக்களையும் அவற்றை நோக்கி நகர்த்துகிறது .

சில வருடங்களாக அரச அனுசரணையுடன் கால்நடை வைத்திய அலுவலகங்களின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு திரவப் பால் நுகர்வு தொடர்பாக விழிப்பணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். இதன் போது மாணவர்களுக்குத் திரவப் பாலையும் வழங்குவோம். கறவை மாடுகள் வைத்திருக்கும் பண்ணையாளர்களின் பிள்ளைகள் கூட திரவப் பாலை விட பால் பவுடரை விரும்புவதை இதன்போது அவதானிக்க முடிந்தது. அதாவது, பாலைக் கறந்து பால் கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு கொடுத்துவிட்டு, பால் மாவை கடைகளில் விலை கொடுத்து வாங்குவதை விரும்புகின்றனர். பசுப்பாலின் சுவை குறைவாகவும் ஒருவித மணம் வீசுவதாகவும் சளி பிடிப்பதாகவும் காரணங்கள் சொல்கிறார்கள். பல இடங்களில், பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்குவதை நிறுத்திவிட்டு, பால் மா ஊட்டுவதையும் அவதானிக்க முடிகிறது. இந்தக் கட்டுரை, பிணக் கூராய்வு (post mortem) செய்வது போல இந்த விடயங்களை ஆராயப் போகிறது.

விலங்குகளின் பாலை கறந்து அருந்திய மனிதன், மித மிஞ்சிய பாலைச் சேமிக்க வேண்டிய தேவை ஏற்பட, அதற்கென பல வழிமுறைகளைக் கையாளத் தொடங்கினான். அதில் ஒரு முறைதான் பாலின் தண்ணீரை அகற்றி அதனை மாவாகச் சேமித்தலாகும் (பாலில் 87% வரை தண்ணீர்தான் உள்ளது என்பதுடன் பாலிலுள்ள தண்ணீர் பல நுண்ணங்கிகள் வளரக் கூடிய ஊடகமாக உள்ளது). ஆசியா, மத்திய கிழக்குப் பகுதிகளில் சூரிய ஒளியில் நீரை ஆவியாக்கி, பாலை சில காலம் பழுதடையாமல் சேமித்தமைக்கான வரலாற்றுக் குறிப்புகள் கிடைத்திருக்கின்றன.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் நவீன பால் மாவின் தொடக்கம் ஆரம்பமாகியது. 1802 ஆம் ஆண்டளவில் பிரான்ஸ் நாட்டின் Francois Appert என்பவர், தகரத்தில் அடைத்து பாலைச் சேமித்திருக்கிறார். 1864 இல் Gail borden என்பவர் செறிவூட்டிய (condensed milk) பாலை உற்பத்தி செய்திருக்கிறார். இவ்வாறான நடவடிக்கைகள், நவீன பால் சேமிப்பு மற்றும் பால் பவுடர் உற்பத்திக்கு வழிகோலின.




Highland பால் மா
Image source - www.jungle.lk

19 ஆம் நூற்றாண்டின் கடைசியில் சூடான இடத்தினூடு பாலைச் செலுத்தி பாலின் நீர்த்தன்மையை இழக்கச் செய்யும் யுக்தி பயன்படுத்தப்பட்டது. அதன்பின், பல நவீனத் தொழில் நுட்ப மாற்றங்கள் நிகழ்ந்து இன்றைய நவீன Spray drying முறை உருவாகியது எனலாம்.

2 ஆம் உலகப்போர் காலத்தில் பால் மாவின் தேவை கணிசமாக உணரப்பட்டது. யுத்த முனைக்கு திரவப் பாலை கொண்டு செல்வதை விட பால் மாவாக கொண்டு செல்வது இலகுவாக இருந்தது என்பதுடன் நீண்ட நாட்களுக்கும் அதனை கெடாமல் பாதுகாக்கவும் முடிந்தது.

உலகப்போரின் பின், குழந்தைகளின் மாற்று உணவாக பால் பயன்படத் தொடங்கியது. பல நாடுகளில் குழந்தைகளுக்கான பால் உணவுகள் தயாரிக்கப்பட்டன. மித மிஞ்சியவை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டன.




Fonterra பால் மா உற்பத்தி தொழிற்சாலை

Image source - www.ruralnewsgroup.co.nz

இலங்கையும், முற்றுமுழுதாகவே உள்ளூரில் உற்பத்தியாகும் திரவப் பாலை நுகரும் நாடாகவே இருந்தது (நாட்டின் மொத்தக் குடித்தொகையில் மிக குறைவானவரே பாலை அருந்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது). ஆரம்பத்தில், வெளிநாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் இலங்கைக்கு இலவசமாக பால்மாவை வழங்கின; குறிப்பாக குழந்தைப் பால் மா. இதற்காக கடுமையான பணச் செலவுடன் விளம்பரங்கள் செய்து மக்களிடம் பால் மா உற்பத்திகளைக் கொண்டு சேர்த்தனர். இதன் காரணமாக மக்கள் திரவப் பால் நுகர்வைக் கைவிட்டு பால் மா நுகர்வுக்கு அடிமையாகினர். பாலை அருந்தாத மக்களும் பால் நுகர்வுக்கு மாறினர். இலங்கையின் பாற்பண்ணைத் துறையும் வெளிநாடுகளில் தங்கியிருக்கும் வகையாக மாறியது. மக்களின் தேவைக்கு உள்ளூர் உற்பத்தி போதியதாக இருக்கவில்லை. இன்றும் அந்த நிலை தொடர்கிறது.

இந்தியாவுக்கும் இதே போன்று பல்தேசிய நிறுவனங்கள் இலவசமாக பால் மாவை வழங்கிய போதும் அதை நேரடியாக மக்களுக்கு இலவசமாக வழங்காமல் தமது பால் கட்டமைப்பு வலையமைப்பின் ஊடாக திரவப்படுத்தியே வழங்கினர் (இதனை வர்கீஸ் குரியன் அவர்களின் *I too had a dream* சுயசரிதையின் ஊடாக அறிந்து கொண்டேன்). இது அவர்களின் இன்றைய தன்னிறைவுக்கு வழிகோலியது.

### பால் மாவை உற்பத்தி செய்தல்

நாம் தினமும் நுகரும் பால் மா, பல மாற்றங்களுக்கு உட்பட்டே எம்மிடம் வந்து சேர்கிறது. திரவ நிலைப் பாலில் உள்ள நீர்த்தன்மை பல செயற்பாடுகளினூடாக நீக்கப்பட்டு பால் மா உருவாகிறது. பண்ணைகளில் கறக்கப்படும் பால், சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்பட்டு பால் மா உற்பத்தித் தொழிற்சாலைக்கு கொண்டு வரப்படுகின்றது. அங்கு பாலிலுள்ள வெளித் தூசு - துணிக்கைகள் அகற்றப்பட்டு, நுண்ணங்கிகள் - அவற்றின் நொதியங்கள் அகற்றப்பட்டு (*Heat treatment*) அடுத்தகட்டச் செயற்பாட்டுக்கு தயாராகிறது.

இதன்பின், பாலின் நீர்த் தன்மையை நீக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. வெப்பம் மிகுந்த வெற்றிடத்தினூடாகச் செலுத்தப்படும் பாலிலுள்ள நீரின் பெரும் பகுதி ஆவியாக்கப்படுகிறது. சில இடங்களில் மென் சவ்வூடான பிரசாரண முறையில் நீர் பிரித்தெடுக்கப்படுகிறது. இவ்வாறு நீர் குறைந்து செறிவாக்கப்பட்ட பால் அதிக அழுத்தம் மிக்க கலன்களினூடாக செலுத்தப்பட்டு சிறு சிறு துணிக்கைகளாக உடைக்கப்படுகிறது. பின்னர், அதி வெப்பமான பகுதிகளின் ஊடாக விரைவாக செலுத்தப்பட்டு, நீர்த் தன்மையை மேலும் இழக்கின்றது. இந்த முறையை *spray drying* என்பார்கள். இது பால் மா உற்பத்தியில் பரவலாக பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமாகும். தற்காலத்தில் *spray drying* தொழில்நுட்பத்திலும் பல மேம்பட்ட முறைகள் உள்ளன.

உலர்ந்த பால் துணிக்கைகள் குளிர்விக்கப்பட்டு பால் மாவாக பிரித்தெடுக்கப்படுகின்றன. தேவைகளுக்கு ஏற்ப துணிக்கைகளில் சேர்வைகள் சேர்க்கப்பட்டு பொதியிடப்படுகின்றன. சிலவகை பால் மாக்கள் சுவையூட்டப்படுகின்றன; ஊட்டச் சத்துக்கள் சேர்க்கப்படுகின்றன (உதாரணம் : குழந்தைகளின் பால்மா). இப்படியாக தயாரிக்கப்படும் பால் மா களஞ்சியப்படுத்தப்பட்டு தரப் பரிசோதனைகள் பலவற்றுக்கு உட்பட்டு சந்தைக்கும் விடப்படுகிறது. இலங்கையின் பால் மா சந்தையில், அதிகளவில் வெளிநாட்டுப் பால் மா வகைகளே செல்வாக்குச் செலுத்துகின்றன (0.63 மில்லியன் அமெரிக்க டொலர்). அண்மைக் காலத்தில் இறக்குமதிக்குரிய பணக்கையிருப்பு இல்லாத காரணத்தால் கணிசமான அளவு உள்ளூர் பால் மா வகைகளும் சந்தைக்குள் வரத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச பால் மா வர்த்தகம்

இன்றைய திகதியில் சர்வதேச பால் மா ஏற்றுமதி வர்த்தகத்தில் ஐக்கிய அமெரிக்கா, நியூசிலாந்து, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், நெதர்லாந்து போன்ற நாடுகளும் பால் மா இறக்குமதியில் சீனா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ போன்ற நாடுகளும் உள்ளன. இலங்கையும் கணிசமான அளவு பால் மாவை இறக்குமதி செய்கிறது. இலங்கைக்கு நியூசிலாந்தின் *Fonterra* நிறுவனம் தான் அதிகளவு பாலை இறக்குமதி செய்கிறது. பால் மாவில், முழு ஆடைப் பால்மா (*Full cream milk powder*), ஆடை நீக்கிய பால் மா (*Non fat milk/skimmed milk powder*), குழந்தைகள் பால்மா (*infant milk*), புரதப் பால் மா (*whey protein milk powder*) என பல வகை உண்டு.

## Fontera பால் கூட்டுறவு பல் தேசிய நிறுவனம்

நியூசிலாந்து பாற் பண்ணையாளர்களால் நிர்வகிக்கப்படும் பல்தேசிய பால் கூட்டுறவு அமைப்பு இலங்கையின் பால்மா தேவையின் பெரும் பகுதியை நிறைவு செய்கிறது. உலக பால் வியாபாரத்தில் 30% இதன் வசமே உள்ளது. உலகின் 6 வது பால் உற்பத்தி நிறுவனமான இது தென்னரைக் கோளத்திலுள்ள மிகப்பெரிய பால் உற்பத்தி நிறுவனமாகும். பலதரப்பட்ட பால் பவுடர் வகைகள், ஏனைய பால் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்து சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் இந்த நிறுவனம் வருடாந்தம் 22 பில்லியன் நியூசிலாந்து டொலரை வருமானமாகப் பெறுகிறது. இலங்கையின் அங்கர், றத்தி என்பன *Fonterra* நிறுவனத்தின் பால் மா உற்பத்திகளே.

## பால்மா தொடர்பான சர்ச்சைகள்

**1. குழந்தைகளுக்கு வழங்கும் பால் உணவுகள் (infant formula) தொடர்பான சர்ச்சைகள் :** குழந்தை உணவில் பால் மா முக்கியமான உள்ளீடு. அடிக்கடி நிகழும் உள்ளீடுகளின் தரம் தொடர்பான சர்ச்சைகள் மக்களை அச்சுறுத்துகின்றன. சீனாவில் இடம்பெற்ற மெலமைன் எனும் புரதம் போன்ற பதார்த்தத்தை குழந்தைப் பால் உணவில் சேர்த்ததன் காரணமாக சில பச்சிளம் குழந்தைகள் இறந்தன. இதன்பின் உலகளாவிய ரீதியில் குழந்தை உணவுகளை நுகர்வது குறைந்தது. இன்றை வரைக்கும் சீனாவில் உள்ளூர் பால் மா சேர்ந்த குழந்தை உணவுகளை அவர்கள் புறக்கணிக்கின்றனர். சீனாவில், சீன பால்மாவில் செய்யப்பட்ட குழந்தை உணவுகளை விட நியூசிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வரும் குழந்தைப் பால் உணவுகளுக்கு நல்ல கிராக்கி உண்டு. பால் மாவின் சர்வதேசக் கேள்வி முறையில் நியூசிலாந்தின் பால் மாவினை அதிக விலைக்கு வாங்குகின்றனர். இதனால் சீனாவுக்கான ஏற்றுமதி அதிகரித்து இலங்கை போன்ற நாடுகளின் இறக்குமதியின் செலவு அதிகரிக்கிறது.

மேலும், குழந்தை உணவுகளை தயாரிக்கும் நிறுவனங்கள் செய்யும் விளம்பரங்கள், உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) பரிந்துரைக்கப்பட்ட குழந்தைகளுக்கான தாய்ப்பால் ஊட்டலை குறைப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது. மனிதர்களின் வசதிக்காக குழந்தைகளுக்கு அவசியம் கிடைக்க வேண்டிய தாய்ப்பால் கிடைக்காத நிலைக்கு இந்த பால் மா சேர்த்த குழந்தை உணவுகளே காரணம் எனும் சர்ச்சை நிலவுகிறது. இது காரணமாக எதிர்காலத்தில்

குழந்தைகளுக்கு பல உடல் அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

**2. ஊட்டச்சத்து தொடர்பான சர்ச்சைகள் :**
பாலில் காணப்படும் புரத மற்றும் கொழுப்புப் பொருட்கள் அகற்றப்பட்டு பன்றிக் கொழுப்புகள், பாம் எண்ணை, மெலமைன் போன்றவை சேர்க்கப்பட்டு பொய்யாக புரத மற்றும் கொழுப்பு பொருட்களின் சதவீதம் காட்டப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. பல பால் நிறுவனங்கள் இதனை மறுத்தாலும் இந்த சர்ச்சை பாரதூரமானது.

மேலும், பாலை வெப்பப்படுத்தி நீரை அகற்றும் செயன்முறை காரணமாக முக்கிய ஊட்டச்சத்துக்கள் அழிவடைவதும் மாற்றமடைவதும் பால் மா உற்பத்தியில் நிகழ்வதால் அதன் தரம் தொடர்பாகவும் கேள்வி எழுகிறது. அத்துடன் அமைப்பு மாற்றமடையும் உள்ளீடுகள் பல நோய்களைத் தரக்கூடிய நிலையை தோற்றுவிப்பதாக மருத்துவத் துறையினர் கூட குற்றம் சாட்டுகின்றனர்.

**3. ஒவ்வாமை மற்றும் lactose intolerance :**
பொதுவாகவே மனித குடித்தொகையில், குறிப்பிட்ட சதவீதமானவர்களுக்கு பாலின் முக்கிய ஊட்டச்சத்தான lactose காரணமாக ஏற்படும் ஒருவித ஒவ்வாமை (intolerance) உள்ளது. இந்த வகையினர் பால்மாவுக்கும் ஒவ்வாமையை வெளிப்படுத்துகின்றனர். இது ஒரு சிக்கல் வாய்ந்த நிலையாகும்.

**4. சேர்க்கப்படும் சேர்வைகள் தொடர்பான சர்ச்சைகள் :** பாற் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில், குறிப்பாக பட்டர் செய்யும் போது கொழுப்பும், Whey புரதம் தயாரிக்கும் போது புரதமும் எடுக்கப்பட்டு, அவற்றை பிரதியீடு செய்ய பன்றிக் கொழுப்பு மற்றும் பாம் எண்ணை, மெலமைன் சேர்க்கப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது. இது சுகாதார பிரச்சனைகளை மட்டுமின்றி சமய, கலாச்சார சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது.

**5. தரம் மற்றும் பாதுகாப்பு :** நியூசிலாந்து மேய்ச்சல் புல் வெளிகளுக்கு பாவிக்கப்படும் DCP போன்ற இரசாயனங்கள் பாலில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஒரு சர்ச்சை எழுந்தது. இது நுகர்வோருக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. சரியான தரக்கட்டுப்பாடு சகல பால் மா வகைகளுக்கும் பார்க்கப் படுகிறதா எனும் சர்ச்சையும் அடிக்கடி எழுவதுண்டு. பல நாடுகளில் இந்த தரக் கட்டுப்பாடுகள் எதுவும் செய்யப்படாது நேரடியாகவே சந்தைக்கு விடப்படுகிறது எனும் குற்றச்சாட்டு உள்ளது.

**6. சூழலியல் பிரச்சனைகள் :**
பால் மாவை உற்பத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் மாடு வளர்ப்புச் செயன்முறைகள் பச்சை வீட்டு வாயுவான மெதேனை அதிகம் வெளிவிடுகின்றன. இது உலக வெப்பமுறலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதிகதிகமான பால் மாவை உற்பத்தி செய்யும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் பச்சை வீட்டு விளைவைத் தவிர நீர் நிலைகள் மாசுபடுதல் பயிர் நிலங்கள் மாசு படுதல் போன்ற பல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

**6. விலை தொடர்பான பொருளாதாரப் பிரச்சனைகள் :**
இலங்கை போன்ற நாடுகளில் பால் மாவை நம்பித்தான் 60% ஆன பால் தேவை நிறைவு செய்யப்படுகிறது. இலங்கைக்கு பால் மாவை இறக்கும் பல்தேசிய நிறுவனங்கள் பால் மாவின் விலையை அடிக்கடி உயர்த்துவதும் உள் நோக்கத்துடன் சந்தைக்கு விடாமல் பதுக்குவதும் நுகர்வோரைக் கடுமையாகப் பாதிக்கிறது.

### வர்கீஸ் குரியனும் இலங்கை பால் உற்பத்தி நிலவரமும்

சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்த வெண்மைப் புரட்சியின் தந்தை வர்க்கீஸ் குரியனை அழைத்திருந்தார். இலங்கையினை கள ஆய்வு செய்தபோது நியூசிலாந்து நாட்டின் fonterra நிறுவனத்தின் செல்வாக்கை அவரால் உணர முடிந்தது. பலம் மிக்க மலையகத் தமிழ் அரசியல்வாதி உட்பட இலங்கையின் பல அரசியல் பிரமுகர்கள் அந்தந்த பல்தேசிய நிறுவனங்களின் முகவர்களாகவே செயற்படுவதைக் காணுற்றார். யாராலும் அவர்களை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. இதன் பாரதூரத்தை தனது ‘எனக்கும் ஒரு கனவு’ எனும் சுயசரிதையில் இப்படிக் குறிப்பிட்டிருப்பார்.

அது தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலம். இலங்கை சென்ற குரியனுக்கு ஆயுதப் படையின் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இது குரியனுக்கு பிடிக்கவில்லை. அசௌகரியமாக உணர்ந்தார். அதிபர் சந்திரிக்காவிடம் “நான் தமிழில் பேசக் கூடியவன் என்றபடியால் விடுதலைப் புலிகள் என்னை எதுவும் செய்ய மாட்டார்கள். தயவுசெய்து இந்த பாதுகாப்பை எடுங்கள்” என்றிருக்கிறார். அதற்கு அதிபர் சந்திரிக்கா” இது விடுதலைப்புலிகளிடம் இருந்து உங்களைப் பாதுகாக்க அல்ல. பால் பல் தேசிய நிறுவனங்களின் கூலிப்படைகளில் இருந்து உங்களைக் காக்க. சிறு தொகை பணத்துக்கே உங்களைக் கொன்றுவிடக் கூடும். அவர்களுக்கு இலங்கை பால் உற்பத்தியில் தன்னிறைவு காண்பது விருப்பமில்லை” என்றாராம்.



நியூசிலாந்து மேய்ச்சல் நிலத்தில் பால் மாடுகள்

Image source - www.georgeherald.com

வெளிநாட்டு நிறுவனங்கள் கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இதனை தவிர்க்கும் படி குரியன் பாக்கிஸ்தான் அரசுக்கு கூறினார். தீர்வையை அதிகரிக்கும்படி பரிந்துரைத்தார். ஊழலும் அரசியல் துஷ்பிரயோகமும் கொடிகட்டிப் பறந்த பாக்கிஸ்தானில் பல்தேசிய நிறுவனங்கள் சகலரையும் விலைக்கு வாங்கியிருந்தபடியால் இந்தியாவின் வெண்மைப் புரட்சியை அங்கு நிகழ்த்த முடியவில்லை என குரியன் தெரிவித்திருப்பார். இங்கு நான் இலங்கை, பாக்கிஸ்தானைப் பற்றி குரியனுடன் தொடர்புபடுத்திக் கூறியதற்கு ஒரு காரணமுண்டு. இந்தியா வெண்மைப் புரட்சியின் மூலம் தன்னிறைவு கண்டுள்ளது. ஏனெனில் பல் தேசிய பால் நிறுவனங்களின் வியாபார மூலோபாயத்துக்குள் சிக்காமல், சுயமாகச் சிந்தித்து தமது நாட்டின் பால் உற்பத்தி துறைக்கு முன்னுரிமை கிடைக்கும் வகை செய்திருந்தார்கள்.

இது தவிர இந்தியாவிலிருந்த நியூசிலாந்தின் பல் தேசிய பால் நிறுவன பிரதிநிதி கூட இலங்கையின் பால் உற்பத்தி தன்னிறைவு காண்பதை விரும்பாமல் வர்கீஸ் குரியனுடன் தர்க்கித்திருக்கிறார். இலங்கை பாற் சந்தை மிகச் சிறியது. அதைக்கூட கைவிடும் நிலையில் பால் வழங்கும்  பல் தேசிய நிறுவனங்கள் இருந்திருக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. இலங்கையில் இன்றை வரைக்கும் பாலில் தன்னிறைவு காண முடியவில்லை. 40-50% உள்ளூர் உற்பத்தி. ஏனையவை இறக்குமதி. இது ஒரு மிகப் பெரிய சதி வலை போன்றது. இலகுவில் மாற்ற முடியாது. இது இப்படியிருக்க, இலங்கை பாலில் தன்னிறைவு காண, கறவை மாடுகளை நியூசிலாந்தில் இருந்து இறக்கியதுதான் முரண் நகைச்சுவை. ஆயிரக்கணக்கில் இறக்குமதியாகிய மாடுகள் கடைசியில் செத்து மடிந்ததுதான் மிச்சம். அதை இறக்கிய அரசியல்வாதிகள் கோடிக்கணக்கில் உழைத்துக் கொண்டார்கள் என்பது வேறுகதை.

### பாகிஸ்தானும் குரியனும்

எண்பதுகளில் வர்கீஸ் குரியனை அழைத்து பாக்கிஸ்தான் அரசு, அந்த நாட்டு பாலுற்பத்தி துறையை மேம்படுத்த ஆலோசனை கேட்டிருந்தது. உலகில் கணிசமானளவு பாலுற்பத்தியை செய்யவல்ல நாடான பாகிஸ்தான் கூட தன்னிறைவு காணாத நிலையிலேயே இருந்தது. அன்றைய திகதியில் வெளிநாட்டிலிருந்து கணிசமான பால் மாவை பாக்கிஸ்தான் இறக்குமதி செய்திருந்தது. எனினும் இறக்குமதித் தீர்வை மிகக் குறைவாகவே அறவிட்டிருந்தது. இதன் காரணமாக உள்ளூர் பாற் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அறுபதுகளில் உலக உணவுத் திட்டம் மூலம் கிடைத்த ஒரு தொகை பால் மாவையும் நாட்டின் திரவப் பால் கட்டமைப்புக்குள் இணைத்தனரே தவிர மக்களுக்கு நேரடியாக வழங்கி உள்ளூர் பாற் துறையை பாதிக்கவிடவில்லை. இன்று கூட பால் மாவை யுத்தம் போன்ற அவசர தேவைக்காகவும் மித மிஞ்சிய பால் உற்பத்தியை சேமிக்கும் வழியாகவுமே இந்தியா பயன்படுத்துகிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி உதவிக்கும் இந்தியா பால் மாவை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. பால் உற்பத்தி குறையும் போது பால் மாவை திரவமாக்கி மக்களுக்கு வழங்குகிறார்கள். இந்திய மக்களும் பால் மாவை விட திரவப் பாலுக்கே பழகியுள்ளனர்.

பசு மட்டுமல்ல எருமையிலிருந்தும் பால் மாவை இந்தியா உற்பத்தி செய்கிறது. உண்மையில் திரவப் பாலை பெருந்தொகையில் இறக்குமதி செய்யமுடியாது. அதற்கு மக்களை பழக்க வேண்டும். தற்போது இலங்கையை விட பாக்கிஸ்தான் பாலுற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது. இலங்கையின் பாலுற்பத்தியின் தன்னிறைவுப்  பயணம் இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது.

(தொடரும்.)

இந்தியவம்சாவழி தொழிலாளர்களின் இலங்கை வருகை, அவர்களின் பிரஜாவுரிமை போன்ற பல விடயங்கள் தொடர்பேசுப்பொருளாக அமைந்திருக்கின்றன. ஆனால் கோப்பி பயிர்செய்கைக்குப் பின்னரான இந்திய வம்சாவழித் தமிழரின் வாழ்க்கை சூழல் எவ்வாறு அமைந்ததென ஒரு சில ஆய்வுகளே வெளிவந்துள்ளன. ”கண்டி சீமையிலே2 – சதிகளையும் சூழ்ச்சிகளையும் கடந்த வரலாறு என்ற இந்த வரலாற்றுத்தொடர் அந்த இடைவெளியை நிரப்புவதாக அமைகின்றது. இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களையும் இடர்களையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது. கண்டி சீமைக்கு அழைத்துவரப்பட்ட தொழிலாளர்களின் உண்மை நிலையினை வரலாற்றுப் பார்வையினூடாக ஆதாரங்களுடன் எடுத்தியம்புகின்றது. இது வெறுமனே மக்களின் வாழ்வியல் பிரச்சினைசார் விடயங்களை மாத்திரம் தெளிவுப்படுத்தாமல், தொழில்சார், அரசியல், பொருளாதார, சமூகம் சார்ந்த பல்பரிமாண அம்சங்களினை வெளிகொணர்வதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இரா. சடகோபன்

இரா. சடகோபன் என்று எழுத்து உலகில் அறியப்பட்ட இராமையா சடகோபன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு பட்டதாரி ஆவார். அதன்பின் ஒரு சட்டத்தரணியாக தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் மூன்று நூல்களுக்குத் தேசிய சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார்.

விஜய் சிறுவர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான இவர், ‘சுகவாழ்வு’ சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஆவார். இதனைத் தவிர மலையக மக்கள் மேம்பாடு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். சடகோபன் ஊடகத்துறையில் ஆற்றிய பணிக்காகச் சிறந்த ஊடகவியலாளருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்

# சிங்கள அரசின் காணிக் கொள்கை

**1974** களை தொடர்ந்து வந்த காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கவை தலைமையாகக் கொண்ட கூட்டு அரசாங்கம் கடைப்பிடித்த காணிக் கொள்கை காரணமாக மலையக பெருந்தோட்ட பகுதிகள் எங்கிலும் சிங்களப் பேரினவாதம் மூர்க்கமாக தலைவிரித்தாடத் தொடங்கியது. மலையக பெருந்தோட்டங்களில் இருந்து தமிழ் தொழிலாளர்களை வெளியேற்றிவிட்டு அந்த தோட்டக் காணிகளை சிங்கள மக்களுக்கு பிரித்துக் கொடுக்கும் கைங்கரியம் ஆரம்பமானது. இதன் பொருட்டு



ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பதவியேற்பு

Image source - www.facebook.com/cbksrilanka

1975 ஆம் ஆண்டு சட்ட விதிமுறைகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. இந்தச் சட்ட விதிகளை எந்த ஒரு நீதிமன்றத்திலோ நியாய சபைகளிலோ சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று அச்சட்ட விதிகளிலேயே குறிப்பிடப்பட்டிருந்தது. காணிப் பறிப்பு சட்டத்தின் விளைவாக சிங்கள மக்களுக்கும் மலையக தமிழ் மக்களுக்கும் இடையே வன்மமும் பகையும் தூண்டிவிடப்பட்டு அந்த பகைமை இன்றுவரை நிரந்தரமாக அவர்கள் மனதில் குடிகொள்ள வழிசமைத்துக் கொடுக்கப்பட்டது.

நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே கோப்பிப் பயிர்ச் செய்கைக்காக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் கண்டிய விவசாயிகளின் காணிகளை பறித்துக் கொள்வதற்கு காரணமாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்தது. இருந்தபோதும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே காணி பகிர்ந்தளித்தல் சட்டம் கொண்டுவரப்பட்டு தேயிலை பெருந்தோட்ட காணிகளை துண்டாடி சிங்கள மக்களுக்கு பகிர்ந்து அளிக்கும் நடவடிக்கை ஆரம்பமானது. இதனால் அத்தகைய தோட்டங்களில் வசித்தவர்களுக்கு அவர்கள் வசிக்க எந்தவிதமான மாற்று திட்டமும் அறிவிக்கப்படாமல், பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டு, தோட்டங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

மேற்படி சட்ட விதிமுறைகளை, பெருந்தோட்ட தொழிலாளர்கள் மத்தியிலும் கண்டிய விவசாயிகள் மத்தியிலும் செயலாற்றிய அரச சார்பற்ற நிறுவனங்களும் மத அமைப்புகளும்கூட வன்மையாகக் கண்டித்தன.அத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான சமூகம் மற்றும் சமயத்துக்கான மத்திய நிலையம் பின்வருமாறு கருத்து தெரிவித்திருந்து.


ரொசாரியோ பெர்னாண்டோ
(செங்கொடி சங்கத்தின் ஸ்தாபகர்)
Image source - namathumalayagam.com


என். சண்முகதாசன்
Image source - colombotelegraph.com

“மேற்படி சட்ட விதிமுறைகள் அரசு அதிகாரிகளுக்கு சர்வாதிகாரி போன்ற ஒரு அதிகாரத்துவ வரம்பு மீறலுக்கான சக்தியை அளிக்கின்றன. அத்தகைய வரம்பற்ற அதிகாரத்தை பயன்படுத்தி அவர்கள் தொழிலாளர்கள் மீது பல்விதமான அத்துமீறல்களைச் செய்ய முடியும். பாதிக்கப்பட்டவர்கள், எந்தவித பரிகாரங்களையும் பெற்றுக்கொள்ள முடியாமல் பரிதவிக்கும் நிலையும் தோன்றும் என்ற விதத்தில் சட்டவிதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.”

இதனால் ஏற்பட்ட வரவேற்கத்தக்க ஒரு திருப்புமுனை என்னவென்றால் பெருந்தோட்ட துறையைச் சேர்ந்த அரச சார்பு தொழிற்சங்கங்களும், எதிர்தரப்பு தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து போராடத் துணிந்தமையாகும். 1975 நவம்பர் 30 ஆம் திகதி பெருந்தோட்ட தொழில்துறையின் ஆறு தொழிற்சங்கங்கள் இணைந்து போராட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான கூட்டுமுயற்சி பற்றி பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்தன. இந்தப் பேச்சுவார்த்தையில் செங்கொடிச் சங்கத்தைச் சேர்ந்த என். சண்முகதாசன், எம்.எஸ். தம்பி ராஜா, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த டபிள்யூ. சி. ரத்னாயக்க, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் சங்கத்தை சேர்ந்த என். வெள்ளையன் ஆகிய முன்னணிப் பேச்சாளர்கள் பங்குபற்றினர்.

இவ்வாறு அரசாங்கத்துக்கு எதிராக திரண்டு வரும் தொழிற்சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்,

சமய அமைப்புகள் ஆகியவற்றின் எதிர்ப்பைக் கண்டு வெகுண்ட அரசாங்கம் அவ்வருடம் டிசம்பர் மாதமளவில் மேற்படி சட்டவிதிகளை மீளப் பெற்றுக் கொண்டதாக அறிவித்தது. இந்த முயற்சிகளுக்கு சமாந்தரமானதாக, ஏற்கனவே பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து பிரஜாவுரிமை பெற்றுக்கொண்டிருந்த இந்திய வம்சாவழித் தமிழர்களில் பலர், தமக்கும் இந்த நாட்டில் ஒரு பிரஜைக்கான உரிமைகள் இருப்பதாகவும், தங்களுக்கு வேலைவாய்ப்பும் நில உரிமையும் வழங்க வேண்டும் என்றும், அரசாங்கத்தின் பிற்போக்குவாத கொள்கைகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கத் தொடங்கினர். இதற்கு உதாரணமாக பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம். 1976 ஆம் ஆண்டு அரசாங்கமானது பூண்டுலோயா பிரதேசத்தில் காணப்பட்ட சொக்சி தேயிலைத் தோட்டத்தை சிங்கள மக்களுக்கு துண்டாடி பகிர்ந்து அளிக்கும் முகமாக அங்கிருந்து தமிழ் தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்ற முற்பட்டது. அதனால், இத் தோட்டத்தைச் சேர்ந்த சகலரும் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டதுடன் தமக்கும் காணி உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர். மேற்படி தோட்டத்தின் முகாமைத்துவமும் தோட்டத்தின் காணிகள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டால் முழுத் தோட்டமும் அழிந்து போய்விடும் என்ற பயத்தில், அரசாங்கம் தோட்டத்தை கையகப்படுத்துவதற்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்தது.

**ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே காணி பகிர்ந்தளித்தல் சட்டம் கொண்டுவரப்பட்டு தேயிலை பெருந்தோட்ட காணிகளை துண்டாடி சிங்கள மக்களுக்கு பகிர்ந்து அளிக்கும் நடவடிக்கை ஆரம்பமானது.**

உடனேயே இது தொடர்பான எதிர்ப்பு கூட்டம் ஒன்று ரம்பொடையில் ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்தில் உரை நிகழ்த்திய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் பின்வருமாறு கருத்து தெரிவித்தார் :

“முன்பு ஒருமுறை இந்த மக்கள் அனைவருக்கும் பிரஜா உரிமைகள் பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் ஆக்கப்பட்டபோது அவர்கள் ஒட்டுரிமையை இழந்தார்கள். இப்போது கடும் பிரயத்தனத்தில் பின்னர் பிரஜா உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் இப்போது தொழில் அற்றவர்களாகவும் வீடற்றவர்களாகவும் வீதியில் வந்து நிற்கின்றனர்.” (காங்கிரஸ் செய்தி இதழ், 1976 ஒக்டோபர் 1)


ஆனால் அதற்குப் பின்னரும் நிலைமை சீராகவில்லை. மேலும் மேலும் இனவாதம் பற்றி எரியும் வகையில் சம்பவங்கள் முன்னெடுக்கப்பட்டன. தோட்டத்து மக்களை அவர்கள் இருப்பிடங்களில் இருந்து உள்ளூர் காடையர்களைப் பயன்படுத்தி பலாத்காரமாக விரட்டி அடித்துவிட்டு தோட்டத்தைக் கைப்பற்றி நிலங்களைத் துண்டாடி சிங்களவர்களுக்கு கொடுக்கும் சம்பவங்கள் அதிகரித்தன. இதன்போது தோட்டத்துப் பயிர்களும் லயங்களும் கூட தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. 1977 மார்ச் 11 ஆம் திகதி, தொழில் ஆணையாளர் சகல பெருந்தோட்ட தொழிற் சங்கங்களும் அடங்கிய கூட்டம் ஒன்றைக் கூட்டி ஒரு அறிவித்தலை விடுத்தார். அதன் பிரகாரம், அரசாங்கத்தின் காணிப் பகிர்ந்தளிப்பு கொள்கையை நாட்டின் எந்தப் பிரஜையும் எதிர்க்க முடியாது. நாட்டின் சகலரும் இதனை ஏற்றுக்கொண்டு ஒத்துழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து கண்டி, கம்பளை, புஸ்ஸல்லாவ ஆகிய பிரதேசங்களில் காணப்பட்ட தோட்டங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு, அவை கொலனிகளாக துண்டாடப்பட்டு பெரும்பான்மை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளால் தமிழர்களின் இருப்பிடங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு, சனத்தொகை பரம்பல் சிதறடிக்கப்பட்டது. அவர்களது இருப்பிடங்களுக்கு மத்தியில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாகின. இவ்வகையான அநீதிகள் தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டதற்கு காரணம் அவர்கள் தமிழ் மொழியை பேசியமையும் அவர்கள் இந்திய வம்சாவழியினராக இருந்தமையும் ஆகும் . இன்றுவரை இந்த அட்டூழியம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. நாம் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறோம் என்பது சோகம் நிறைந்த உண்மையாகும்.

# தேசியமயமாக்கமும் அரசியல், சமூக, பொருளாதார விளைவுகளும்

வரலாற்றில் எந்த ஒரு காலப்பகுதியிலும் அனுபவிக்காத துன்பங்களை இக்காலத்தில் (1970 – 1977) தோட்டத் தொழிலாளர்கள் அனுபவித்தனர். கிட்டத்தட்ட அடிமைகளின் நிலைக்கு கொண்டு வரப்பட்டார்கள். எல்லா வகையிலும் அரசியல், பொருளாதார, சமூக, இனரீதியான பாரபட்சங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். தொழிற்சங்க தலைவர்கள்கூட கையை விரித்தனர்.

**1930** களை தொடர்ந்து வந்த உலகப் பொருளாதார பெருமந்த காலத்திலிருந்தே இந்திய வம்சாவழித் தமிழர்கள் மீதும் மலையாளிகள் மீதும் இந்த நாட்டு பெரும்பான்மை இன மக்கள் பெரும் துவேசத்தை கக்கி வந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அதன் தலைவர் டி.எஸ். சேனாநாயக்க, அப்போது நிதியமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தன, எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க ஆகியோரதும் மற்றும் பலரதும் இனவாதப் போக்குகள், 1948 இல் பாராளுமன்றத்தில் இவர்களின் பிரஜாவுரிமை பறிப்புச் சட்டம் தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணை தொடர்பான விவாதத்தின்போது வெளிப்படையாகத் தெரிந்தன. அதன்பிறகு தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களும் இந்த நாட்டில் இந்திய வம்சாவழித் தமிழர்களை அறவே துடைத்தெறிந்துவிட வேண்டும் என்று வெகுவாக முயற்சித்தன.

இப் போக்கு, 1970 களை அடுத்து வந்த காலப்பகுதியில் மிக உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இலங்கை நாடு சோசலிச ஜனநாயக குடியரசு என்று நாமகரணம் சூட்டிக் கொண்டாலும் சோஷலிசக் கொள்கைகள் அவர்களிடம் மருந்துக்கும் காணப்படவில்லை. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும் இந்த அரசாங்கத்துடன் இணைந்திருந்தபோதும் அவர்கள் முற்றிலும் சோசலிச விரோத, தொழிலாளர் விரோத, மக்கள் விரோத கொள்கைகளையே கடைப்பிடித்தனர். இத்தகைய இனவாத, மக்கள் விரோதக் கொள்கைகள் என்பவற்றுடன் இணைந்துவிட்ட மோசமான பொருளாதாரப் பிரச்சினை, உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, சிங்கள மக்களுக்கு மட்டும் காணி பகிர்ந்தளிக்கும் திட்டம் ஆகியன காரணமாக மலையகத் தமிழ் மக்கள், வாழ்வதற்கான பாதுகாப்பை முற்றிலும் இழந்துவிட்டதாக




Female labourers peeling coffee using traditional methods

Image source - lankapura.com

உணர்ந்தார்கள். தொழில் செய்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டதால் தொழில் பாதுகாப்பும் இல்லாமல் போனது. அவர்களது சந்ததியினரது எதிர்காலமும் சூனியமாகவே தெரிந்தது.

உலகில் அடிமைத்தொழில், அடிமை வியாபாரம் என்பன சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே ஒழித்துக்கட்டப்பட்டிருந்த போதும், அது ஒழியவில்லை என்றும், இப்போதும் உலவிக் கொண்டிருக்கிறது என்றும் அவர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவத்தைக்கொண்டு உணர்ந்தார்கள். முன்பு கருப்பின அடிமைகளுக்கு வாழ்வதைத் தவிர பிற உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டிருந்தன. ஆனால் இவர்களுக்கோ வாழும் உரிமை கூட கொஞ்சம் கொஞ்சமாக மறுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. முன்பு திட்டமிட்டு பிரஜா உரிமைகளை பறித்தவர்கள் அவர்களை நாடற்றவர்களாக ஆக்கிவிட்டு, அவர்களது வாழ்விடங்களையும் காணிகளையும் பிடுங்கி சிங்கள மக்களிடம் ஒப்படைத்தார்கள். இது மலையக மக்களை தமது பிள்ளைகளை கையில் தூக்கிக் கொண்டு நாலா திசைகளிலும் சிதறியோட வழிசெய்தது. கம்பளைக்கு அண்மித்துள்ள புசல்லாவை என்ற இடத்திலிருந்த டெல்டா, சங்குவாரித் தோட்டங்கள் இதற்கு நல்ல உதாரணங்கள்.

இது தொடர்பில் ஆய்வாளர் மூ.சி. கந்தையா தனது ‘சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்’ என்ற நூலில் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கின்றார் :

“பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன என்று கூறப்பட்ட போதும் நடைமுறையில் அவை சிங்கள மயமாக்கப்பட்டன என்பதே யதார்த்தமாகும். தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டமை தொலைநோக்குத் திட்டத்தோடு மேற்கொள்ளப்படவில்லை. நிர்வாகச் செயல்களை அமுல்படுத்தும் வகையில் திட்டமிடல் உருவாக்கப்படவில்லை. போதிய அனுபவத்தைக் கொண்ட நிர்வாகம் இல்லாதபடியால் தோட்டங்கள் பல்வேறு நெருக்கடிகளையும் இழப்புகளையும் சந்தித்தன. தோட்டங்களை நடத்த திறமையான நிர்வாகம் இல்லாதிருந்ததால் சுமார் பதினைந்து ஆண்டுகளில் ரூ.5000 கோடி வருமானத்தை அரசாங்கம் இழக்க நேரிட்டது. அரசின் கீழ் இங்கிய பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், பெருந்தோட்ட அபிவிருத்தி சபை போன்ற நிறுவனங்களில் அதிகார வரம்பு மீறலும் ஊழலும் மலிந்துவிட்டிருந்ததால் அரசு கையகப்படுத்திய தோட்டங்கள் மீண்டும் 1992 ஆம் ஆண்டு தனியார் கம்பெனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.” 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய விவசாயப் பன்முகப்படுத்தல் குடியிருப்புகளுக்கான அதிகாரசபை, ஏறத்தாழ 26 ஆயிரம் ஏக்கர் நிலம் விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்து அதில் பணப்பயிர்களை வளர்க்க ஊக்குவிக்கப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 25,000 பெறுமதியான மானியம் அரசால் வழங்கப்பட்டது. 12 வருட முயற்சியின் பின்னரும் எதுவித முன்னேற்றமும் இந்தத் தோட்டங்களில் ஏற்படவில்லை. சிங்களவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக தோட்ட நிலங்கள் பங்கீடு செய்யப்படுகிறது என்று தெரிந்த பின்னரும் இந் நிலங்களைப் பராமரிக்க அரசு, மானியம் வழங்கி ஊக்குவித்தது. உழைப்பவன் கையில் நிலங்கள் இருந்திருப்பின் அவனது உழைப்பால் நிலமும் மேம்பட்டிருக்கும் அவனும் மேம்பட்டிருப்பான். தோட்டங்களின் தேசிய மயமாக்கத்தால் நிகழ்ந்த மற்றுமோர் அவலமிது.



தேயிலைப் பெருந்தோட்ட உற்பத்தி தேசிய வருமானத்தின் முக்கிய தூணாக இருந்துவரும் ஒரு துறையாகும். இத்துறையை முறையாக பயன்படுத்தி வருமானத்தை அதிகரிக்கும் வகையில் தேசியமயம் அமைந்திருக்க வேண்டும். ஆனால் தேசியமயத்தை கொண்டு வந்தவர்களின் நோக்கம் அதுவாக இருக்கவில்லை. சில அரசியல்வாதிகளின் நீண்டநாள் எண்ணங்கள் தேசியமயத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது. தனியாரிடம் தோட்டங்கள் இருந்த வரையும் அவர்களால் தலையிட முடியாத நிலைமை காணப்பட்டது. தேசியமயமாக்கம், அவர்களது சுயநலத் திட்டங்களை நிறைவேற்ற பாதை வகுத்தது.

இதற்குப் பின் :

1. தோட்டங்கள் துண்டாடப்பட்டன.
2. தோட்டப் பகுதிகளில் உள்ள நகரங்களின் விரிவாக்கம் என்ற பெயரில் நகரங்களிலும் பிரதான வீதியின் இருமருங்கிலும் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.
3. தோட்டங்களைச் சுற்றியும் சிங்களக் குடியேற்றங்கள் உருவாகின.
4. தோட்டக் குடியிருப்புக்களின் மையப்பகுதியில் புத்த விகாரைகள் உருவாகின.

வரலாற்றில் எந்த ஒரு காலப்பகுதியிலும் அனுபவிக்காத துன்பங்களை இக்காலத்தில் ( 1970 - 1977 ) தோட்டத் தொழிலாளர்கள் அனுபவித்தனர். கிட்டத்தட்ட அடிமைகளின் நிலைக்கு கொண்டு வரப்பட்டார்கள். எல்லா வகையிலும் அரசியல், பொருளாதார, சமூக, இனரீதியான பாரபட்சங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். தொழிற்சங்க தலைவர்கள்கூட கையை விரித்தனர். அரசாங்கம், தீர்மானங்கள் எடுக்கும் போதும் தொழிற்சங்க தலைவர்களுடன் கலந்தாலோசிக்க விரும்பவில்லை. கொண்டுவரப்பட்ட சட்ட விதிகளும் நடைமுறைகளும் முற்றிலும் தொழிலாளரின் உரிமைகளுக்கு எதிரானவைகளாகவே இருந்தன. அவர்கள் வாழ்க்கையில் என்றுமே அனுபவித்திராத விரக்தியான மனநிலையை அடைந்தார்கள். இத்தகைய நிலையில்தான் 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் வந்தது.

# ஓயாத வன்முறை அலைகள்



ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் லலித் அத்துலத் முதலி

Image source - sundayobserver.lk

**1971** முதல் 1977 வரையிலான காலப்பகுதியில் மலையகத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட காடைத்தனம், வாழ்விடங்களில் இருந்து அவர்களை விரட்டியடித்தது. பசி, பட்டினி, பஞ்சம், உணவுப் பொருள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு போன்றன காரணமாக திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் அரசாங்கத்தின்மீது அவர்களுக்கு பெரும் வெறுப்பு உண்டாகியது.

மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமன்றி முழு இலங்கை மக்களுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பவிட வேண்டும் என்று கங்கணம் கட்டியிருந்தனர்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடத்த அறிவிக்கப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தனவை தலைமையாகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, தாம் பதவிக்கு வந்தால் சகலருக்கும் சமமான, ஊழல்முறைகேடுகள் அற்ற, திறமையான, இனமதமொழிகட்சி பேதமற்ற ‘தர்மிஷ்டர் சமூகம்’ ஒன்றை உருவாக்குவோம் என்று தேர்தல் உறுதிக் கோசமிட்டது. மேலும் ஒரு படி மேலே போய், தம்மை ஒரு சாதாரண ஜனநாயக கட்சி அல்லவென்றும் தமது கட்சியும் ஒரு சோசலிசக் கட்சியே என்றும் மார்தட்டிக் கொண்டது. எனினும், அவர்களது பசப்பு வார்த்தைகளால் கவரப்பட்ட ஏழை எளிய மக்கள் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற

ஒரே நோக்கத்தில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மை ஓட்டுகளை அளித்தனர். அதன் விளைவாக ஐக்கிய தேசியக் கட்சி 6 இற்கு 5 சதவீத பெரும்பான்மை பெற்று 139 பாராளுமன்ற ஆசனங்களுடன் அமோக வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வார்த்தைகள் எல்லாமே வெறும் ஜாலங்கள் என்பதும் அவர்கள் பசுத்தோல் போர்த்திய நரிகள் என்பதும் தேர்தல் முடிந்து சில காலத்திலேயே வெளிச்சமானது.

தாம் வெற்றி பெற்றால் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும் என்றும் அது தொடர்பில் ஒரு சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டு வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும் தெற்கில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற இன முரண்பாடுகள் காரணமாக ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தப் பரப்புரைகளால் தமிழ் மக்கள் ஏமாந்து போய்விடவில்லை என்பதை தமிழ் பிரதேசங்களின் தேர்தல் முடிவுகள் பறைசாற்றின. வடக்கு கிழக்கில், தமிழ் கட்சிகளான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை சமஷ்டிக் கட்சி ஆகியன இணைந்து கூட்டாக ஏற்படுத்திக்கொண்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) தமிழ் மக்களின் வாக்குகளை ஒருசேரப் பெற்று 18 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தது. இதன் பிரகாரம், அக்கட்சியைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவரானார். நுவரெலியா தொகுதியில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றிருந்தார். இவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் உப தலைவர்களில் ஒருவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காத விரக்தியால் தூண்டப்பட்ட தமிழ் இளைஞர்கள் அரசாங்கத்துக்கு எதிரான பல்வேறு போராட்டக் குழுக்களாகச் செயல்படத் தொடங்கினர். 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட்



அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

Image source - mfa.gov.lk

மாதம் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற விளையாட்டு விழா ஒன்றின்போது, கல்லூரி மாணவர்களுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்ட மோதலை மையமாகக்கொண்ட சம்பவம் ஒன்று சிங்கள தமிழ் இனக் கலவரமாக மாற்றப்பட்டு நாடெங்கிலும் இன வன்முறையை தூண்டி இனக்கலவரங்கள் வெடிக்க காரணமாகியது. இதனைத் தொடர்ந்து கண்டியிலும் மலையகத்திலும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் வன்முறைகள் அரங்கேறின. பௌத்த துறவிகளும் கூட ஒரு தூண்டுதல் சக்தியாக இருந்தனர்.

1977 ஆகஸ்ட் கலவரத்தால் கண்டி மாநகரம் முற்றாகவும், மலையகத்தின் பல நகரங்களும் பாதிக்கப்பட்டன. தமிழர்களின் பல்வேறு சொத்துக்கள், கடைகள், வீடுகள் என்பன தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. உயிர்கள் பறித்தெடுக்கப்பட்டன. இலங்கை ராணுவமும் போலீசும் இதனை பார்வையாளர்களைப் போல் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கலவரக்காரர்களை தடுக்க முயற்சிக்கவில்லை. இத்தகைய இனக்கலவரங்கள் மலையகம் எங்கும் 1978, 79, 80, 83 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து இடம்பெற்றன. நிறைவேற்று அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, தமிழ் மக்கள் கோரிய தேசிய

இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பதற்கு பதிலாக "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்று தமிழ் மக்களிடம் சவால் விடுத்தார். பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்கள், போக்கிடம் இன்றி, வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்குச் சென்று குடியேற முற்பட்டனர். அநேகமானோர் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் குடியேறினர். இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்கள், வடக்குகிழக்கு உள்நாட்டு யுத்தத்தினால் மேலும் பாதிக்கப்பட்டு, யுத்தத்தில் பங்கேற்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர். மலையகஇந்திய வம்சாவழி தமிழ் இனத்தைச் சேர்ந்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் இறுதி யுத்தத்தின் போது பலியானார்கள் என்று உத்தியோகபூர்வமற்ற ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

**வடக்கு கிழக்கில், தமிழ் கட்சிகளான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை சமஷ்டிக் கட்சி ஆகியன இணைந்து கூட்டாக ஏற்படுத்திக்கொண்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி [*TULF*] தமிழ் மக்களின் வாக்குகளை ஒருசேரப் பெற்று 18 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தது. இதன் பிரகாரம், அக்கட்சியைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவரானார்.**

1977 ஜூலை மாத பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும், தோல்வியடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்தின் ஆதரவாளர்களுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. ஆயினும், அது இரண்டு வாரங்களுக்கு மட்டுமே நீடித்தது. பின்னர் இரு ஆதரவாளர்களது கவனமும் தமது கிராமங்களைச் சுற்றி வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களை நோக்கித் திரும்பியது. கண்டி மாவட்டத்திலும் தென் பிரதேசங்களைச் சேர்ந்த மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை குறிவைத்தும் பரவலாக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. நாடெங்கும் ஆங்காங்கே குறிப்பிட்ட அளவு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று சொத்துச் சேதங்களும் உயிரிழப்புகளும் ஏற்பட்டன. 1977 ஆகஸ்ட் 13 சம்பவங்கள் பற்றியும் அதன் விளைவுகள், சேதங்கள், காரணங்கள் என்பவற்றை விசாரிப்பதற்காகவும் ஒரு தனிநபர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.சீ. சன்சோனி செயற்பட்டார்.

அந்த ஆணைக்குழு வெறுமனே ஒரு கண்துடைப்பாக இருந்தபோதும் அது சமர்ப்பித்த அறிக்கையில் இருந்து வன்முறைகள் இடம்பெற்ற காலம், தீ வைக்கப்பட்ட இடங்கள், சம்பவங்களின் விபரம், உடல் ரீதியான தாக்குதல்கள், துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை துல்லியமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தச் சம்பவங்கள் அவ் அறிக்கையில் 'இனரீதியான பயங்கரவாத வன்முறைகள்' என்று வர்ணிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், மேற்படி வன்முறைகளை வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கான முழுக் காரணத்தையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குறிப்பிட்டிருந்தது. கலவரங்களின்போது தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்த நாட்டு அரசியல் தலைவர்கள் எவரும் இதனை கண்டிப்பதற்கு முன்வரவில்லை. இந்திய அரசாங்கம் கூட வாய் திறக்காது மௌனம் காத்துக் கொண்டிருந்தது. தமிழ்நாட்டு மக்கள் வெகுண்டெழுந்து பெரும் ஊர்வலங்களை நடத்திய பின்னரே இந்திய அரசாங்கம், இலங்கை அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கத் துணிந்தது. ஆனால் அதன் பின்னரும் வன்முறைகள் ஓயவில்லை.

(தொடரும்.)

நாள்தோறும் நாம் உணவாகக் கொள்ளும் தானியங்கள், காய்கறிகள், சுவையூட்டிகள், பாலுணவுகள் என்பவற்றின் குணங்கள் மற்றும் பயன்பாடு பற்றிக் கூறும் நூல் பதார்த்தகுணம் என்று அறியப்படும். அகத்தியர், தேரையர் முதலானோரின் பெயர்களில் பதார்த்தகுணம், குணபாடம் போன்ற தலைப்புகளில் பலநூல்கள் கிடைக்கின்றன. இவ்வகையில் இலங்கை யாழ்ப்பாணத்தில் ஆக்கப்பெற்ற நூல்களுள் ஒன்றே இருபாலைச்செட்டியார் என்று அறியப்படும் ஒரு மருத்துவரால் ஆக்கப்பெற்ற பதார்த்தசூடாமணியாகும். இற்றைக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் இலங்கை வருகைக்குப் பின்னர் ஆக்கம் பெற்ற இந் நூலில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு உணவு வகைகள் தொடர்பில் கூறப்பட்டுள்ளவற்றை 'பதார்த்த சூடாமணி' என்ற இத் தொடர் ஆராய்கின்றது.



பாலா. சிவகடாட்சம்

பாலா. சிவகடாட்சம் அவர்கள் இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியலை பிரதான பாடமாகக் கொண்டு உயிரியல் விஞ்ஞானத்துறையில் (B.Sc. Hons) சிறப்புப் பட்டம் பெற்றவர். இலண்டன் இம்பீரியல் கல்லூரியில் (London Imperial College) டிப்ளோமா சான்றிதழும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளதுடன் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் B.Ed பட்டமும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியற் பீடத்தில் மூத்த விரிவுரையாளராகவும் அதன் தலைவராகவும் பதவி வகித்த இவர் பின்னர் கனடாவில் உள்ள ரொறொன்ரோ கல்விச்சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள மார்க் கார்னோ கல்லூரியில் விஞ்ஞான மற்றும் உயிரியற் பாட ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையிலிருந்து 1971 1973 காலப் பகுதியில் விஞ்ஞானக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த 'ஊற்று' என்ற மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், 19701971 காலப்பகுதியில் வெளிவந்த தமிழமுது இலக்கிய மாத இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய சிவகடாட்சம் (அவர்கள்) தொடர்ச்சியாக ஆய்வுக்கட்டுரைகளையும் இலக்கிய கட்டுரைகளையும் எழுதி வருகின்றார்.

# பறங்கிப்பூசணியும் நீற்றுப்பூசணியும்

**அனலழலை நீக்கும் அதிபித்தம் போக்கும்**
**கனலனலே வெண்பசியைக் காட்டும்புனலாகு**
**மிக்கவைய முண்டாக்கு மென்கொடியே யெப்போதும்**
**சர்க்கரைப் பறங்கிக்காய் தான்**

*– பதார்த்தகுண சிந்தாமணி*

**பொருள் : சர்க்கரைப் பறங்கிக்காய் எனப்படும் பூசணிக்காய் உடல் சூட்டைக் குறைக்கும். கூடிய பித்தத்தைப் போக்கும். பசியைக் கூட்டும். பெருமளவில் நீரைக் கொண்டிருக்கும். கபத்தைத் தோற்றுவிக்கும்.**

'பறங்கிப்பூசணி' என்னும் பெயரைக் கேட்டதுமே இந்தப்பூசணி பறங்கியர் என அழைக்கப்பட்ட போர்த்துக்கேயர் அல்லது ஒல்லாந்தரால் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு காய்கறியாக இருத்தல் வேண்டும் என்பதை இலகுவில் ஊகிக்கமுடியும். இற்றைக்கு 500 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த எமது முன்னோருக்குப் பூசணிக்காய் என்றால் அது நீற்றுப்பூசணியையே குறிக்கும். எனினும் பறங்கிப்பூசணி வந்தபின் எமது பூசணியான நீற்றுப்பூசணி திருஷ்டி கழிக்கவும் கண்ணூறு கழிக்கவும் தீய சக்திகளை விரட்டப் புதுவீடுகளின் கூரையில் கட்டித்தூக்கவும் மட்டுமே பெரிதும் பயன்படுகின்றது.



பறங்கிப் பூசணி, மஞ்சள் பூசணி

Image source - veggies.my

இன்று எம்மால் பூசணிக்காய் என்று அழைக்கப்பெறும் பறங்கிப்பூசணியின் பிறப்பிடம் மத்திய அமெரிக்காவாகும். மனிதரால் முதன் முதலாகப் பயிரிடப்பட்ட காய்கறிகளுள் இந்தப் பூசணிக்காயும் ஒன்று. கிறித்துவுக்கு 5500

ஆண்டுகளுக்கு முற்பட்ட பூசணிவிதைகள் மெக்சிக்கோவில் கண்டறியப்பட்டதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அமெரிக்காவின் பூர்வீகக்குடிகளால் பயிரிடப்பட்ட பூசணிக்காயின் விதை அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் மூலமாக ஐரோப்பாவை வந்தடைந்தது. பின்னர் போர்த்துக்கேயர் மூலமாக பூசணிக்காய் இந்தியா இலங்கை போன்ற நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

பறங்கியரால் அறிமுகப்படுத்தப்பட்ட காய் என்பதால் இது 'பறங்கிக்காய்' என்று அறியப்பட்டது. பின்னர் இதுவே 'பறங்கிப்பூசணி' ஆயிற்று. இன்று தமிழ் மக்களின் முக்கிய காய்கறிகளுள் ஒன்றாக இந்தப் பூசணிக்காய் திகழ்கின்றது. அமாவாசை, பௌர்ணமி போன்ற விரத நாட்களின்போது சமையலிலும் திவசத்தின் போது ஐயருக்குக் காய்கறி தானம் கொடுக்கவும் பூசணிக்காய் பயன்படுகின்றது. சாம்பாரில் சேர்க்கப்படும் காய்கறிகளுள் பூசணியும் ஒன்று. இது காய்கறிகளுள் விலை மலிவானதும் கூட. இனிப்புப் பண்டங்கள் செய்வதற்கும் பூசணி பயன்படுகின்றது. முழுப்பூசணிக்காய் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பழுதடையாமல் சேமித்துவைக்கக் கூடியது.

உலகளாவியரீதியில் மக்களால் பயன்படுத்தப்படும் முதல் பத்து காய்கறிகளுள் பூசணி ஒன்றாகும். பூசணிக்காய் உலகம் முழுவதும் 3 மில்லியன் ஹெக்டயருக்கு மேல் பயிரிடப்பட்டு 27 மில்லியன் டன்களுக்கு மேல் விளைகிறது. பூசணிக்காய் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடான சீனா ஆண்டுக்கு 58% உற்பத்தி செய்கிறது. இந்தியாவில் 45,000 ஹெக்டயர் பூசணி சாகுபடி உள்ளது. இந்தியா ஆண்டுக்கு சுமார் 5 மில்லியன் மெட்ரிக் டன்களை உற்பத்தி செய்கிறது. ஆண்டுக்கு சுமார் 1 மில்லியன் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் உக்ரேன் இதில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பூசணிக்குடும்பத்தில் (Cucurbitaceae), *C. maxima*, *C. moschata* மற்றும் *C. pepo* என்னும் மூன்று பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பூசணி இனங்கள் உள்ளன. இவை உலகம் முழுவதும் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. இலங்கை விவசாயத் திணைக்களத்தின் தகவலின்படி, தற்போது இலங்கையில் பயிரிடப்படுகின்ற பூசணி வகைகள் *C. maxima* மற்றும் *C. moschata* ஆகிய



**நீற்றுப்பூசணி, சாம்பல் பூசணி, வெண்பூசணி**

Image source - samsgardenstore.com

இனங்களைச் சேர்ந்தவை. *C. pepo* இலங்கைக்குள் அதிகம் பிரபலமடையவில்லை.

அர்ஜுனா, ANK ருஹுணு, மீமினி, ராஜா, கட்டானா, பிங்கா, பத்மா, பட்டர்நட், லீலா, லங்கா, எம்கே ஸ்பாஞ்சி, சாம்சன், கோல்ட்மா, சியோன்லிமா, ஷிபா ஆகியவை இலங்கையில் பயிரிடப்படும் சில பூசணி வகைகளாகும். இந்த வகைகளில் கலப்பின வகைகள், மேம்படுத்தப்பட்ட வகைகள், இறக்குமதி செய்யப்பட்ட வகைகள் மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை வகைகள் ஆகியவை அடங்கும். பொதுவாக பயிரிடப்படும் வகைகளில், பத்மா மற்றும் ANK ருஹுணு மட்டுமே இலங்கை விவசாயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

நிலத்தோடு ஒட்டிப் பரந்து வளரும் தாவரங்களில் கனியுப்புச்சத்துக்கள் செறிந்து காணப்படுவது இயல்பு. பூசணிக்காயிலும் அதன் விதைகளிலும் பொஸ்பரஸ் (phosphorus), மக்னீசியம் (magnesium), செம்பு (copper), துத்தநாகம் (zinc), மற்றும் இரும்புச்சத்துகள் செறிந்து காணப்படுகின்றன. குறிப்பாக எமக்குத் தேவையான அளவு துத்தநாகத்தினை பூசணி விதைகளை உட்கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின்

பரிந்துரையாகும்.

பூசணிக்காயில் 80 - 90 % நீர் சத்து இருப்பதாலும் அதேசமயம், கலோரிகள் குறைவாக இருப்பதாலும் உடல் பருமன் உள்ளவர்களுக்கும் ஏற்ற உணவாக இது உள்ளது. பூசணிக்காயின் சதைக்கு ஆரஞ்சு நிறத்தை கொடுக்கும் பீட்டா கரோட்டின் எமது உடலில் வைட்டமின் ஏ ஆக மாற்றம் பெறுகிறது. ஆரோக்கியமான தோல் மற்றும் கண்களுக்கு வைட்டமின் ஏ அவசியமானது. அதே நேரத்தில் நோயெதிர்ப்பு மண்டலத்தையும் வைட்டமின் ஏ வலுப்படுத்துகிறது. பூசணிக்காயில் அதிக அளவில் பொட்டாசியம் உள்ளது. இது இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், வயதாகும்போது உடலில் பொட்டாசியம் குறைவதால் ஏற்படும் செவித்திறன் இழப்பிலிருந்து பாதுகாக்கவும் உதவும்.

எம்முள் பலரும் பூசணிக்காய் சமைக்கும்போது அதன் விதைகளை எறிந்துவிடுவது வழக்கம். ஆனால் பூசணி விதைகளும் பல்வேறு சத்துக்கள் உடையன என்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. பூசணி விதைகளில் ஆன்டிஆக்ஸிடன்ட்கள், இரும்பு, துத்தநாகம், மெக்னீசியம் மற்றும் பல ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. 1 அவுன்ஸ் (28 கிராம்) பூசணி விதை சுமார் 160 கலோரிகளைக் கொண்டுள்ளது.

பூசணி விதைகளில் உள்ள அதிக துத்தநாகம் விந்தணுக்களின் தரம் மற்றும் ஆண்களின் கருவுறுதலை (*male fertility*) மேம்படுத்த உதவும். பூசணி விதைகளில் மெக்னீசியம் நிறைந்துள்ளது. ஆரோக்கியமான மெக்னீசியம் அளவு இரத்த அழுத்தம் மற்றும் இரத்த சர்க்கரை அளவுகளைப் பேண உதவுவதுடன் இதயம் மற்றும் எலும்பு ஆரோக்கியத்திற்கும் முக்கியமான ஒன்றாக உள்ளது.

பூசணி விதைகள் நார்ச்சத்துக்கான நல்ல மூலமாகும். நார்ச்சத்து அதிகம் உள்ள உணவு இதய நோய், நீரிழிவு மற்றும் உடல் பருமன் போன்றவற்றின் அபாயத்தைக் குறைப்பது உட்பட பல ஆரோக்கிய நன்மைகளுடன் தொடர்புடையது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அமெரிக்க விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்குத் தீவனமாகப் பூசணி விதைகளைக் கொடுத்த போதெல்லாம் அவை வழக்கத்திலும் கூடுதலாக சிறுநீர் கழிப்பதை அவதானித்தனர். தமிழ் மருத்துவர்கள் பூசணிக் குடும்பத்தைச் சேர்ந்த வெள்ளரி விதைகளுக்கும் இந்தக் குணம் இருப்பதைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே அறிந்து வைத்திருந்தனர் என்பதைப் பழந்தமிழ் மருத்துவ நூல்களின் வாயிலாக உறுதிப்படுத்தமுடியும்.

அமெரிக்காவின் பூர்வீகக்குடிகள் சிறுவர்கள் இரவில் படுக்கையில் சிறுநீர் கழிப்பதைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்குப் பூசணிவிதைகளை உண்ணக் கொடுத்தனர். இது படுக்கைக்கு போகுமுன்னரேயே சிறுநீரை முழுமையாக வெளியேற்றிவிடுவதால் படுக்கையில் சிறுநீர்போவது தவிர்க்கப்படுகிறது.

புரொஸ்ரேற் சுரப்பி (*prostate gland*) என்பது ஆண்களில் மாத்திரமே காணப்படும் ஒரு விந்து கூழ்ச்சுரப்பியாகும். நடுத்தர வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இந்தசுரப்பி வீங்குவது உண்டு. அடிக்கடியும் குறைவாகவும் சிறுநீர் கழிவது அல்லது கசிவது இந்நோயின் குறிகுணங்களாகும். இதனை *Benign Prostatic Hyperplasia (BPH)* என்று ஆங்கில மருத்துவர்கள் குறிப்பிடுவார்கள். பண்டைய தமிழ் மருத்துவர்கள் இந்நோயினைச் சதையடைப்பு என்று குறிப்பிட்டுள்ளார்கள். இரவில் சிறுநீர் கழிப்பதற்காக இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் எழுந்துபோகும் ஒரு ஆண் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை ஊகிக்கமுடியும். இது புறொஸ்ரேற் கான்சரிலும் (*prostate cancer*) வேறானது.

அறுபதுகளில் ஜெர்மன் நாட்டவரால் நடாத்தப்பெற்ற ஆய்வுகள் மூலம் நாளாந்தம் 5 கிராம் தொடக்கம் 15 கிராம் வரையிலான பூசணி விதைகளை உட்கொண்டு வரும் ஒருவருக்கு சதையடைப்புக் குறிகுணங்கள் குறைந்துவருவது கண்டறியப்பட்டது. இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள் ஆரம்ப நிலையில் உள்ள சதையடைப்புக்கு பூசணிவிதைகள் மருந்தாகலாம் என்பதை உறுதிப்படுத்துவதோடு இந்தச் சிகிச்சையினால் குறிப்பிடத்தக்க பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படாது என்றும் கூறுகின்றன. முறையான புரோஸ்ரேற் செயல்பாடு பொருத்தமான துத்தநாக அளவைச் சார்ந்துள்ளது. ஒரு சில பூசணி விதைகள் வாரத்திற்கு 23 முறை உங்கள் புரோஸ்ரேற் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம். அவை புரோஸ்ரேற் வீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

சமீபகாலமாக பூசணி விதையில் இருந்து பெறப்பட்ட எண்ணெய் சதையடைப்புக்கு மருந்தாகப் பயன்பட்டு வருகின்றது. ஜெர்மனியில் இந்த பூசணி வித்தெண்ணெயை மருந்துக்கடைகளில் வைத்தியரின் பரிந்துரை இன்றிப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நாளைக்கு 500 தொடக்கம் 1000 மில்லிகிராம் என்ற அளவில் பூசணி வித்தெண்ணெய் மூன்று மாதங்களுக்கு எடுத்துவரும் ஒருவருக்கு பகல் நேரத்திலும் இரவிலும் சிறுநீர் கழிக்கப்போகும் தடவைகள் குறைந்தமை ஆய்வுகள் மூலம்

தெரியவந்துள்ளது. சிறுநீரகக் கற்கள் தோன்றுவதைத் தவிர்க்கும் ஆற்றலும் பூசணிவிதைக்கு இருப்பதாக ஒருசில ஆய்வுகள் கூறுகின்றன. விலங்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட வேறு சில ஆய்வுகள் நீரிழிவு நோயினால் சிறுநீரகத்தின் செயல்பாடுகளில் ஏற்படக்கூடிய விரும்பத்தகாத பாதிப்புக்களைத் தடுக்கும் குணம் பூசணிவித்துக்கள், விதைச்சாறு, விதை எண்ணெய் என்பவற்றுக்கு இருப்பதை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

குடற்பூச்சிகளை அகற்றவும் பூசணி விதைகள் மருந்தாகப் பயன்படுகின்றன. இருநூறு கிராம் தொடக்கம் 400 கிராம் வரையிலான உலர்ந்த, தோல் உரிக்கப்படாத பூசணி வித்துக்களை இடித்து எடுத்துப் பாலும் தேனும் சேர்த்துப் பிசைந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடவேண்டும். இரண்டு அல்லது மூன்று மணிநேரம் கழிந்தபின் ஆமணக்கு எண்ணெய் சிறிதளவு குடிக்கவேண்டும். மறுநாள் காலையிலும் இதையே திரும்பவும் செய்யவேண்டும். குடற்பூச்சிகள் அனைத்தும் மலத்துடன் வெளியேற்றப்பட்டுவிடும்.

### ஹலோவீன் பேய்நாளும் பூசணிக்காயும்

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பூசணிக்காய் வேறொரு விடயத்துக்குப் பெரிதும் பயன்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முப்பத்தோராம் திகதி கொண்டாடப்படும் ஹலோவீன் (Halloween) எனப்படும் பேய் நாளில் பூசணிக்காயைக் குடைந்து அதனுள்ளே விளக்கு வைத்து வீட்டினை அலங்கரிக்கும் வழக்கம் உண்டு. ஹலோவீன் நாள் இரவில் ஊரில் பேய் பிசாசுகளின் நடமாட்டம் கூடுதலாக இருக்கும் என்பது நம்பிக்கை. ஹலோவீன் நாள் கொண்டாட்டத்துக்கென்றே அமெரிக்காவில் ஜூன், ஜூலை மாதங்களில் பெருமளவு பூசணி பயிரிடப்படுவதுண்டு.

இந்த ஹலோவீன் நாள் கொண்டாட்டத்தின் பின்னணியில் சுவாரசியமான ஐரிஷ் நாடோடிக்கதை உண்டு. 1500 களில் அயர்லாந்தின் கிராமப்புற மக்கள் கஞ்சன் ஜாக் (stingy Jack) என்ற ஒரு மனிதனைப் பற்றி ஒரு நாட்டுப்புறக் கதையைச் சொல்லத் தொடங்கினர். எவருக்குமே எந்த உதவியும் செய்ய விரும்பாத கஞ்சன் ஜாக் பிறரை ஏமாற்றுவதில் வல்லவன். சாத்தான் கூட ஒரு முறையல்ல, மூன்று முறை கஞ்சன் ஜாக்கினால் ஏமாற்றப்பட்டுவிட்டது. ஜாக் இறந்த பின்னர் நரகத்துக்குச் சென்றபோது நரகத்தின் ஆட்சியாளனாக இருந்த சாத்தான் ஜாக்கை நரகத்துள் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை. “வெளியே ஒரே இருள். இந்த இருளில் வழியொன்றும் தெரியாமல் நான் எங்கே போவேன்”



ஹலோவீன் லாந்தர் பூசணி

Image source - blog.dallasarboretum.org

என்று ஜாக் புலம்பியபோது ஒரு முள்ளங்கியை அவன் கையில் கொடுத்த சாத்தான் “இதனோடு இந்த உலகில் என்றென்றும் அலைந்து திரி” என்று கூறிவிட்டது. முள்ளங்கியின் உள்ளே எரியும் குச்சி ஒன்றை வைத்து அந்த லாந்தர் வெளிச்சத்தில் உலகில் அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றான் கஞ்சன் ஜாக். (பிற்காலத்தில் முள்ளங்கியின் இடத்தைப் பூசணிக்காய் பிடித்துவிட்டது). நள்ளிரவில் சுடுகாட்டுப் பக்கமாக வெளிச்சம் ஒன்று அங்கும் இங்கும் அலைவதைக் கண்டால் அது ஜாக்கின் லாந்தர் (Jacko’lantern) வெளிச்சம் என்பதை அறிந்துகொள்ளலாம். எங்களூர்க் கொள்ளிவாய்ப் பேய்க்கும் அயர்லாந்து நாட்டவரின் கஞ்சன் ஜக்கி சுமந்து திரியும் லாந்தர் வெளிச்சத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

சதுப்பு நிலங்களில் தாவரப் பொருட்கள் சிதைவதால் உருவாகும் மீத்தேன் எரிவாயு நிலத்தின் ஆழத்திலிருந்து வெளியே வரும்பொழுது காற்றிலுள்ள ஒட்சிசன் வாயுவுடன் இணைந்து தன்னிச்சையாக எரிகின்றது. ஆட்கள் நடமாட்டமில்லாத இடத்தில் தானாகப் பற்றியெரிந்து பறக்கும் தீச்சுடரே எமது பாட்டன் பாட்டிக்குக் கொள்ளிவாய்ப் பிசாசாகவும் அயர்லாந்து கிராமவாசிகளுக்கு ஜாக்கின் லாந்தர் வெளிச்சமாகவும் தெரிந்தது.

### உசாத்துணை


1. *Ekanayaka EMMM, Chandrasekara BSG, Balasooriya BANK. Evaluation of exotic pumpkin hybrids with local pumpkin varieties in the intermediate low country 1 (IL1) of Sri Lanka. Proceeding of the open university research sessions. 2019 May; 9912.*

2. *Overview of Cucurbita spp. (pumpkin) and development of valueadded products emphasizing its nutritional and chemical composition K.O.G. Himani Ruwanthika, M.L.A. Mayuri S. Munasinghe and R.A. Upul J. Marapana.*


(தொடரும்.)




வீரகத்தி தனபாலசிங்கம்

தற்போது கொழும்பில் வசித்துவரும் வீரகத்தி தனபாலசிங்கம், யாழ். கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கொழும்பு தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர்; மூத்த பத்திரிகையாளர். அரசியல் விமர்சனக் கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வருகின்றார்.








# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் ராஜபக்சாக்களும்



இலங்கை முன்னொருபோதும் காணாத கடந்த வருடத்தைய படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோரும் அவர்களுக்கு நெருக்கமான மத்திய வங்கியின் இரு முன்னாள் ஆளுநர்கள் உட்பட ஐந்து உயர்மட்ட அதிகாரிகளுமே பொறுப்பு என்று உயர்நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு, மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நாட்டின் அதியுயர் நீதிமன்றம் வழங்கிய மூன்றாவது தீர்ப்பாகும்.

ஜனாதிபதியாக இருந்தபோது சந்திரிகா குமாரதுங்க பொது நோக்கத்துக்கு பயன்படுத்துவதற்கான அரச நிலத்தை தனியார் கோல்ஃப் (வாட்டேர்ஸ் எட்ஜ்) மைதானத்துக்கு வழங்குவதற்கு தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்ததன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாக ஓய்வுபெற்ற இரு அரசாங்க அலுவலர்கள் தொடுத்த வழக்கில் நீதிமன்றம் அவரை குற்றவாளியாக கண்டது. 2008 மே இல் வழங்கப்பட்ட அந்த தீர்ப்பில், இழப்பீடாக 30 இலட்சம் ரூபாவை வழங்குமாறு திருமதி குமாரதுங்கவிற்கு உத்தரவிடப்பட்டது.

பாதுகாப்பு விவகாரங்களை சரியாகக் கையாளாத முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில், அவர் 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பத்துக்கோடி ரூபாவை இழப்பீடாக வழங்குமாறு கடந்த ஜனவரியில் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

மக்கள் தங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு துரோகமிழைத்ததாகவும் சட்டத்தின் சமத்துவமான பாதுகாப்பைப் பெறுவதற்கு மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையை மீறியதாகவும் ராஜபக்ச சகோதரர்களை குற்றவாளிகளாகக் கண்ட உயர்நீதிமன்றம் இழப்பீடு எதையும் வழங்கவேண்டும் என்று உத்தரவிடவில்லை. பதிலாக அவர்களுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்த நால்வருக்கும் தலா ஒன்றரை இலட்சம் ரூபாவை வழக்கு செலவுத்தொகையாக செலுத்துமாறு ராஜபக்சாக்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இந்த வழக்கில் மனுதாரர்கள் இழப்பீட்டைக் கோரவில்லை என்பதால் அதற்கு உத்தரவிடவேண்டிய தேவை இருக்கவில்லை என்று அறிவித்த உயர்நீதிமன்றம், பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்று மனுதாரர்கள் கேட்டிருந்தால் எத்தகைய தீர்ப்பை வழங்கியிருக்கும்?

ராஜபக்சாக்களும் அவர்களுக்கு நெருக்கமான உயர்மட்ட அதிகாரிகளும் பொருளாதாரத்தை தவறான முறையில் முகாமைத்துவம் செய்ததன் விளைவாக ஏற்பட்ட நெருக்கடியினால் நாட்டின் 2 கோடி 20 இலட்சம் சனத்தொகையும் அல்லவா பாதிக்கப்பட்டது?

நான்கு மனுதாரர்களுக்கும் தலா ஒன்றரை இலட்சம் ரூபாவை வழக்கு செலவுத்தொகையாக வழங்கிவிட்டால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்ததற்கான ராஜபக்சாக்களின் பொறுப்புக்கூறல் முடிந்துவிடுமா?

உயர்நீதிமன்றம் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பைத் தொடர்ந்து குற்றவாளிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படவேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து அரசியல் மற்றும் சிவில் சமூகங்களிடமிருந்து கோரிக்கைகள் கிளம்பத் தொடங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

பொருளாதாரக் குற்றவாளிகளின் குடியியல் உரிமைகளை பறிப்பது குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் என்று பாராளுமன்றத்தில் கோரிக்கையை முன்வைத்த எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாச தற்போது அதற்கு ஆதரவாக பொதுமனுவில் மக்களிடம் கையெழுத்தைப் பெறும் இயக்கத்தை முன்னெடுத்திருக்கிறார். ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே இருக்கிறது என்றும் பிரேமதாச சுட்டிக் காட்டினார்.

அதேவேளை நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்சவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை விக்கிரமசிங்க நியமிக்கவேண்டும் என்றும் அந்த ஆணைக்குழுவினால் முன்மொழியப்படக்கூடிய எந்தவொரு தண்டனை நடவடிக்கையும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் கூறியிருந்தார்.

தனது அரசாங்கத்துக்கு ராஜபக்சாக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற ஆதரவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க, அத்தகைய ஆணைக்குழுவை நியமிப்பார் என்றும், தற்போதைய பாராளுமன்றத்தில் ராஜபக்சாக்களுக்கு தண்டனை வழங்குவதற்கான தீர்மானமொன்றுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறமுடியும் என்றும் எதிர்பார்க்க முடியுமா?

இந்திய தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கிய விக்கிரமசிங்கவிடம் ராஜபக்சாக்களுக்கு எதிரான தீர்ப்புக் குறித்து




Image source - wikipedia.org

கேட்கப்பட்ட எந்தக் கேள்விக்கும் அவர் நேரடியாக பதிலளிப்பதை தவிர்த்து சுற்றிவளைத்துப் பேசியதையே காணக்கூடியதாக இருந்தது.

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பயன்படுத்தி இந்த வழக்கின் குற்றவாளிகளிடம் இழப்பீடு கோரி உயர்நீதிமன்றத்தை நாடமுடியும் என்று சட்டநிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஒவ்வொரு குடிமகனும் ஒன்றரை இலட்சம் ரூபா இழப்பீடு கோரி உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கு உரித்துடையவர் என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கூறினார்.

அதேவேளை சபையில் பட்ஜெட் விவாதத்தில்



Image source - www.arabnews.com

உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை வழங்குமாறு குற்றவாளிகளுக்கு உத்தரவிட்டிருக்கமுடியும் என்றும் நாட்டு மக்கள் சகலருக்கும் இழப்பீட்டை வழங்குவதற்கு போதுமான பணம் ராஜபக்சக்களிடம் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

தங்களிடமிருந்து களவாடப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்கு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இப்போது உரித்துடையவர். வெளிநாடுகளில் ராஜபக்சாக்கள் பதுக்கிவைத்திருக்கும் பணத்தை மீட்டுக்கொண்டுவந்து பொருளாதார மீட்சிக்கும் குடிமக்களுக்கு இழப்பீட்டை வழங்குவதற்கும் பயன்படுத்தமுடியும் என்றும் சுமந்திரன் கூறினார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னணியில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது பாராளுமன்றத்தின் பொறுப்பாகும் என்று ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நாஷனல் இலங்கைப் பிரிவு கூறியிருக்கிறது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததற்கான காரணிகளை ஆராய்வதற்கு கடந்த ஜூலையில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்தார். எதிரணி கட்சிகள் பங்கேற்க மறுத்த நிலையில் முற்றிலும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களைக் கொண்டதாகவே அந்த தெரிவுக்குழு அமைந்திருக்கிறது.

அத்துடன் தெரிவுக்குழுவின் தலைவராக பசில் ராஜபக்சவின்

தீவிர விசுவாசியான பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் காரியவாசம் இருக்கும் நிலையில் எந்த இலட்சணத்தில் அதன் செயற்பாடுகள் அமையும் என்பதை விளங்கிக்கொள்வதில் எவருக்கும் சிரமம் இருக்காது. ஐந்து மாத காலத்தில் ஒரேயொரு தடவையே தெரிவுக்குழு கூடியதாகவும் கூறப்படுகிறது.

பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும் நிலையில் அந்த தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்திவிடவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் கேட்டிருந்தார்.

பொருளாதார முறைகேடுகள் தொடர்பில் ஏற்கெனவே தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் இருந்து சட்ட நுட்ப நுணுக்க காரணங்களின் அடிப்படையில் தங்களை விடுவித்துக்கொண்ட ராஜபக்சாக்கள், பொருளாதார நெருக்கடிக்கு தாங்களே பொறுப்பு என்று இத்தகைய தீர்ப்பு ஒன்றை உயர்நீதிமன்றம் வழங்கும் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் அதிகாரத்தில் இருந்து இறங்கிய ராஜபக்சாக்களின் மக்கள் செல்வாக்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. இந்த தீர்ப்பு அவர்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். அவர்களுக்கு எதிரான அரசியல் சக்திகளின் கைகளுக்கு வலிமையான 'அரசியல் ஆயுதம்' ஒன்று உயர்நீதிமன்ற தீர்ப்பின் வழியாக கிடைத்திருக்கிறது.

மகிந்த ராஜபக்சவும் மகன் நாமல் ராஜபக்சவும் தான் தீர்ப்பு குறித்து பெருமளவுக்கு பொதுவெளியில்

பேசுகிறார்கள். கோட்டாபயவோ பசிலோ இதுவரையில் பகிரங்கமாக எதையும் கூறியதாக செய்தி இல்லை. முதலில் மகிந்த, தான் ஒரு சட்டத்தரணி என்ற வகையில் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதாக கூறிவிட்டு பிறகு அதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று குறிப்பிட்டார். முரண்பாடான இந்த கூற்றுக்கள், தீர்ப்பின் மூலமாக தாங்கள் எதிர்நோக்கும் சிக்கலை எவ்வாறு கையாளுவது என்பது தொடர்பில் அவர் தடுமாறுகிறார் என்பதை உணர்த்துகின்றன.

பாராளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச தனக்கும் சகோதரர்களுக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரித்த அதேவேளை நிதி முகாமைத்துவம் தொடர்பான சகல தீர்மானங்களும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடனேயே எடுக்கப்பட்டன என்று கூறினார்.

ஆனால் ராஜபக்சாக்களின் ஆட்சியில் பாராளுமன்றமும் அமைச்சரவையும் வெறுமனே றப்பர் முத்திரைகளாகவே இருந்தன என்பதையும் சகோதரர்களே கோலோச்சி நாட்டைச் சூறையாடினார்கள் என்பதை நாடும் மக்களும் மாத்திமல்ல முழு உலகமும் அறியும்.

ராஜபக்சாக்களைப் பொறுத்தவரை தங்களது தவறான ஆட்சிமுறையின் விளைவாகவே பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தோன்றியது என்பதை அவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பின்னரும் கூட அதே நிலைப் பாட்டிலேயே அவர்கள் இருக்கிறார்கள்.

நாட்டு மக்கள் தங்களுக்கு கடமைப்பட்டவர்கள் என்ற ஒரு விசித்திரமான எண்ணத்தை ராஜபக்சாக்கள் கொண்டிருக்கிறார்கள். விடுதலை புலிகளைத் தோற்கடித்து உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததற்காக சிங்கள மக்கள் என்றென்றைக்கும் தங்களை ஆதரிப்பார்கள் என்ற தவறான ஒரு எண்ணம் அவர்களிடம் வேரூன்றியிருந்தது. அதனால் அதே சிங்கள மக்கள் தங்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்து அதிகாரத்தில் இருந்து விரட்டியதை இன்றுவரை சீரணிக்கமுடியாதவர்களாக இருக்கிறார்கள்.

மிகவும் நீண்டகாலத்துக்கு தங்கள் குடும்ப ஆதிக்க ஆட்சியைத் தொடரமுடியும் என்று கனவு கண்டு கொண்டிருந்த அவர்கள் தங்களது குடியியல் உரிமைகள் பறிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை கிளம்புகின்ற ஒரு நிலை தோன்றும் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள்.

அடுத்து வரக்கூடிய தேர்தல்களில் பொதுஜன பெரமுனவே வெற்றிபெற்று மீண்டும் ஆட்சிக்குவரும் என்று ராஜபக்சாக்கள் நாட்டுமக்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் ஆட்சிமுறையின் கெடுதியான போக்குகள் சகலவற்றையும் உருவகிப்பவர்களாக ராஜபக்சாக்கள் விளங்குகிறார்கள்.

**மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் அதிகாரத்தில் இருந்து இறங்கிய ராஜபக்சாக்களின் மக்கள் செல்வாக்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. இந்த தீர்ப்பு அவர்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். அவர்களுக்கு எதிரான அரசியல் சக்திகளின் கைகளுக்கு வலிமையான 'அரசியல் ஆயுதம்' ஒன்று உயர்நீதிமன்ற தீர்ப்பின் வழியாக கிடைத்திருக்கிறது.**

பொருளாதார நெருக்கடியின் விளைவாக தாங்கள் அனுபவித்த இடர்பாடுகளுக்கும் பௌதீக மற்றும் உளவியல் உபாதைகளுக்கும் ராஜபக்சாக்களிடமிருந்து இழப்பீட்டைக் கோருவதற்கு உயர்நீதிமன்ற தீர்ப்பு சகல இலங்கையர்களுக்கும் ஒரு வாய்ப்பைத் திறந்துவிட்டிருக்கிறது. வழக்கு செலவுத்தொகையாக மனுதாரர்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாவை செலுத்துவதுடன் ராஜபக்சாக்களின் பொறுப்புக்கூறல் முடிந்துவிடுமாக இருந்தால் அதைப் போன்ற அபத்தம் வேறு எதுவும் இருக்கமுடியாது. குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கக்கூடியதாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படாவிட்டால் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெறுமனே ஒரு அடையாள பூர்வமானதாக மாத்திரமே மிஞ்சும்.



Image source - www.eastasiaforum.org

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.



பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

# சிவபூமி அருங்காட்சியகம் : ஈழத் தமிழர் வரலாற்றின் புதிய முகவரி



அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள மன்னர் சிலைகள்

Image source - www.vvtuk.com

யாழ்ப்பாண நுழைவாயிலான நாவற்குழியில் 25.01.2020 அன்று திறந்து வைக்கப்படும் சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகத்தின் ஆரம்ப நிகழ்வை ஈழத் தமிழர் வரலாற்றில் நிரந்தரமாக இடம்பெறப்போகும் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகப் பார்க்கிறேன். இவ் அருங்காட்சியகத்தின் மூலம் எம் முன்னோர்களால் வளர்க்கப்பட்டு எம்மோடு வாழ்ந்துவரும் பாரம்பரிய



மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல் அடுத்து வரும் சந்ததியினருக்கு கையளிப்பதற்கு வழியேற்படுத்தப்பட்டிருக்கின்றது. மூன்று தளங்களில் அமைக்கப்பட்ட இவ் அரும்பொருள் காட்சியகத்தில் வடஇலங்கை மக்களின் பூர்வீக வரலாற்று அடையாளங்கள், மரபுரிமைச் சின்னங்கள், பயன்பாட்டிலிருந்து மறைந்து போகும் பாரம்பரிய பாவனைப் பொருட்கள், தமிழ் மக்களின் கடந்தகால வரலாற்றையும், பண்பாட்டையும் வெளிச்சம் போட்டுக்காட்டும் புகைப்படங்கள், ஓவியங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட உள்ளன. இவற்றைப் பார்வையிடுவோருக்கு எமது சந்ததியினர் எங்கிருந்து வந்தார்கள், எங்கே போகின்றார்கள், எங்கே போக வேண்டும் போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடைகாண வழிபிறந்துள்ளது. இந்த அருங்காட்சியகம் மட்டுமல்ல, அதை தூரநோக்குடன் கடின உழைப்பால் உருவாக்கித்தந்த கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சொத்தாவார்.

தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்படுவதற்கு ஒரு முழுமையான அருங்காட்சியகம் வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கனவாகும். 1971 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் கந்தரோடையில் மண்ணுக்குள் புதையுண்டிருந்த பல நூற்றுக்கணக்கான தொல்பொருட் சின்னங்கள் வெளிவந்தன. அவற்றைப் பார்வையிட்ட அன்றைய அரச அதிபர் போல் பீரிஸ் அநுராதபுரத்திற்கு அடுத்த புராதன நகரம் கந்தரோடை எனக் குறிப்பிட்டு இம்மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க தமிழர் ஒருவரைத் தொல்லியல் ஆணையாளராக நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். 1940 ஆம் ஆண்டுக்குரிய பிரித்தானியர் கால ஆவணம் சாவகச்சேரி பழைய நீதிமன்றத்தின் கீழ் புதையுண்டிருந்த புராதன ஆலயத்தின் அழிபாடுகள் பாதுக்கப்படவேண்டும் என ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தது. இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டெழுந்த பத்திரிகைள் தமிழர்களின் மரபுரிமைகள் கவனிப்பாரின்றி அழிவடைந்து வருகின்றன, பணத்திற்காக பிற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்ற குற்றச் சாட்டுக்களை

முன்வைத்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் முன்வரவேண்டும் என அறைகூவல் விடுத்து வந்தன. இந்நிலையில் 1970 களில் பேராசிரியர் கா. இந்திரபாலா, வி. சிவசாமி, திரு.ஆ. சிவனேசச்செல்வன் ஆகியோரின் முயற்சியால் யாழ்ப்பாணத் தொல்லியற்கழகம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அவ்வமைப்பில் ஆர்வத்துடன் இணைந்து கொண்ட ஆசிரியர்களான பொன்னம்பலம், திருவள்ளுவர், நிலஅளவையாளர். சேயோன், பூநகரி உதவி அரசாங்க அதிபர் கிருஷ்ணமூர்த்தி, கலைறூனி, குரும்பசிட்ட கனகரட்ணம் போன்ற பெரியவர்கள் தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிவதிலும், பாதுகாப்பதிலும் ஆர்வத்துடன் பணியாற்றினர். அவர்களின் கண்டுபிடிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு பல்கலைக்கழக மட்டத்திலும் சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன.

ஆயினும் மரபுரிமைச் சின்னங்களைச் சேகரித்த பலர் இன்று அமரத்துவம் அடைந்துவிட்ட நிலையில் அம்மரபுரிமைச் சின்னங்களுக்கு என்ன நடந்ததென்பதை யாருமே அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. 2009 இற்குப் பின்னர் முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு வடஇலங்கை மரபுரிமைச் சின்னங்கள் தென்னிலங்கைக்கும், பிற நாடுகளுக்கும் கடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 2010-2011 காலப்பகுதியில் தென்னிலங்கை வர்த்தகர்கள் தனியார் வீடுகளை வாடகைக்கு எடுத்து வீடுவீடாகச் சென்று குறைந்த விலையில் மரபுரிமைச் சின்னங்களைக் கொள்வனவு செய்த சம்பவங்களும் உண்டு.

அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் இன்றும் அநுராதபுரம், பொலநறுவை, கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் உள்ள கடைகளில் வெளிநாட்டவருக்கு உரிய விற்பனைப் பொருட்களாக உள்ளன. கடந்த வாரத்தில் கூட வடஇலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு கடத்தப்பட இருந்த இரண்டு கோடி ரூபா பெறுமதியான மரபுரிமைச் சின்னங்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. இவ்வாறு எமது இனத்தின் மூலவேர், இனமத அடையாளங்கள், பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்கள் எம் கண் முன்னேயே கடத்தப்பட்டும், அழிவடைந்தும் வருவதை எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கெல்லாம் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற விழிப்புணர்வும், அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியிடம் கையளிப்பதற்கான அருங்காட்சியகங்கள் இல்லாதிருப்பதுமே முக்கிய காரணங்களாகும். இவற்றைச் செய்து கொடுக்க அரச அமைப்புக்களோ, பொது நிறுவனங்களோ முன்வரவில்லை. தென்னிலங்கையைப் போல் இங்குள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இவற்றைச் செய்வதில் அதிக அக்கறை காட்டி வருவதாகவும் தெரியவில்லை. இதனால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து எமது மரபுரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் மக்கள் மத்தியில் ஒரு கனவாகவே இருந்து வந்துள்ளன. ஆயினும் அந்தக் கனவு இப்போது பலித்திருக்கிறது. அது தனிமனிதனாக இருந்து அல்லும்பகலும் உழைத்த கலாநிதி ஆறுமுகம் திருமுருகன் வடிவத்தில் கைகூடியுள்ளது. அதுவே நாவற்குழில் தலைநிமிந்து நிற்கும் சிவபூமி அரும்பொருள் காட்சியகமாகும்.

அரும்பொருள் காட்சியகம் அமைக்கப்பட வேண்டும் என்பது கலாநிதி திருமுருகன் அவர்களின் திடீர் கனவு அல்ல. அவர் துர்க்கையம்மன் ஆலயத் தலைவராக பதவியேற்ற காலத்தில் இருந்து எமது மரபுரிமைச் சின்னங்களைச் சிறுகச் சிறுக சேமித்து வந்ததை நான் அறிவேன். அவை வலிகாமத்தில் மூன்று இடங்களில் பாதுகாக்கப்பட்டும் வந்தன. ஆயினும் அதற்கொரு அருங்காட்சியகம் தோன்றும் என நான் கனவு காணவில்லை. அதனால் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்து அம்மரபுரிமைச் சின்னங்களை எமது தொல்லியல் இறுதி வருட மாணவியூடாக ஆவணப்படுத்தி வைத்துள்ளோம். அது தனியொரு நூலாகவும் விரைவில் வெளிவரவுள்ளது. அப்போது சிவபூமி அரும்பொருள் காட்சியகம் தோன்றிய வரலாற்றுப் பின்னணியும் தெரியவரும்.

இன்றைய உலகில் நேரம், பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு அங்குள்ள அருங்காட்சியகங்களுக்குச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றது. தற்போது தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு புதிய வழி திறக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு பரப்பில் மூன்று தளங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தின் கட்டிட அமைப்பு, காட்சிப்படுத்தலில் பின்பற்றப்பட்டுள்ள ஒழுங்குமுறை,



**அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்களில் சில**

Image source - www.vvtuk.com

காட்சிப்படுத்தப்பட்டு வரும் வரலாற்றுச் சின்னங்கள், சிலைகள், சிற்பங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், அவை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் என்பன அருங்காட்சியகத்தைப் பார்க்க வருபவர்களுக்கு இதுவரை தெரிந்திருக்காத, தமிழர் பற்றிய புதிய வரலாற்றுச் செய்திகளைச் சொல்லப்போகின்றன. அவற்றுள் திறந்த வெளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மன்னர்களின் சிலைகள் பலரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளன. இதுவரை எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்களுக்கே சிலை வைக்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு *350* ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்த *21* தமிழ் மன்னர்களுக்குச் சிலைகள் வைக்கப்படவில்லை. அக்குறைபாட்டைப் போக்கும் வகையில் முதன் முறையாக சிவபூமி திறந்தவெளி அருங்காட்சியகத்தில் *21* மன்னர்களுக்கும் கடவுளருக்கு அடுத்த நிலையில் பீடங்கள் அமைத்து அவற்றின் மேல் மன்னர்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டு அவற்றின் கீழ் ஆட்சியாண்டுகள் பொறிக்கப்பட்டுள்ளமை வரலாற்று ஆர்வலர்களுக்கு மனமகிழ்வை அளிப்பதாக உள்ளது.

> இன்றைய உலகில் நேரம், பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு அங்குள்ள அருங்காட்சியகங்களுக்குச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றது.

கடந்த இருவாரங்களாக முகநூல்களில் பகிரப்பட்ட செய்திகளில் சிவபூமி அருங்காட்சியகம் பற்றிய செய்திகளே அதிக அளவில் காணப்படுகின்றன. இது தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியதன் பிரதிபலிப்பாகும். இதன் சாதனைக்கும் நன்றிக்கும் உரியவர், அரசியல் கலப்பற்ற சொல்லின் செல்வர் ஆர். திருமுருகன் அவர்கள். துடிப்புள்ள இளைஞராக ஆன்மீகப் பணியில் ஈடுபட்ட அவர் படிப்படியாக சமூகப் பணியில் அகலக் கால்பதித்து சாதனை படைத்துவரும் ஒருவர். பலர் சிந்திக்க முன்னரே செயலில் காட்டி பிறரைப் புதிதாகச் சிந்திக்கத் தூண்டியவர். இதற்கு, தனிமனிதனாக இருந்து கிழக்கிலங்கை வரை இன்று வியாபித்துள்ள அனாதைச் சிறுவர்களுக்கான கல்விக்கூடம், விழிப்புணர்வற்றவர்களுக்கான காப்பகம், வயோதிபர் மடம், நாய்களுக்கான காப்பகம் முதலான அவரது பணிகள் கட்டியம் கூறி நிற்கின்றன. தூரநோக்குடன் நாவற்குழியில் அவர் உருவாக்கிய திருவாசக அரண்மனை இலங்கை வரும் ஆன்மீகவாதிகளையும், சுற்றுலாப் பயணிகளையும் யாழ்ப்பாணத்தை திரும்பிப் பார்க்க வைத்தது. இன்று அதற்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகம் தமிழர் பண்பாட்டை மேலும் தலைநிமிரச் செய்துள்ளது. இன்று, யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் என அடையாளப்ப டுத்தப்படும் நாவற்குழி விரைவில் யாழ்ப்பாண இராசதானியின் நுழைவாயில் என அழைக்கப்படுவதற்கு இவ்வருங்காட்சியகம் வழிவகுக்கலாம்.

குறிப்பு : இக்கட்டுரை சிவபூமி அருங்காட்சியகம் திறந்து வைக்கப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்டது.

(தொடரும்)

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE** *

Immediate Payment to Any Account

*Partnership with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount*
on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE




# RE/MAX COMMUNITY THE MOST TRUSTED REAL ESTATE AGENTS IN CANADA

- We are building a family of elite agent, become a part of the family
- We are voted as most trusted realtor by consumers
- Our Services

Real Estate Networking

Real Estate Investment

Real Estate Buying and Selling

remaxcommunity.ca | /remaxcommunityinc | /remax_community

/remaxcommunity | /UCD-3WoKApsSL2P4SqInHVIA

வணக்கம் London
www.vanakkamlondon.com




# யாதும் ஊரே யாவரும் கேளிர்

## தமிழால் இணையும்
## தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon

/Vanakkam_London /TheVanakkamLondon

# Protection For You & Your Family



## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

## Are You Getting Million Dollar Advice?



Life100
INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**

info@life100.ca www.life100.ca

10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

### OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

### CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX**
**ELITE**

**021 224 2855 | 0777 44 1113**

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
**(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)**

**BUY-SELL-RENT HOME AND LANDS**

**WWW.REMAXELITE.LK**

RE/MAX
SRI LANKA

# RE/MAX SRI LANKA UNDER NEW LEADERSHIP AND WITH A RENEWED VISION




We are proudly relaunching RE/MAX Sri Lanka under new ownership. With a history of excellence & a fresh wave of innovation, we're here to revive the spirit of the Real Estate Industry.

## WHAT WE DO?

- Franchising
- Real Estate Networking
- Real Estate Investment
- Real Estate Buying & Selling

www.remax.lk | remaxlanka | remax_sri.lanka | remaxsri_lanka


வீடு என்பது
ஞாபகங்களின் கலவை
காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.
தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.
நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.
Re/Max Community Realty Inc
ரமணன் சந்திரசேகரமூர்த்தி Bsc, MBA
வாக்குறுதிகள் அல்ல.
வாங்குவதற்கும் விற்பதற்குமான தீர்வு.
அலைபேசி: 416-290-6000

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY